# கர்த்தர் உரைக்கிறதாவது

# THUS SAITH THE LORD

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

தமிழ் செய்தி
மொழிபெயர்ப்பாளர்கள்
அனைவருக்கும் இப்புத்தகம்
அர்ப்பணிக்கப்படுகிறது!

**முதலாம் பதிப்பு: ஆகஸ்டு 2020**

*இப்புத்தகத்திலுள்ள மேற்கோள்கள் அனைத்தும் சகோ. பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து எடுக்கப்பட்டவை. இவை ஏற்கனவே தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட செய்திகளிலிருந்து எடுக்கப்பட்டு, எவ்வித மாற்றமுமின்றி அப்படியே புத்தகமாக வெளியிடப்படுகிறது. இன்னும் கூடுதலாக அறிய விரும்பினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளை வாசிக்கவும்.*

# பொருளடக்கம்:


1. அவர்கள் எதைக் கேட்க விரும்புகின்றனர் என்றால்
2. அவர்கள் கூறுவது சரியாவென்று யாரும் நிலைவரப்படுத்துவதில்லை
3. மிகப்பெரிய ஆறுதல்
4. நான் அவருடைய தீர்க்கதரிசியென்று விசுவாசிக்கிறாயா?
5. சாத்தான் அதை வெறுக்கிறான், ஏனெனில் அது அவனது முகத்திரையை கிழித்துவிடுகிறது
6. 1933–ம் ஆண்டில் உண்டான தரிசனம்
7. 1956–ம் ஆண்டு அமெரிக்காவுக்கு ஒரு திருப்பமாக இருக்கும்
8. அத்தரிசனத்தின் சம்பவங்கள் யாவும் 1933ம் ஆண்டு முதல் 1977ம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் ஒரு சமயத்தில் நடைபெற வேண்டும்
9. சபைகள் யாவும் ஒன்றுகூடும்
10. தேவ வார்த்தையை தெய்வீக வியாக்கியானம் செய்பவர்
11. அமெரிக்க தேசமானது நாடுகளுக்கெல்லாம் வேசியாயிருக்கிறது
12. திரித்துவக் கொள்கை பிசாசினுடையது
13. பரிசுத்த ஆவியானவர் அவரிடம் கூறத் தொடங்கினார்
14. அங்கே ஒரு உபத்திரவம் உண்டாகும்
15. ஒரு பஞ்சமுண்டாகும்
16. சந்தேகத்தின் நிழல் ஒன்றும் இருக்காது
17. இஸ்ரவேலை விட்டு விலகியிருங்கள்
18. நாம் தீவிரமான உண்மையுடனும் உத்தமத்துடனும் இருக்கிறோம்

19. தேவனுடைய சிங்காசனத்திலிருந்து நேரடியாக புறப்பட்டு வரக்கூடிய செய்தி
20. நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும்
21. உண்மையான தீர்க்கதரிசி வார்த்தையில் முற்றிலும் நிலைத்திருக்கிறான்
22. மீண்டும் ஞானஸ்நானம் பெறுங்கள்
23. அவன் எந்த ஸ்தாபனத்துடனும் ஒப்புரவாக மாட்டான்
24. நீங்கள் என் வார்த்தைகளை மறந்து போக வேண்டாம்
25. கர்த்தருடைய வழியைத் தெரிந்து கொள்ளுங்கள்
26. அது ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை
27. பேதுரு ஒருபோதும் ரோமாபுரியில் இருக்கவேயில்லை
28. பிசாசின் பொய்க்கு செவிகொடுக்காதீர்கள்
29. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்
30. மூன்று விதமான விதைகள் நடப்பட்டாயிற்று
31. ஆவியானவர் என்னோடு பேசி, “உன் எழுதுகோலை எடுத்துக் கொள்” என்றார்
32. சபையானது எவ்வாறு நிறுவப்பட்டது
33. ரோமானிய கொள்கைகளுக்கு எதிர்த்து போராடுங்கள்
34. கர்த்தர் உரைக்கிறதாவது என்பதை எடுத்துக் கொள்ளுங்கள்
35. வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு தேசமும் அதைக் கேட்டு விட்டது
36. என் விசுவாசத்தை நான் வேறு எதின் மேலும் வைக்கமாட்டேன்
37. ஈரல் புற்று நோய் சுகமடைதல்
38. ஏழாம் தூதன் எல்லா இரகசியங்களையும் முடித்துவைப்பார்
39. கருத்தோ உணர்ச்சியோ அல்ல

40. உங்கள் பெயர் உங்கள் வாழ்க்கையின் குணத்தைக் காட்டுகிறது
41. அவனைத் தாக்காமலிருக்க நீங்கள் போதிய அறிவு படைத்திருக்க வேண்டும்
42. இந்தக் கடைசி நாட்களில் மன்னிக்கப்படுவதில்லை
43. தேவனுடைய முழு வெளிப்பாட்டையும் வெளிப்படுத்துதல்
44. அதே வார்த்தையே மீண்டும் வல்லமையுடன் எழும்பும்
45. இது இயேசு கிறிஸ்துவினுடைய வெளிப்பாடு
46. கத்தோலிக்கர்களும் பிராடெஸ்டண்டுகளும் ஒன்று சேர்ந்துவிட்டனர்
47. சத்தியமும் தவறும் ஒன்றோடொன்று கலவாது
48. நீங்கள் அதைப் புரிந்து கொள்வீர்கள்
49. உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்
50. நம்மில் எவரும் கொண்டிருந்த கருத்துக்கு முரண்பாடானது
51. எதையும் வியாக்கியானிக்க முயற்சிக்க வேண்டாம்
52. அவர் தெரிவிக்கப்படும் ஒரே வழி என் மூலமாகும்
53. அது பரிசுத்த ஆவிக்குக் கீழ்படிதல்
54. தீர்க்கதரிசி ஒரு விசேஷித்த மனிதன்
55. அது வரைக்கும், அதைக்குறித்து மறந்து விடுங்கள்
56. அதை அவிசுவாசித்தால் நீங்கள் நியாயந்தீர்க்கப்படுவீர்கள்
57. அவள் ஜீவிப்பாள்
58. அது எப்படியும் சம்பவிக்கப் போகிறது
59. உங்களால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டால், இந்த ஒலிநாடாவை மறுபடியும் கேளுங்கள்
60. அது மனித எண்ணத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது

61. ஏதோவொன்று வந்து கொண்டிருக்கிறது
62. யாரோ ஒருவர் எழும்ப வேண்டும்
63. உலக சபைகளின் ஆலோசனை சங்கம், மிருகத்தின் முத்திரை
64. தேவன் அதைப் பேசினால், அது நிகழத்தான் வேண்டும்
65. கல் தானாகவே வெளிவந்து விடும்
66. நீ மரிக்கப் போவதில்லை
67. அவள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வாஞ்சிக்கிறாள்
68. இது ஒரு ஜோடிப்பு அல்ல
69. நமது மத்தியில் மாம்சமாகியுள்ளது
70. இது ஏதோ மனிதனின் மூடத்தனமான காரியம் அல்ல
71. நீங்கள் என்னுடைய உத்தரவாதிகள்
72. தேவனுடைய சத்தத்துக்குச் செவிகொடுங்கள்
73. சகோதரன் பிரன்ஹாம் கூறுவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்
74. நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒன்றே ஒன்று
75. பரிசுத்த ஆவியைப் பெற்றுகக் கொண்டதன் அத்தாட்சி
76. மனதில் எந்தவித சந்தேகமுமில்லை
77. நீங்கள் தொங்கிக் கொண்டு நரகத்தைக் கடக்கிறீர்கள்
78. தேவனுடைய வார்த்தையை நீங்கள் சந்தேகிக்கவோ அல்லது தவறான இடத்தில் பொருத்தவோ கூடாது
79. ஆகாரம் என்றால் என்னவென்பதை அறிந்து கொள்ள
80. இது என் செய்தியைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாத்திரமே
81. நான் கடல் கடந்து செல்கிறேன்
82. நீங்கள் எத்தகைய மனப்பான்மையைக் கொண்டுள்ளீர்கள் என்பதை அது பொறுத்தது

83. வேகமான செய்தி முழு தேசத்தையும் குலுக்கும்
84. தேவன் என்ன கூறினார் என்பது நமக்குத் தெரியும்
85. சபையின் மாதிரி காட்சி
86. தீர்க்கதரிசி தேவனுடைய பாகத்தை ஏற்று நடித்தல்
87. நான் கூறுவதை சத்தியம் என்று ஏற்றுக் கொள்ளுதல்
88. தீர்க்கதரிசியைக் கலந்தாலோசிப்போமாக
89. மறுபடியும் இந்த கடைசி நாட்களில் சம்பவிக்கும்
90. இந்நாட்களொன்றில் அறிந்து கொள்வீர்கள்
91. கர்த்தர் உரைக்கிறதாவது என்பதை நான் கூறுகிறேன்
92. ஸ்தாபனங்கள் அந்திக்கிறிஸ்துவின் மார்க்கத்துக்குள் செல்வார்கள்
93. ஸ்தாபங்கள் தேவனுடைய வார்த்தையை அவமாக்கி விட்டார்கள்
94. ஸ்திரீகளுக்கு நீண்ட தலைமயிர் இருப்பது அவளுக்கு நசரேய பொருத்தனையாகும்
95. அது அந்த மனிதன் பேசுவதல்ல
96. தீர்க்கதரிசி தேவனுடைய சிந்தைக்காக காத்துக் கொண்டிருக்கிறான்
97. மணவாட்டிக்கும் அசைவு உண்டாகிக்கொண்டிருக்கிறது
98. லாஸ் ஏஞ்சலிஸ் சமுத்திரத்தின் அடியில் மூழ்கிப்போய் விடும்
99. நான் சத்தியத்தை உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்

## அவர்கள் எதைக் கேட்க விரும்புகின்றனர் என்றால்

## "THEY LONG TO HEAR THAT"

**114.** நான் காரோட்டிச் செல்லும் வழியில் ஜனங்கள் எவ்வாறு உட்கார்ந்து கொண்டு, "இந்த வீட்டுக்கு வாருங்கள்; என் மகள் இப்படிப்பட்ட நிலையில் இருக்கிறாள், என் குழந்தை இன்னின்ன நிலையில் உள்ளது. வார்த்தை மாத்திரம் சொல்லும்" என்கின்றனர்! உங்கள் வாயில் அது போடப்படுவதற்கு முன்பு அதை எப்படி உங்களால் கூற முடியும்? அதை நீங்களே கூறுவதாகி விடும். ஆனால் அவர்கள் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறப்படுவதைக் கேட்க விரும்புகின்றனர்.

தேவனைக் குறித்து
நிச்சயமுடையவர்களாயிருங்கள், ஜனவரி 25, 1959

## அவர்கள் கூறுவது சரியாவென்று யாரும் நிலைவரப்படுத்துவதில்லை

## "NO JUDGING OF THEM"

**129.** தீர்க்கதரிசிக்கும் தீர்க்கதரிசனத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. தீர்க்கதரிசனம் ஒருவரிடத்திலிருந்து புறப்பட்டு மற்றவரிடம் செல்கின்றது. ஆனால் தீர்க்கதரிசியோ தொட்டிலில் பிறந்தது முதல் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறான். அவர்களிடம் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பது உள்ளது. அவர்கள் கூறுவது சரியாவென்று யாரும் நிலைவரப்படுத்துவதில்லை. முன்பிருந்த ஏசாயா, எரேமியா அல்லது மற்ற தீர்க்கதரிசிகள் உரைத்தவைகளை அவ்வாறு நிலைவரப்படுத்த வேண்டிய அவசியமிருந்ததாக நீங்கள் காண்பதில்லை. ஏனெனில் அவர்களிடம் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பது இருந்தது, ஆனால் ஜனங்களிலுள்ள தீர்க்கதரிசன வரத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏனெனில் சாத்தான் மெல்ல நுழைந்து

விடுவான். பாருங்கள்? அது சரியாவென்று நிலைவரப்படுத்தப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும், டிசம்பர் 19, 1959

## மிகப்பெரிய ஆறுதல்

## "THE GREATEST CONSOLATION"

**98.** அவள் திரும்பி உள்ளே சென்ற போது, என்னே! எந்த விசுவாசியும் கேட்க விரும்பும் மிகப்பெரிய ஆறுதல். "**கர்த்தர் சொல்லுகிறதாவது.**" அந்த வார்த்தைக்காக அவள் காத்துக் கொண் டிருந்தாள். "**கர்த்தர் உரைக்கிறதாவது**, கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மாவு செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை."

**99.** இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? "முதல ாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்." "சகோ. பிரன்ஹாமே, எனக்கு எப்படித் தெரியும்?" எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, தேவனை முதலில் வைத்து முன்செல்வதே. தியாகம்! வார்த்தையையும் ஆவியையும் ஒன்றாக கலக்கி, உங்களை சிலுவையில் கிடத்தி, "ஆண்டவரே, இதோ இருக்கிறேன்" என்று சொல்லுங்கள். எல்லாவற்றிலும் தேவனை முதலில் வையுங்கள்.

**100.** "**கர்த்தர் உரைக்கிறதாவது.** கர்த்தர் தேசத்தின் மேல் மழை யைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையில் மா செலவழிந்து போவ துமில்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதுமில்லை." அவளிடம் பேசுவது தேவனுடைய தீர்க்கதரிசி என்பதை அவள் அறிந்து கொண்டாள். ஓ, அவள் இருதயம் எவ்வளவாய் மகிழ்ச்சியினால் துள்ளி யிருக்கும்! அவள் உள்ளே ஓடிப்போய் அப்பத்தை சுட்டுக்கொண்டு வந்து, தண்ணீருடன் அவனுக்குக் கொடுத்தாள். ஏற்கனவே குழி விழுந்திருந்த அவளுடைய கன்னங்களுடன் அவளுடைய கையும் நடுங்

கினது. ஒரு சிறு அப்பத்தின் மூலம் தேவன் அவளைக் காக்க வந்து விட்டார் என்று அவள் அறிந்து கொண்டாள்.

**101.** ஓ, நீங்கள் தேவனுடைய ஒரு சிறு வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொண்டு, எல்லாவற்றையும் சரிப்படுத்தி, காரியங்களை வழியி லிருந்து அகற்றி, என்ன நேரிடுகிறதென்று பாருங்கள். அவிசுவாசத்தை உங்கள் இருதயத்தை விட்டு அகற்றி விடுங்கள். உங்களுக்குள்ள சிறு விசுவாசத்தை எடுத்துக் கொண்டு அதை சிலுவையின்மேல் வைத்து, “ஆண்டவரே, இவ்வளவு தான் என்னிடம் உள்ளது, எடுத்துக்கொள் ளும்” என்று சொல்லி, “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்று உங்கள் வாழ்க்கையில் நேரிடும் திருப்பத்தைக் கவனியுங்கள். ஓ, அவர் என்றும் உள்ளது போலவே இன்றும் மாறாதவராய் இருக்கிறார். அவள் அந்தத் திருப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

**102.** ஒருக்கால் அது மிகவும் இருளாகத் ன்படலாம்.ஆனால் (அன்றிரவு நான் பிரசங்கித்த விதமாக), காலை விடியும் முன்பு மிகவும் இருளாக இருக்கும். இரவிலே மிகவும் இருள் சூழ்ந்த நேரத்தில் தான் விடிவெள்ளி பிரகாசிக்கின்றது. சூரியன் உதிக்கப் போகின்றது என் பதை அது பிரதிபலிக்கின்றது.

**103.** ஜெர்மனியில் ஒரு படம் வைத்திருக்கின்றனர். அதை “மேகம்” என்றழைக்கின்றனர். அது லாஸ் ஏஞ்சலிஸிலுள்ள பாரஸ்ட் லாணில் வைக்கப்பட்டுள்ள “சிலுவை மரணம்” என்னும் படத்திற்கு போட்டியாக அமைந்துள்ளது. லாஸ் ஏஞ்சலிஸிலுள்ள அந்த படம் இந்த அறையின் அகலத்திற்கு இருக்கும். அந்தப் படத்தைச் சுற்றி அவர்கள் ஒரு கட்டிடம் எழுப்பியுள்ளனர். உங்களில் அநேகர் அதைக் கண் டிருப்பீர்கள். ஆனால் ஜெர்மனியிலுள்ள இந்த படம் “தேவதூதன்” அல்லது “மேகம் சூழ்ந்த நாள்” என்னும் தலைப்பைக் கொண்டது. அப்படித்தான் அது அழைக்கப்படுகின்றது என்று நினைக்கிறேன். ஒரு கோணத்திலிருந்து அதைப் பார்க்கும்போது, அது பயத்தை விளை விக்கும் ஒன்றாயுள்ளது. வெளிச்சம் அதன் மேல் பட்டு பிரதிபலிக் கும்போது, கோபம் நிறைந்த மேகங்கள் ஒன்றோடொன்று மோதி நகர்வது போல் காட்சியளிக்கும்படி அந்தப் படம் வரையப்பட்டுள்ளது... பயங்கர புயல் ஒன்று மோதி எல்லாவற்றையும் சின்னாபின்னமாக்குவது போல் அது காட்சியளிக்கிறது. ஆனால் வழிகாட்டி, “அருகில் சென்று

கூர்ந்து கவனியுங்கள்” என்கிறான். நீங்கள் அருகில் சென்று பார்த்தால், அது பயங்கர மேகங்கள் அல்ல; அது தேவதூதரின் செட்டைகள் ஒன்றோடொன்று அடித்துக் கொண்டு, அவர்கள் மகிழ்ச்சியாயுள்ளனர். அது மாறுவேடத்திலுள்ள ஆசீர்வாதம்.

**104.** ஒருக்கால் இன்றிரவு உங்களுக்குள்ள வியாதி, இ;கு வருவதற்கென நீங்கள் செய்த தியாகம், இவை யாவும் மாறுவேடத்திலுள்ள ஆசீர்வாதமாக இருக்கக் கூடும். செட்டைகளை ஒன்றாக சேர்ந்து அடித்து களிகூர, தேவதூதர்கள் இங்கு பிரசன்னராயிருக்கின்றனர். ஏனெனில், மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். தேவதூதர்கள் களிகூருவார்கள் என்று வேதம் உரைக்கிறது. சற்று யோசித்துப் பாருங்கள். **கர்த்தர் உரைக்கிறதாவது**, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவ ராயிருக்கிறார். அவருடைய கிருபை தீர்ந்து போகவே முடியாது. உங்கள் இருதயம் விரும்பும் எதையும் கொடுக்க அவர் சித்தமா யிருக்கிறார்.

எலியாவும் போஜன பலியும், மார்ச் 11, 1960

## நான் அவருடைய தீர்க்கதரிசியென்று விசுவாசிக்கிறாயா?

## "BELIEVE ME TO BE HIS PROPHET"

**259.** நீங்கள் அந்த படத்தில் காணும் ஒளி பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்த ஸ்திரீயின் மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. சகோதரியே, நான் அவருடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறாயா? நீ இராணுவ மருத்துவமனையில் மரணத்தருவாயிலுள்ள உன் கணவனுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறாய். அது **கர்த்தர் உரைக்கிறதாவது.** இப்பொழுது உன் முழு இருதயத்தோடும் விசுவாசி. அவர் சுகமடைவார்.

இனத்தான் மீட்பர், அக்டோபர் 2, 1960

# சாத்தான் அதை வெறுக்கிறான், ஏனெனில் அது அவனது முகத்திரையை கிழித்துவிடுகிறது

## "SATAN HATES THAT BECAUSE IT EXPOSES HIM"

**121.** சாத்தான், தன் காரியங்களெல்லாம் அம்பலப்படுத்தப்படப் போகிறதை எண்ணுகையில், அது அவனுக்கு எவ்வளவு பயங்கரமானது என்பதை நீங்கள் அறிவீர்களா? கூட்டங்களில் மக்களின் செய்கைகளை கவனித்திருக்கிறீர்களா? கவனித்துப்பாருங்கள். நான் நடத்தும் கூட்டங் களில் அதைக் கவனித்துப் பாருங்கள். ஒரு குறிப்பிட்ட நபருக்குள் இருக்கும் சாத்தான் அம்பலபப்படுத்தப்படப் போகும்போது, அந்த நபரின் முகமானது மாறுதலடைவதைப் பாருங்கள். என்ன சிந்திக்க வேண்டு மென்பதே அப்பொழுது அவர்களுக்குத் தெரியாது. திடீரென பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, அப்பிசாசை அம்பலத்திற்குக் கொண்டு வருகிறார். ஓ! சாத்தானானவன் இவ்வகையான கூட்டங்களை வெறுக் கிறான். தேவனுடைய வார்த்தை மனிதருக்குள் இருக்கும் பிசாசை அம்பலப்படுத்துவதினால், அவன் எப்படிப்பட்டவன் என்று கூறுவதினால், நமக்கு அப்படிப்பட்டதொரு போராட்டம் உண்டாயிருக்கிறது.

**122.** பரிசுத்தாவியானவரின் ஏவுதலின்கீழ் இருக்கையில் நீங்கள் "இங்கே அமர்ந்திருக்கிற செல்வி ஜோன்ஸ் என்ற இந்தப் பெண்மணி, அவர் இன்னார் இன்னார், இன்ன இடத்திலிருந்து வருகிறார்" என்று சொல்லக்கூடும், அது என்ன செய்கிறது? அது அப்பெண்மணியின் ஆவியை உந்தி அந்த இடத்திற்குக் கொண்டு வருகிறது.

**123.** "என்னை எப்படி அறிவீர்கள்? அந்த மனிதனுக்கு என்னைத் தெரியாதே? எனவே அது ஒரு ஆவியாகத்தான் இருக்க வேண்டும். அது என்னவிதமான ஆவி?"

**124.** "அது தேவனுடைய ஆவியாகும்."

**125.** "எப்படி? எனக்கு என்ன கோளாறு?"

**126.** “உங்களுக்கு காசநோய், புற்றுநோய் உள்ளது”. எதுவாயிருந்த போதிலும், அது “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்பதாக இருக் கிறது.

**127.** ஓ! எவ்வளவாக சாத்தான் அதை வெறுக்கிறான். ஏனெனில் அது அவனது முகத்திரையை கிழித்துவிடுகிறது.

**128.** பரிசுத்த ஆவியானவரால் இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தும் இவ்வகையான கூட்டங்களை பார்த்துக் கொண்டிருக் கும் சுபாவ மனிதன் (மாம்ச சிந்தையுள்ளவன்) “இது மனோதத்துவ ரீதியில் சிந்தையை ஆராய்தல் ஆகும், அல்லது மனோவசிய முறை யாகும்” என்று சொல்லலாம். இவர்களுக்கு இது என்னவென்று தெரி யாது. அது அவர்களுக்கு பைத்தியமாகத் தோன்றும்.

**129.** ஆனால் அது என்னவென்று அறிந்தவர்களுக்கோ அது எவ்வளவாக ஆசீர்வாதமாயுள்ளது! அது என்னவாக இருக்கிறது? ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. யாரைப் பற்றிய வெளிப்படுத்துதல் அது? பிரசங்க பீடத்தில் நிற்கும் அம்மனிதனைப் பற்றிய வெளிப்பாடா? இக்கடைசி காலத்திய சபையில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலாகும்! அவர் செய்வேன் என வாக்குரைத்தபடியே, அவர் தன்னைத் தானே வெளிப்படுத்துகிறதாக அது இருக்கிறது. அது வெளிப்படுத்துதலாக இருக்கிறது. பார்த்தீர்களா?

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய
வெளிப்படுத்துதல், டிசம்பர் 4, 1960

## 1933–ம் ஆண்டில் உண்டான தரிசனம்

## THE VISION OF 1933

**136. 1933**ம் ஆண்டில், இப்பொழுது கிறிஸ்து சபை உள்ள இடத்தில், அந்த பழைய மேசோனிக் வீட்டில், நாங்கள் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தபோது, கர்த்தருடைய தரிசனம் எனக்கு உண் டாகி, “ஜெர்மனி எழும்பி, அந்த மகினாட் எல்லையை எழுப்புவார்கள்” என்று முன்னுரைத்தது. உங்களில் பலருக்கு அது ஞாபகமிருக்கும். எவ்விதம் அவர்கள் அங்கு அரணாக்கப்பட்டிருப்பார்கள் என்றும், அந்த

எல்லையில் அமெரிக்கர்கள் பயங்கரமாக முறியடிக்கப்படுவார்கள் என்றும் முன்னுரைத்தது. மேலும் என்ன நடக்குமென்றும், ரூஸ்வெல்டைக் குறித்தும், அவர் நான்காவது முறையாக ஜனாதிபதி தேர்தலுக்கு நின்று ஜெயிப்பார்; என்றெல்லாம் முன்னுரைத்தது. அது முன்னுரைத்த விதமாகவே பிழையின்றி சம்பவித்தது. மேலும், கார்கள் அதிகமாக முட்டை வடிவம் பெற்று, கடைசி காலத்தில், அவை முட்டை வடிவத்திலேயே அமைந்திருக்கும் என்றும், அதற்கு ஸ்டியரிங் சக்கரம் இருக்காதென்றும், வேறொரு சக்தியால் அவை ஓட்டப்படும் என்றும் என்றும் அது முன்னுரைத்தது. இப்பொழுது அவர்கள் பாதுகாப்புக்கென்று, ரிமோட் கன்ரோலினால் ஓடக்கூடிய கார்களைத் தயார் செய்கின்றனர். நான் கூறுவது சரி. நீங்கள் அப்பொபது நகரத்தில் பிரவேசிக்க முடியாது. ஒரு இருபது மைல் பிரிவு. நீங்கள் இருபது மைல் செல்லலாம். நீங்கள் மற்றொரு காருடன் மோதிக் கொள்ளலாம். ஏனெனில் அது ரிமோட் கன்ட்ரோல். பாருங்கள், இப்பொழுது அது போல் நடந்து கொண்டிருக்கிறது. நான், “இதை நினைவில் கொள்ளுங்கள், அந்த நாளிலே, முடிவு காலம் வருவதற்கு முன்பு, ஒரு ஸ்திரீ... இதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மிகவும் அதிகாரம் படைத்த ஒரு ஸ்திரீ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எழும்புவாள். அவள் ஜனாதிபதியாகவோ சர்வாதிகாரியாகவோ, அல்லது மிகவும் அதிகாரம் படைத்த ஒரு ஸ்திரீயாக இருப்பாள். இந்த தேசம் பெண்களின் செல்வாக்கின் கீழ் வந்து விடும். இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை நினைவில் கொள்ளுங்கள்” என்றேன்.

நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?, செப்டம்பர் 27, 1958

**32.** அளிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசனத்தை உங்களுக்கு படித்துக் காண்பிக்க போகிறேன். என்னிடம்... திரு. மெர்சியரும் மற்றவர்களும் இந்த பழைய தீர்க்கதரிசனங்களையெல்லாம் தோண்டியெடுத்து, அவைகளை சரியாக அமைத்து, புத்தக வடிவில் வெளியிடப் போகிறார்கள். நீங்கள் அறிய வேண்டுமென்று நான் விரும்பும் சிலவற்றை உங்களுக்கு படித்து காண்பிக்கப் போகிறேன். இது முதலாவதாக உங்களுக்கு சிலவற்றை படித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

**33.** “1932ம்” ஆண்டில், இதைக் கேளுங்கள் “நான் போய்க் கொண்டிருந்த போது... இன்று காலை நான் சபைக்கு செல்ல ஆயத்

தமாகிக் கொண்டிருந்த போது, எனக்கு தரிசனம் உண்டானது. எங்கள் ஆராதனை மெய்க்ஸ் அவன்யூவிலுள்ள வயோதிப அனாதைகள் விடுதி யில் நடைபெறுகிறது." அந்த கட்டிடத்தின் ஒரு பாகத்தில் சார்லி கெர்ன் வசிக்கிறார்). "இந்த தரிசனத்தில் சில பயங்கரமான நிகழ்ச்சி கள் நடப்பதைக் கண்டேன். இதை நான் கர்த்தருடைய நாமத்தில் உரைக்கிறேன்."

**34.** "இப்பொழுது ஜனாதிபதியாக உள்ள பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்" (ஞாபகம் கொள்ளுங்கள், இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த தரிசனம் உண்டானது) "முழு உலகமும் யுத்தத்தில் ஈடுபடும்படி செய்வார். இத்தாலி நாட்டின் புது சர்வாதிகாரி முசோலினி, எத்தியோப்பியாவின்மீது தன் முதல் படையெடுப்பை தொடுத்து அதைக் கைப்பற்றுவான். ஆனால் அதுவே அவனுடைய கடைசி வெற்றியா யிருக்கும். அவன் தன் முடிவை அடைவான்."

**35.** "நாம் ஜெர்மனி தேசத்துடன் போரில் ஈடுபடுவோம். ரஷியா வைக் கவனியுங்கள்! அது... இப்பொழுது கம்யூனிஸம், நாஸிஸம், பாஸிஸம். ரஷியாவைக் கவனியுங்கள்! ஆனால் முக்கியமாக கவனிக்க வேண்டியது அதுவல்ல."

**36.** "மேலும்... இந்த தேசத்தில் ஒரு பொல்லாத காரியம் நடந்துள்ளது. பெண்கள் வாக்குகளை செலுத்த அவர்கள் அனுமதித் துள்ளனர். இது ஒரு ஸ்திரீயின் தேசம். ஏவாள் ஏதேனை மாசுபடுத்தி னது போல், இவள் இந்த தேசத்தை மாசுபடுத்துவாள்." நான் ஏன் இப்படி ஆணித்தரமாகக் கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? நான் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைப் பெற்றிருக்கிறேன். "அவளு டைய வாக்குகளைக் கொண்டு அவள் தவறான ஆளைத் தேர்ந் தெடுப்பாள்."

**37.** "ஜெர்மனி கட்டப்போகும் ஒரு பெரிய கான்கிரீட் மதிலின் அருகில் அமெரிக்கர்கள் பயங்கரமாக முறியடிக்கப்படுவார்கள்." அது மகினாட்லைன் (அது கட்டப்படுவதற்கு பதினோறு ஆண்டுகளுக்கு முன்பு). "ஆனால் முடிவில் வெற்றி பெறுபவர் அமெரிக்கர்களே."

**38.** "இந்த ஸ்திரீகள் தங்கள் வாக்குகளின் மூலம் தவறான ஆளைத் தேர்ந்தெடுத்த பிறகு, ஒரு பெரிய ஸ்திரீ அமெரிக்க ஐக்கிய

நாடுகளில் எழும்பக் கண்டேன். அவள் சிறப்பாக உடுத்தியிருந்தாள், அழகாயிருந்தாள், ஆனால் இருதயத்தில் கொடூரமுள்ளவளாயிருந்தாள். அவள் இந்த தேசத்தை அழிவுக்கு நடத்துவாள்." நான் இவ்வாறு அடைப்புக் குறிகளில் குறிப்பு எழுதி வைத்துள்ளேன், ("ஒருக்கால் அது கத்தோலிக்க சபையாக இருக்கக் கூடும்").

**39.** "மட்டுமின்றி, விஞ்ஞானம் அதிகமாக முன்னேறும், முக்கிய மாக இயந்திரத் துறையில். மோட்டார் வாகனங்கள் முட்டை வடிவில் தயாரிக்கப்படும். முடிவில் காரோட்டும் சக்கரமே அவசியில்லாத ஒரு மோட்டார் வாகனத்தை அவர்கள் தயாரிப்பார்கள்." அப்படிப்பட்ட வாக னம் இப்பொழுதுள்ளது. "அது ஏதோ சக்தியால் இயங்கும்."

**40.** "பின்பு நான் அமெரிக்க ஐக்கிய நாடுகளை புகைக்காடாக, எரிந்து போன இடமாகக் கண்டேன். அது முடிவுக்கு அருகில் நடக் கும்." பிறகு நான் ("இது நடக்கும் என்று முன்னுரைக்கிறேன்.") என்று அடைப்புக்குறிகளில் குறிப்பு எழுதியிருக்கிறேன். ஞாபகம் கொள்ளுங் கள், இது கர்த்தர் எனக்குக் காண்பித்தது, ஆனால் (இது 1977ம் ஆண்டுக்கு முன்பு நடக்கும் என்று முன்னறிவிக்கிறேன்."). இப்பொழுது வேகமாக வந்து கொண்டிருக்கும் அழிவை ஆதாரமாகக் கொண்டு இதை முன்னுரைக்கிறேன் – அது எவ்வளவு வேகமாக வந்து கொண் டிருக்கிறது, இந்த தேசம் அதன்அழிவை சந்திக்க எவ்வளவு காலம் செல்லும் என்பவைகளை ஆதாரமாகக் கொண்டு இப்பொழுது என்ன நடந்ததென்று பாருங்கள்,

**41.** ஜனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் அமெரிக்காவை இங்கிலாந்தின் தேனீர் விருந்துக்கு கொண்டு சென்றார். அது உண்மை. ஜெர்மனி நம்மேல் போர் தொடுக்கவில்லை, நாம் அவர்கள் மேல் போர் தொடுத்தோம். அது முழு உலகத்தையும் யுத்தத்தில் ஆழ்த்தி, உலக மகா யுத்தம் நடக்கக் காரணமாயிருந்தது. ஜெர்மானியர் மகினாட் மதிலைக் கட்டினர். அங்கு ... அமெரிக்கா அந்த இடத்தில் வாங்கின உதையைக் குறித்து இங்குள்ள முன்னாள் இராணுவ வீரர் எவருமே அறிவர்.

**42.** ஸ்திரீகளுக்கு வாக்குகள் செலுத்தும் உரிமை அறிக்கப்பட்டு, ஸ்திரீகளின் வாக்குகளின் விளைவாக கென்னடி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த தவறான மனிதனின் மூலம் அமெரிக்க

ஐக்கிய நாடுகள் முடிவில் கத்தோலிக்க சபையின் முழு ஆதிக்கத்துக்குள் வரும். அதன் பிறகு அமெரிக்காவை வெடித்து சிதறடிக்கப் போகும் குண்டானது வருகிறது.

**43.** ஏழு நிகழ்ச்சிகள் முன்னுரைக்கப்பட்டன. அவைகளில் ஐந்து ஏற்கனவே நிறைவேறி விட்டன. நாம் எவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டோம் என்று அதிலிருந்து நீங்கள் கணக்கிடலாம். நாம் முடிவை நெருங்கியிருக்கிறோம். அவைகளில் ஐந்து நிகழ்ச்சிகள் நடந்து விட்டிருந்தால், மற்ற நிகழ்ச்சிகளும் நடந்தே ஆக வேண்டும். அது நடந்து தான் ஆகவேண்டும்.

**44.** இப்பொழுது திரு. கென்னடி அவ்வளவு சக்தியுள்ளவராக இருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அவர் மிகவும் அருமையான ஜனாதிபதியாகத் திகழ்ந்து, இங்கிலாந்திலும்,மெக்ஸிகோவிலும், மற்ற இடங்களிலும் அவர்கள் செய்தது போல, மற்றவர்களை காட்சியில் கொண்டு நிறுத்துவார். அமெரிக்க மக்கள் நிலையற்றவர்கள், ஆவிக்குரிய பிரகாரம் அல்ல; அவர்கள் தங்கள் சொந்த நன்மைக்காக மிகவும் சாமர்த்தியசாலிகள். ஞானம் சில சமயங்களில் திசை திருப்பி அவர்களையே அடிக்கக்கூடும். எனவே அவர்கள்... (இன்று காலை அதைக் குறித்து சிறிது பிரசங்கிக்கப் போகிறேன்.)

**45.** எனவே நாம்... நாம் அந்த எல்லைக்கு வந்திருக்கிறோம் என்பதை காண்கிறோம்... இதை நான் கூறக் காரணம், அன்றொரு நாள் அதை ஏன் நான் கூறக் காரணம், அன்றொரு நாள் அதை ஏன் நான் அவ்வளவாக வலியுறுத்தினேன் என்பதை விளக்கவே. ஆனால் ஸ்திரீகளின் வாக்குகள் அதை செய்து விட்டது. அது உண்மை. ஸ்திரீகளின் வாக்குகள் தான் அவரை...

**46.** தொலைக்காட்சியில் நடைபெற்ற தேர்தல் நிகழ்ச்சிகளைக் கண்டீர்களா? ஏறக்குறைய மனிதர் அனைவரும் நிக்சனை ஆதரித்தனர். ஆனால் பெண்கள் அனைவரும் கென்னடியை முத்தமிட விரும்பி, கால்களை பரப்பி காரின் மேல் ஏறி, மேலும் கீழுமாக குதித்தனர்.

# 1956—ம் ஆண்டு அமெரிக்காவுக்கு ஒரு திருப்பமாக இருக்கும்

## 1956, A CHANGING POINT FOR AMERICA

**47.** உங்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்... அதை இங்கு எழுதி வைக்கவில்லை, ஆனால் அது ஒலிநாடாவில் உள்ளது (இதுவும் ஒலிப்பதிவு செய்யப்படுகிறது). 1956ம் ஆண்டில் இன்னினாயிலுள்ள சிக்காகோவில் லேன் டெக் உயர்நிலைப் பள்ளியில் நான் நின்று கொண்டு (அவர்கள் அங்கிருந்தனர்). "இந்த ஆண்டு அமெரிக்காவுக்கு ஒரு திருப்பமாக இருக்கும்" என்றேன். "இப்பொழுது தான் நான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தேன் — ஏன் திரும்பி வந்தேன் என்று தெரியவில்லை. ஆப்பிரிக்காவில் நடக்கவிருந்த கூட்டங்களை ரத்து செய்து விட்டு திரும்பி வந்தேன். பில்லி கிரஹாம் அதிசயவிதமாக தம் கூட்டங்களை ரத்து செய்தார். டாமி ஆஸ்பார்னும் தம் கூட்டங்களை ரத்து செய்தார். நாங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதும் சென்று கூட்டங்களை நடத்தினோம். நான், "இந்த ஆண்டு அமெரிக்கா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அல்லது புறக்கணிக்கும்" என்றேன்.

**48.** அவர்கள் இந்தியானாவில் இருபத்திரெண்டு வயது பையனை... வயது பையனை நீதிபதியாக தேர்ந்தெடுத்த போது, கர்த்தருடைய ஆவி என்மேல் இறங்கி, "அவர்கள் முடிவில் 'க்ரூ கட்' சிகை அலங்காரம் செய்து கொண்ட, பெண்களைக் கவரும் விளையாட்டு போக்கான 'பீட்னிக்' வகை இளைஞனை ஜனாதிபதியாக பெறுவார்கள்" என்றேன்.

**49.** இது அநேக ஆண்டுகளுக்கு முன்பு முன்னுரைக்கப்பட்டவைகள், நாம் எங்கு வந்திருக்கிறோம் என்று பாருங்கள். (சபையார், "ஆமென்" என்கின்றனர் — ஆசிரியர்.) நாம் நினைப்பதை காட்டிலும் காலதாமதமாகி விட்டது.

**50.** எனவே ஏழு சபைக் காலங்களைக் குறித்த செய்திகள் தக்க சமயத்தில் அளிக்கப்படுகின்றன என்று எண்ணுகிறேன். நாம் ஜெப சிந்தையோடு படிப்போம்.

**51.** இப்பொழுது நீங்கள் இணங்காமல், "சகோதரன் பிரன்ஹாம் தவறென்று எண்ணுகிறேன்" என்று கூறுவீர்களானால், அப்படி செய்ய உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அப்படி செய்வதற்கு முன்பு, கர்த்தர் வேதாகமத்தில் என்ன கூறியுள்ளார் என்று ஆராய்ந்து பார்ப்போம்...

**52.** அதன் பிறகு இப்பொழுது கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அவை நிறைவேறினதா இல்லையா என்பதைக் கண்டு கொள்வோம். இது ஒலிநாடாவில் உள்ளது. அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் உரைத்தேன் என்பது உங்களுக்குத் தெரியும், மேலும் இங்கே இப்பொழுது இது நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

**53.** முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தான், இல்லையா? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசி.) பாவம் அந்த கறுப்பு நிறத்தினர் ஈட்டிகள், கத்திகள், தடிகள் போன்றவைகளை உபயோகித்து போர் புரிந்தனர். அவன் அவர்களை படுகொலை செய்து, திரும்பி வந்து ஜம்பமடித்துக் கொண்டான். ஆனால் அவன் அழிவை சந்தித்தா. அது உண்மை.

**54.** அதெரிக்கர்கள்... ஜெர்மானியர் மகினாட் – லைன் மதிலைக் கட்டினர். அமெரிக்கர்கள் அங்கு பயங்கரமான உதை வாங்கினர். ஆனால் முடிவில் வெற்றி பெற்றனர். முற்றிலும் உண்மை. முன்னாள் இராணுவ வீர சகோதரர்களாகிய நீங்கள் அதை அறிவீர்கள் – டீ – நாள் (D - Day) அன்று என்ன நடந்ததென்றும், அவர்கள் எப்பொழுது அங்கே சென்றனர் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

**55.** ஸ்திரீகளுக்கு வாக்களிக்கும் உரிமை அளிக்ககப்பட்டு, அவர்கள் தேர்ந்தெடுக்கவே கூடாத ஒரு ஜனாதிபதியை தேரந்தெடுத்தனர். பாருங்கள்? அதுதான் அந்த வீழ்ச்சி.

பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆக்கினை [கலப்பு மார்க்கம்], நவம்பர் 13, 1960

**222.** கிறிஸ்தவ பெண்மணிகளாகிய உங்களை நான் கூறவில்லை. என் சத்தம் அநேக நாடுகளுக்கு செல்கின்றது.

**223.** அது கலப்பு. இந்த அமெரிக்கா ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளது. அந்த தரிசனத்தின்படி, அவள் என்ன செய்தாள்? தவறான ஆளை தேர்தலில் தேர்ந்தெடுத்தாள். அது முடிவு பெற எவ்

வளவு காலம் செல்லும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்றாவது ஒரு நாள் அது நடக்கும். அது **கர்த்தர் உரைக்கிறதாவது!** ஹூ... ஹூம் அது நடக்கும்.

**224.** இப்பொழுது அவள் கீழான நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறாள். அவளால் திரும்பி வர முடியாது. அவள் போய் விட்டாள். அது உண்மை. 1956 ஆண்டில் அந்த மகத்தான எழுப்புதலின் போது அவள் தேவனைப் புறக்கணித்த அன்று முதற்கொண்டு அவள் முடிந்து விட்டாள்.

பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆக்கினை (கலப்பு மார்க்கம்), நவம்பர் 13, 1960

# அத்தரிசனத்தின் சம்பவங்கள் யாவும் 1933ம் ஆண்டு முதல் 1977ம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் ஒரு சமயத்தில் நடைபெற வேண்டும்

## VISION TO BE COMPLETED BETWEEN 1933 AND 1977

**220.** 1933ம் ஆண்டு ஏற்பட்ட தரிசத்தைப் பற்றி இங்கே வாசிக்கப்பட்டதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துள்ளீர்களா? அப்பொழுது சபைக்கட்டிடமானது கட்டப்படக்கூட இல்லை. அப்பொழுது தரிசனம் என்றால் என்ன என்று கூட தெரியாது. அது ஒரு "மெய்மறந்த" (trance) நிலை என்று அழைத்தேன். நான் அப்பொழுது வெறும் ஒரு பாப்டிஸ்டு பிரச்கியாராக மட்டுமே இருந்து வந்தேன்.

**221.** என் வாழ்நாள் முழுவதும் அத்தரிசனங்களை கண்டுள்ளேன். அவைகளில் ஏதாவது ஒன்று தவறிப் போனது என்று யாராகிலும் எழும்பி சொல்லுங்கள் பார்க்கலாம். ஒரு பொழுதும் அப்படியாகவில்லை. அது ஒருபோதும் தவற முடியாது. இனியும் தவறவும் முடியாது.

**222.** நான் அன்று ஞாயிற்றுக் கிழமை வேதபாடத்தை ஆரம்பிக்கையில், உடனே எனக்குத் தரிசனம் உண்டானது. சபை ஆராதனையை அப்பொழுது, சார்லி கர்ன் என்பவருடைய இடத்தில், மேஸன்கள் கூடி வரும் பழைய அந்த வீட்டில் வைத்திருந்தோம். நாங்கள் ஒரு சிறு கூட்டமாக அங்கே வருவோம். நான் அத்தரிசனத்தில் இந்த

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் உலகை, ஒரு உலக யுத்தத்திற்குள் நடத்திச் செல்வதைக் கண்டேன். அது அப்படியாக முன்னுரைக்கப்பட்டது. “மூன்று விதமான “இஸம்”கள் தோன்றும், ஒன்று நாஜிக் கொள்கை, இன்னொன்று பாசிசக் கொள்கை, மூன்றாவது கம்யூனிசக் கொள்கை” என்று நான் அப்பொழுது சொன்னேன்... (எத்தனை பேர் ஞாபகத்தில் வைத்துள்ளீர்கள்?) நான் கூறினேன்; “உங்கள் கண்களை கம்யூனிசத் தின் மேல் பதித்துக் கொள்ளுங்கள். அவை யாவும் அதில் தலையெ டுக்கும். முஸோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்துப் போய், அங்கே வீழ்வான். நாம் முடிவாக ஜெர்மனியோடு யுத்தத்திற்குப் போவோம். ஜெர்மனி மேகினாட்லைன் என்ற உறுதியான காங்க்ரீட் சுவரினால் அரணையேற்படுத்திக் கொள்ளும்” என்றெல்லாம் முன்னு ரைக்கப்பட்டது. மேகினாட்லைன் கட்டப்படுவதற்கு 11 ஆண்டுகளுக்கு முன்பாகவே அது முன்னுரைக்கப்பட்டது.

**223.** “யுத்தத்தின் முடிவில் நாம் வெல்வோம், அந்த யுத்தம் முடிந்த பிறகு விஞ்ஞானம் பெரிய பெரிய புதிய காரியங்களையெல்லாம் கண்டுபிடிக்கும்” என்று உரைக்கப்பட்டது. அத்தரிசனத்தில் நான், அவர்கள் வடிவமைக்கும் மோட்டார் வாகனம் முட்டையைப் போல் வடி வம் பெற்று, (1933ம் ஆண்டில் ஒரு மோட்டார் வாகனம் எவ்விதமான உருவமைப்பு இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது அவர்கள்...) இருக்கும் என்பதைக் கண்டேன். அது பெரிய நெடுஞ் சாலையில் ஓடுகையில், அதற்கு ஸ்டியரிங் சாதனம் வண்டியை ஓட்டிச் செல்ல இருக்கவில்லை. அது ஏதோ சக்தியினால் இயக்கப்பட்டது என்று தரிசனத்தில் கண்டேன். இப்பொழுது அவர்கள் அதை உருவாக் கியிருக்கிறார்கள்.

**224.** “அந்த காலத்தில் பெண்கள் வாக்கு அளிக்க உரிமை அளிக்கப்படுவர், அது முடிவில்...” இத்தேசம் ஸ்தரீயின் தேசம். அது ஒரு ஸ்திரீக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்க்க தரிசனம் யாவற்றிலும் ரூபத்திலேயே அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்திரீயினுடைய எண்ணாகிய 13ம் எண் தீர்க்கதரிசனம் யாவற்றிலும் அமெரிக்காவுக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது. இது ஒரு ஸ்திரீயின் தேசம், அவளுக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன இத்தேசத்தில். அவள் இத்தேசத்தை பாழ்படுத்திப் போடுவாள். அவளே

உலகம் முழுமையும் பாழ்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கிறாள்" என்று நான் கூறினேன்.

**225.** (மேலும் ராய் அவர்களே, நான் அந்த மகா ஸ்திரீயை பற்றிய கேள்வியைக் கேட்டிருந்த உங்கள் கடிதம் எனக்குக் கிடைத்துள்ளது. "ஒவ்வொரு கிரிமினல் குற்றமும் பற்றியும் அதன் பின்னணியைக் கண்டுபிடிக்க அலசி ஆராய்ந்தபோது, அமெரிக்காவில் நிகழும் ஒவ் வொரு கிரிமினல் குற்றத்திற்கும் பின்னால் அதற்கு காரணமாக ஒரு ஸ்திரீயானவள் இருக்கிறாள் என்பதை அரசே கண்டுபிடித்திருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது மிகவும் சரியாக இருக்கிறது. அது துன்மார்க்கமான ஸ்திரீகளினால் ஏற்படுகிறது).

**226.** "அந்த சமயத்தில் ஸ்திரீகளுக்கு வாக்களிக்க உரிமையளிக் கப்படும். அதினால் அவர்கள் தவறான நபரை தேர்தலில் தேர்ந்தெடுப் பார்கள்" என்று நான் கூறினேனே. அவர்கள் கடந்த தேர்தலில் அதையே செய்து விட்டார்கள். "அந்த சமயத்தில் ஒரு மிகவும் சௌந் தர்யமான அலங்கரித்துக் கொண்டுள்ள ஒரு மகா ஸ்திரீ அமெரிக் காவில் தோன்றுவாள்" என்று கூறினேனே. அதற்கு நான் குறிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளேன்: (ஒருவேளை அது கத்தோலிக்க சபையாக இருக்கலாம்).

"அந்த ஸ்திரீயானவள் அமெரிக்காவில் அதிகாரத்தை தன் கையில் எடுத்துக் கொள்வாள், நாட்டில் யாவரையும் அவளே அடக்கி யாளுவாள். அவள் பார்ப்பதற்கு சௌந்தர்யமுள்ளவளாக இருக்கிறாள். ஆயினும் கொடூரம் நிறைந்தவளாய் இருக்கிறாள்" என்பதாக தரிசனத் தில் கண்டேன்.

**227.** "அப்பொழுது நான் அமெரிக்காவை நோக்கிப் பார்த்தேன் அது எரிந்து சாம்பலாகி புகைக்காடாக மாறினது. அங்கே ஒன்றும் மிச்சமாக இருக்கவில்லை" என்று நான் தரிசனங்கண்டு கூறினேன்.

**228.** நான் இவைகளை முன்னுரைத்து விட்டு. "இது இப்பொழுது **கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்** என்பதாக இருக்கிறது" என்று கூறினேன் அப்பொழுது.

**229.** அவ்வேழு தரிசனங்களின் முன்னுரைத்தலில், ஐந்து ஏற் கனவே நிகழ்ந்து விட்டது.

**230.** கத்தோலிக்க சபையானது அதிகாரத்தை எடுத்துக் கொள் ளும், அதுவே முடிவு காலத்தின் வருகையாகும்.

**231.** நான் தரிசனங்கண்டு கூறினேன்: "எங்கும் அடிமரங்கள் எரிந்து கொண்டிருந்தது போல இருந்தது. பாறைகள் வெடித்துச் சிதறி யது. முழு அமெரிக்காவும் வெறுமையாக காணப்பட்டது. நான் நின்ற இடத்திலிருந்து எங்கும் பார்த்தபோது, யாவும் வெறுமையாக காட்சி யளித்தது" என்று.

**232.** "அத்தரிசனத்தின் சம்பவங்கள் யாவும் 33ம் ஆண்டு முதல் 77ம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் ஒரு சமயத்தில் நடைபெற வேண்டும்" என்று கூறினேன். அது மிகத் தீவிரமாக வந்து நிறை வேறும்.

தியத்தீரா சபையின் காலம், டிசம்பர் 8, 1960

# சபைகள் யாவும் ஒன்றுகூடும்

## UNIONIZING AMONG THE CHURCHES

**57.** எனவே, சபைகள் யாவும் ஒன்று கூடும், அவ்வாறு ஒன்றிணைந்து, சபைகளின் சம்மேளனத்தின் தலைமையை உருவாக் குவார்கள். ஏற்கனவே பெரிய ஐ. நா. சபை ஸ்தாபனம் உள்ளது, அதில் எல்லா சபைகளும் அங்கம் வகிக்கின்றன. அதில் உள்ள சபைகளி லொன்றில் நீங்கள் உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அப்படி இருக்க மறுத்தால், நீங்கள் வெளியே தள்ளப்படுவீர்கள். அந்த வேளையில் தான் நாம் நமது நிறங்களை (நாம் யார் என்பதை) காட்ட வேண்டியவர்களாக இருப்போம். நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ள அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக இருக்கிறது. அது அனுமா னத்தினால் அறிந்து கொள்ள வல்லது அல்ல. அந்த சிறிய சபை யானது, எப்பொழுதுமே சிறுபான்மையாகத்தான் இருந்து வந்துள்ளது. அது மிகவும் சிறிய ஒரு குழுவாகும்... வேதாகமத்தை சுற்றி நிற்கும் சிறிய சிவப்பு நூலைப் போல அது உள்ளது. எப்பொழுதுமே அதுவே அந்த உண்மையான சபையாக இருந்து

வருகிறது. நாம் அதை நினைவில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பத்மு தீவு தரிசனம், டிசம்பர் 4, 1960

# தேவ வார்த்தையை தெய்வீக வியாக்கியானம் செய்பவர்

## "A DIVINE INTERPRETER OF THE WORD"

**219.** வேதத்திலும், பூமியிலும் கிறிஸ்துவுக்குரிய உலகிலுள்ள அடையாளச் சின்னங்களை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பூமியில் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஒரு தீர்க்கதரிசி வார்த்தையாக இருக்கிறான். அது நமக்குத் தெரியும். "தீர்க்கதரிசி" என்ற பதத்திற்கு, "தேவ வார்த்தையை தெய்வீக வியாக்கியானம் செய்பவர்" என்பதே அர்த்தமாகும். இந்த தெய்வீக வார்த்தையானது எழுதப்பட்டுள்ளது. தீர்க்கதரிசிக்குள் தெய்வீக ஆவி வாசம் பண்ணுகிறது. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசியானவன், "தேவன்" என்று அழைக்கப்பட்டான். உங்களில் எத்தனை பேர் இதை அறிவீர்கள்?

**220.** "அவர்கள் தேவர்களாயிருக்கிறார்கள் என்று உங்கள் வேதத்தில் எழுதப்படவில்லையா?" என்று இயேசு கேட்டார். நீங்கள் தேவர்களாயிருக்கிறீர்கள்... "தேவ வசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களை (தேவ வசனம் யாரிடத்தில் வந்ததோ அவர்கள் தான் தீர்க்கதரிசி) தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதமும் தவறாததாயிருக்க நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவ தூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" என்று இயேசு கேட்டார்.

**221.** அவருக்குள் கர்த்தருடைய வார்த்தை நிரப்பப்பட்டிருந்தது. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக இருக்கிறது. எனவே அவர் தேவன் என்னப்பட்டார். எனவே '**தீர்க்கதரிசி**' என்ற பதத்திற்கு அர்த்தம் என்னவெனில்... அத்தீர்க்கதரிசியின் வியாக்கியானம் கலப்படம் செய்யப்படக்கூடாது. பார்த்தீர்களா! "உங்களுக்குள்

ஆவிக்குரியவ னான ஒரு தீர்க்கதரிசி இருந்தால், கர்த்தராகிய நாயே அவனோடே பேசுவேன், அவன் சொல்லுவது நிறைவேறினால் அவனுக்குச் செவி கொடுங்கள், ஏனெனில் நானே அவனோடிருக்கிறேன். ஆனால் அவன் சொல்லும் காரியம் நடவாமற்போனாலும் நிறைவேறாமல் போனாலும் இருந்தால் அவனுக்குச் செவிகொடுக்க வேண்டாம். நான் அவனை அனுப்பவில்லை” என்று கூறினார். அவ்வாறுதான் நீங்கள் அதைக் கண்டுகொள்ள வேண்டும். அதன்பின்பு, நீங்கள் கவனியுங்கள், வார்த் தையின் தெய்வீக வியாக்கியானமானது, சபைக்குரிய கடைசி காலத் திய வெளிப்பாட்டுடன் முரண்படாமல் ஒத்துப் போக வேண்டும்.

**222.** அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் ஆவார். ஊீமியில் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். தீர்க்கதரிசி ஒரு கழுகாக சித்தரிக் கப்படுகிறான். ஒரு தீர்க்கதரிச கழுகு என்று கருதப்படுவதை எத்தனை பேர் அறிவீர்கள்?

**223.** பறவைகளுக்குள்ளே நமக்கு இருக்கும் மிகவும் வலிமை வாய்ந்த ஒரேயொரு பட்சி கழுகு மட்டுமே. கழுகு தனது செட்டைகளை விரித்தால், அதன் ஒரு முனை துவக்கி மறுமுனை மட்டும் பதினான்கு அடி நீளமுள்ளதாக இருக்கிறது. கழுகு மிக மிக உயரமாகப் பறக்கக் கூடியது. வேறு எந்தப் பறவையும் அவ்வுயரத்தை எட்டிப்படித்து கழுகு டன் சேர்ந்து பறக்க முயற்சித்தால், தங்கள் சிறகுகள் பிய்ந்து போன நிலையில் உருக்குலைந்து போய் விழுந்து விடும். ஏன் அவ்வாறு உள்ளது? கழுகு சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. மிக மிக உயராமக கழுகு பறக்கையில், அதினால் அவ்வளவு உயரத் திலிருந்து கூர்மையாக பார்க்க முடியாமற் போனால் அது மிக உயரத் தில் பறக்கிறதினால் அதற்கு என்ன நன்மை? ஒரு வல்லூறின் கண் ணைப் பற்றி நீங்கள் புகழ்ந்து பேசினால், அப்பொழுது கழுகு கண் களை அதோடு ஒப்பிட்டுப் பாருங்கள் பார்க்கலாம்.

**224.** ஒரு பருந்து ஒரு வேளை பறக்கையில் ஒரு கோழிக் குஞ்சை பார்த்து விடக்கூடும். அது சரிதான். இன்றுள்ள சில பருந்து களின் நிலைமை அவ்வாறு தான் உள்ளது. ஆனால் கழுகோ, பருந்துக் கும் எட்ட முடியாத உயரத்தில் பறக்க முடியும். பருந்து கழுகின் உயரத்தை எட்டிப் பிடிக்க முயன்றால், அது மூச்சு முட்டி கஷ்டப்படும்,

இறக்க நேரிடும். கழுகு பறக்கும் உன்னத உயரங்களை பருந்தால் எட்டிப் பிடிக்க இயலவே இயலாது. வேறு எந்தப் பறவையும் தன்னை வந்து எட்டிப்பிடிக்க இயலாத அப்படிப்பட்ட மிகுந்த உயரத்தில் அது பறக்கையில், மிகவும் தூரத்திலுள்ளதையும், தெளிவாக பார்க்க அதற்கு முடியும். எனவே தான் தீர்க்கதரிசிகளை “கழுகுகள்” என்று தேவன் அழைக்கிறார். தீர்க்கதரிசியால் மிகத் தொலைவிலுள்ள காலத்தின் காரியங்களை பார்க்க முடியும், கழுகைப் போல்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், டிசம்பர் 4, 1960

# அமெரிக்க தேசமானது நாடுகளுக்கெல்லாம் வேசியாயிருக்கிறது

## "AMERICA IS THE PROSTITUTE OF THE NATIONS"

87. அது பயங்கரமான செயலாகும். ஆனால் அமெரிக்காவின் செயல் அப்படித்தான் இருக்கும். கனடா சேமே, கனடா தேசத்திலிருந்து உள்ள விலையேறப்பெற்ற மக்களே! அமெரிக்கர் அங்கு போய்க் கொண்டிருந்தால், கனடாவும் அமெரிக்காவைப்போல் சிறிது காலத்தில், கீழ்த்தரமாகப் போய்விடும். கனடாவின் எல்லைகள் நெடுகிலும் போய்ப் பாருங்கள். அங்கே நீங்கள் அமெரிக்க சூழ்நிலையையே காண்பீர்கள். இந்த அமெரிக்க தேசமானது நாடுகளுக்கெல்லாம் வேசியாயிருக்கிறது. அவ்வாறு தான் அவள் இருக்கிறாள். இப்பொழுது இருக்கிறதை விட இன்னும் மோசமாக அவள் ஆகப் போகிறாள். அவள் தன் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறாள். வேதாகமம் அவள் தன் அழிவை அடையப் போகிறதைப் பற்றிக் கூறுகிறது. அவள் அவ்வாறு இருக்கப் போகிறாள் என்பதைப் பற்றி பேசுகிறது. அமெரிக்கர்; கீழ்த்தராமாகவும், அழுகிப் போனதாகவும், அசுத்தமானதாகவும், பொல்லாததாகவும் காணப்படுகிறாள். சரியாக அப்படியே அவள் இருக்கிறாள். அவள் ஒரு காலத்தில் மகத்தான தேசமாக இருந்தாள். அவள் சுவிசேஷ செய்தியை சுமந்து கொண்டு சென்றாள். அவள் இப்பொழுது இருக்கிற நிலைக்கு அவளை ஆளாக்கியது எது? ஏனெனில் அவள் சுவிசேஷ செய்தியை

தள்ளிப்போட்டு, சத்தியத்தை நிராகரித்து விட்டாள். அவள் பயங்கரமான வளாகி விட்டாள். அவள் தன் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறாள்; அதைப் பற்றி நீங்கள் விசனமடைய வேண்டாம், நான் அதைப் பற்றி தரிசனத்தில் கண்டேன். அது "**கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்**" என்பதாக இருக்கிறது. அது வருகிறது. அவள் தன் பாவத்திற்குத் தக்கதாக செலுத்தித் தீர்க்கப் போகிறாள்.

**88.** அமெரிக்கா முன்பு அமெரிக்காவாக இருந்த போது, அவள் ஒரு மகத்தான தேசனமாக இருந்தாள். இஸ்ரவேலின்நாட்கள் முதற் கொண்டு, உலகம் முழுவதிலும் பிரசித்தி பெற்ற தேசமாக விளங்கியது அமெரிக்கா தான். ஆனால் அவளோ இப்பொழுது தன்னை அசுசிப் படுத்திக் கொண்டு விட்டாள். அவள் செய்தியைப் புறக்கணித்து விட்டாள். அவள் எதைத் தெரிந்து கொண்டாள்? அவள் இப்பொழுது... அப்படிப்பட்ட நிலையை அடைந்து விட்டாள். அவள் இப்பொழுது எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறாள் என்பதை நீங்கள் காணலாம். அதை யாவரும் அறிவர். கடந்த தேர்தலில் அவளது ஆவிக்குரிய நிலையானது எப்படியிருக்கிறது என்பதை காண்பித்து விட்டாள். ஊ— ஊ, அவள் அறியாமல் இருக்கிறாள்.

இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும், ஜனவரி 8,1961

# திரித்துவக் கொள்கை பிசாசினுடையது

## "TRINITARIANISM IS OF THE DEVIL"

**174.** இப்பொழுது எனது விலையேறப்பெற்ற சகோதரனே, இது பதிவு செய்யப்படுகிறது என்று நான் அறிவேன். இப்பொழுது நீங்கள் உணர்ச்சிவசப்பட வேண்டாம். தெய்வீக அன்போடு நான் கூறட்டும்; இந்தக் காரியங்களின் பேரில் இனிமேலும் நான் அமைதியாயிருக்கக் கூடாத வேளையானது வந்துவிட்டது, வருகைக்கு மிக அருகில் இருக் கிறோம். பார்த்தீர்களா? "திரித்துவக் கொள்கை பிசாசினுடையது" என்பதை நான் **கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்** என்பதாகக் கூறுவேன். அது எங்கிருந்து வந்தது என்பதைக் கவனியுங்கள். நிசாயா ஆலோசனை சங்கத்தில் தான் ஆரம்பித்தது, அப்பொழுதுதான், அங்கே கத்தோலிக்க சபையானது ஆளுகைக்கு

வந்தது. "திரித்துவம்" என்ற வார்த்தை வேதாகமப் புத்தகம் முழுவதிலும் எங்குமே குறிப்பிடவில்லை. மூன்று தேவர்கள் என்ற கொள்கையைப் பொருத்தமட்டில் அது பாதா ளத்திலிருந்து வந்ததாகும். ஒரேயொரு தேவன் தான் உண்டு. அது தான் சரியானது ஆகும்.

**175.** "அப்படியென்றால், இந்த திரித்துவக் கொள்கைக்காரர் களெல்லாம் பாதாளத்திற்குரியவர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா?" என்று நீங்கள் கேட்கலாம். இல்லை, ஐயா! அவர்களெல்லாம் கிறிஸ் தவர்கள் என்று தான் நான் விசுவாசிக்கிறேன். ஆனால் வேளையானது நெருங்கி வந்து கொண்டிருக்கிறது, சகோதரனே! அவர்கள் உத்தமமாக இருந்தும் தவறானவர்களாயிருப்பார்கள்.

**176.** எந்த மனிதனானாலும் சரி, எந்த இடமானாலும் சரி, எந்த வேளையானாலும் சரி, இந்த விஷயத்தின் பேரில் பேச விரும்புகிறவர் கள் என்னிடம் வரலாம். எந்த ஊழியக்காரரானாலும், பேராயாரானாலும், பிரதான பேராயாரானாலும் நீங்கள் யாராயிருந்தாலும் சரி. இச்செய்தி ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறது, இது உலகம் முழுவதிலும் செல்லும். உலகம் பூராவிலும் செல்லும் இந்த ஒலிநாடாவிலுள்ள எனது செய்தியைக் கேட்டு என்னிடத்தில் வரும் எந்த ஒரு நபரையும் நான் சகோதர அன்போடு கேட்கிறேன். என்னவெனில், திருவசனத்தில் எங்காவது, அல்லது நம்பத்தகுந்த எந்த வரலாற்றுப் புத்தகத்திலும் ஒரு பாராவிலாவது, கத்தோலிக்க சபை ஸ்தாபிக்கப்படுகிற வரையிலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதாக எந்த ஒரு நபரைக் குறித்தாவது எனக்கு காண்பிக்கட்டும் பார்க்கலாம். அப்படி காண்பித்தால், நான் எனது உபதேசத்தையே மாற்றிக் கொள் வேன். ஒவ்வொரு நபரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தான் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள். என்னுடைய விலையேறப்பெற்ற சகோ தரர்களே! இக்காரியங்களுக்கு உங்களது கண்கள் குருடாக்கப்பட்டுள் ளன. தேவன் உங்களுக்கு வெளிச்சத்தை கொடுக்கும்படி ஜெபிக் கிறேன்.

**177.** அதைக் குறித்து நிரூபிக்கும்படியான திருவசனம் உங்க ளிடம் இருந்தால், நீங்கள் எனக்கு அதைக் காண்பிக்கும்படி உங்க ளுக்காக நான் காத்திருப்பேன். அல்லது உங்களது கட்சியை நிரூபிப் பதற்காக நீங்கள் என்னை தொலைபேசியில் அழைப்பதற்காக கவனித்

துக் கொண்டிருப்பேன். நீங்கள் இந்த விஷயத்தின் பேரில் எனக்கு சவால் விடுக்காவிடில், நீங்கள் வேண்டுமென்றே ஆவிக்குரிய அறியா மையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள், இந்த ஒலிநடாவுக்கு அப்பால் இருக்கிற உங்களுக்கு இதைச் சொல்லுகிறேன். எது வெளிச்சம், எது அந்தகாரம் என்பதை அறிய நீங்கள் விரும்பினால், நாம் அதற்காக தேவனிடம் கேட்கக்கடவோம். நான் **கர்த்தர் உரைக்கிறது என்ன வென்றால்** என்று கூறியதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரன் என்று விசுவாசிப்பீர்களானால்... அது திரு வசனத்தின்படி சரியாக இல்லாவிடில், என்னை சீர்படுத்துவது உங்களுடைய கடமையாகும், உ, ஊ, என்ன நடக்கிறது என்று பாருங்கள். திரித்துவ உபதேசம் தவறானதாகும்.

**178.** மூன்று தேவர்கள் உண்டு என்று நம்புகிற அநேக ஆயிரக்கணக்கான திரித்துவவாதிகள் கூட இரட்சிக்கப்பட்டிருக்கிறார் கள் என்று நம்புகிறேன். ஏனெனில், அவர்களுக்கு எந்த வித்தியாசமும் அதில் தெரியவில்லை. இச்செய்தியில் பின்னால் இதைப்பற்றி நாம் பார்க்கப்போகிறோம்.

**179.** ஒலிநாடாவை நிறுத்திவிட்டு நீங்கள் வீட்டைவிட்டு வெளி யேறி விடவேண்டாம். திரித்துவ சகோதரர்களே, இதற்கு செவிகொடுங் கள். சில நிமிட நேரம் அமைதியாக அமர்ந்திருங்கள். உங்களுக்கு நீங்களே கடமைப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய சபையாருக்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். பாருங்கள்? ஒலி நாடாக்களை பெறுவதை நிறுத்திவிடாதீர்கள். அதனோடு நிலைத்திருங்கள். திருவசனத்தைக் கொண்டு அது சரியாயிருக்கிறதா என்று அதை ஆராய்ந்துபாருங்கள். “எல்லாவற்றையும் சோதித்துப் பாருங்கள்” என்று வேதவாக்கியம் கூறுகிறது.

இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும், ஜனவரி 8, 1961

# பரிசுத்த ஆவியானவர் அவரிடம் கூறத் தொடங்கினார்

## "HOLY SPIRIT BEGAN TO TELL HIM"

**176.** அப்படிப்பட்டவர்களுக்காக அங்கு அவ்விதம் எழுதி வைக்கப்படவில்லை. நாங்கள் காரில் ஏறப்போகும் தருணத்தில் இந்த மனிதன் வந்தார். சகோ. பாங்க்ஸூக்குத் தெரியும் நான்... நான் வீட்டில் காத்துக் கொண்டிருந்தேன். சகோ. பாங்க்ஸின் வீட்டுக்கு யாரோ ஒருவர் வந்து அவரை பிடித்து வைத்துக் கொண்டிருந்தார். அவரைக் காண நான் அங்கு சென்றிருந்த போது, நானும் பிடித்து வைக்கப்பட்டேன். நாங்கள் எங்கள் துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு காரில் ஏறுவதற்காக புறப்பட்ட தருணத்தில், இந்த மனிதன் உள்ளே நடந்து வந்தார்.

**177.** நான் அவரிடம், அங்கு எழுதி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சென்று தொலைபேசியில் அந்த எண்ணைக் கூப்பிடச் சொல்ல (பட்லர் **2–1519** என்ற எண்) ஆயத்தமானேன். "நாங்கள் அவசரமாய்ப் போக வேண்டும்" என்றேன்.

அவர், "ஐயா, நீங்கள் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்" என்றார்.

நான், "என் பெயர்..." என்றேன்.

**178.** முதலாவதாக நான் அவரிடம் நடந்து சென்றேன். அவர், "எப்படியிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவருக்கு நான் யாரென்று தெரியாது என்பதை அறிந்து கொண்டேன்.

"என் பெயர் பிரான்ஹாம்" என்றேன்.

"நீங்கள் தான் சகோ.பிரான்ஹாமோ?" என்று கேட்டார்.

"நான் தான்" என்றேன்.

**179.** அவர், "சகோ.பிரன்ஹாமே, உங்களைச் சந்தித்துப் பேச வேண்டுமென்றிருந்தேன். நீங்கள் வெளியே செல்ல ஆயத்தமாயிருப்பதைக் காண்கிறேன்" என்றார்.

நான், "ஆம், ஐயா. அப்படித்தான்" என்றேன்.

அவர், "நீங்கள் அவசரமாக போக வேண்டும் என்பதை அறிகிறேன்" என்றார்.

நான், "ஐயா, நான் உடனே போக வேண்டும்" என்றேன்.

**180.** அவர், "எனக்கு சில நிமிடங்கள் உங்களிடம் பேச வேண்டும்" என்றார்.

**181.** நான், இப்பொழுது முடியாது என்று சொல்ல வாயெடுத்தேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், "அவனை அறைக்குள் கொண்டு செல், அவனுக்கு நீ உதவி செய்ய முடியும்" என்றார். அது எங்கள் திட்டம் அனைத்தையும் மாற்றி விட்டது. துப்பாக்கி ஒருபுறம் வைக்கப் பட்டு விட்டது. தேவனுடைய வேலை முதலில். பாருங்கள்? அவர் சொன்னார்...

**182.** "என்னுடன் வாருங்கள்" என்று அவரை அழைத்துச் செல்கையில் சகோ. பாங்க்ஸிடம், "சற்று கழிந்து வருகிறேன்" என்றேன்.

அந்த மனிதன், "இது என் ஆத்துமாவைக் குறித்த விஷயம், சகோ. பிரன்ஹாமே" என்றார்.

நான், "சரி, உள்ளே வாருங்கள்" என்றேன்.

நான் உள்ளே நுழைந்த போது, மேடா, "நீங்கள் இன்னும் புறப்பட வில்லையா?" என்று கேட்டாள்.

**183.** நான், "இல்லை, இல்லை, இல்லை. யாரோ ஒருவர் என்னைக் காண வந்திருக்கிறார்" என்று கூறிவிட்டு, "பிள்ளைகளை மற்ற அறையில் வைத்துக் கொள்" என்றேன். அவரை நான் அந்த சிறு குகை அறைக்குள் கூட்டிச் சென்று, நாங்கள் உட்கார்ந்தோம். நாங்கள் உட் கார்ந்த மாத்திரத்திலே...

**184.** அந்த மனிதன் நேற்றிரவு சபைக்கு வந்திருந்தார். அவர் வந்திருந்தாரா பாங்க்ஸ்? ஆம். நல்லது. நேற்றிரவு வருவதாகக் கூறி யிருந்தார். அவர்...

**185.** முதலாவதாக பரிசுத்த ஆவியானவர், அவர் யாரென்றும், அவர் என்ன செய்தாரென்றும், அவருடைய வாழ்க்கையில் என்ன நடந்ததென்றும், அவரைக் குறித்து எல்லாமே அவரிடம் கூறத் தொடங் கினார். அதற்கு பாங்க்ஸ் சாட்சி. அவர் வாயைத் திறந்து இரண்டு வார்த்தை கூட பேசவில்லை. அந்த மனிதரிடம், "நீ அலைந்து திரிகி றவன். நீ மாடிஸனில் வசிக்கிறாய், ஆனால் இப்பொழுது நீ இந்தியானா விலுள்ள ஈவான்ஃஸ்வில் என்னுமிடத்திலிருந்து வந்திருக்கிறாய். அங்கு

நீ ஒரு பிரத்தியேக கொள்கையை கடைபிடிக்கும் வேதப்பள்ளியில் சேர்ந்து, மிகவும் குழப்பமடைந்திருக்கிறாய். சில நிமிடங்களுக்கு முன்பு தான் நீ லூயிவில்லுக்கு வந்தாய். அங்கு ஒரு மனிதன் இருந்தார், அவருடன் நீ உட்கார்ந்து உணவு உண்டாய். அவர்தான் நீ இங்கு வந்து என்னைக் காணும்படியாகவும் 'அவர் உன் தொல்லை அனைத் தையும் நேராக்கி விடுகிறார்' என்று உன்னிடம் கூறினார். அது **கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றேன்.

**186.** உட்கார்ந்து கொண்டிருந்த மனிதன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு என்னைப் பார்த்து, "ஆம், ஐயா" என்றார்.

"அது உங்களை பிரமிக்க வைத்தது, இல்லையா?" என்றேன்.

"ஆம். அது அப்படித்தான் செய்தது" என்றார்.

"நீங்கள் பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட் டேன்.

"ஐயா, நான் விசுவாசிக்க விரும்புகிறேன்" என்றார்.

**187.** "நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களிடம் கூறட்டுமா?" என்றேன்.

**188.** அவர், "சரி, ஐயா" என்றார். நான் அவரிடம் அதைக் கூறினேன். அவர், "சகோதரனே, அது உண்மை" என்றார்.

"உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்" என்றேன்.

அவர், "சரி, நான் மாற்றிக் கொண்டு விட்டேன்" என்றார்.

"இதுதான் நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தது" என்றேன்.

"அது உண்மை! அது உண்மை!" என்றார்.

**189.** "உங்களுக்கு ஒரு தரிசனம் தேவையில்லை, நீங்கள் நேராக் கப்பட வேண்டியது மட்டுமே" என்று சொல்லிவிட்டு, அவர் செய்த ஒரு காரியத்தை அவரிடம் எடுத்துக் கூறினேன். அதை நான் கூறுவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள். அது மிகவும் மோசமான, பயங்கரமான காரியம். அதைச் செய்தது நீங்களாயிருந்தால், அதை நான் கூறுவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள். கர்த்தர் எனக்கு ஜனங்களைக் குறித்து

கூறுவதை நான் வெளியே சொல்வதில்லை. நான் அவரிடம், "சரி, அதைச் செய்வீர்களா?" என்று கேட்டேன்.

அவர், "நான் செய்வேன்" என்றார்.

நான், "நீங்கள் போகலாம்" என்றேன்.

**190.** நாங்கள் அந்த அறையில் பத்து நிமிடங்கள் கூட இருக்க வில்லை. இல்லையா சகோ. பாங்க்ஸ்? ஏழு நிமிடங்களுக்கும் பத்து நிமிடங்களுக்கும் இடையே. நாங்கள் வெளியே வந்து, சாலையில் ஒன்றாக காரில் பயணம் செய்த போது – அவரும் நானும், சகோ. பாங்க்ஸூம், என் சிறிய மகன் ஜோவும் என்று நினைக்கிறேன் – அவர் என்னிடம் திரும்பி, "மிஸ்டர், உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன்" என்றார்.

நான், "சரி, கேளுங்கள்" என்றேன்.

**191.** அவர், "எனக்கு சிறிது குழப்பமாயுள்ளது. என்னைப் பொறுத்த எல்லா விஷயங்களையும் நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டார். பாருங்கள்? பாங்க்ஸ் கூட இருந்தார்.

**192.** நான், "மிஸ்டர், நீங்கள் எப்பொழுதாகிலும் என் தரிசனங்க ளைக் குறித்தும் என் ஊழியத்தையும் கேள்விப்பட்டதுண்டா?" என்று கேட்டேன்.

**193.** அவர், "ஒரு மணி நேரம் முன்பு வரைக்கும் உம்முடைய பெயர் கூட எனக்குத் தெரியாது. லூயிவில்லில் யாரோ ஒருவர் இங்கு போகும்படி கூறினார், நான் நடந்து பாலத்தைக் கடந்து வந்தேன்" என்றார். அது சரியா, சகோ. பாங்க்ஸ்? "உம்முடைய பெயரையும் நீங்கள் யாரென்றும் நான் அறிந்திருக்கவேயில்லை" என்றார்.

**194.** நான், "என் ஊழியத்தில் அது தேவன் அனுப்பின வரம்" என்றேன்.

**195.** அவர், "அது அவ்விதம் இருக்குமானால் நான்... என் குழப்பம் எல்லாம் போய் சரியாயிருக்கிறேன். அது என்னவென்றால், தேவன் உமது மூலம் என்னுடன் பேசினார்" என்றார்.

"அது மிகவும் சரி" என்றேன்.

**196.** அவர், "நான் வேதத்தில் படித்திருக்கிறேன். ஒரு முறை இயேசு சீஷர்களிடம் பேசி" அவர், "ஜனங்கள்" என்று சொல்வதற்குப் பதிலாக "சீஷர்கள்" என்று சொல்லி விட்டார் – "அவர் சீஷர்களிடம் பேசி அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்த காரியங்களைக் கூறினார்" என்றார். பாருங்கள்? "அவர்களுடைய சிந்தைகளை அறிந்து கொண்டார்" என்று வேதத்தில் கூறியுள்ளதை தான் அவர் குறிப்பட்டார். அவர் தொடர்ந்து, "அது அவருடைய பிதா அவர் மூலம் பேசுதல் என்பதாக அவர் கூறினார்" என்றார்.

"அது உண்மை" என்றேன்.

**197.** அவர், "அப்படியானால், இப்பொழுது, இப்பொழுது, என்னிடம் இந்த காரியங்களை அறிவித்து, நீர் கூறினது உண்மை என்பதை நான் விசுவாசிககும்படி செய்வதற்காக தேவன் உம்மை ஒரு கருவியாக உபயோகித்து உமது மூலம் என்னுடன் பேசினனார்" என்றார்.

"அது உண்மை தானா?" என்று கேட்டேன்.

அவர், "ஆம், அது தேவனாயிருக்க வேண்டும்" என்றார்.

**198.** நான், "சகோதரனே, (நானும் பாங்க்ஸூம் இவ்வாறு கூறினோம்), கூட்டங்களுக்கு பத்து ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் சிலரை விட இப்பொழுது உமக்கு அதிகம் தெரிகிறது. அவர்கள் இதைக் குறித்து இன்னும் அறியாமலிருக்கிறார்கள்" என்றேன். அந்த மனிதன்! அதுதான் அது. பாருங்கள்?

கேள்விகளும் பதில்களும் [COD 2:12], ஜனவரி 12, 1961

# அங்கே ஒரு உபத்திரவம் உண்டாகும்

## "THERE'LL COME A PERSECUTION"

**63.** என் சத்தம் விரைவில் ஏன் நிறுத்தப்படப்போகிறது என்பதை உங்களால் காண முடிகிறதா, யாராகிலும் ஒருவர் அறிந்து கொள்ளப் போகின்றார்! ஆம்! ஏன்? வெளி. 2:20ல் அவள் தன்னை தீர்க்கதரிசியென்று அழைத்துக் கொள்கிறாள். பாவம் அலைபோல் நடந்து வருகிறதை கவனியுங்கள். நவீன, தேவனுக்கு விரோதமான செயல்கள்

சபைகளில் நடப்பதைக் கவனியுங்கள். "முடிவில் உபத்திரவம் உண்டாகும்" என்று வேதம் கூறுகிறது. இது **கர்த்தர் உரைக்கிறதாவது**! நிச்சயமாக உபத்திரவம் உண்டாகும்.

**64.** அப்பொழுது என்ன நடக்கப்போகிறது? முன்பு எப்படியிருந்ததோ, அப்படியே இப்பொழுதும் இருக்கும். அவளே பின்னால் இருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தினாள். அவளே கட்டுப்படுத்தினாள். அது **17**ம் அல்லது **18**ம் அதிகாரம் என்று நினைக்கிறேன். அதைப் படித்துப் பாருங்கள். யேசபேல் என்ன செய்தாள் என்று நீங்கள் காண்பீர்கள்: அவள் எப்படி ஆகாபை தன் வசப்படுத்திக் கொண்டாள் என்று. அவனால் அதைக் குறித்து ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏனெனில் அவள் அவன் மனைவி. அப்படியானால் ஒரு தேசம் எதன் மேல் கட்டப்பட்டிருந்ததென்று பாருங்கள், பின்வாங்கிப்போன ஒரு இஸ்ரவேலனும் அவனுக்கு ஆதரவாக பாகாலை வழிபடும் ஒரு அஞ்ஞான மனைவியும். அவள் என்ன செய்தாள்? அவள் எல்லாவற்றையும் நவீனமாகவும் அழகாகவும் செய்து, ஜனங்களுக்கு அதுசுலபமான முறையாக அமைந்திருந்ததால் சபை முழுவதும், போதகர்களும், எல்லோருமே அதனால் கவரப்பட்டனர். "நான் ஒருவன் மாத்திரமே மீதியாயிருக்கிறேன்" என்று எலியா கதறவில்லையா? அன்று எப்படியிருந்ததோ அதற்கு இணையாக இன்றும் உள்ளது.

**65.** அவர்கள் எல்லோருமே ஏதாவதொன்றைக் கூற பயந்தனர். இன்றைக்கும் அவ்வாறே உள்ளது அல்லவா? அவர்கள் ஒன்றைக் கூற பயந்தனர். எனவே நாம் காண்கிறோம், அவர்கள் நிலை தளர்ந்து, ஒழுக்கமற்று, குடித்து, இன்பத்தின் மேல் நாட்டம் கொண்டு, இன்றுள்ளது போல் காணப்பட்டனர், யேசபேல் வேதவாக்கியங்களை திரித்து... அவள் என்ன செய்தாள்... அவள் நியாயப்பிரமாணங்களை திரித்தாள். யேசபேல் ஜனங்களை தன் கீழ் அடக்க, அவளை "தீர்க்கதரிசினி" என்றும்,அவள் ஒருவள் மாத்திரமே "பூமியில் தேவனுடைய சத்தம்" என்றும் கூறிக் கொண்டாள் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். உலகம் உள்ளது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக அவள் மாமிசப் பிரகாரமான சிந்தையை நம்பப்பண்ணுவாள்.

**66.** "அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெண் வழிபாடு வரும். அது மரியாளாக இருக்கும்." அதை நான்... **1931**ல் கண்டேன். ஏழு சம்ப

வங்கள் நிகழ்ந்து விட்டன. நான் 1931ல் எழுதின இந் தாள் இங்கே என்னிடம் உள்ளது, "எவ்வாறு ஜனாதிபதி ஃபிராங்ளின் டி. ஷீஸ்வெல்ட் முழு உலகமே யுத்தத்தில் ஈடுபட காரணமாயிருப்பார்" என்று நான் கூறினேன். நான் அப்படி கூறின போது, யுத்தம் எதுவும் நடக்கவில்லை, அது பணக்கஷ்ட காலமாயிருந்தது. நான், "வேறொரு காரியம்..." என்று கூறினேன். 'டிமாக்ரட்' கோஷ்டியை முழுவதுமாக ஆதரித்த என் தாய், அப்படி நான் கூறின போது, என்னை முறைத்துப் பார்த்தார்கள். நான், "அது ரிப்பப்ளிக்கன் அல்லது சோஷலிஸ்ட் கோஸ்டி அல்லது எந்த கோஸ்டியைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவர்கள் பெண்கள் வோட்டு போட அனுமதிக்கின்றனர். அப்படி அவர்கள் செய்யும்போது, அது இந்த நாட்டுக்கு நேரிடும் மிகப்பெரிய அவமானமாயிருக்கும்" என்றேன். நான் மேலும், "அதன் பலனை அவர்கள் என்றாவது ஒரு நாள் அனுபவித் தேயாக வேண்டும்" என்றேன். சென்ற தேர்தலின் போது அப்படி நடந் தது. இந்த ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தது பெண்களே.

**67.** தென் பாகத்திலுள்ள விலைமதிக்க முடியாத கறுப்பு ஜனங் களே, நீங்கள் எப்படி வோட்டு போடடீர்கள்! "பிரசங்க பீடத்திலிருந்து நீங்கள் அதை கூற வேண்டிய வேலை உங்களுக்கு இல்லை" என்று நீங்கள் கூறலாம். எனக்கு கூற உரிமையுண்டு. ஆமாம், அது தேவ னுடைய வார்த்தை! உங்களுக்கு விடுதலையை வாங்கித்தந்த ஆபிர காம் லிங்கனின் கறை – அவர் அந்த கொருட்காட்சி சாலையில் ஒரு ஸ்திரீயின் மார்பகத்தின் மேல் படுத்துக் கொண்டிருக்கிறார். நீங்களோ உங்கள் பிறப்புரிமையை விற்றுப் போடுகிறீர்கள். உங்களுக்கு அவமானம்.

**68.** ஜனங்களாகிய நீங்கள், அரசியலுக்காக, நீங்கள் ஒரு நல்ல "டிமாக்ரட்" என்பதற்காக எப்படிப்பட்ட ஒன்றுக்கு வோட்டு போட்டு, அமெரிக்கத்துவம், கிறிஸ்துவ மார்க்கம் என்றும் உங்கள் பிறப்புரிமை களை விற்றுப்போட்டு, இந்த நாட்டுக்கு நாம் ஓடிவரக் காரணமாயிருந்த அந்த வேசியின் கையில் அதைக் கொடுத்தீர்கள். அவள் எவ்வளவு மெதுவாக உள்ளே நுழைகிறாள் என்பதைப் பாருங்கள். மிகவும் சுலப மாக. இப்பொழுது அவள் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறாள். நிச்சய மாக! வெள்ளை மாளிகை சிங்காசனத்தில் (White House throne).

**69.** கவனியுங்கள்! ஏற்கனவே... கத்தோலிக்க பள்ளிகளைக் குறித்தும் பிராடெஸ்டெண்டு பள்ளிகளைக் குறித்தும் அன்றொரு நான் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தீர்களா? கத்தோலிக்க பள்ளிகளை ஆதரியுங்கள், பிராடெஸ்டெண்டு பள்ளிகளை அல்ல என்று எழுதப் பட்டிருந்தது. ஓ, சகோதரனே, அப்படிப்பட்டவை இனி தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைக் கவனியுங்கள். அவர்கள் அப்படி செய்யும்போது, என்ன நடக்கிறது என்பதை பாருங்கள். பாவம் குவிகிறது. தேசத்தை அவர்கள் தடுமாறும் நிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

**70.** சில ஆண்டுகளுக்கு முன்பு, அவர்கள்... பெந்தெகோஸ்தே முதலில் போட்டியிட்ட போது, ஆல் ஸ்மித் ஜனாதிபதி தேர்தலுக்கு நின்ற போது, அது நாட்டை சில ஆண்டுகளுக்கு முன்பு இரட்சித்தது. அமெரிக்கா அப்பொழுது நன்றாக அறிந்திருந்தது. ஆனால் பெந்தெ கோஸ்தேயினர் மிகவும் உலகப்பிரகாரமாக வாழத்தொடங்கி, அதில் பிரவேசித்து, கிறிஸ்தவர்கள் என்னும் தங்கள் உரிமையை அரசியலுக்கு விற்றுப்போட்டு, வேதத்துக்கு மேலாக அரசியலை வைத்தனர். ஓ, என்னே!

**71.** இப்பொழுது, ஒரு நிமிடம், இது எப்படி வந்ததென்று கவனியுங்கள். அவர்கள் என்ன செய்தார்களென்றும், அவர்கள் செய்த காரியங்களையும் நாம் எண்ணிப் பார்க்கும்போது, அது அப்படியே இங்கு இணையாக உள்ளது, பாவம் எங்கும் உள்ளது. யேசபேல வந்து, ஜனங்கள் அனைவரையும் வசியப்படுத்தினாள். கவனியுங்கள், முடிவில் அவள் பாகாலுக்கு பெரிய கோவில்களைக் கட்டினாள். அது சரியா? பாகால் பூசாரிகள் எல்லாவிடங்களிலிருந்தும் திரண்டு வந்து, அங்கு கூடி, பாகால் வழிபாட்டினால் தேசத்தை அசுசிப்படுத்தினர்.

**72.** அவர்கள் எப்படி செய்தார்கள், எப்படி உள்ளே நுழைந்தார்கள் என்று பாருங்கள். இன்றைக்கு அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைக் கவனியுங்கள். கத்தோலிக்க மார்க்கம் விழுங்கி, விழுங்கி, விழுங்கி, விவாகம் செய்து,இதை முறித்துப்போட்டு, அவர்கள் என்ன செய்வார்களென்று தானியேல் கூறினானோ, அதுவே நடைபெற்றுக் கொண்டு வருவதைக் கவனியுங்கள். இரும்பும் களிமண்ணும் ஒன்றோ டொன்று கலவாது, ஆனால் அவர்கள் தங்கள் வித்துக்களை ஒன்றோ டொன்று கலக்க முயன்று, முறித்துப் போடுகின்றனர். கத்தோலிக்க

பையனை மணக்கும் ஒவ்வொரு பிராடெஸ்டெண்டு பெண்ணும், தன் பிள்ளையை கத்தோலிக்கனாக வளர்க்க வேண்டும். எல்லாமே அந்த விதமாக மணம் புரிந்து கொண்டும், ஒலுவரோடொருவர் கலந்தும், இது தொடர்ந்து நடந்து வந்து முடிவில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழு வதுமே புழுபுழுத்த நிலையை அடையும்.

யேசபேல மார்க்கம், மார்ச் 19, 1961

## ஒரு பஞ்சமுண்டாகும்

## "THERE WILL BE A FAMINE"

**94.** சகோதரர்களே, இதை நினைவில் கொள்ளுங்கள். உங்களை குற்றப்படுத்த வேண்டும் என்னும் காரணத்தால் இவைகளை நான் கூறுவேனானால் நான் பீடத்தண்டை செல்ல வேண்டியவனாயிருக்கி றேன். நான் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதை உங்களிடம் கூறிக் கொண்டிருக்கிறேன். நான் உங்களிடம் உண்மையைக் கூறினேன் என் பதை தேவன் தேசம் முழுவதும் உலகம் முழுவதும் உறுதிப்படுத்தி யிருக்கும்போது, தவறு எங்கேயுள்ளது என்பதை என்னிடம் கூறுங்கள்! நான் உங்களிடம் உண்மையைக் கூறுகிறேன். வேகமாக தேவனிடம் திரும்புங்கள்! இந்த முறைமைகளை விட்டு வெளியே வாருங்கள். ஏனெனில் வேதம் வெளிப்படுத்தின விசேஷத்தில், ரோமன் கத்தோ லிக்க மார்க்கம் ஒரு வேசியென்றும், அவள் வேசிகளுக்கெல்லாம் தாய் என்றும் கூறுகிறது (அது என்ன? சபைகள், முறைமைகள்).

**95.** மெதோடிஸ்டு சபை, லூத்தரன் சபை எங்கிருந்து வந்தன? லூத்தரன் சபை எங்கிருந்து வந்தது? மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, மற்றும் எல்லா ஸ்தாபனங்களும் எங்கிருந்து வந்தன? தேவன் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவில்லை. இயேசு சபையை நிறுவின போது கத்தோலிக்க சபை தொடங்கினதாக அவர்கள் கூறுகின்றனர், அதற்கு ஆதாரமாக சரத்திரத்திலிருந்து ஒரு பக்கமோ, வேதத்திலிருந்து ஒரு பக்கமோ எனக்குத் தேவை. கடைசி அப்போஸ்தலன் மரித்து முன்னூற்றாறு ஆண்டுகள் வரைக்கும் ஒரு ஸ்தாபனம் இருக்கவில்லை. அதன் பிறகு அவர்கள் நிசாயா ஆலோசனை சங்கம் உண்டாக்கிக் கொண்டு,

ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். லூத்தர் வெளியே வந்த போது... அவர் மகத்தான தேவனுடைய மனிதன், ஆனால் அவர் சென் றவுடனே, அந்த சிறு கூட்டம் ஜனங்கள் வேறொரு ஸ்தாபனம் ஏற் படுத்திக் கொண்டனர். அப்பொழுது பரிசுத்த ஆவி அவர்களை விட்டுச் சென்று, ஜான் வெஸ்லியின் மேல் தங்கினார். அவர் ஸ்தா பனம் எதுவும் ஏற்படுத்தவில்லை, ஆனால் அவர் சென்ற பின்பு, அவர் கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டனர். அப்பொழுது பரிசுத்த ஆவி பெந்தெகோஸ்தேரிடையே தங்க வந்தார். அவர்கள் மெதோடிஸ்டு ஸ்தா பனத்தை விட்டு வெளி வந்தனர். என்ன நேர்ந்தது? அவர்களும் ஸ்தா பனம் உண்டாக்கிக் கொண்டனர்.

**96.** ஆனால் இந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற எலியாவின் வல்லமையுடனும் அபிஷேகத்துடனும் ஒரு மனிதன் முறைமை ஒன்று தோன்றும். அல்லேலூயா! அவன் அதை அசைப்பான். அவன் அவர் களிடம் தீர்க்கதரிசனம் உரைத்து எல்லாவற்றையும் அவர்களுக்கு அறி வித்தான். தேவனும் அவனுடன் கூட இருந்து கிரியை நடப்பித்தார். ஆனால் தேவனுடைய கடைசி செய்தி வெள்ளை மாளிகையின் மேல் தாக்குதலாக அமைந்திருக்கும். யோவான் வந்த போது, அவனுடைய கடைசி செய்தி அக்காலத்து வெள்ளை மாளிகையின் மேல் தாக்கு தலாக அமைந்திருந்தது. எலியாவின் கடைசி செய்தியும்; அவன் தேவ னுடைய சமுகத்திலிருந்து அன்று காலை புறப்பட்டு சாலையின் வழி யாக நடந்து வந்த போது, அவன் தேகமெல்லாம் மயிர் வளர்ந்திருந்தது, அவனுடைய வழுக்கை தலை பிரகாசித்தது, அவனுடைய தாடி காற் றினால் அசைந்தது, அவனுடைய கண்கள் தேவனுடைய மகிமையால் மிளிர்ந்தன, அவன் கையில் தடியைப் பிடித்துக் கொண்டு, கால்கள் தள்ளாடாமல் நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் என்ன செய்தான்? அவன் சமாரியாவிலிருந்து நேராக வெள்ளை மாளிகைக்கு சென்று, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றான். அவன் எதற்கும் பயப்படவில்லை. சபைகள் அவனைப் புறக்கணித்தன. ஜனங் கள் அவனைப் புறக்கணித்தனர். இப்பொழுது தன் கடைசி தாக்குதலை அவன் வெள்ளை மாளிகையின் மேல் செலுத்துகிறான்.

**97.** அதன் பிறகு என்ன நடந்தது? கவனியுங்கள்! அந்த தாக்கு தலுக்குப் பிறகு, அவன் அமைதியாகி விட்டான். யாரும் அவனைக் குறித்து ஒன்றுமே கேள்விப்படவில்லை. தேவன் அவனை காட்சி

யிலிருந்து அழைத்துக் கொண்டார். அவர், "எலியாவே, உன் செய்தியை இஸ்ரவேல் முழுவதும் அறியப் பண்ணினாய். அவர்களுக்கு அது தெரியும். இப்பொழுது அவர்களை விட்டு விலகி வனாந்தரத்துக்கு வா. உன்னை அவர்களிடமிருந்து பிரித்துக் கொள். ஏனெனில் நான் ஒன்றைச் செய்யப் போகிறேன். என் செய்தியைப் புறக்கணிப்பதினால் என்ன நேரிடும் என்று அவர்களுக்கு காண்பிக்கப் போகிறேன்" என்றார். என்ன நேர்ந்தது? யுத்தம், பஞ்சம், பசியால் வாடுதல்.

98. **பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது.** "என்ன வந்து கொண்டிருக்கிறது என்பதை கவனியுங்கள்! என்ன தொடரப் போகிறது என்பதைக் கவனியுங்கள்! பஞ்சம் உண்டாயிருந்தது, பஞ்சம் ஒன்று வரும்." ஓ, ஆகாரம் இல்லாத பஞ்சம் அல்ல, ஆனால் தேவனுடைய வார்த்தையையும் அவருடைய சத்தியத்தையும் கேட்கக்கூடாதபடிக்கு பஞ்சம். எல்லா சபைகளுமே அன்னியோன்னியமாகி அதற்குள் நுழைந்து விடும், அவர்கள் ஏற்கனவே அதனால் விழுங்கப்பட்டுள்ளனர்.

99. எலியா என்ன செய்தான்? ஜீவத் தண்ணீர் கிடைக்கக்கூடிய மலையின் மேல் மறைந்திருந்த ஒரு நீரூற்றை அவன் கண்டான். அவன் அங்கு தேவனுடைய வல்லமையின் கீழ் அமர்ந்திருந்த போது, தேவனிடத்திலிருந்து அவனுக்கு வெளிப்பாடு கிடைத்தது. மற்றவர்கள் பசியால் வாடிக் கொண்டிருந்த போது, இந்த வெளிப்பாடுகள் அவனுக்கு மறைந்திருந்த சிறு நீரூற்றாக அமைந்திருந்தது. தேவன் தமது ஊழியக்காரரை (காகங்களை) ஆசீர்வதிப்பாராக. அவன் ஜனங்களிடமிருந்து பிரிந்திருந்த போது, இவை அவனுக்கு உணவை கொண்டு தந்தன. அவர்கள் கீழே எழுப்புதலுக்காக வாடி, "அவனுடைய எழுப்புதல்களைக் குறித்து நாம் ஒன்றும் கேட்பதில்லையே... நமது ஸ்தாபனங்களை தாக்கிக் கொண்டிருந்த அந்த கிழவன் இப்பொழுது எங்கே?" என்று கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை. அவன் தனிமையான ஓரிடத்திற்குச் சென்று தேவனுடன் கூட இருந்தான். அவர்கள் அவனுடைய சத்தத்தைக் கேட்கவில்லை. அதன் பிறகு அவர்கள் காணத் தொடங்கினர்.

100. தேவன் ஒரு செய்தியை அனுப்பி அதை ஜனங்களுக்கு உரைத்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் போனால், அவர் தமது ஊழியக்காரனை அங்கிருந்து விலக்கி, தமது வாதைகளை

அனுப்புகிறார்: பஞ்சம், மரணம் (ஆவிக்குரிய மரணம், சரீர மரணமும் கூட). சகோதரனே, மனக்கிலேசம் வருவதைப் பொறுத்திருந்து பார். அப்படிப்பட்ட ஒன்றை நீ கண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய், சற்று கழிந்து என்ன நடக்கிறதென்று பார். அப்படிப்பட்ட ஒன்றை நீ கண்டிருக்க மாட்டாய். ஒரு நல்ல ஆவிக்குரிய எழுப்புதலுக்காக நீ ஏங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய். சிறிது காலம் பொறுத்திருந்து பார். சற்று காத்திரு, தேவனுடைய வார்த்தை யைக் கேட்க நீ வாஞ்சித்து கதறி அழுவாய். வேதம் அவ்வாறு கூறு கின்றது. "கடைசி நாட்களில் பஞ்சம் உண்டாகும், அது ஆகாரக் குறை வினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாக முமல்ல. அது உண்மையான தேவனுடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம்" என்று தீர்க்கதரிசி கூறியுள்ளான் (ஆமோஸ் 8:11). அந்த சத்தம் வனாந்தரத்தில் எங்கோ ஓரிடத்தில் மறைந்து அமைதியா யிருக்கும்.

**101.** அவர் தமது ஊழியக்காரராகிய காகங்களை நியமித்தார். அந்த ஊழியக்காரப் பறவைகள் ஆசீர்வதிக்கப்படுவதாக! அவன் சபை யிலிருந்து பிரிந்திருந்த நேரத்தில் அவை எலியாவின் சத்தத்தை உயி ருடன் வைத்திருந்தன, இந்த காகங்கள் அவனுக்கு காலையில் இறைச் சியும் அப்பமும் கொண்டு வந்து கொடுத்தன, மாலையிலும் இறைச்சி யும் அப்பமும் கொண்டு வந்து கொடுத்தன. அவன் அந்த சிறு நீரூற் றின் தண்ணீரைப் பருகினான். ஆனால் கீழேயிருந்த மற்றவர்களுக்கோ ஆவிக்குரிய ஆகாரமும் தண்ணீரும் கிடைக்காமல் போயிற்று.

**102.** ஒரு நாள், பாவம் ஜனங்களைக் கொன்று, தேவன் தமது ஜனங்களை முழங்காற்படியிடச் செய்த பிறகு.. யேசபேல் எல்லாவற்றை யும் அடியோடு ஒழித்தாள், அவள் அதை மறுபடியும் செய்வாள்! அது **தேவனுடைய பரிசுத்த வேதாகமம் உரைக்கிறதாவது.** "அவள் அதை மறுபடியும் செய்வாள்" இப்பொழுது அவள் பெயரளவில் தலைவனின் பின்னால் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, தன் விருப்பப்படி அதைத் திரித்துக் கொண்டிருக்கிறாள். யாரும் அவளைத் தடுத்து நிறுத்த மாட்டார்கள், நிச்சயமாக இப்பொழுது யாரும் அவளைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. ஏனெனில் மத சம்பந்தமான வட்டாரத்தில் அவர்களுக்கு எது கிடைக்கவில்லையோ, அதை அரசியலில் நுழைவதி னால் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் அங்கு அதை செய்து விட்ட னர். நான் இங்கு நின்று கெண்டிருப்பது

எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக அந்த அரசியல் அவர்களை மிருகத்தின் முத்திரைக்கு அழைத்துச் செல்லும். பாருங்கள்? வேதம் அவ்வாறு உரைத்துள்ளது.

**103.** நமக்கு நேரமாகிக் கொண்டிருக்கிறது என்று அறிவேன். நான் வேகமாக முடிக்கிறேன். கர்த்தர் என்னை அனுமதிப்பாரானால், இந்த கடைசி வார்த்தையை நான் கூறியாக வேண்டும்.

**104.** கவனியுங்கள்! தேவன் எலியாவை அசைக்கும் வரை, அவன் மலையின் மேலேயே தங்கியிருந்தான். அவனுக்கு எழுப்புதல்கள் எதுவு மில்லை. அவன் அதற்கு விரோதமாக பிரசங்கிக்கவில்லை, அவன் ஒன்றும் செய்யவில்லை. அவன் வனாந்தரத்தில் தேவனுடன் தனியாக நின்று கொண்டிருந்தான். ஏனெனில் அவன் வனாந்திர மனிதன். அவன் வனாந்தரத்தில் வளர்க்கப்பட்டவன்.

**105.** அவன் வனாந்தரத்துக்கு சென்று, தேவனுடன் தனித்திருந் தான். அவன் தனது செய்தியைக் கொடுத்த பிறகு சபையிலிருந்து பிரிந்து சென்றான். சபை அதை புறக்கணித்தது, முடிவில் ஸ்தாபனங் கள் அதனுடன் எவ்வித தொடர்பும் கொள்ள மறுத்தன. எனவே அவன் அங்கிருந்து செல்ல வேண்டியதாயிற்று. தேவன் அவனை காட்சியி லிருந்த அழைத்து, வனாந்தரத்துக்கு கொண்டு சென்று, “இங்கு வா, அவர்கள் உனக்கு செவிகொடுக்க மாட்டார்கள், இங்கு வா, அவர்கள் மேல் என் நியாயத்தீர்ப்பை ஊற்றப் போகிறேன்” என்றார், ஆமாம். அவன் இந்நாட்களில் ஒன்றில் இங்கிருப்பான். நீங்கள் கவனித்து வாருங்கள்.

**106.** அவன் தீர்க்கதரிசனம் உரைத்த நாட்களுக்குப் பிறகு, என்ன நேர்ந்தது? சபை இளைத்துப் போனது. யேசபேலின் பயங்கரவாதம்; அவள் எல்லாரையுமே விழுங்கிப் போட்டாள். அவள் எல்லாரையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, தோப்புகளைக் கட்டி, மற்ற செயல்களைப் புரிந்தாள்.

**107.** ஆனால் ஒரு நாள் தேவன் அவனை வெளியே அழைத்தார். இதோ அவன் வெளியே வருகிறான், இப்பொழுது கூர்ந்து கவனியுங் கள், என்மேல் கோபம் கொள்ளாதீர்கள். நான் “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்பதைக் கூறிக் கொண்டிருக்கிறேன். அவன்

வெளியே வந்த போது, தேவன் என்ன செய்தார்? அவனை ஒரு விதவையிடம் அனுப்பினார். ஒரு காலத்தில் ஒரு மனிதன் அவள் மேல் அதிகாரம் செலுத்தினான். ஆனால் மரணம் அவளை அதிலிருந்து விடுவித்து தீர்க்கதரிசியின் வார்த்தையை விசுவாசிக்கும்படி செய்தது. அதைக் கவனித்தீர்களா? அவளுக்கு ஒரு கணவன் இருந்தான். அவன் ஒரு பள்ளிக்கூடத்தை சேர்ந்தவனாயிருந்து, அவளை இந்த பக்கமும் அந்த பக்கமும் வழிநடத்தினான். ஆனால் அந்த பெரிய பஞ்சம் வந்த போது, அவன் விழுங்கப்பட்டான். மரணம் அவனை ஆட்கொண்டது. அதன் பிறகு அவள் எந்த ஸதாபனத்துடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. எனவே அவள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுக்க ஆயத்த மாயிருந்தாள். ஸதிரீ சபைக்கு அடையாளமாயிருக்கிறாள். அவளுடைய கணவன் (ஸ்தாபனம்) மரித்துப் போனான். அவள் தன்னந்தனியாக வாழ்ந்து வந்தாள். கர்த்தர் அவனிடம், “இப்பொழுது அவளிடம் போ, அவள் உனக்கு செவிகொடுப்பாள். அவளுக்கு நான் கட்டளை யிட்டிருக்கிறேன்” என்றார்.

**108.** ஓ, சில நேரங்களில் நாம் நினைப்பதுண்டு, இங்குள்ள சிறு கூட்டமாகிய நீங்கள் மிகவும் விசுவாசமுள்ளவர்களாயிருந்து, ஒரு கூட் டத்தை நடத்த உங்களால் கூடுமான எல்லாவற்றையும் செய்து, உங்கள் இருதயம் நேர்மையுள்ளது என்று ஜனங்களுக்கு காண்பிக்க முயன்று, அவர்கள் தேவனிடம் வரவேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனால் ஞாபகம் கொள்ளுங்கள். தேவன் தமது கண்ணை உங்கள் மேல் வைத்திருக்கிறார்! நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள், நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள் என்று நானறிவேன். அப்படி இல்லாமற் போனால், நீங்கள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டீர்கள், இப்படிப்பட்ட ஒரு கூட்டத்துக்கு வந்திருக்க மாட்டீர்கள், தேவன் தமது கண்ணை உங்கள் மேல் வைத்திருக்கிறார். ஆம்!

**109.** அவளுடைய கணவன் மரித்த போது, அவளுடைய ஸ்தா பனம் மரித்த போது, அவள் தீர்க்கதரிசியுடைய வார்த்தையைக் கேட்க ஆயத்தமாயிருந்தாள். எனவே தீர்க்கதரிசி வாசலில் வந்து சிறிது தண் ணீர் கேட்ட போது, அதைக் கொண்டு வர அவள் உள்ளே சென்றாள். அவன், “எனக்கு கொஞ்சம் அப்பம் கொண்டு வா” என்றான்.

**110.** அவள் திரும்பிப் பார்த்து அவனிடம், “எங்களுக்குத் தேவை யானது மாத்திரமேயன்றி, வேறொன்றும் இல்லை என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்” என்றாள்.

**111.** அவளிடமிருந்த சிறிது ஆகாரத்தையும் எடுத்துக் கொள்ள அவன் அனுப்பப்பட்டது போல் தோன்றினது, ஆனால் அதற்கு மாறாக நடந்தது. வார்த்தையை ஆதரிக்க அவளிடமிருந்ததை அவள் கொடுக்க சித்தம் கொண்ட போது, தேவன் அவளைப் போஷத்தார், அவ்வாறே, வார்த்தையை ஆதரிக்க தேவன் உங்களுக்குத் தந்தருளின ஆவியை நீங்கள் அளிக்க சித்தங் கொள்வீர்களானால், தேவன் உங்களை உயி ருடன் வைப்பார். அல்லேலூயா! ஓ தேவனுக்கு மகிமை! சபையே, நீங் கள் காண்கிறீர்கள்? எனக்கு பைத்தியம் பிடித்து விட்டதென்று எண் ணாதீர்கள், எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லை. உங்களிடம் இருப்பதை நீங்கள் எவ்வளவு குறைவாக தேவனை விசுவாசித்தாலும், உங்களுக் குள்ள விசுவாசத்தை வார்த்தையின் மேல் வையுங்கள், ஒரு ஸ்தாபனத் தின் மேல் அல்ல! அதை தேவனுடைய வார்த்தையில் வையுளங்கள், அவர் உங்களை உயிருடன் வைப்பார்.

**112.** அப்பொழுது அவள் ஆயத்தமானாள், அதற்கு முன்பு அவ ளால் அப்படி செய்ய முடியவில்லை, ஏனெனில் அப்படி செய்ய அவர்கள் அவளை அனுமதிக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ அவள் ஆயத்த மானாள். அவள் அதை ஏற்றுக் கொள்வாளா? தேவன் ஒரு தீர்க்க தரிசியை அவளிடம் அனுப்பினார், அவள் அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொள்வாளா? அவள் இந்த தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள் வாளா? ஆம். அவள் ஏற்றுக் கொண்டாள். அவன் அவளிடம், “உனக் குள்ள சிறு ஜீவனை இங்கு வைத்து, முதலில் என்னிடம் கொண்டு வா” என்றான். என்ன நேர்ந்தது? உலகத்திலுள்ள மற்றவர் இளைத்துப் போய், பசியால் வாடி மரித்துக் கொண்டிருந்த போது, இவளும், இவள் பிள்ளைகளும், இவள் வீட்டாரும் நாளொன்றுக்கு மூன்று வேளை நல்ல ஆகாரம் அருந்தினார். வார்த்தையின் பேரிலுள்ள தெய்வீக வெளிப் பாடு. சகோதரனே, இதை நீ புரிந்து கொண்டாய் என்று நம்புகுறேன்.

**113.** என்ன நடந்தது? பஞ்சம் தீரும் வரைக்கும், அவனை ஏற்றுக் கொண்டு அவனுடைய வார்த்தையை விசுவாசித்த அந்த ஸ்திரீயுடன் (இந்த சபையுடன்) அவன் தங்கினான். அவன் அவளை (சபையை)

கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு உயிரோடு வைத்தான், ஏனெனில் அவன் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறினேன்.

யேசபேல் மார்க்கம், மார்ச் 19, 1961

# சந்தேகத்தின் நிழல் ஒன்றும் இருக்காது

## "THERE'LL BE NOT ONE SHADOW OF DOUBT"

**111.** "பாழாக்கும் அருவருப்பை அங்கே நீங்கள் நிற்கக் காணும் போது..." தானியேல் பரிசுத்த ஸ்தலத்தில் நின்றிருந்த போது... "இது வந்து நிறைவேறுவதை நீங்கள் காணும்போது தான் என்ன பேசுகிறோம் என்பதைப் பற்றி வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்..." என்று அவர் கூறினார். எனவே தான் நாம் தேவனிடம் சந்தேகத்தின் நிழல் ஒன்று கூட இல்லாதபடி அதை நமக்காக பரிபூரணமாக நிறைவானதாக ஆக்கித் தரும்படி ஜெபித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் அவ்விஷயங்களுக்கு நாம் நமது சொந்த வியாக்கியானத்தைப் போடக் கூடாது. **கர்த்தர் உரைக்கிறதாவது என்னவென்றால்** என்பதன் மூலமா கத்தான் அது வர வேண்டும். எனவே, நான் அதை சரியாகப் புரிந்து கொள்ளுகிற வரையிலும் நான் அதை அங்கே தான் விட்டுவிடுகிறேன்.

தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள், ஜூலை 30, 1961 காலை

# இஸ்ரவேலை விட்டு விலகியிருங்கள்

## "STAY AWAY FROM ISRAEL"

**120.** ஆனால் தேவனிடத்திலிருந்து சத்தியம் இருக்கிறது. தேவன் ஒருவர்தான் அதை வெளிப்படுத்தி, அதை சரியாக அதற்குரிய இடத்தில் வைத்து மிகச் சரியாக நமக்கு காண்பிக்க முடியும். அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். எனக்கு அது என்னவென்று தெரியாது. நான் உண்மையைச் சொல்லுகிறேன்... எனக்குத் தெரியாது.

ஆனால் அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசித்துக் கொண் டிருக்கிறேன்.

**121.** இதை நீங்கள் மனதில் கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் இதைக் காணுங்கள். இஸ்ரவேல் நாட்டிற்கு யூதர்கள் போகிற வரை யிலும் தேவன் அவர்களோடு இடைபடவே மாட்டார்.

**122.** இஸ்ரவேலுக்குப் போவதைக் குறித்து பேசிக்கொண்டு இங்கே ஒரு சகோதரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், அவருக்கு நான் இதைத் தான் கூற முயற்சிக்கிறேன். இஸ்ரவேலை விட்டு விலகி யிருங்கள்! யூதர்களை மனந்திரும்பச் செய்து குணப்படுத்த வேண்டும் என்று பேசுகிறவர்களே, நீங்கள் யாவரும் அவர்களை விட்டு அகன்று விடுங்கள். இந்த செய்தியானது முடிவடையும் முன்னர், ஒரே இராத் திரியில் வார்த்தையாலும் ஆவியாலும் இஸ்ரவேல் முழு ஜாதியாராக இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள்; இது **கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்** என்பதாக இருக்கிறது. வேதம் அவ் வாறே கூறுகிறது. ஆனால் சுவிசேஷமானது அவர்களுக்கு கூட இல்லை. அங்கே அவர்களுக்குள் சில மதம் மாறுபவர்கள் யூத சம யத்தை விட்டு வெளியேறி வந்து இரட்சிக்கப்படுகிறார்கள். அது உண்மைதான். என் முழு இருதயத்தோடு நான் அதை விசுவாசிக்கி றேன். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; இஸ்ரவேல்; தங்கள் சுய தேசத்தை விட்டு வெளியேறியிருக்கையில், அவர்கள் இரட்சிக்கப்படு வதேயில்லை. இப்பொழுது அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளிலே முழு தேசமாக அவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள், வெதம் அவ்வாறு கூறுகிறது. ஒரு நாளானது இஸ்ரவேலர் எல்லோரையும் முழுவதுமாக தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வரும். அப்படிப்பட்டதான மகத்தான காரியம் இந்நாட்களில் ஒன்றில் இஸ்ரவேலை சந்திக்கும். அது அத்தேசம் முழுமையையும் அசைக்கும். "ஒரே நாளில் நீர் இதைச் செய்தீர்" என்று தீர்க்கதரிசி முழக்கமிட்டான். ஒரே நாளில் அவர்கள் அதைக் காண்பார்கள்.

**123.** மகத்துவமுள்ள காரியம் அங்கே உண்டாயிருக்கும். எனது கருத்து என்னவெனில், அவர்களுக்கென ஒரு மகத்தான தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு முன்பாக எழும்பி நின்று, மேசியா இன்னும் ஜிவிக்கிறார்

என்றும் அவர்கள் புறக்கணித்த மேசியா வந்திருக்கிறார் என்றும் நிரூபிப்பான். ஏனெனில்...

தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள், ஜூலை 30, 1961 காலை

## நாம் தீவிரமான உண்மையுடனும் உத்தமத்துடனும் இருக்கிறோம்

### "WE ARE DEADLY SINCERE, HONEST"

**22.** எங்கள் கிருபையுள்ள தேவனே, எங்கள் இருதயத்தின் அந்தரங்க நோக்கத்தை நீர் அறிந்திருக்கிறீர். நாங்கள் எதற்காக இங்கே இருக்கிறாம் என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். இன்றுள்ள பிற்பகலில், சற்று ஓய்வெடுத்துக் கொள்வதற்கு இது ஒரு அருமையான இடமாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டு நாங்கள் இன்றிரவில் இங்கே வந்திருக்கவில்லை என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். இங்கே ஒரு நபர் கூட அந்தவிதமான நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பதை நான் நம்புகிறேன். பிதாவே, ஏற்கனவே இன்றிரவில் நாங்கள் இங்கே மிக தீவிரமான உண்மையுடனும், உத்தமத்துடனும் வந்திருந்து, **கர்த்தர் உரைப்பது என்னவென்றால்** என்பதை அறிய ஆவலோடிருக்கிறறோம்.

தானியயேலை காபிரியேல் சந்தித்ததன ஆறு விதமான நோக்கங்கள்,
ஜூலை 30, 1961 மாலை

## தேவனுடைய சிங்காசனத்திலிருந்து நேரடியாக புறப்பட்டு வரக்கூடிய செய்தி

### "DIRECT MESSAGE FROM THE THRONE OF GOD"

**27.** இப்பொழுது அவன் இந்த வேதவாக்கியங்களை படித்து ஆராய்ந்து கொண்டிருக்கையில், அவர்களுக்கென குறிக்கப்பட்டு

இருந்த எழுபது ஆண்டுகளின் காலம் வேகமாக முடியப் போகிறதா யிருக்கிறது என்பதைப் பார்த்தான். எரேமியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசன மாக உரைத்த ஒவ்வொரு வார்த்தையையும் தானியேல் பயபக்தியுடன் விசுவாசித்தான். இன்றிரவில் இப்பாடத்தை கேட்டுக் கொண்டிருக்கும் இந்த என் ஜனங்களைக் கெட்கிறேன், நாம் நமது தீர்க்கதரிசிகயை விசுவாசிக்க வேண்டுமா? ஆம், ஐயா! ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையானது தீர்க்கதரிசிகளிடத்தில் தான் வந்தது. அவர்களுக்கு "**கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்**" என்பதாக இருந்தது. மற்றொரு உண்மையான தீர்க்கதரிசி கூறுபவைகளோடு ஒரு உண்மை யான தீர்க்கதரிசி முரண்பட்டிருக்கவே மாட்டான். வார்த்தை கூறாதவை களை, வார்த்தையில் கூறப்பட்டிராததை அவர்கள் செய்யவே மாட்டார் கள். அதுதான் அவர்களை ஒரு தீர்க்கதரிசியாக ஆக்குகிறது. அவர் களுக்கு வார்த்தை வரும் பொழுது, என்ன சம்பவிக்க வேண்டுமோ அதை அவர்கள் முன்னுரைப்பார்கள். தாங்கள் எதையாவது தவறா னதை கூறி விடக்கூடாதே என்றும், அதினால் அது வழிதப்பிச் செல்லச் செய்து விடக் கூடுமே என்றும் அறிந்து உள்ளத்தில் பயஉணர் வோடு, தாங்கள் ஒருக்காலும் அப்படிப்பட்ட காரியத்தை செய்ய விரும்பு வதே கிடையாது. **கர்த்தர் உரைப்பது என்னவென்றால்** என்று கூறு முன்னர், கர்த்தருடைய வார்த்தையைத் தான் நாம் பெற்றிருக்கிறோம் என்ற முழு நிச்சயத்தை உடையவர்களாக இருக்கவே நாம் விரும்பு கிறோம். அது தேவனுடைய சிங்காசனத்தில் இருந்து நேரடியாக பறப்பட்டு வரக்கூடிய முழுமையான, நேரடியான செய்தியாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் நாம் அதைப் பற்றிப் பேசவே கூடாது.

தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறு விதமான நோக்கங்கள்,
ஜூலை 30, 1961 மாலை

# நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும்

## "YOU'VE GOT TO RESPECT IT"

**101.** அன்றொரு நாள் இந்த நகரத்திலுள்ள ஒரு அருமையானவர் வேறொரு சகோதரனைக் கண்டு, "பில் எங்கே?" என்று கேட்டார்.

அவர், "கனடாவுக்குச் சென்றிருக்கிறார்" என்றார்.

மற்றவர், "வேட்டைக்கு சென்றிருப்பாரென்று நினைக்கிறேன்" என்றார்.

அவர், "ஆம், வேட்டைக்குத்தான் சென்றிருக்கிறார்" என்றார்.

மற்றவர், "அது புத்தி கெட்ட செயல்" என்றார்.

**102.** சரி, நான் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒரு தரிச னத்தை கண்டு, **கர்த்தர் உரைக்கிறதாவது** என்னும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அங்கு சென்றேன் என்பது அந்த மனிதனுக்குத் தெரியாது. அப்படியானால் நியாயத்தீர்ப்பின் நாளில் அவர் என்ன செய்யப் போகி றார்? அப்படிப்பட்ட ஒருவரின் படுக்கைக்கு சென்று அவருக்காக ஜெபிப்பதனால் என்ன பயன்? முதலாவதாக, அவருக்கு என்மேல் நம்பிக்கையில்லை. மக்கள் இப்படிப்பட்டவைகளைக் கூறும் போது அவர் களுக்கு நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியாதா என்ன? அவர்கள் என் முதுகைத்தட்டி, "சகோதரனே" என்று என்னை அழைத் தாலும், அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை நானறிவேன். பாருங்கள்? அவர்கள் நம்புவதேயில்லை. அவர்கள் உங்களை அழைத்து, "வந்து ஜெபியுங்கள்" எனலாம். ஆனால் அதனால் அவர் களுக்கு எந்த பயனுமில்லை. ஏனெனில் அவர்கள் அதை அவமதிக் கின்றனர். நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். உண்மையாக விசு வாசிப்பவர்களை கவனித்து, அவர்களுக்கு நேரிடும் நன்மைகளைப் பாருங்கள். பாருங்கள், நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும்.

மரியாதை, அக்டோபர் 15, 1961

## உண்மையான தீர்க்கதரிசி வார்த்தையில் முற்றிலும் நிலைத்திருக்கிறான்

## TRUE PROPHET STAYS EXACTLY ON THE WORD"

**78.** மோசே அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட பிறகு – ஜனங் கள் தங்களுக்கு ஒரு தலைவன் தேவை என்பதை கண்டு கொண்ட

பிறகு, ஜெபிக்கத் தொடங்கினர். அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு செல்ல தலைவன் ஒருவனை அனுப்ப வேண்டுமென்று அவர்கள் தேவனிடம் முறையிட்டனர். அப்பொழுது அவர் ஒரு மனிதனை – ஒரு தீர்க்கதரிசியை – அனுப்பினார். அது அவர் அடையாளமாயிருந்தது. இந்த மனிதன் ஒரு தீர்க்கதரிசியாயிராமல், "நான் போர் புரிவதில் சிறந்த மேதை" என்று உரிமை கோரியிருந்தால், அந்த மனிதனை நம்பாமலிருக்க இஸ்ரவேல் ஜனங்களுக்கு உரிமை இருந்தது. ஏனெனில் தேவன் ஒவ்வொரு முறையும் தவறாமல் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி வருகிறார். அப்படி அவர் அனுப்பாமலிருந்த ஒரு முறையாவது எனக்கு வேதத்திலிருந்து காண்பியுங்கள். அவர் எப்பொழுதுமே ஒரு தீர்க்கதரிசியை **கர்த்தர் இவ்விதம் உரைக்கிறார்** என்பதுடன் அனுப்பு கிறார்.

**79.** தாவீது இஸ்ரவேல் ஜனங்கள் பெற்றிருந்தவர் அனைவரிலும் போர்புரிவதில் மிகச் சிறந்த மேதைகளாக இருந்த போதிலும், அவன் அதே சமயத்தில் ஒரு தீர்க்கதரிசியாக விளங்கினான். நிச்சயமாக அவன் அப்படியிருந்தான். அவன் தீர்க்கதரிசியாகிய தாவீது.

**80.** தேவன் அனுப்பப் போகும் தீர்க்கதரிசிக்கு செவி கொடுக்க வேண்டுமெனும் வாஞ்சை ஜனங்களின் இருதயத்தில் உண்டாகும் வரைக்கும் அவர் காத்திருந்தார். அவர்களில் ஒரு சாரார் அத்தகைய வாஞ்சை உள்ளதாக கூறிக் கொண்ட போதிலும், உண்மையில் அவர்களுக்கு வாஞ்சை இருக்கவில்லை. அவர்கள் கூறினது உண்மையல்ல என்று பின்னர் நிரூபிக்கப்பட்டது. அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு கூச்சலிட்டனர். அவர்களோடு கூட பல ஜாதியான ஜனங்கள் சென்றதாக வேதம் கூறுகிறது (யாத். 12:38). அது என்ன செய்தது? வனாந்தரத்தில் தொல்லையயை விளைவித்தது. ஒவ்வொரு முறையும் ஒரு அற்புதம் நிகழ்ந்த போது... ஓ, இதை என்னால் ஆழமாகப் பதியச் செய்ய முடிந்தால் நலமாயிருக்கும். ஒவ்வொரு முறையும் தேவன் ஒன்றை அனுப்பின போது, ஏதோ ஒரு மாம்சபிரகாரமான போலிச் செயல் அதனுடன் ஒவ்வொரு முறையும் தோன்றினது. எப்பொழுதுமே அதை "பாவனை விசுவாசிக்கத்தக்கதாக" அது ஜனங்களுக்கு நல்லதாக காணப்பட்டது. ஆனால் உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசி எவனும் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதில் நிலைத்திருக்கிறான்.

அவன் தேவனால் அனுப்பப்பட்டிருந்தால், வேதத்தை விட்டு ஒருக்காலும் விலக மாட்டான்.

**81.** மோசே வேதத்தில் முற்றிலுமாக நிலைத்திருந்தான். தேவன், “அவர்களை நான் வெளியே கொண்டு வருவேன்” என்றார். அவர் மோசேயிடம், “அந்த வேலையைச் செய்ய உன்னை அனுப்புகிறேன்” என்றார். மோசேக்கு ஒரு அனுபவம் உண்டாயிருந்தது. அவன் தேவனை சந்தித்தான். அவன் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றிருந்தான்.

**82.** தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பும் காரணமே, அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை உடையவர்களாயிருக்கின்றனர் என்பதால். கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசிகளிடத்தில் வருகிறது. ஒருவன் கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டிராவிட்டால், அவன் தீர்க்கதரிசி யல்ல.

**83.** காலங்கள் தோறும் மாம்சபிரகாரமான போலியாட்கள் எழும்பி, அவர்கள் தீர்க்கதரிசிகள் என்று உரிமை கோரி வந்துள்ளனர். ஆனால் அவர்கள் எப்பொழுதுமே தேவனுடைய வார்த்தையை விட்டு விலகிச் செல்கின்றனர். ஆனால் உண்மையான தீர்க்கதரிசி வார்த்தையில் முற்றிலும் நிலைத்திருக்கிறான். நான் கூறினதை மறந்து விடாதீர்கள்! உண்மையான தீர்க்கதரிசி **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதில் நிலைத் திருக்கிறான்.

**84.** கடைசி நாட்களில் நடக்கவிருப்பதைக் குறித்து தேவன் நம்மை எச்சரித்திருக்கிறார். ஆனால் உண்மையான ஊழியக்காரன், உண்மையான தீர்க்கதரிசி, **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதில் நிலைத்திருக்க ஒருபோதும் தவறமாட்டான்.

**85.** மோசே கர்த்தருடன் நிலைத்திருந்தான். அவன் ஒரு அடை யாளமாயிருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் விடுவிக்கப்படும் நாள் நெருங்கி விட்டது என்பதற்கு அவன் இஸ்ரவேலருக்கு அடையாளமாக வும், எகிப்தியரின் முடிவு நெருங்கி விட்டது என்பதற்கு அவன் எகிப் திருக்கும் அடையாளமாயிருந்தான். அவ்வாறே அவர்கள் – பார்வோ னின் சேனை அனைத்தும் – சிவந்த சமுத்திரத்தில் மூழ்கி இறந்தனர்.

அவர்களுடைய இராணுவ பலம் முடிவை அடைந்தது. ஒரு தேசத்தின் முடிவுக்கு தீர்க்கதரிசி அடையாளமாகத் திகழ்ந்தான்.

**86.** அதை சிந்தித்துப் பாருங்கள்! தேவன் எவ்வளவு பெரியவர் என்றும் அவர் எப்படிப்பட்ட எளிய விதத்தில் கிரியை செய்கிறார் என்றும்! கல்லாதவர் அதை பரிந்து கொள்ள முடியுமென்றால், கற்றவர் அதை நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும். எகிப்தின் சேற்றுக்குழியில் வேலை செய்த அடிமைகள், அது தேவனிடத்திலிருந்து வந்த தீர்க்க தரிசி என்றும், அந்த நேரம் சமீபித்து விட்டதென்றும் புரிந்து கொண்ட போது, பார்வோனின் அரண்மனையிலிருந்தவர்கள் இன்னும் எவ்வளவு அதிகமாக புரிந்து கொண்டிருக்க வேண்டும்! ஆனால் அப்படிப்பட்டவர் கள் தான் அதை புரிந்து கொள்வதில்லை. அப்படிப்பட்டவர்களே அதை எப்பொழுதும் இழந்து விடுகின்றனர்.

கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான
அடையாளம், நவம்பர் 12, 1961

## மீண்டும் ஞானஸ்நானம் பெறுங்கள்

### "BE BAPTIZED AGAIN"

**126.** அந்த நாளிலே அவர்கள், நீங்கள் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுள்ளதற்காகவும் இன்னும் வெவ்வேறு காரியங் களுக்காகவும் உங்களை சபையை விட்டுப் புறம்பாக்குவதாகக் கூறி னால், அது முடத்தனம்! அது **கர்த்தர் உரைக்கிறதாவது.**

கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான
அடையாளம், நவம்பர் 12, 1961

**154.** நீங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் பட்டங் களினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றுரைக்கும் ஒரு தீர்க்கதரிசி உங்களுக்கு இருப்பானானால், அவன் கள்ளத் தீர்க்க தரிசி. மூன்று கடவுள்கள் உண்டு என்றுரைக்கும் ஒரு தீர்க்கதரிசி உங்கள் நடுவில் இருப்பானானால், அவன் கள்ளத் தீர்க்கதரிசி. அதை ஆதரிக்கும் வேதவாக்கியம் எதுவுமே கிடையாது. அது உண்மை! உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசி அந்த வார்த்தையில் நிலைத்

திருப்பான். அவனுடைய தரிசனம் அந்த வார்த்தைக்கு முரணாக இருக்குமானால், அவன் தேவனிடத்திலிருந்து வந்த உண்மையான தீர்க்க தரிசி அல்ல.

**155.** வேதத்தில் எவருமே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் பட்டங்களினால் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை.

**156.** சிறையிலருந்த பவுலைப் பாருங்கள் – அந்த கோண மூக்கும் வழுக்கை தலையும் கொண்ட யூதன். அவன்இருபது ஆண்டுகள் ரோமச் சிறைசாலையில் சிறைவாசம் செய்தான். அவன் இந்த நிரூபங்களை எழுதினான். "சபையில் பெண்கள் அமைதியாயிருக்க வேண்டும். அவர்கள் பேச நான் உத்தரவு கொடுப்பதில்லை" என்று பவுல் கூறினதை குறித்து பெண் பிரசங்கி என்ன நினைத்திருப்பாள் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் அவன் மேல் கோபப்பட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பவுல், "இதை விட்டு விடுங்கள், அதை விட்டு விடுங்கள், அதை..." என்று கூறக் கேட்ட பேராயர்கள் அவனைக் குறித்து என்ன நனைத்திருப்பார்கள்? "சிவைாசம் செய்யும் இவன் யார் இதையெல்லாம் கூற?" என்று கேட்டிருப்பார்கள். ஆனால் பவுல் இயேசுவைச் சந்தித்திருந்தான். அவன் பேசுவது என்ன என்பதை அறிந்திருந்தான். ஆனால் பவுலின் மரணத்திற்குப் பிறகு, அவனைச் சார்ந்த அதே குழு பேராயர்களையும் உயர் பதவியிலுள்ளவர்களையும் அமைத்துக் கொண்டு, முடிவில் நிசாயா ஆலோசனை சங்கத்தின் போது கத்தோலிக்க சபை உருவாகி, தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகிச் சென்றது. அங்கு தான் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி கொள்கை உண்டானது. அது தவறென்று நிரூபிக்க நான் எவருக்கும் எந்த இடத்திலுள்ளவர்களுக்கும், எந்த தேசத்திலுள்ளவர்களுக்கும் சவால் விடுகிறேன்.

**157.** **கர்த்தர் உரைக்கிறதாவது**, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் பட்டப்பெயர்களை உபயோகித்து கொடுக்கப்படும் ஞானஸ்நானம் தவறாகும். **கர்த்தர் உரைக்கிறதாவது**, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிராத இங்குள்ளவர்களுக்கும், இந்த ஒலிநாடாவைக் கேட்கப் போகிறவர்களுக்கும், மறுபடியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நாம் பெறும்படி கட்டளையிடுகிறேன்.

கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான
அடையாளம், நவம்பர் 12, 1961

# அவன் எந்த ஸ்தாபனத்துடனும் ஒப்புரவாக மாட்டான்

## "HE WILL COMPROMISE WITH NO DENOMINATION"

**186.** ஓ, என்னே! அடையாளம் – உண்மையான அடையாளம் – அசட்டை பண்ணப்படுகிறது. அவர்கள் அதைக் காணத் தவறுகின் றனர். அவர்கள் எப்பொழுதுமே அவ்வாறு செய்கின்றனர். உண்மையான சபைக்கு, உண்மையான செய்திக்குத் திரும்புவோம்.

**187.** அவன் தைரியமாக, எவ்வித பயமுமின்றி, **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைக் கொண்டவனாய், ஸ்தாபனங்களுக்கு எதிராக தனி யாக நிற்பான். அவன் எந்த ஸ்தாபனத்துடனும் ஒப்புரவாக மாட்டான். அவன் அவர்களுடைய செல்வாக்கை எக்காரணத்தைக் கொண்டும் தேடமாட்டான். அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதுடன் வார்த் தையில் நேராக நிற்பான். தேவன் அவனுடைய ஊழியத்தை அடையா ளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தி, வார்த்தையை மகத்தான விதத்தில் வெளிப்படுத்தி, அதை ஜனங்களுக்கு அளிப்பார். எப்படிப்பட்ட ஒரு நாள் சமீபமாயுள்ளது! போல... பெந்தெகோஸ்தே நாளில் பேதுருவும் யோவானும் நின்றது போல அவன் நிற்பான். பெந்தெகோஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்த பிறகு, அவர்கள் சனகரீம் சங்கத்துக்கு முன்பாகக நின்றனர். அவர்கள் மிகுந்த தைரியத்துடன் அங்கு நின்றனர். சனகரீம் சங்கத்தினர், "நீங்கள் இனி ஒருபோதும் இயேசுவின் நாமத்தில் போதிக்கக் கூடா தென்று உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" என்றனர்.

**188.** அப்பொழுது பேதுருவும் யோவானும் "உங்களுக்குச் செவி கொடுக்கிறதா, அல்லது தேவனுக்குச் செவிகொடுக்கிறதா, எது நியாய மென்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" என்றனர். **(அப். 4:19).** படிப்பறியாதவர்கள், பேதமையுள்ளவர்கள்! ஆமென்! தேவனுடைய...

அவர்கள் தீர்க்கதரிசிகள். அவர்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப் பட்ட தீர்க்கதரிசிகள். அவர்கள் பரிசுத்த ஆவியின் அடையாளங்களாக விளங்கினர். அவர்கள் தீர்க்கதரிசிகள். அவர்கள் அறிந்திருந்தனர்.

**189.** அவர்கள் யோவானைப் போன்றவர்கள். அவர்கள் பெந்தெ கொஸ்தே நாளில் மேலறைக்குச் சென்று ஒன்றைக் கண்டு கொண் டனர். அவர்கள் இன்றுள்ள பெரும்பாலான போதகரைப் போல், தற் புகழ்ச்சியுள்ளவர்களாய், தங்களுக்கு எவ்வளவு பெரிய ஸ்தாபனம் உள்ளதென்றும், அவர்களுடைய குழுக்களில் எவ்வளவு அங்கத்தினர் உள்ளனர் என்று பெருமையடித்துக் கொள்ளவில்லை. “ஓ, நாங்கள் ஒரு பெரிய ஸ்தாபனம். நாங்கள் பெரிய மிஷனரி ஊழியம் செய்கிறோம்.” ஓ, இரக்கம்! “ஓ, மற்றவர்களுக்குள்ளதைக் காட்டிலும் எங்களுக்குள்ள கூட்டம் மிகப் பெரிது.” அது என்ன? அது அரசியல் செல்வாக்கு. அடுத்து இரண்டு மூன்று நிமிடங்கள் நீங்கள் கூர்ந்து கவனிக்க விரும்புகிறேன்.

**190.** அரசியல் செல்வாக்கு! நிச்சயமாக. சில நிமிடங்களுக்கு முன்பு நான் ஒன்றைக் கூறினேன். நான் என்ன பேசுகிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட ஒரு அடை யாளம். அதை நான் தனியே விட்டு விட்டேன், அதை உங்கள் மடியில் வைத்து விட்டேன். பாருங்கள்? நல்லது... நீங்கள் மாத்திரம் அல்ல, இதை ஒலிநாடாவில் கேட்பவர்களே, அது உங்கள் மடியில் உள்ளது! உங்களுக்கு விருப்பமானதைச் செய்யுங்கள். நீங்கள் ஜெபம் செய்து தேவன் காட்சியில் அசைவதைக் காணுங்கள். அவர் தமது வார்த் தையை நிறைவேற்றுவதைக் கவனியுங்கள். அவர் காத்துக் கொண் டிருக்கிறார்.

**191.** அணுகுண்டுகளும்; ‘பென்டகனில்’ ஜனங்கள் பயந்து போய், என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருக்கும் போது, வானத்தில் பறக்கும் தட்டுகள் போன்ற மர்மமான அடையாளங்கள் காணப்படும் போது, தேவன் முன்னறிவித்த யாவும் நிறைவேறிக் கொண்டிருக்கும் போது, எலியா காட்சியில் தோன்றும் நேரம் வந்து விட்டது – அவன் எங்கோ இருக்கிறான்.

**192.** ஜனங்கள், அந்த சிறு மந்தை, தேவன் அவனுக்கு அளிக்கப் போகும் அந்த மீதியானவர்கள், தேவனை நோக்கிக் கூப்பிடட்டும்.

அப்பொழுது என்ன நடக்கிறதென்று கவனியுங்கள். தேசீய பலப்பரீட்சை உண்டாகும். அவர்கள் முன்பு கண்டிராத வகையில் வல்லமை உண்டாகும். ஆனால் தொல்லை என்னவெனில், இந்த முறை அவர்களுக்கு காலதாமதம் ஏற்பட்டிருக்கும். கதவுகள் அடைபட்டிருக்கும். எனவே நாம் முடிவுகாலத்தில் இருக்கிறோம் என்பதை நினைவுகூருங்கள். ஜெபம் செய்யுங்கள்!

கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான
அடையாளம், நவம்பர் 12, 1961

# நீங்கள் என் வார்த்தைகளை மறந்து போக வேண்டாம்

## "DON'T YOU FORGET MY WORDS"

**260.** நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தாலும், என் சொற்களை மறவாதீர். இந்த நங்கூரத்தை விட்டு விட வேண்டாம்... தேவன் ஒரு இரும்பு பேனாவை எடுத்து நீங்கள் இதை மறந்து போகாதபடிக்கு, உங்கள் இருதயங்களில் செதுக்குவாராக. இதை மறந்து போக வேண்டாம். **கர்த்தர் உரைக்கிறதாவது**, உங்கள் முழு இருதயத்தோடும் தேவ னிடத்தில் திரும்புங்கள்; திரும்பி வாருங்கள்! உணர்ச்சிவசப்படுதலின் பேரிலோ, உணர்ச்சியின் பேரிலோ வேறெதன் பேரிலோ சார்ந்திராதே யுங்கள். உங்களில் ஒன்று நிகழ்ந்து, நீங்கள் தேவனிடத்தில் உங்களை நேராக்கிக் கொள்ள விரும்பி, நீங்கள் தேவபக்தியுள்வர்களாய், தேவ னுக்குப் பயந்தவளாய், சரியாக வாழ விரும்பும் வரைக்கும் தேவனை நாடுங்கள். அப்படி செய்யுங்கள்! அதை மறந்து விடாதீர்கள். ஏனெனில் நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்.

**261.** இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். நான் முடித்து இன்னும் ஒரு நிமிடத்தில் ஜெபம் செய்யப் போகிற இத்தருணத்தில் இதை ஞாபகம் கொள்ளுங்கள். மறந்து விடாதீர்கள்! கூடாரமே, நான் சொல்வதைக் கேள். இந்த ஒலிநாடா சென்று கொண்டிருக்குமானால், அது போகுமிடத்தில், உலகமே, நான் சொல்வதைக் கேள். ஒரு அடையாளம் எழும்பும் – உண்மையான

அடையாளம். ஒருக்கால் அது ஏற்கனவே எழும்பி, அது அசட்டை பண்ணப்பட்டிருக்கக்கூடும். தேவன் அளிக்கும் உண்மையான அடை யாளம் எப்பொழுதுமே அசட்டை பண்ணப்பட்டு வந்துள்ளது.

கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம், நவம்பர் 12, 1961

## கர்த்தருடைய வழியைத் தெரிந்து கொள்ளுங்கள்

## "TAKE THE WAY OF THE LORD"

**382.** (சகோ. பிரன்ஹாம் "என் விசுவாசம் மேல் நோக்கி உம்மை காண்கிறது" என்ற பாடலை தாழ்வான குரலில் பாடுகிறார்).

எத்தனை பேர் விசுவாசித்தீர்களோ, அவர்களெல்லாம் தேவனுக்கு முன்பாக உங்களை வெறுமையாக்கி, இனி ஒன்றும் உங்களை தடு மாறச் செய்யாத தீர்மானம் எடுத்து, எந்த வித திறமையும் இனி ஒரு போதும் வராத வண்ணம் உண்மையான தீர்மானத்தை தெளிவாக தேவனோடு செய்து ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகுங்கள். குளத்தில் தண்ணீர் உண்டு. பெண்மணிகளெல்லாம் எனக்கு வலது பக்கமும், ஆண்கள் எனது இடது பக்கமும் வாருங்கள். ஞானஸ்நான ஆராதனை இன்னும் சிறிது நேரத்தில் ஆரம்பித்து விடும். உங்களை வெறுமை யாக்கினவர்கள், ஊழியர்கள் கூறுவதையோ, மார்க்கம் கூறுவதையோ, ஸ்தாபனம் கூறுவதையோ விசுவாசிக்க வேண்டாம். மாறாக, கர்த்தரு டைய வழியைத் தெரிந்து கொண்டு, **கர்த்தர் சொல்லுகிறதாவது** என்பதை விசுவாசியுங்கள். இப்பொழுது வாருங்கள்.

பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம், நவம்பர் 19, 1961

## அது ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை

## "THAT IS THE WORD OF THE LIVING GOD"

**128.** ஒரு சமயம் ஒரு மருத்துவர் என்னிடம் "பில்லி அவர்களே, நீங்கள் ஜனங்களைப் பார்த்து, "நீங்கள் சென்று அந்த மரத்தையோ

அல்லது கம்பத்தையோ தொட்டால் சுகமாவீர்கள் என்று விசுவாசித்தால் அவ்விதமே சுகமாவீர்கள்" என்பது தான் உங்கள் கருத்து என்று நான் நம்புகிறேன்" என்றார்.

**129.** அதற்கு நான், "இல்லை ஐயா, இக்காரியத்தில் அப்படியில்லை மருத்துவரே, ஏனெனில் ஜனங்கள் அந்த கம்பமானது சாதாரண ஓர் கம்பம் மட்டுமே என்றும் அதில் வல்லமையோ பலனோ இல்லையென்று அறிந்திருக்கிறார்கள்" என்றேன்.

**130.** ஆனால் சமநிலை மனோபக்குவமுள்ள எந்த மனிதனும் அது ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை தான் என்றும் அது **கர்த்தர் சொல்லுகிறதாவது**! என்றருக்கிறபடியால் அதன் மேல் தனது விசுவாசத்தை வைத்து அதற்கு முரணான காரியம் வருமானால் தனது உணர்வுகளை விசுவாசிக்க மாட்டான். இல்லை, ஐயா. அதை அவ்விதம் விட்டு விட்டு உங்களுடைய மற்றொரு உணர்வான விசுவாசத்தினால் அதை அணுகுங்கள்.

பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம், நவம்பர் 19, 1961

# பேதுரு ஒருபோதும் ரோமாபுரியில் இருக்கவேயில்லை

## "PETER NEVER WAS IN ROME"

**137.** கிறிஸ்தவ மார்க்கம் முதலாம் ரோம சளையை நிறுவின பின்பு, அவர்கள் வேதாகமத்தை தள்ளி விட்டு, அஞ்ஞான வழக்கங்களை ஏற்றுக் கொண்டனர். அப்படி செய்ய அவர்களுக்கு ஏதாவதொரு ஆதா ரம் தேவைப்பட்டது. எனவே அவர்கள், "பேதுருவே ரோம சபையின் முதலாம் போப்பாண்டவர்" என்றனர். அந்த கருத்து இந்நாள் வரைக்கும் நிலவி வருகின்றது. அவன் அப்படியே போப்பாண்டவராக இருந்தான் என்றே வைத்துக் கொள்வோம். அவன் பெந்தெகொஸ்தேயின் வார்த் தைகளை விட்டு பின் சென்றிருப்பானா? ஒரு யூதன் விக்கிரகங்களை நிறுவுவான் என்று உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?

**138.** தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தி லிருந்து, நாட்களையும் ஆண்டுகளையும் கூட சரியாக குறிப்பட்டு, பேதுரு பாலஸ்தீனாவை விட்டுச் செல்லவேயில்லை என்றும் (ஒரு முறை அவன் ஐபிராத்து நதியினருகில் பாபிலோனுக்குச் சென்றான்), அவன் ரோமாபுரியில் வசிக்கவேயில்லை என்றும் என்னால் நிரூபிக்க முடியும். அது **கர்த்தர் உரைக்கிறதாவது**! அவையனைத்தும் அஞ் ஞானக் கருத்து.

கிறிஸ்தவ மார்க்கமும் அதற்கெதிரான விக்கிரகாராதனையும், டிசம்பர் 17, 1961

**185.** அது என்ன? உண்மையான சபைக்கு தேவனால் அனுப்பப் பட்ட போதகர், வார்த்தையில் நிலைத்து நின்று, ஸ்தாபனம் என்ன கூறின போதிலும், அதிலிருந்து ஒரு அணுவும் பிசகாமல் இருப்பவர். தீர்க்கதரிசிகளுக்கு ஸ்தாபனங்களுடன் தொடர்பு கிடையாது; பாவனை யாக விசுவாசித்து தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுபவர் அல்ல, ஆனால் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை கொண்டுள்ள உண்மை யான தீர்க்கதரிசி ஒவ்வொரு முறையும் அது பிழையின்றி நிறைவேறும் அதை தான் அவர் தமது சபைக்கு அனுப்பியுள்ளார். அதை தான் அவர் செய்வதாக வாக்களித்தார். வார்த்தையை விசுவாசிப்பவன், கோட்பாடுகளையோ கொள்கைகளையோ அல்ல, வார்த்தையை அவ் விதம் செய்வதன் மூலம் அவர் தமது வார்த்தையை உறுதிப்படுத்தி அவரை வெளிப்படுத்திக் காண்பித்து, அவர் ஒரு காலத்தில் வாழ்ந்த அதே வாழ்க்கையை மறுபடியும் வாழச் செய்து தமது வார்த்தையை நிறைவேற்றுகுறார். ஓ, என்னே!

ஒன்றாயிருத்தல், பிப்ரவரி 11, 1962

## *பிசாசின் பொய்க்கு செவிகொடுக்காதீர்கள்*

## "DON'T LISTEN TO A LIE OF THE DEVIL"

**212.** அவர், "இரண்டு பேர் வயலில் இருப்பார்கள், நான் ஒருவனை ஏற்றுக் கொள்வேன்" என்றார். ஒருவனை, கவனியுங்கள், வயலில் இருவர், அது பகல் நேரம், அறுவடை. "நான் ஒருவனை ஏற்றுக்கொள்

வேன், மற்றவனை கைவிடுவேன், இரண்டு பேர் படுக்கையில் இருப்பார் கள்.” அது உலகின் மறுபாகம். நான் ஒருவனை ஏற்றுக் கொள்வேன், மற்றவனைக் கைவிடுவேன்”, மனுஷகுமாரனின் வருகையின் போது, அது மிகவும் சமீபமாயுள்ளது.

**213.** வேண்டாம்! ஆதாமே, வேண்டாம்! ஆதாமே! ஏவாளே, ஆதாமே, பிசாசின் போய்க்கு இனிமேல் செவிகொடுக்காதீர்கள் என்று உங்களிடம் மற்றாடுகிறேன். தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருங் கள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது.** அவருடைய வார்த்தையில் நிலைத்திருங்கள். அதிலிருந்து பிரிந்து செல்லுதல் நீங்கள் தேவனுடன் கொண்டுள்ள ஐக்கியத்தை முறித்து விடும் – பரிசுத்த ஆவியின் மூலம் தேவனுடன் ஒன்றாயிருத்தலை. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளதாகக் கூறிக் கொண்டு வார்த்தையுடன் இணங்காமல் போனால், நீங்கள் தேவனுடன் ஒன்றாயிருத்தலை பெற்றிருக்கவில்லை.

**214.** இது தான் தேவனுடன் ஒன்றாயிருத்தல்... அதாவது நீங்கள் பெற்றுள்ள பரிசுத்த ஆவி இந்த வார்த்தையுடன் இணங்கி, இந்த வார்த்தையை வெளிப்படுத்தி, முன்பு செய்த கிரியைகளையே அது செய்யத்தக்கதாக இந்த வார்த்தையை வல்லமையுள்ளதாகச் செய்யும் போது.

ஒன்றாயிருத்தல், பிப்ரவரி 11, 1962

# பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## "RECEIVE THE HOLY GHOST"

**227.** அந்த விசுவாசம் என்னும் கரத்தில் இந்த தேவனுடைய வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். இன்று காலையில் உங்கள் தேவை என்ன? உங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத் தில் ஞானஸ்நானம் தேவையா? குளம் திறந்திருக்கிறது. உங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவையா? அவர் உங்களுக்குள் வரு வதற்காக நெருக்கிக் கொண்டிருக்கிறார். உங்களுக்கு சுகம் தேவையா? ஏன், பரிசுத்த ஆவியானவர் தாமே, வல்லமையாக்கப்பட்ட வார்த்தை தாமே, இப்பொழுது இங்கிருக்கிறார் – அந்த பகுத்தறிதலின்

வல்லமை, கூட்த்திலுள்ளவர்களை பார்த்துக் கொண்டிருக்கும்போது, அந்த ஒளி ஜொலித்துக் கொண்டு சுழன்று கொண்டிருப்பதைக் காண் கிறேன். நான் தவறான எதையாகிலும் எப்பொழுதாகிலும் உங்களிடம் உரைத்ததுண்டா? (சபையோர் "இல்லை" என்கின்றனர் – ஆசி). நான் எப்பொழுதாகிலும்?

**228.** இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு மனிதனால் ஏற்படுத்தப் பட்ட ஒரு ராஜாவை பெற்றுக் கொள்வதற்கு முன்பு, தீர்க்கதரிசி அவர் களிடம், "நான் உங்களிடம் உரைத்தது ஏதாகிலும்... உங்கள் பணத்தை நான் எப்பொழுதாவது அபகரித்ததுண்டா? நான் எப்பொழுதாவது உங்களிடம் பணம் கேட்டதுண்டா? நான் பெரிய மாளிகைகளில் வாழ்ந்து, பெரிய கட்டிடங்களைக்கட்டி, அதற்காக உங்களிடமிருந்த பணத்தை எடுத்துக் கொண்டதுண்டா? நான் எப்பொழுதாவது உங்க ளிடம் ஒரு பைசாவாவது கேட்டதுண்டா?" என்று கேட்டான். அவர் கள், "இல்லை" என்றனர்.

**229.** நான் கர்த்தருடைய நாமத்தில் உரைத்த எதையாகிலும் தேவன் நிறைவேற்றாமல் இருந்ததுண்டா? அவருடைய நாமத்தில் நான் உரைத்த ஏதாகிலும் நான் உரைத்தவாறே நிறைவேறாமல் போன துண்டா? நான் கூட்டத்தினரின் நடுவில் தரிசனம் கண்டு ஒரு நபரைக் குறித்து உரைத்த ஏதாகிலும், அந்த நபர் எழுந்திருந்து – அது யாரா யிருந்தாலும், ஒரு அந்நியனாயிருந்தாலும் – "அது உண்மை" என்று கூறதா ஒரு தருணம் இருந்ததுண்டா? நான் தவறான எதையாகிலும் உங்களிடம் உரைத்ததுண்டா? (சபையோர், "இல்லை" என்கின்றனர் – ஆசி). அப்படியானால் இப்பொழுது உங்களிடம் கூறுகிறேன். **கர்த்தர் உரைக்கிறதாவது** பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அந்த ஆவி தேவனுடைய வார்த்தையை விசுவாசம் என்னும் கரங்களில் எடுத்து முன்னே செல்லும். முழு ராஜ்யமும் உங்களுக்குச் சொந்த மானது. பிள்ளைகளே, அது உங்களுடையது.

ஒன்றாயிருத்தல், பிப்ரவரி 11, 1962

## மூன்று விதமான விதைகள் நடப்பட்டாயிற்று

## "THREE SEEDS HAS BEEN PLANTED"

**201.** பயிர்கள் அறுவடையின் காலத்திற்கு அருகாமையில் இருக்கிறது என நான் விசுவாசிக்கிறேன். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அதை எல்லோரும் ஒப்புக் கொள்வீர்கள். நாம் அறுவடையின் காலத்திற்கு அருகாமையில் இருக்கிறோம், விதைகள் எல்லாம் பயிரிடப்பட்டு விட்டன. ஓ தேவனே எனக்கு முன்பாக எது கடந்து போயிற்று என்று நீங்கள் பார்க்க விரும்புகின்றேன். விதைகள் எல்லாம் பயிரிடப்பட்டு விட்டன. விதைக்க ஒரு காலம், அறுவடை செய்ய ஒரு காலம் என்பதை நினைவுகூருங்கள்.

**202.** சரி. மூன்று வகையான விதைகள் விதைக்கப்பட்டன. முதலாவது ஸ்தாபனத்தின் வித்து ——— பில்லிகிரஹாம். அவர்தான் தலைமை பயிரிடுபவர். இரண்டாவது, பெந்தகோஸ்தே வித்து ——— ஓரல் ராபர்ட்ஸ். பெந்தகோஸ்தே விதையானது விதைக்கப்பட்டாயிற்று. (நான் இப்பொழுது ஸ்தாபன பெந்தகோஸ்தேயைப் பற்றிப் பேசுகிறேன்— மூன்றாவது தேவ வார்த்தை என்னும் விதை விதைக்கப்பட்டது. சகோதரர்களே, நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் திரும்பச் சொல்லச் சொன்னாலொழிய நான் இதைக் கூறப் போவதில்லை. ஆகவே நீங்கள் இதை தெளிவாய் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். மூன்று வுதமான விதைகள் நடப்பட்டாயிற்று. ஆகவே தான் விதைப்பு என்கிற காரியம் ஏறத்தாழ முடிந்து விட்டதாய் இருக்கின்றது. பாருங்கள்? மழை அல்லது ஆவி பொழியப்படுவதற்கு முன்பு விதைகள் விதைக்கப்பட்டாக வேண்டும். (அது சரியா?) இங்கு நீங்கள் என்னோடு சற்று ஒவ்வாமல் இருக்கலாம். ஆனால் சற்று பொறுங்கள்.

**203.** விதைகள் விதைக்கப்பட்ட பிறகே மழையானது பொழிந்து விதைகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அது சரியா? இங்கு எபிரேய பாஷை தேரிந்தவர்கள் இருக்கிறார்களா? நீங்கள் விரும்பினால் அப்பதத்தைப் பாருங்கள்.

**204.** அனேக ஸ்தாபனங்கள், நாம் "பின்மாரி"யின் காலத்தில் ஜீவிக்கிறோம் என்று கூறுவதைக் கேள்விப்படுகிறோம். அது அறிவீனம், அவ்விதமான காரியம் ஒன்றுமில்லை. ஓ... ஏதோ ஒன்று சம்பவிக்கின்றது. அது என் முன்னால் கடந்து போவதை நான் காண்கிறேன்.

அந்த ஆவியானவரைப் பிடித்து விட்டேன் பாருங்கள். ஆமென். இது சத்தியம் என்று நான் அறிவேன்; இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்ற விதமாயுள்ளது. ஒரு தரிசனம் என் முன்பு அசைந்து வருகிறது. அதை இங்கு சொல்வதற்கு கடினமாயுள்ளது. ஒவ்வொரு சமயமும் நான் பார்க் கும் போது, அது என் முன்னால் அசைந்து, அவ்விதமாக உடைந்து, இப்பக்கமாக அசைந்து, அவ்வழியே பார்க்கிறது. சில நபர்கள் அங்கு உட்கார்ந்திருப்பதை நான் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன். பாருங் கள்?

உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து [முதலாம் பாகம்], மார்ச் 18, 1962

# ஆவியானவர் என்னோடு பேசி, "உன் எழுதுகோலை எடுத்துக் கொள்" என்றார்

## THE HOLY SPIRIT SAID "PICK UP THE PEN"

**279.** சகோதரர்களே (ஒலிப்பதிவு செய்பவர்கள்) நீங்கள் என்னோடு ஒவ்வாமலிருந்தால், நான் உங்களுக்காக ஜெபம் செய்வேன்; நான் தவறாயிருப்பேனென்றால், நீங்கள் எனக்காக ஜெபம் செய்யுங்கள். நான் இப்பொழுது படிக்கப் போகிறதை மிகவும் நெருக்கமாக கவனியுங்கள். ஆவியானவர் என்னோடு பேசி, "உன் எழுதுகோலை எடுத்துக்கொள்" என்று கூறினார். நான் என் பிரசங்கத்தின் சிலவற்றை இப்பொழுது விட வேண்டியவனாயிருக்கிறேன், ஆனால் சிலவற்றைக் கட்டாயமாக இங்கு கொடுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

**280.** சரி. இப்பொழுது, இதைத்தான் நான் உங்களுக்கு கூற முயற்சிக்கிறேன்.

பிரதியுற்பத்தியின் பிரமாணமானது தங்கள் தங்கள் ஜாதியை பிறப் பிக்கிறதாயிருக்கிறது (ஆதி 1:11). இந்த கடைசி நாட்களில், உண்மை யான மணவாட்டி சபையானவள் தலைக்கல்லினிடத்திற்கு நெருங்கு வாள். அவள் அவ்விதம் அந்த மகத்துவமான தலைக்கல்லை நெருங் கும்போது ஒரு விசேஷமான சபையாயும், விசேஷமான ஜாதியாயும் இருப் பாள். அவரோடு அவள் இணைக்கப்படத்தக்கதாய் அவரைப் போலவே அவருடைய சாயலைப் பெற்றிருப்பாள். அவர்களிருவரும் ஒன்றாயிருப்

பார்கள். ஜீவிக்கிற தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடாய் அவர் களிருப்பார்கள். ஸதாபனங்கள் இதை ஒருபோதும் உற்பத்தி செய்ய முடியாது. அவர்கள் கொள்கைகளோடும் கோட்பாடுகளோடும் தேவனு டைய வார்த்தையைக் கலந்து ஒரு கலப்பினத்தை உற்பத்தி செய்வார் கள்.

**281.** முதலாம் குமாரன், உரைக்கப்பட்ட தேவவார்த்தை... விதையா யிருந்தான். அவனுக்கு ஒரு மணவாட்டி கொடுக்கப்பட்டது. (ஆவியை நான் திரும்ப பெறுகிறேன், நான் எதைக் கூறினேனோ அதை திரும்ப வும் பொறுக்கி எடுக்கிறேன். பாருங்கள்?) தன்னை பிரதியுற்பத்தி செய்துகொள்ள ஒரு மணவாட்டிஅவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவள் விழுந்து போனாள் (அவன் தன்னைப் போல இன்னுமொரு தேவ குமா ரனை உற்பத்தி செய்யவே மணவாட்டி கொடுக்கப்பட்டாள். ஆனால் அவள் கலப்பினத்தினால் விழுந்து போனாள். பாருங்கள்). அவள் விழுந்து போனாள்; அதன் காரணமாக அவனும் மரித்தான்.

**282.** இரண்டாவது குமாரனும், உரைக்கப்பட்ட தேவ வார்த்தை... விதையாயிருந்து, ஆதாமுக்கு ஒரு மணவாட்டி கொடுக்கப்பட்டது போன்று, இவருக்கும் ஒரு மணவாட்டி கொடுக்கப்பட்டது; அனால் அவர் விவாகம் செய்யும் முன்பு அவள் விழுந்து போனாள்; ஏனெனில் அவள் ஆதாமின் மணவாட்டியைப் போன்று சுயாதீனப் பிரமாணத்திற் குட்பட்டவளாய் வார்த்தையை ஏற்றுக் கொண்டு ஜீவிப்பாளா அல்லது வார்த்தையைச் சந்தேகித்து அதன் காரணமாக மரிப்பாளா என்று சோதிக்கப்பட்டாள். அவ்விதமே அவள் வார்த்தையைச் சந்தேகித்து மரித்தாள்.

**283.** பின்பு, உண்மையான வார்த்தை ––– விதையாகிய ஒரு சிறு கூட்த்தினின்று தேவன் ஒரு நேசமுள்ள, கற்புள்ள மணவாட்டியை கிறிஸ்துவுக்கு கொடுப்பார். அவள் ஒரு வார்த்தை கன்னிகையாயிருப் பாள்... மனித கோட்பாடுகளையும், கொள்கைகளையும் அறியாத அந்த கன்னிகையான அவர்களாலும், அவர்கள் மூலமாயும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட யாவும் நிறைவேறும். தேவன் மரியாளிடம் வாக்குத்தத்தம் செய்தது போல தம்மிலே வார்த்தையாகிய வாக்குத்தத்தத்தை உடைய வராய், தேவன் தாமே தம்மை வெளிப்படுத்துவார். தம்மைக் குறித்து எழுதியிருப்பவைகள் யாவையும் நிறைவேறுவதற்காக தம்முடைய

சொந்த வார்த்தையாகிய வாக்குத்தத்தத்தின் பேரில் தாமே கிரியைச் செயவார். கன்னியின் கருப்பையினின்று (இப்பொழுதுள்ள ஆவிக்குரிய கருப்பையைப் போன்ற உதாரணம்) அவர் வந்த போது செய்த விதமாக, எழுதப்பட்ட வார்த்தையாக இருந்த போதிலும் (ஏசாயா 9:6) ஒரு தேவதூதன் மூலம் உரைக்கப்பட்டபோது, "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று அவருடைய வார்த்தையை ஏறறுக் கொண்ட மரியாளைப் போன்று இப்பொழுது உள்ள மணவாட்டியும் கிரி யைச் செய்வாள். அவர்கள் அவரில் அன்பு கூறுவர், (அவருடைய வைகளை நேசிப்பார்கள்). அவர் சபையின் தலைவராக இருந்து எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறபடியால் இவர்ககளும் அவருடைய தன் மைகளைப் பெற்றிருந்து, சரீரத்தின் அவயங்கள் தலைக்குக் கட்டுப் பட்டிருக்கும் வண்ணமாக அவர்கள் தலையாகிய கிறிஸ்துவுக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள்.

**384.** ஒரு ஒற்றுமையைக் கவனியுங்கள். பிதா முதலில் எதையா கிலும் காண்பியாமல் இயேசு தாமாக கிரியை செய்யாதது போல (தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ஒரு மனம் --- யோ: 5:19ஐ பார்க்கவும்) மணவாட்டியும் இருப்பாள். அவளுக்கு அவர் தம்முடைய வார்த்தையாகிய ஜீவனைக் காண்பிக்கிறார். (அவளுக்கு அவர் காண் பிக்கிறார்). அவள் அதைப் பெற்றுக் கொள்ளுகிறாள். அதைக் குறித்து அவள் ஒருபோதும் சந்தேகம் கொள்வதில்லை.

**285.** ஆகையால் யாதென்றும் --- மரணம் கூட --- அவளை சேதப்படுத்துவதில்லை; ஏனெனில் விதையானது விதைக்கப்பட்டால் தண்ணீரானது பயிரை வளரச் செய்ய வேண்டும். ஆமென். (இப்பொ ழுது என்னிடம் ஒரு மகத்தான அல்லேலூயா உண்டு) இங்கே தான் இரகசியம் இருக்கிறது; வார்த்தையும் கிறிஸ்துவின் மணவாட்டியினுள் இருப்பதால், வார்த்தையைக் கொண்டு அவர் என்ன செய்ய சித்த மாயிருக்கிறாரோ, அதை அவள் அவருடைய நாமத்தினாலே செய்கி றாள். கர்த்தருடைய நாமத்தினாலே செய்கிறாள். "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்ற வார்த்தை அவளிடம் இருக்கிறது.

**286.** பின்பு அது உயிர்ப்பிக்கப்பட்டு, தனது நோக்கத்தை நிறை வேற்றும் வரை அது வளர்வதற்காக பரிசுத்த ஆவி அதற்கு நீர்பாய்ச்சு கிறது. அவர்கள் அவருடைய சித்தத்தை மட்டும் செய்வார்கள்.

(ஆமென்! அதை நான் விசுவாசிக்கிறேன்) வித்தியாசமாக கிரியை செய்ய யாராலும் அவர்களை பலவந்தப்படுத்த முடியாது. அவர்கள் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதை உடையவர்களாயிருப்பார்கள்; அல்லது அமைதலாயிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய கிரியையைச் செய்வார்கள். ஏனெனில் அவர் இவ்வுலகத்திலிருந்த போது எல்லாக் கிரியைகளையும் முடிக்காததன் காரணத்தால், அவரே அவர்களுக் குள்ளிருந்து கிரியை செய்து முடிக்கிறார். அவர் இப்பொழுது அவர்கள் மூலமாய் நடப்பிக்கும் கிரியைகளை அவர் மாம்சத்திலிருந்த போது நிறைவேற்றுவதற்கு அது ஏற்ற சமயமாயிருக்கவில்லை.

**287.** யோசுவா, காலேப் என்பவர்களைப் போன்று நிற்போமாக (உன்னிப்பாக கவனியுங்கள், இப்போது நாம் ஆவிக்குரிய பின்னணி யைப் பெற்றுக் கொள்ளப் போகிறோம்). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் நமது கண்களுக்குத் தெரிகிறதினால், யோசுவா, காலேப் என்பவர்களைப் போன்று உறுதியாக நிற்போமாக. அதற்குரிய நேரமா னது நெருங்கி விட்டது. யோசுவா என்பதற்கு எபிரெய பாஷையில் இரட்சகர் என்றும், சபையை கானானுக்குள் கொண்டு செல்லும் கடை சிக் கால தலைவன் என்றும் அர்த்தம். காலேப் என்பதற்கு யோசுவா வுடன் நிலைத்திருந்த உண்மையான விசுவாசி என்று அர்த்தமாம். தேவன் இஸ்ரவேலை தம்முடைய வார்த்தையோடு ஒரு கன்னியாக ஆரம்பித்தார், ஆனால் அவர்களோ வித்தியாசமானதொன்றை விரும்பி னார்கள். கடைசி கால சபையும் அதுபோலவே இருக்கிறது.

**288.** கவனியுங்கள். குறித்த சமயம் வரும் வரையில் தேவன் இஸ்ரவேலரைப் புறப்படப் பண்ணவில்லை. (இப்பொழுது, கவனியுங்கள். இது ஒரு பொருளை சுட்டிக் காட்ட போகின்றது) யோசுவா அந்த நேரத்திற்காக காத்திருந்தான்! "தேவன் நமக்கு தேசத்தைக் கொடுத் தார், வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், நாம் சென்று அதை சுதந் தரித்துக் கொள்வோம்" என்று ஜனங்கள் சொல்லியிருக்கக்கூடும், "யோசுவாவே, உனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நீ இழந்து விட்டாய், நீ பின் வாங்கி விட்டாய். ஏன் நீ ஏதாகிலும் ஒரு காரியத் தைச் செய்யக் கூடாது? "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று ஒரு நிமிடத்தில் காரியங்களைச் செய்வாயே! இப்பொழுது என்ன?" என் றெல்லாம் அவர்கள் கூறியிருக்கலாம். ஆனால் தேவனால் அனுப்பப்

பட்ட இந்த ஞானமுள்ள தீர்க்கதரிசி தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிந்திருந்தான், அதுமட்டுமல்ல, அவன் வாக்குத்தத்தம் நிறைவேறு வதற்கென்ற காலத்திற்கான திட்டவட்டமான தீர்மானம் தேவனிடத்தி னின்று வர காத்திருந்தான்.

**289.** (இந்த உவமைகளை கவனியுங்கள்) சமயமானது வந்த போது, தேவனுடைய வார்த்தையயோடு நிலைத்து இருந்த யோசுவாவிடம் அவர் அதை ஒப்படைத்தார், அவனைத்தவிர வேறு யாரையும் அவர் நம்ப வில்லை. இதுவே இக்கடைசி காலத்திலும் திரும்ப சம்பவிக்கும்.

**290.** வல்லமையாய் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியான மோசே தன்னை அவர் உபயோகிப்பார் என்று அறிந்திருந்தான். ஏனெனில் அவன் அவருக்கு ஊழியக்காரனாயிருப்பான் என்பதை அவனுடைய விநோதமான பிறப்பினால் தேவன் உறுதிபடுத்தியிருந்தார். ஆபிரகாமின் வித்தை விடுவிக்கும் சரியான சமயம் வந்த போது (நீங்கள் புரிந்து கொண்டீர்களா?) மோசே, ஒருபோதும் எகிப்தில் தங்காமல் எகப்திலுள்ள மக்களோடு வேதத்தைக் குறித்து தர்க்கியாமல், ஜனங்கள் அவனை ஏற்றுக் கொள்ளும் சமயம் வரும்வரை வனாந்தரத்தில் தேவனிடத்தில் காத்திருந்தான். அவர்களைக் குறித்து சாட்சி கொடுக்க அவன் வந்தான்; அனால் அவர்களோ அவனை ஏற்றுக் கொள்ளவல்லை. தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை வனாந்தரத்திற்கு அழைத்துக் கொண்டார். தேவன் அவனைத் தெரிந்தெடுத்ததை சாட்சி பகிர்ந்தார். ஆனால் மோசே தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதி தேவன் அவனை வனாந்திரத்துக்கு கொண்டு செல்லவில்லை. மோசேயை ஏற்றுக்கொள்ள ஜனங்கள் ஆயத்தமாயிராததன் காரணத் தால் அவன் அங்கு கொண்டு போகப்பட்டான். ஜனங்கள் இதைப் புரிந்து கொள்வார்களென்று நினைத்தான். ஆனால் அவர்களோ இதைப் புரிந்து கொள்ளவில்லை. (இதை நான் எழுதவில்லை. அவரே இதை எழுதினார்).

**291.** தேவனுடைய வார்த்தையை தன்னிடம் வரப்பெற்ற அந்த வல்லமையான நிரூபிக்கப்பட்ட தீர்க்கதரிசி எலிசா தன்னுடைய செய்தி யை, தேசத்தில் தன் தலைமயிரை கத்தரித்துக் கொண்ட முதல் பெண் ணாகிய யேசபேலுக்கும் அவளைச் சார்ந்த நவநாகரிக வர்ணந்தீட்டிக் கொண்ட அமெரிக்கக் குழுக்களுக்கும் பிரசங்கித்த பின், தேவன் தம்

முடைய தீர்க்கதரிசியை நிரூபிக்கிறவராயிருந்தார்; ஒவ்வொரு தடவை யும் அவன் தீர்க்கதரிசனம் உரைத்த போது, அது சத்தியமாயிருந்தது. தேவனுடைய தீர்க்கதரிசியையும் அவர்களுக்காக அவன் மூலமாய் அனுப்பியிருந்த தேவனுடைய வார்த்தையையும் அவர்கள் புறக்கணித்த தின் காரணமாக தேவன் இந்த சந்ததியை மகா வாதைகளினால் வாதித்தார்.

**292.** தேவன் தமது தீர்க்கதரிசியை வனாந்திரத்திற்கு அனுப்பி அங்கு அவனை மறைத்து வைத்தார். தேசத்தின் ராஜாவாலும் அவனை வெளிக்கொண்டு வரமுடியவில்லை. தேவனுடைய சித்தத்திற்கு விரோத மாக அவனை பலாத்காரமாக அழைத்து வர முயற்சி செய்தவர்கள் மரித்தார்கள். ஓ மகிமை! ம்ம்ம்...! ஆனால் தேவன் தமது உண்மை யுள்ள தீர்க்கதரிசிக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். அப்பொழுது அவன் ஒளிப்பிடத்திலிருந்து வெளி வந்து “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்று உரைத்தான். அவன் என்ன செய்தான்? நேராக வார்த்தைக்குத் திரும்பிச் சென்றான். தகர்க்கப்பட்ட பன்னிரண்டு கற்களையும் ஒன்று சேர்த்து பலி பீடத்தைச் செப்பனிட்டான்.

**293.** கிறிஸ்துவுக்கு முன்னோடினவனான அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட உண்மையுள்ள தீர்க்கதரிசியான யோவான் ஸநானன், மேசியாவாகிய ஆட்டுக்குட்டி வருகிறார்! என்ற தேவனுடைய சத்தத் தைக் கேட்கும் வரை அவன் தேவனால் வனாந்தரத்திற்கு அழைக்கப் பட்டு அங்கு சென்றான். அவனுடைய தகப்பனுடைய ஆசாரிய முறை மையின் பள்ளியோ, பரிசேயருடைய பள்ளியோ அல்லது அந்த ஸ்தா பனமோ, வனாந்தரத்திற்கு அவனை அழைக்க முடியவில்லை.

ஆவிக்குரிய சிந்தையோடு கவனிக்கிறீர்களா? இன்னும் எவ்வ ளவோ நான் சொல்லக் கூடும்! நான் இங்கே சிலவற்றை விட்டு விடுகிறேன், இப்பொழுது.

**294.** இன்றைக்கு எவ்வளவு வித்தியாசப்பட்டதாயிருக்கின்றது! ஜனங்களுக்காக செய்தியை தேவனிடத்தில் பெற்றுக் கொண்டதாக கூறும் இக்காலத்திய அநேக சுவிசேஷகர்கள் கோராகைப் போல் இருக்கின்றனர். அபிஷேகம் பெற்றிருந்த நரூபிக்கப்பட்ட தேவ ஊழியக் காரனான மோசே பெற்றிருந்த அதிகாரத்தை இந்த கோராகு மறுத

லித்து அதைக் குறித்து விவாதம் செய்தான். இஸ்ரவேலர் அவனோடு சேர்ந்து பொன் கன்றுக்குட்டியைச் செய்தது போன்று இன்றும் அநேகர் பணம் சம்பாதிக்கும் வழிகளை உற்பத்தி செய்து, பெரிய கட்டிடங் களைக் கட்டியும், பெரிய பள்ளிக்கூடங்களைக் கட்டியும், தங்கள் சொந்த வித்தை செயற்கை முறையாக குஞ்சு பொறிக்கச் செய்கிறார் கள். அபிஷேகிக்கப்பட்டு நரூபிக்கப்பட்ட உண்மையான தேவ தீர்க்க தரிசியின் செய்தியைக் கேட்ட பின்பும் ஜனங்கள் அன்று அவனுடைய காரியத்திற்கு விழுந்து போனது போன்று இன்றும் விழுந்து போனானர்கள்.

**295.** அவர்கள் கோராகின் பொய்க்கு விழுந்து போனார்கள் தம்முடைய தீர்க்கதரிசிகளைத் தம்முடைய வார்த்தையினால் நரூபிப்பார் என்று தேவன் தெளிவாக இஸ்ரலேருக்கு கூறியிருந்தார். போராகு வேதப்பிரகாரமான தீர்க்கதரிசியாயிராமலிருந்தும் மக்களுக்கு நல்லவ னாகக் காட்சியளித்தது போல, இன்றும் சுவிசேஷகர்கள் நெற்றியில் இரத்தத்தையும் கைகளில் எண்ணெயையும், மேடையில் தீப்பந்தங்களை யும் வருவிக்கின்றனர். அவர்கள் பெண்கள் பிரசங்கிக்கவும் தலை மயிரைக் கத்தரிக்கவும் ஆண்களின் உடையை அணியவும் அனும தித்து இவ்வித காரியங்களை உற்பத்தி செய்கின்றனர். நீங்கள் பெற் றிருப்பது என்ன? ஜனங்கள் இவைகளுக்குவிழுந்து போவார்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லையா? அவர்கள் கோராகுக்கு விழுந் தது போன்றே உண்மையான வார்த்தையினின்று திரும்பி ஸ்தாபனத் திற்காக விழுந்து போனார்கள். அவர்களுக்குள்ளிருக்கும் வித்தின் தன்மையை அவர்களுடைய குறைவான ஆடைகள் காட்டுகின்றன.

**296.** அனால் முழு இஸ்ரவேலும் கோராகின் பொய்க்கு விழுந்து விடவில்லை. தேவனுக்கு துதி உண்டாவதாக. அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியான மோசேயோடும், தேவனுடைய வார்த்தையோடும் சிலர் துணை நின்றனர். இக்காலத்திலும் அநேகர் அழைக்கபட்டிருந்தாலும் சிலரே அவருடைய வார்த்தைக்கும் ஆவிக்கும் நிலைநின்றனர்.

**297.** கோதுமை மணிகளையும் களைகளையும் குறித்த உவமையை நினைவுகூறுங்கள். களைகள் சுட்டெரிக்கப்படுவதற்கென முதலில் கட்டப்பட வேண்டும். அது உண்மையா? இது நிறைவேறப் போகிற ஒன்று. இந்த விசுவாசமில்லாத ஸ்தாபன சபைகள் முன்பிருந்ததை விட

மிக நெருக்கமாகக் கட்டப்படுவார்கள். அவர்கள் ஐக்கிய ஆலோசனை சபையின் சங்கமாக கூட்டிக் கட்டப்பட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அக்கினிக்கு இரையாக்கப்படுவதற்கு ஆயத்தமாகின்றனர். (நான் இதை எழுதவில்லை; அவரே அதை எழுதினார் என்று உணர்கிறேன்.) இந்த பெந்தகோஸ்தேயினரும் அவ்விதமேயாவார்கள். ஆனால் வார்த்தையாகிய கோதுமை மணிகள் என்றாவது ஒருநாள் கூட்டி சேர்க்கப்பட்டு எஜமானின் களஞ்சியத்தில் சேர்க்கப்படுவார்கள்.

**298.** கடைசி காலங்களில் மல்கியா 4ம் அதிகாரத்தில் (ஜாக்கிரதைப்படுங்கள்!) கூறப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்; அது நிச்சயமாக நிறைவேறும். ஏனெனில் அது உயிர்ப்பிக்கப்பட்ட தேவன வார்த்தையாயிருந்து மல்கியா என்னும் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டதாயிருக்கிறது. இயேசு அதைக் குறிப்பிட்டார். அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக சம்பவிக்க வேண்டும்.

**299.** (இப்பொபது நன்கு கவனியுங்கள்) இயேசு வருவதற்கு முன்பு நிறைவேறாத எல்லா தீர்க்கதரிசனங்ளும் நிறைவேறியாக வேண்டும். வேதம் நிறைவேறியாக வேண்டும். இந்த அபிஷேகிக்கப்பட்ட தூதன் வரும்போது, புறஜாதியின் காலம் சபையின் காலங்களோடு முடிவு பெற வேண்டும். அவன் முன்மாரி தொடங்கி பின்மாரி வரையிலான சத்தியங்களான சர்ப்பத்தின் வித்திலிருந்து ஆரம்பித்து முழு வேதத்தையும் விதைப்பான. தன்னுடைய முற்பிதாக்களான எலியா, யோவான் ஸ்நானன் என்பவர்களைப் போன்று அவனும் ஸதாபனங்களால் புறக்கணிக்கப்படுவான். எலியா, மதலாவதாக ஆகாபின் காலத்தில் புறக்கணிக்கப்பட்டான். ஆகாப் காலத்தில் இஸ்ரவேலில் நடந்த சம்பவம், மல்கியாவின் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசி தோன்றும் காலத்தில், அமெரிக்காவில் நடைபெறும். ஏனெனில் இந்த தேசம் இஸ்ரவேலுக்கு உதாரணமாயிருக்கிறது.

**300.** “யேசபேல் மார்க்கம்” என்ற செய்தியைப் படியுங்கள் அல்லது கேளுங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சுதந்திரமாக வழிபட எகிப்தை விட்டு வெளியேறி அவர்கள் குடியயேறிய நாடுகளிலுள்ள ஜாதிகளைப் புறம்பே தள்ளி, ஒரு பலத்த ஜனமாகி, தாவீதைப் போன்ற உத்தம தலைவர்களால் அரசாளப்பட்டு, பின்பு ஆகாப் எனும் கொடியவனை

சிம்மாசனத்தில் ஏற்றி, அவனுடைய மனைவியாகிய யேசபேல் இஸ்ரவேலின் நிர்வாகத்தை நடத்தியது போன்று, நம் முற்பிதாக்களும் சுதந்தரமாக வாழ எண்ணி தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறி, அமெரிக்காவின் சுதேசிகளை விரட்டியடித்து, அந்நாட்டை கைப்பற்றினர். வாஷிங்டன், லிங்கன் போன்ற மகத்தான தேவமனிதர்கள் நாட்டின் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். சிறிது காலம் கழிந்து, தரம் குறைந்தவர்கள் பதவியேற்று, யேசபேலைப் போன்ற அவர்களுடைய மனைவி மறைவாக நிர்வாகத்தை நடத்தினாள். இந்த சமயத்தில் தான் அந்த மனிதன் தோன்ற வேண்டும். அது "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதாகும்.

**301.** கர்மேல் பர்வதத்தில் தேவனுடைய மகிமை காணப்பட்டது போன்று, பின்மாரிக் காலத்திலும் சம்பவிக்க வேண்டும். வேதம் முற்றிலுமாக நிறைவேறியாக வேண்டும். மல்கியா 3ம் அதிகாரத்தில் கூறப்பட்ட முன்னோடியாவன் யோவான் ஸ்நானனாகும். அவன முன் மாரியில் விதை விதைத்து, ஸ்தாபன்களினால் புறக்கணிக்கப்பட்டான், (பரிசேயர் சதுசேயர் என்ற ஸ்தாபனத்தார்). பின்னர் இயேசு வந்து, மறுரூப மலையின் பலப்பரீட்சை நடைபெற்றது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடுபவன் பின்மாரிக்கென விதைப்பான். இயேசு (வார்த்தையானவர்) ஸ்தாபனங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் மத்தியில் ஒரு மகிமையான சவாலாயிருப்பார். இயேசு வரும்போது ஸ்தாபனங்களையும் கொண்டு செல்வார். முதலாம் பலப்பரீட்சை கர்மேல் பர்வதத்திலும், இரண்டாம் பலப்பரீட்சை கூடிய விரைவில் சீயோன் பர்வதத்தில் நடைபெறும்.

**302.** மோசே எலியா, யோவான் ஸநானன் இம்மூவரும் மக்களின் சமூகத்தினின்று விலகி வனாந்திரத்துக்குச் சென்ற சம்பவம் அநேகரை குழப்பத்திற்குள்ளாக்கினது. அவர்களையும் அவர்களுடைய செய்திகளை மக்கள் ஏற்றுக்கொள்ளாததால் அவர்கள் வனாந்தரத்துக்கு செல்ல வேண்டியதாயிருந்தது. ஆயினும் விதை விதைக்கப்பட்டாயிற்று. அடுத்தது நியாயத்தீர்ப்பு தான். வரப்போகும் நியாயத்தீர்ப்பை அறிவிக்க இவர்கள் அனுப்பப்பட்டனர். விதைத்தலானது முடிவு பெற்று விட்டது.

**303.** என்றாவது ஒருநாள் கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு தடை செய்யப்படுவாள். (நீங்கள்

குறித்துக்கொள்ள விரும்பினால்,) வெளி: 13:16ல் வேதம் அதைக் குறித்து தீர்க்கதரிசனமாயுரைக்கிறது. ஸ்தாபனங்கள் மணவாட்டியை தடைசெய்யும்; அல்லது, “மிருகத்தின் முத்திரையை” அணிந்துகொள்ள வற்புறுத்தும். அப்பொழுது தான் ஆட்டுக் குட்டியானவர் மணவாட்டியை எடுத்துக் கொள்வார். பின்பு வேசியை நியாயந்தீர்ப்பார்.

**304.** ஒரு முக்கியமான காரியத்தை செய்ய மோசே பிறந்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அக்கிரியைகளைச் செய்ய அவசியமான விசேஷ வரங்களைப் பெறும்படி அவன் கர்த்தரிடத்தில் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. (அவன் திரும்பிச் சென்று காத்திருக்க வேண்டியாயிருந்தது) தேவனால் குறிக்கப்பட்ட அச்சமயம் வரும்வரை சிம்மாசனத்தில் ஒரு பார்வோன் இருக்க வேண்டியதாயிருந்தது. தேவன் மோசேயை திரும்பவும் வனாந்தரத்திலிருந்து அவர்களிடமாய் கொண்டு செல்வதற்கு முன்பு ஜனங்கள் ஜீவ அப்பத்திற்காக பசியடைய வேண்டியதாயிருந்தது. ஆயிரக் கணக்கானவர்கள் இந்த கடைசி நாட்களில் அடையாளக் கிரியைக்காரராயிருந்து அதன் விளைவாக, வார்த்தையைக் குறித்தும் தேவனுடைய அசைவைக் குறித்தும் ஒன்றும் அறியாத அடையாளங்களைத் தேடும் சந்ததி உண்டாயிருக்கிறது.

**305.** நான் உங்களுக்கு கூறினது போன்று, “இரத்தத்தையும் எண்ணெயையும் மேடையில் வரவழைப்பது போன்ற மாம்சமான கிரியைகளை செய்தால் அது தேவனுடைய வார்த்தையாயிராவிட்டாலும் அதை ஆதரிப்பார்கள்.” கடைசி காலங்களில் என்ன நிகழும் என்பதைக் குறித்து இயேசு நம்மை எச்சரித்து இருக்கின்றார். மத். 24ல் இரண்டு ஆவிகள் நெருக்கமாக இருந்து கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். அதை எப்படி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்? வார்த்தை பரிசோதனையை அவர்களிடம் கொடுங்கள். நீங்கள் அதை எப்படி அறிந்து கொள்ளுவீர்கள்? வார்த்தையை அவர்களிடம் பேசுங்கள்; அதைக் குறித்து அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைப் பாருங்கள்? அவர்கள் வார்த்தையை விசுவாசிக்கவில்லையென்றால், அவர்களிடம் வித்து இல்லையென்று பொருள். அவர்கள் பிசாசாய் இருந்து உங்களை வஞ்சிப்பார்கள். முதல் இரண்டு மணவாட்டிகள் வஞ்சிக்கப்பட்டது போன்று, வார்த்தையைக் கலப்பினமாக்குவதால் மூன்றாவது மணவாட்டியையும் வஞ்சிக்கிறார்கள்.

**306.** தேவன் ஒருக்காலும் தம்முடைய வார்த்தைக்கு மேலாக அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. (ஆமென்! அது ஒரு கடுஞ்சொல்) தேவன் வார்த்தைக்கு முன்பாக ஒருபோதும் அடை யாளங்களை வைத்ததில்லை. ஆனால் அடையாளங்கள் அவருடைய வார்த்தையை நிரூபிப்பதற்கென கூட சேர்க்கப்பட்ட ஒரு காரியமாகும். ஆனால் வார்த்தையே முதன்மையானது.

**307.** இதை நிரூபிக்க, எலியா அந்த விதவையிடம், "முதலில் எனக்கு ஒரு சிறு அடையை செய்து கொடு, பின் அற்புதம் நிகழ் வதைக் கவனி" என்றான். வார்த்தையை முதலில் நீங்கள் ஏற்றுக் கொண்டு, பின்பு உங்கள் ஜவியத்தில் அற்புதம் நடப்பதைப் பாருங்கள். தேவனுடைய வார்த்தை பரிசுத்த ஆவியினால் உயிர்ப்பிக்கப்படும். தேவ னால் அனுப்பப்பட்ட ஒரு தூதன் சில வசனங்களை மட்டும் விசுவா சித்து மற்றவைகளை எவ்வாறு மறுதலிக்க முடியும்? வார்த்தையின் ஒரு பகுதியை மறுதலிக்க...

**308.** கடைசி காலத்தின் உண்மையான தீர்க்கதரிசி வார்த்தை முழுவதையும் மக்களுக்கு எடுத்துரைப்பான்; ஸ்தாபனங்கள் அவனைப் பகைக்கும். "விரியன் பாம்புக் குட்டிகளே" என்று அழைத்த யோவான் ஸநானனின் சொற்களைப் போன்று அவனுடைய சொற்கள் கடூரமாக இருக்கும். தெரிந்து கொள்ளப்பட்வர்கள் மட்டும் அவனுக்கு செவி கொடுத்து எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுவார். ஆபிரகா மின் ராஜரீக சந்ததியார் ஆபிரகாமோடு முன்குறிக்கப்பட்டு அவன் விசுவாசத்தை (அவனைப் போல) பெற்றவர்களாய் அவனோடு கூட தேவனுடைய வசனத்தை உறுதியாய் கடைபிடிப்பார். தேவன் நிர்ண யித்தக் காலத்தில் மல்கியா 4ல் கூறப்பட்ட தூதன் தோன்றுவான். நாமெல்லாரும் அவனுக்காகக் காத்திருக்கிறோம். அது அவருடைய வார்த்தையின்படியே கடைசி காலத்தில் தோன்றும். அதைக் காணத் தக்கதான நேரம் இன்றேயாகும்.

**309.** தேவனுடைய வார்த்தைக்கு அவன் சரியாக சமர்ப்பிக் கப்பட்டிருப்பான். அவருடைய தீர்க்கதரிசிகள் எல்லோரும் அப்படித்தான். அவர்கள் நிரூபிக்கப்பட்டவர்களாயிருப்பர். எலியாவை தேவன் நிரூபித் தது போன்று அவன் பிரசங்கிப்பதை தேவன் சத்தியம் தான் என்று நிரூபிப்பார்; ஏனெனில் அவனுடைய வருகை எலியாவின் வருகையா

யிருந்து, சீயோன் மலையின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக ஆயத்தமாக்குகிறதாயிருக்கிறது. லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் கடைசி நாட்களில் என்று இயேசு கூறினார். அவனுடைய பிரசங்கம் ஆவியினால் சாரமேற்றப்பட்டதாயிருந்து தேவனுடைய வார்த்தைக்கு நேராக ஜனங்களை வழிநடத்தும். அநேகர் வேதத்தை தவறான முறையில் கற்றுக் கொண்டிருக்கிறபடியால் இந்த தூதனையும் அவர்கள் தவறாகப் புரிந்து கொள்வார்கள். (நான் இங்கு தீர்க்கதரிசனம் --- P-R-O-P-H-E-C-Y என்று எழுதி வைத்திருக்கிறேன்) பொய்யர்களால் அநேகர் வேதத்தை தவறான முறையில் கற்றுக் கொண்டிருக்கிறபடியால், அநேக உண்மையான ஊழியக்காரரும் இத்தூதனைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

**310.** கடைசி கால தீர்க்கதரிசனங்கள் திரும்பக் கூறப்படுவது போல முதலாவது முன்னோடியானவன் வனாந்திரத்திலிருந்து வந்து, "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று அறைகூவியது போன்று, அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடுபவனும் வார்த்தையினால் பிறந்த மணவாட்டியை ஜனங்களுக்கு சுட்டிக் காண்பிப்பான். வானத்தில் இயேசு மகிமையில் தோன்றுவதை மணவாட்டிக்கு சுட்டிக் காண்பித்து, "இதோ தேவனுடைய ஆட்டுக்குட்டி மகிமையில் வருகிறார்" என்று அறைகூவுவான். இந்த நிறைவேறப் போகின்ற சம்பவித்திற்காக தேவன் தாமே நம்மை ஆயத்தப்படுத்துவாராக.

உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து [இரண்டாம் பாகம்], மாலை செய்தி, மார்ச் 18, 1962

## சபையானது எவ்வாறு நிறுவப்பட்டது

## "HOW THE CHURCH WAS ORDAINED"

**159.** பெந்தெகோஸ்தே நாளிலே இயேசு உயிர்த்தெழுந்த சில நாட்கள் பின்னர் (ஈஸ்டருக்கு ஐம்பது நாட்கள் கழித்து) சடுதியாக வானத்திலிருந்து பலத்த காற்று இறங்கி வந்தது. ஆனால் றக்கோ அதை நாம் வித்தியாசப்படுத்திவிட்டோம். போதகர் நின்றுகொண்டு, "உங்கள் பெயரை நான் புத்தகத்தில் எழுதிவிடுகிறேன்" என்கிறார்.

பாருங்கள்? அல்லது பட்டம் பெற்று கழுத்து பட்டை அணிந்துள்ள ஒருவர், "இங்கு வந்து இந்த அப்பத்தை புசியுங்கள். அப்பொழுது நீங்கள், சபையின் அங்கத்தினராகி விடலாம்" என்கிறார். அது வினோ தமாயுள்ளது அல்லவா? போதகர், "எங்கள் குழுவைச் சேர்ந்து கொள்ளுங்கள்" என்கிறார்.

**160.** அவர்களிருவரும் தவறு. பெந்தெகொஸ்தே நாளன்று வானத் திலிருந்து – பிரசங்க பீடத்திலிருந்தல்ல – வானத்திலிருந்து – அது என்ன? போதகரா? இல்லை! ஊழியக்காரரா? இல்லை! அது என்ன? பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினிமயமான நாவுகள் அவர்கள் மேல் வந்து அமர்ந்தது. அவர்கள் திக்கினார்கள். அவர்களால் பேசமுடியவில்லை. அவர்கள் மகிமையினால் நிறைந்தார்கள். பரிசுத்த ஆவி அவர்களை நிரப்பினது. அவர்கள் உளறிக்கொண்டே தெருக்களில் சென்று, மது அருந்தினவர் களைப் போல் உளரிக் கொண்டிருந்தனர், அதை... அதைப் போன்று செய்தனர்... அங்கே உயர்ந்தோர் வரிசையில் எண்ணப்பட்ட மதிப்பு மிகுந்த சபை மக்கள் அங்கே வெளியே நின்று கொண்டு, "என்ன, இந்த மனிதர் புது திராட்சரசத்தினால் நிறைந்திருக்கிறார்கள்; அவர்கள் முழுவதும் குடித்து வெறித்திருக்கிறார்கள். இந்த மனிதரையும் ஸ்திரீ களையும் பாருங்கள், எப்படி அவர்கள் தள்ளாடிக் கொண்டு உளறிக் கொண்டிருந்தனர்" என்றனர்.

**161.** இப்பொழுது, அது ஆவியானவர் உரைக்கிறதாவது என்பதா கும்; அதுதான் வேதவசனம். அந்த விதமாகத்தான் சபையானது ஸ்தா பிக்கப்பட்டது, ஸ்தாபிக்கப்பட்டது அல்ல, ஆனால் நிறுவப்பட்டது. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது.

மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல், ஏப்ரல் 22, 1962

## ரோமானிய கொள்கைகளுக்கு எதிர்த்து போராடுங்கள்

## "FIGHT ROMANISM"

**275.** "எங்களுடைய சபை மிகவும் விஸ்தாரமான இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டில் அது அவ்வளவு சேர்த்தது" என்று உங்க ளுக்குத் தெரியுமா என்கின்றனர்.

**276.** ஒ, நிச்சயமாக. உங்களைக் காட்டிலும் கத்தோலிக்கர்கள் அந்த விஷயத்தில் சிறந்தவர்கள். ருஷியாவிலும் கூட அவர்கள் அதிகம் சேர்த்திருந்தனர். ஆனால் அவர்கள் அதை விரட்டியடித்து விட்டு, கம்யூ னிஸத்தை நிலைநாட்டினர். மெக்ஸிகோவிலும் அவர்கள் அவ்வாறே செய்தனர். அவள் உலகெங்கிலும் எங்கெல்லாம் இருக்கின்றாறோ அங்கேயும் அவளுக்கு அவ்விதமாகவே அவர்கள் செய்ய வேண்டிய வர்களாக உள்ளனர். அவ்வதைம் தான் நடக்கும். அது உண்மை.

**277.** கம்யூனிஸத்துக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். அது தேவ னற்ற ஒரு இயக்கம். இந்த போதகர்பளில் சிலர் பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு கம்யூனிஸத்தைக் கண்டனம் செய்வதை நாம் கேட்டி ருக்கிறோம். எனக்கும் கம்யூனிஸத்தில் நம்பிக்கை கிடையாது. ஆனால் இவர்கள், "ஓ நாமெல்லாரும் விழுங்கப்படுவோம். முழு உலகமே கம்யூ னிஸடாக மாறப் போகிறது" என்கின்றனர். அவர்களின் கருத்து தேவ னுடைய வார்த்தைக்கு முரண்பட்டது. அவ்விதம் நடக்கும் என்று சொல்லும் எந்த ஒரு பகுதியும் வேதாகமத்தில் கிடையாது.

**278.** ஆனால் ரோமானிய கொள்கை – கத்தோலிக்க சபை – முழு உலகத்தையும் விழுங்கிவிடும் என்று வேதம் உரைக்கிறது தானியேலின் புத்தகத்தைப் படித்து அறிந்துகொள்ளுங்கள். பொன்னினால் செய்யப் பட்ட தலை – நெபுகாத்நெச்சார் அரசன். பாபிலோனிய சாம்ராஜ்யம். மேதியரும் பெர்சியரும் அதற்குப்பின் தோன்றுகின்றனர்; அதையும் தொடர்ந்து கிரேக்க சாம்ராஜ்யம் தோன்றினது. பின்பு தோன்றிய ரோம சாம்ராஜ்யம் கடைசி வரைக்கும் நின்றது! அநத பத்து விரல்களும் பூமியிலுள்ள ராஜ்யங்கள் அனைத்திற்குள்ளும் சென்றுவிட்டன.

**279.** இரும்புத்திரை (Iron Curtain) என்று ஒன்றுள்ளது; மூங்கில் திரை (Bamboo Curtain) என்று ஒன்றுள்ளது; இந்நிர நீலத்திரை (Purple Curtain) என்று ஒன்றுள்ளது. சகோதரரே, நீங்கள் இந்திர நீலத்திரையைத் தவிர மற்றொன்றிற்கும் பயப்பட வேண்டாம். இந்திர நீலத்திரையைத் தவிர மற்றொன்றிற்கும் பயப்பட வேண்டாம். இந்திர

நீலத்திரையை மாத்திரம் கவனித்துக் கொண்டு வாருங்கள். அது இன்றைக்கு இந்நாட்டிலேயே சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளது.

**280.** யேசபேல் எவ்வாறு ஆகாபைத் தூண்டிவிட்டாள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கத்தோலிக்க சபையை வேதம் யேசபேல் என்னும் வேசி என்று அழைக்கிறது. ஆகாப் ஒரு கெட்ட ஆள் அல்ல. திரு. கென்னடி நல்லவரல்ல என்று நான் சொல்லவரவில்லை. அவரைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. அவர் ஒரு மனிதன்; எனக்குத் தெரிந்தது அவ்வளவேதான். அவர் இந்நாட்டின் அதிபர். அவரால் ஒரு சிறந்த அதிபராக செயலாற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால் அவரையல்ல, அவரை ஆதரிக்கும் கத்தோலிக்க முறைமை யைத் தான் கூறுகிறேன். அது புழுவைப்போல மந்திரி சபையிலும் கூடுமான மற்றெல்லாவிடங்களிலும் நுழையும் வரை காத்திருந்து, பின்பு என்ன நிகழுகிறதென்று பாருங்கள். ஏனைய நாடுகளில் அது என்ன செய்துள்ளது என்பதையும், எக்காலத்திலும் அது என்ன செய்துள்ளது என்பதையும் அராய்ந்து பாருங்கள்.

**281.** வேதம் வெளிப்படுத்தல் **13**ல் கூறவில்லையா?... இந்த நாட்டின் என் **13** ஆகும். அதன் கொடியில் **13** நட்சத்திரங்களும், **13** கோடுகளும் உள்ளன. எல்லாமே **13**ஆக அமைந்துள்ளன – **13** குடியேற்றங்கள் (Colonies) போன்றவை. இந்த நாடு வெளிப்படுத்தல் **13**ல் காணப்படுகிறது.

**282.** அது ஒரு ஆட்டுக்குட்டியைப் போல எழும்பினது என்று வேதம் கூறுகின்றது – வழிபாட்டின் உரிமை. அதற்கு இரண்டு கொம்பு கள் இருந்தன – ஒன்று அரசாங்கம், மற்றொன்று மதசம்பந்தமானது. சற்று பின்னர் அவையிரண்டும் ஒன்றாக இணைந்து, அந்த ஆட்டுக் குட்டி வலுசர்ப்பத்தைப் போல் பேசினது. அதற்கு முன்பிருந்த வலுசர்ப் பம் செய்த அனைத்தையும் அது செய்தது. அவர்கள் மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணினார்கள் என்று வேதம் கூறுகிறது – சபைகளின் சங்கம் (Confederation of Churches). இப்பொழுது நியூயார்க் பட்டணத் திலேயே அது உருவாகி விட்டது. அந்த பெரிய சவ அறை அங்குள் ளது. மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பெந்தெகொஸ்தேயினரான உலக சபை அங்கத்தினரான நீங்கள் அனைவரும் அத்தகைய இணைப்பை உண் டாக்கிக் கொண்டு, பாபிலோனை சேருவதற்காக உங்கள் சிரேஷ்ட

புத்திர பாகத்தை விற்றுப் போட்டீர்கள். உங்களுக்கு என்ன நேர்ந்தது? நிச்சயமாக ஏசாவைப் போல் ஒரு பானை கூழுக்காக உங்கள் சிரேஷ்ட புத்திர பாகத்தை நீங்கள் விற்றுப்போட்டீர்கள். அது உண்மை. ஒரு பானை கூழ்தான் உங்களுக்கு அங்கு கிடைக்கும். நீங்கள் மிருகத் திற்கு சொரூபம் உண்டாக்குகின்றீர்கள். அது உண்மை. எனவே நீங் கள் கம்யூனிஸத்திற்கு அஞ்ச வேண்டாம்; கத்தோலிக்க மார்க்கத்திற்கு அஞ்சுங்கள்.

**283.** அது ஆட்டுக்குட்டியைப் போல் கபடற்ற புகழ்ச்சியுடன் வரும், அதை கவனித்துக் கொண்டேயிருங்கள். ஆனால் அது உள்ளில் ஓநா யாகும், அது தந்திரமாக உள்ளே நுழைந்து விடும். நீங்கள் அதை கவனியங்கள் (ஆம், ஐயா). ஏனெனில் அது தேவனுடைய வார்த்தைக்கு முரணாயிருக்கும். தேவனுடைய வார்த்தை கூறியுள்ள அத்தனையும் நிறைவேற வேண்டும். கம்யூனிஸம் ஒன்றும் செய்யாது. அது தேவ னுடைய கரங்களில் ஒரு கருவியாக அமைந்துள்ளது. அது உண்மை. கம்யூனிஸம் ஏன் இப்படி நடந்துகொள்ள வேண்டும்? தேவனுடைய வார்த்தை நிறைறேுவதற்காக தேவன் கம்யூனிஸத்தை அனுமதிக்க வேண்டியவராயிருக்கிறார். உங்களால் அதை காண முடிகிறதா? அப்படி நீங்கள் எப்பொழுதாகிலும் யோசித்ததுண்டா? தேவன் தமது வார்த் தையை நிறைவேற்ற வேண்டியவராயிருக்கிறார்.

**284.** ஒரு நாள், ஆகாபுக்கும் யோசபாத்துக்கும் முன்னால் நானூறு தீர்க்கதரிசிகள் நின்றனர். ஒரு நீதிமானாக இருந்த யோசபாத், "சரி, நாம் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்கு செல்லும் முன்பு கர்த்தருடைய ஆலோசனையை அறிய வேண்டாமா?" என்றான்.

**285.** ஆகாப், "ஆம், நிச்சயமாக" என்றான். பாருங்கள்? (யேசபேல் பின்னால் இருந்துகொண்டு செயல்புகிறாள், உங்களுக்குத் தெரியும்). அவன், "என்னிடம் இங்கு நானூறு தீர்க்கதரிசிகள் இருக்கின்றனர். அவர்களைக் கொண்டுவருவோம்" என்றான்.

**286.** அவர்கள் எல்லோருமே அருமையான ஜனங்கள், அவர்கள் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் அனைவருமே, "போங்கள், கர்த்தர் உங்களுடனே கூட இருக்கிறார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

**287.** ஆனால் அது இஸ்ரவேலின் ராஜா... அல்லது அங்கே இருந்த இஸ்ரவேலின் ராஜாவாகிய, இந்த தேவனுடைய மனிதனுக்கு சரியாக அது தொனிக்கவில்லை. அது அவனுக்கு சரியென்று தென் படவில்லை. அவன், "வேறு யாராகிலும் இங்கு இல்லையா?" என்று கேட்டான்.

**288.** நானூறு போதகர்கள் ஒருமனதுடன், "கர்த்தர் எங்களுடன் பேசி, 'நீங்கள் போகலாம்' என்று கூறினார்" என்றனர்.

அப்படியிருந்தும் அவன், "வேறொருவன் எங்காவது இருக்க வேண்டும்" என்றான்.

**289.** ஆகாப், "இன்னும் ஒருவன் இருக்கிறான். நான் அவனைப் பகைக்கிறேன். நிச்சயமாக, முற்றிலுமாக. ஆமாம் அவன் என்னைக் குறித்து தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுவான்" என்றான். தேவ னுடைய வார்த்தை ஆகாபுக்கு விரோதமாயுள்ளபோது அந்த தீர்க்கதரிசி வேறென்ன செய்யமுடியும்?

**290.** ஆகவே அவர்கள் ஆள் அனுப்பி மிகாயாவை அழைத்து வந்தனர். மிகாயா, "போங்கள். அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தது சரியே. ஆனால் இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்" என்றான்.

அப்பொழுது அந்த மகத்தான பிரசங்கி, பேராயர் கிட்டே வந்து அவனுடைய வாயில் அடித்து, "கர்த்தருடைய ஆவி எந்த வழியாய என்னை விட்டு உன்னோடு பேசும்படி வந்தது!" என்றான்.

**291.** மிகாயா, "அது தொடக்கத்திலேயே உனக்குள் இல்லையே" என்று சொல்லியிருப்பான் என்று நினைக்கிறேன். ஆகவே அப்பொழுது – ஆகவே அப்பொழுது அவன், "ஒருநாளிலே அதைக் காண்பாய்" என்று விடையளித்தான்.

**292.** அவன் கூறினான் – அவன் கூறினான் – ஆகாப், "இவ னைச் சிறைச்சாலையிலே வைத்து, வருத்தத்தின் அப்பத்தையும் வருத் தத்தின் தண்ணிரையும் சாப்பிடக் கொடுங்கள். நான் சமாதானத்துடன் திரும்ப வரும்போது இவனைக் கவனித்துக் கொள்வேன்" என்றான்.

மிகாயா, “நீர் சமாதானத்தோடே திரும்பி வருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக் கொண்டு பேசினதில்லை” என்று பதிலளித்தான்.

**293.** ஏன்? ஏன்? அவன் தேவனுடைய வார்த்தையில் நிலை நின்றான், சரியாக வார்த்தையுடன் நின்றான். தேவனுடைய வார்த்தையுடன் இணங்காத எந்த ஒரு தீர்க்கதரிசனமும் ... அதனால் தான் நான் இன்றைக்கு உங்களிடம் கூறுகிறேன்: அது எவ்வளவு நல்லதாக தென்பட்டாலும், எத்துணை போதகர்கள் இது, அது, மற்றது என்று கூறினாலும் “கம்யூனிஸம் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி, அதைக் கவிழ்த்து விடும்” என்று அவர்கள் கூறினாலும், நீங்கள் கம்யூனிஸத்தை எதிர்த்து போராட முயலாதீர்கள். ரோமானியக் கொள் கைகளுக்கு எதிர்த்து போராடுங்கள்! ஏனெனில் அது ‘**கர்த்தர் உரைக்கிறதாவது**’. ரோம மார்க்கம் ஆளுகை செய்யும் என்று கர்த்தர் கூறி யிருக்கிறார் – கம்யூனிஸம் அல்ல. அது தேவனுடைய கரங்களில் பொம்மை. அவர் அவ்விதம் செய்ய வேண்டியவராயிருக்கிறார்.

மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல், ஏப்ரல் 22, 1962

# கர்த்தர் உரைக்கிறதாவது என்பதை எடுத்துக் கொள்ளுங்கள்

## "TAKE THUS SAITH THE LORD"

ஒரு மனிதன் எவ்வளவு தான் புத்திசாலியாக இருந்தும், அவனால் எவ்வளவு செய்ய முடிந்தும், எவ்வளவு செழிப்பைக் கொண்டிருந்தாலும், அவன் தேவனை விட்டு விலகுவானானால், அவன் தேவனையும், அவரின் வார்த்தையையும் விட்டு தூரமாயிருந்து, அந்த தேசத்திற்கு அவன் ஒரு கடன்பட்ட (கெடுதியான) நிலையில் இருக்கிறான். இது இன்று தாங்கள் எவ்வளவு திறமைசாலிகள் என்று காட்டவும், தாங்கள் எவ்வளவு அறிவாற்றலைப் பெற்றிருக்கின்றனர் என்பதைக் காட்டவும் டெலிவிஷனில் தோன்ற விருப்பம் கொள்கின்ற யாரோ ஒருவருக்கு – நமக்கு பொருந்தாமல் இருக்குமோ என்று நான் அதிசயிக்கிறேன். ஆனால் “**கர்த்தர் சொல்லுகிறதாவது**” என்பதை எடுத்துக் கொள்

வதற்குப் போதுமானதை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்று வியப் படைகிறேன்.

ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை, மே 13, 1962

# வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு தேசமும் அதைக் கேட்டு விட்டது

## "EVERY NATION UNDER THE HEAVENS HAS HEARD IT"

**68.** இப்பொழுது, அப்படியானால் நாம் காலத்தின் முடிவில் வந்த டைந்திருக்கிறோம்... தேவன் என்னை அழைத்திருப்பாரானால் (இப்பொ ழுது கவனியுங்கள், இது திரும்பச் சொல்லக் கூடியதல்ல), தேவன் என்னை அவருடைய தீர்க்கதரிசியாக இருக்க அழைத்திருப்பாரானால், நான் நிச்சயமாக அந்த உத்தியோகத்தை வகிக்கவில்லை. தீர்க்கதரிசி கள் சுவிசேஷகப் பணியைச் செய்வதில்லை. தீர்க்கதரிசி ஒருவன் தன்னை வனாந்தரத்தில் மறைத்துக் கொண்டு தேவனுடன் தனித் திருந்து, அவன் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் அவனுக்கு உத்தரவு அருளும் வரைக்கும் அங்கிருக்கிறான்; அதன் பிறகு அவன் அங்கிருந்து புறப்பட்டு வெளிவந்து, தன் செய்தியை அளித்து விட்டு, மறுபடியுமாக வனாந்தரத்திற்குள் சென்று விடுகிறான். அவன் ஒரு சுவிசேஷகன் அல்ல, அவன் சுவிசேஷகர்களைப் போல கூட்டங்களை நடத்தி, மற்றவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில்லை. அவன் சுவிசே ஷகர்களைப் போல் போதிப்பதில்லை. அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைப் பெற்றிருக்கிறான். அதுதான், அவ்வளவுதான். அவன் அதை உரைத்து விட்டு, துண்டுகள் விழ வேண்டிய இடத்தில் விழுவதற்காக அவைகளை எறிந்து விட்டு, திரும்பிப் போய் விடுகிறான். அவன் எங்கிருக்கிறான் என்று யாருக்குமே தெரியாது, அவன் எங்கோ தனிமையில் இருக்கிறான்.

**69.** இப்பொழுது என்னால் இருக்க முடியாது... அல்லது... அவர் என்னை தீர்க்கதரிசியாக இருக்க அழைத்திருப்பாரானால், நான் சுவி சேஷகனாக இருக்கமுடியாது. நான் சுவிசேஷகனாக இருக்க அவர் என்னை அழைத்திருப்பாரானால், நான் தீர்க்கதரிசியாக இருக்க முடி

யாது. நான் கூறுவதன் அர்த்தம் உங்களுக்கு விள்குகிறதா? எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் முதலில் என்னிடம் ஜனங்களின் கைகளைப் பிடித்து அவர்களுக்காக ஜெபிக்கக் கூறின போதும், அதன்பிறகு அவர்களுடைய இருதயத்தின் இரகசியங்களை அறிந்தபோதும், மற்றெல்லா காரியங்களையும் நான் பயபக்தியோடு செய்து வந்திருக்கிறேன். சகோதரரே, அவை பிழையற்றவைகளாக இருந்து வந்துள்ளன. அது உண்மையென்று உங்களுக்குத் தெரியும். உங்கள் ஒவ்வொருவருக்கும் அது தெரியும். பாருங்கள்? அது உலகம் முழுவதும் முழக்கமிடும் என்று அவர் கூறினார். அவர்கூறினபடியே அதை செய்து நிறைவேற்றினார். வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு தேசமும் அதைக் கேட்டு விட்டது. எல்லாவிடங்களிலும் – செய்தித் தாள்கள், ஒலிநாடாக்கள் பதிவு இவைகளின் மூலமாக – உலகெங்கிலும் அவர் எப்படி இதைச் செய்தார் என்று எனக்குத் தெரிய வில்லை,ஆனால் உலகின் எல்லா பாகங்களிலுமிருந்து கடிதங்கள் வந்த வண்ணம் உள்ளன. தொலைதூரத்திலுள்ள தாய்லாந்து மக்களும், ஆப்பிரிக்க பழங்குடியினரும் – மிஷனரிமார்கள் இந்த பழங்குடியினரிடையே செய்திகளடங்கிய ஒலிநாடாக்களுடன் திரளாகச் சென்று, வார்த்தையின் அர்த்தத்தை விளக்கிக் கூறியுள்ளனர். இப்பொழுது உலகம் முழுவதிலும் (பாருங்கள்?) நாம் இதைக் குறித்து கேள்விப்படுகிறோம். இப்பொழுது அவர்கள் – சபையானது உலகம் பூராவிலும், எல்லாவிடங்களிலும் முன்குறிக்கப்பட்டவர்களைக் கொண்டுள்ளது. இரண்டு பேர் படுக்கையிலிப்பார்கள். இரண்டு பேர் வயலில் இருப்பார்கள், பாருங்கள்? ஒருவன் எடுத்துக் கொள்ளப்படுவான், மற்றவன் விடப்படுவான்.

**70.** இப்பொழுது, நான் சுவிசேஷகனுடைய வேலையைச் செய்து விட்டபடியால் (இதுவே என் வேண்டுகோள்), நான் என் வேலையை சரிவர செய்து தேவனுக்குப் பிரீதியாக இருந்திருக்குமானால் – நான் அவருக்குப் பிரீதியாய் நடந்து கொண்டேன் என்று நம்புகிறேன். என் தவறுகள் அனைத்துக்கும் நான் மன்னிப்பு கோருகிறேன். அப்படியிருக்குமானால், அவர் என்னை சுவிசேஷகப் பணியை விட்டுவிடுவேன். அவர் என்னை தீர்க்கதரிசியாயிருக்க அழைப்பாரானால், நான் சுவிசேஷகனாக இருக்க முடியாது. நான் சுவிசேஷகனாக இருந்தால், தீர்க்கதரிசியாக இருக்க முடியாது. நான் இவ்விரு உத்தியோகங்களையும் ஒன்றோமொன்று கலந்து விடுகிறேன். அதுதான் எனக்கு எப்பொழுதும்

விளங்காத புதிராக இருந்தது. மேடையில் நின்று கொண்டு... அது எப்பொழுதுமே நன்றாக இல்லை.ஆனால் வெற்றிகரமாக இருந்தது. தேவன் அதை உபயோகித்தார். அது தேவனுடைய நேரடியான சித்தம் அல்ல என்று நான் எண்ணினேன். அது அவர் அனுமதித்த சித்தம். மேடையின் மேல் நின்று கொண்டிருக்கும்போது, கிடைக்கப்பெறும் ஓரிரண்டு தரசனங்கள் என்னை பெலனற்றுப் போகச் செய்து விடும். பாருங்கள்? நீங்கள் ஒருவரிடம், அவர் எவ்விதம் தன் வாழ்க்கையை நேராக்கிக் கொள்ள வேண்டும், அவர் என்ன செய்ய வேண்டும் என்று கூறினானல், அடுத்தாற்போல் நின்று கொண்டிருப்பவரும் அதையே எதிர்பார்க்கிறார். அவரிடம் கூற முடியாது. மற்றவர்கள் நான் ஒரு துரோகி என்றும், பின்மாற்றமடைந்தவன் என்றும், பிசாசு என்றும் கருதுகின்றனர். ஏனெனில் அவர்கள் அறிய விரும்புவதை நான் கூறா ததனால், பாருங்கள், அதுவல்ல உத்தியோகம் – அந்த வகையில் ஒரு தீர்க்கதரிசி இயங்குவதில்லை.

71. ஒரு தீர்க்கதரிசி வனாந்தரத்தில் தங்கியிருந்து, அங்கிருந்து புறப்பட்டு மருத்துவமனைக்கு அல்லது வேறோரிடத்துக்குச் சென்று, “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்று தான் உரைக்க வேண்டியதை உரைத்து விட்டு திரும்பிச் சென்றிடுவான். அவன் ஒரு சுவிசேஷகன் அல்லவே அல்ல. அவன் கூட்டங்கள் நடத்தி காரியங்களை விவா திப்பதில்லை. அவன் யாரிடம் அனுப்பப்படுகிறானோ, அவருக்கு கர்த் தருடைய வார்த்தையை உடையவனாயிருக்கிறான்.

72. அவன் வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டால், அவன் வெள்ளை மாளிகையின் முன் நின்று **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை உரைக்கிறான். அது மாகாணத்தின் ஆளுநருக்கு அல்லது யாருக்காவது இருந்தால் அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை உரைக்கிறான். அவன் சுவிசேஷகளைப் போல ஒரு கூட்டம் சபை களுடன் ஈடுபட்டு, அவர்கள் வந்து வார்த்தையை ஏற்றுக் கொள்ளச் செய்ய முயன்று, இவைகளைப் பிரசங்கிப்பதில்லை. அவன் ஒரு சுவிசே ஷகன் அல்ல.

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962 மாலை

# என் விசுவாசத்தை நான் வேறு எதின் மேலும் வைக்கமாட்டேன்

## "I CAN'T PUT MY FAITH ON NOTHING ELSE"

**119.** என்னுடைய விசுவாசத்தை நான் வேறு எதின் மேலும் வைக்கமாட்டேன். அவ்விதம் நான் அதை ஒரு சபையின் மேல் வைப்பேனென்றால் எந்த சபையின் மேல் அதை நான் வைக்கக்கூடும்? கத்தோலிக்க சபை, லூத்தரன் சபை, மெத்தோடிஸ்டு சபை, பாப்டிஸ்டு சபை, பெந்தெகொஸ்தே சபை இவைகளில் எதின் பேரில் என் விசுவாசத்தை நான் வைக்கக்கூடும்? நான் அதை அறியேன். அவர்களெல்லாரும் வார்த்தையை சந்தேகித்து கோணலான வழியிலிருப்பவர்கள்.

**120.** ஆனால் என்னுடைய விசுவாசத்தை நான் அவருடைய வார்த்தையில் வைப்பேனானால், அதுவே நங்கூரம் பாய்ச்சப்பட்டதாகும். அதற்கு வியாக்கியானம் சொல்ல யாரும் அவசியமில்லை. **'கர்த்தர் உரைக்கிறதாவது'** என்ற விதமாய் அது இருக்கும். பின்பு அதை நான் விசுவாசிப்பேன். அதில் தான் அஸ்திபாரமிருக்கிறது.

ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி, அக்டோபர் 14, 1962 காலை

# ஈரல் புற்று நோய் சுகமடைதல்

## "CANCER OF THE LIVER" – HEALED

அன்றொரு இரவு, மில்டவுன் சபையைச் சார்ந்த பில் ஹாலுக்கு நேர்ந்தது என் நினைவுக்கு வருகிறது. உங்களில் அநேகருக்கு அது ஞாபகமிருக்கும். அவர்கள் என்னை அழைத்தபோது நானும், என் மனைவியும், மாமியாரும் அங்கு சென்றோம். அவர் இங்கு நகரத் தலைவர், இல்லை, நீதிபதியாயுள்ள ஜார்ஜ் காப் என்பவரின் சகோதரியை மணந்தவர். எனவே அவர் அவருக்கு மைத்துனர். அவர் மரித்துவிடுவாரென்று நினைத்து அவரை இங்கு கொண்டு வந்தனர். மில்டவுனிலுள்ள மருத்துவர், நியூ ஆல்பனியிலுள்ள மருத்துவர் அவரைப் பரிசோதித்து, அது ஈரல் புற்று நோய் என்று கண்டுபிடித்தனர். நான் திருமதி ஹாலைக் காணச் சென்றேன். அவருக்கு மஞ்சள் காமாலை

கண்டு, உடல் முழுவதும் மஞ்சள் நிறமாக இருந்தது. நான், "அவர் மரிக்கப் போகிறார் என்று நினைக்கிறேன்" என்றேன்.

அவள், "சகோ. பில், அவரைக் காப்பாற்ற வழி ஏதாகிலும் உண்டா... தேவன் உங்களிடம் பேசுவாரா?" எனறாள்.

நான், "சகோதரி ஹால், எனக்குத் தெரியவில்லை. நான் ஜெபிக் கிறேன்" என்று கூறிவிட்டு, ஜெபித்துவிட்டு வீடு திரும்பிறேன். தேவன் என்னிடம் ஒன்றுமே கூறவில்லை. அடுத்த நாள் நான் மறுபடியும் அங்கு சென்று, மறுபடியும் ஜெபித்தேன்.

அவள், "உங்களுக்கு நல்ல மருத்துவர் யாராகிலும் தெரியுமா?" என்று கேட்டாள்.

நான், "டாக்டர் சாம் அடேயர் என்னும் எங்கள் குடும்ப மருத்துவர் ஜெபர்ஸன்வில்லில் குடியிருக்கிறார். அவருடைய தந்தை எங்கள் குடும்ப மருத்துவர். அவருடைய மகன் சாம் எனக்கு நெருங்கிய நண்பர். நாங்கள் ஒன்றாக பள்ளிக்கு சென்று ஒன்றாக வளர்ந்தோம். எங்களுக்கு உடல் நிலை சரியில்லையென்றால், அவரிடம் தான் போவோம்" என்றேன்.

அவள், "அவர் வந்து பில் ஹாலைப் பார்ப்பாரா?" என்று கேட்டாள் (அது அவளுடைய கணவர்).

"அவரைக் கேட்டுப் பார்க்கிறேன்" என்றேன்.

சாம் என்னிடம், "பில்லி, அவருக்கு புற்று நோய் உள்ளதாக மருத்துவர் கூறியிருந்தால், நான் செய்யக் கூடிய உன்றேன ஒன்று, என்னைக் காட்டிலும் அதிகம் அறிந்த நிபுணரிடம் அவரை அனுப்பி, எக்ஸ்ரே படங்களை எடுப்பதே. அவரை அதிக தொல்லைக்குட்படுத்த வேண்டாம்" என்றார்.

எக்ஸ்ரே படங்களை எடுக்க நாங்கள் அவரை நியூ ஆல்பெனிக்கு அனுப்பினோம். அவரை மருத்துவப் பரிசோதனைக்காக லூயிவில்லுக்கு கொண்டு சென்றோம். அவரை நோயாளி ஊர்தியில் கொண்டு சென்று திரும்பக் கொண்டு வந்தோம்.

சாம் திருமதி ஹாலிடம் அவருடைய உடல் நிலையைப் பற்றிக் கூறவில்லை. அவர் என்னை அழைத்து, "அவர் மரிக்கப் போகிறார். நீர்

அவருடைய போதகர் நண்பர். லூயிவிலிலுள்ள மருத்துவ நிபுணர் என்னை இப்பொழுது தான் தொலைபேசியில் கூப்பிட்டு, மில்டவுன் மருத்துவர்களின் கண்டுபிடிப்பும், நியூ ஆல்பனி மருத்துவரின் கண்டு பிடிப்பும் சரியே. அது ஈரல் புற்று நோய் தான். அது அதிகப்படியாக வளர்ந்து விட்டது என்று கூறினார். பில்லி, ஈரலை நாம் அறுத்து எடுத்துவிட்டால் அவர் உயிர் வாழ முடியாது. அவர் எப்படியும் மரித்து விடுவார். அவர் பிரசங்கியானால், மரிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்" என்று கூறிவிட்டார்.

அப்பொழுது நான் அவரிடம், "அதுவல்ல பிரச்சனை. அவருக்கு ஏறக்குறைய ஐம்பத்தைந்து வயது தான் ஆகிறது. எனவே பிரசங்கிக்க அவருக்கு ஆயுசு நாட்கள் இன்னும் அதிகம் உள்ளனவே. சரி, அவர் இறக்க வேண்டும் என்றால், அத்துடன் அது முடிவு பெறுகிறது. நன்றி, டாக்டர் சாம்" என்று கூறி விடை பெற்றேன்.

நான் சென்று திருமதி ஹாலிடம், "லூயிவில்லில் அவர்கள் கண்டுபிடித்ததும், நியூ ஆல்பனியிலும் மில்டவுனிலும் அவர்கள் கண்டு பிடித்ததும் ஒன்றே தான். சகோ. ஹால் மரித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஈரலில் புற்று நோய் உள்ளது. அது முதிர்ந்து விட்டது" என்றேன்.

அவள் அழ ஆரம்பித்தாள். நான் திரும்பி அவருக்காக ஜெபம் செய்தேன். நான் அறையில் இருந்தது கூட அறியக்கூடாத அளவுக்கு அவர் அவ்வளவு மோசமான நிலையில் இருந்தார். நான் திரும்பி வந்து விட்டேன். அந்நாட்களில் அநேகர் என் வீட்டுக்கு வருவது வழக்கம். வேறு யாரும் ஊழியத்தில் இல்லை. அது அவ்வளவாக கறை பட்டிருக்கவில்லை. ஜனங்கள் எல்லாவிடங்களிலிருந்தும் வருவார்கள்.

நான் சிறிது இளைப்பாற எண்ணி மெல்ல நழுவிச் சென்று விடியற்காலை 2.30 அல்லது 3.00 மணிக்கு எழுந்து விட்டேன். சகோ. உட் அப்பொழுது அந்த சந்துக்கு குடிவரவில்லை. நான் நெடுஞ் சாலையை நோக்கின போது, யாரும் அங்கில்லை. எனவே நான் என் பழைய தொப்பியை எடுத்துக் கொண்டு, குகை அறைக்குள் சென்று என் .22 துப்பாக்கியை கையிலெடுத்து அணில் வேட்டைக்குச் செல்லலாமென்றிருந்தேன். 8.00 மணி வரைக்கும் வேட்டையாடி விட்டு

ஏதாவதொரு மரத்தின் நிழலில் படுத்து சிறிது உறங்கலாமென்று எண்ணினேன். வீட்டில் தூக்கம் வரவில்லை.

நான் தொப்பியை எடுத்துக் கொண்டு குகை அறையை நோக்கி புறப்பட்ட போது, சுவற்றில் ஒரு ஆப்பிள் பழம் தொங்கிக் கொண் டிருந்தது. அது முழுவதும் அழுகிப் போய் புழுவால் அரிக்கப்பட்டு, முடிச்சு முடிச்சாய் இருந்தது. மேலெல்லாம் சுருக்கம் விழுந்திருந்தது. "மேடா ஏன் அதை சுவற்றில் தொங்கவிட்டாள்?" என்று நினைத்தேன். நான் மறுபடியும் கவனித்தபோது, அது சுவற்றில் தொங்கிக் கொண் டிருக்கவில்லை, அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. என் தொப்பி யைக் கழற்றி மூலையில் சென்று முழ்கால்படியிட்டு, "கர்த்தாவே, உமது தாசன் என்ன அறிந்து கொள்ள வேண்டுமென்று சித்தங்கொள்கிறீர்?" என்று கேட்டேன்.

வேறொரு ஆப்பிள் பழம் கிழே இறங்கினது, வேறொரு ஆப்பிள் பழம் கீழே இறங்கினது. இப்படியாக நான்கைந்து ஆப்பிள் தொங்கின (எத்தனை என்று இப்பொழுது ஞாபகமில்லை). பிறகு ஒரு அழகான கோடுகள் உள்ள ஆப்பிள் கீழே இறங்கி வந்து அழுகிப் போன ஆப் பிள் பழங்கள் அனைத்தையும் விழுங்கினது. அவர், "எழுந்து காலூன்றி நில். நீ போய் பில் ஹாலிடம் அவர் மரிப்பதில்லை, அவர் உயி ரோடிப்பார் என்று சொல்" என்றார்.

ஓ, என்னால் முடிந்தவரை நான் வேகமாக ஓடிச்சென்று "திருமதி ஹால், எனக்கு **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பது கிடைத்து விட்டது. அவர் உயிர் வாழப் போகின்றார்" என்றேன். பில் ஹால் அதைக் கேட்டு அழத் தொடங்கினார். அவரால் பேச முடியவில்லை.

நான் திரும்பி வந்து சாமை தொலைபேசியில் கூப்பிட்டு, "சாம், நம் சகோதரன் உயிர் வாழப் போகிறார்" என்றேன்.

அவர், "அது எப்படி முடியும்?" என்றார்.

நான், "அதை கணக்கிட வேண்டியது என் பொறுப்பல்ல. தேவன் அவ்வாறு உரைத்தார், அது அதை முடிவுபடுத்துகிறது" என்றேன்.

இன்றைக்கும் அவர் உயிர் வாழ்ந்து காண்டிருக்கிறார். அது பத்து ஆண்டுகளுக்கு முன்பு. இப்பொழுது அவர் பெலமுள்ளவராகவும் ஆரோக்கியமுள்ளவராகவும் இருக்கிறார். அவருடைய மனைவி மரித்துப்

போனாள். அவர் மறுமணம் புரிந்து கொண்டார். அது எப்படி ஜார்ஜ் ரைட்டுக்கும் இன்னும் நாம் அழைக்கும் மற்றவர்களுக்கும் நடக்கும்? அது என்ன? அது நிந்தையைச் சகிப்பது? அவர்கள் நகைத்து கேலி செய்கின்றனர்.

வார்த்தையின் நிமித்தம் வரும் நிந்தை, டிசம்பர் 23, 1962

# ஏழாம் தூதன் எல்லா இரகசியங்களையும் முடித்துவைப்பார்

## "SEVENTH ANGEL WILL FINISH ALL THE MYSTERIES"

**280.** ஓ, தேவனே, அஞ்சா நெஞ்சுடைய ஒரு தீர்க்கதரிசியை, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதுடன் எங்களுக்கு அனுப்பும். அந்த தேவனுடைய உறுதிப்படுத்தப்பட்ட வார்த்தையானது அதனூடாக அசைந்து அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்பதை நிரூபிக்கட்டும். ஆகவே அவர் வரும்போது, அவர்கள் காலங்களைத் தகர்ப்பார். நிச்சயமாக அவர் செய்வார். லவோதிக்கேயா சபையை அவர் தமக்கு விரோதமாக்கிக் கொள்வார். அவர் நிச்சயமாக அதைச் செய்வார். ஒவ்வொரு சபைக்காலத்தின் தூதரும் அதையே செய்தனர். இந்த காலத்திலும், அது மாறாது. அதே விதமாகத்தான் அது இருக்க வேண்டும்.

**281.** கவனியுங்கள், இப்பொழுது அந்த லவோதிக்கேயா சபை. அந்தச் செய்தியாளன் (முடித்து வைப்பான்) லவோதிக்கேயாயின், அந்த ஏழாம் தூதன், முன்பு சத்தியத்திற்காக யுத்தங்களில் இழந்துபோன எல்லா இரகசியங்களையும் முடித்துவைப்பார்.

ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?, டிசம்பர் 30, 1962

**313.** இப்பொழுது "அவனுடைய முழக்கத்தின்போது," இப்பொழுது, அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதே. நாம் அதை தெளிவாக அறிந்திருக்கிறோம். அவன் தன்னுடைய செய்தியை முழங்குகையில், யுத்தத்தை அறிவிக்கிறான், பவுல் வைதீக சபையின் மீது செய்தவிதமாக, மற்ற எல்லாரும் செய்ததைப் போல, ஸ்தாபனத்திற்கெதிராக

லூத்தர் வெஸ்லி செய்ததைப் போல. அவன் யுத்தத்தை அறிவித்து, அவர்களிடம், "அவர்கள் பொய் சொல்கின்றனர், அது சத்தியம் அல்ல! ஆகவே அவர்கள் வஞ்சிக்கின்ற மனிதர்!" என்று கூறுவான். அவன் அதை முழங்குகையில், உங்களால் அதைத் தவறவிட முடியாது. அது ஒருபோதும் தவறாது. ஏனெனில் அவன் தேவனுடைய வார்த்தையினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவனாக இருப்பான். அவன் என்ன கூறுகிறான் என்பதை நீங்கள் தெளிவாய் அறிந்துகொள்வீர்கள். அவன் முழங்கும் போது, பாபிலோனை விட்டு வெளிவர வேண்டுமெனும் எச்சரிக்கை யையும் விடுப்பான். "அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமல் அவளை விட்டு வெளியே வாருங்கள்." தேவனே, அவனை அனுப்பும்! அதை நீங்கள் இழந்துபோக வேண்டாம்.

ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?, டிசம்பர் 30, 1962

## கருத்தோ உணர்ச்சியோ அல்ல

## "NOT AN IMPRESSION, NOT A SENSATION"

**76.** இப்பொழுது அந்த தரிசனங்கள் அவைகளின் அர்த்தங்களை விவரித்தாலும்... அந்த சொப்பனம் என்னவென்பதை நான் சரியாக தரிசனத்தில் கண்டாலொழிய, அதன் அர்த்தத்தை என்னால் உரைக்க முடியாது. உங்களில் அநேகர் நீங்கள் கண்ட சொப்பனங்களை என்னி டம் கூறும்போது, ஒரு சில பாகங்களைக் கூற மறந்து விடுவீர்கள் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த சொப்பனத்தை நான் தரிசனத்தில் காண நேரிடும் போது, நீங்கள் கூறாமல் விட்டு விட்ட பாகங்களை நான் கூறிமுடித்திருக்கிறேன். அது உண்மையென்று உங்க ளுக்குத் தெரியும். ஆது சரியென்றால், 'ஆமென்' என்று கூறுங்கள். ஆமென் (சபையார், 'ஆமென்' என்கின்றனர் – ஆசிரியர்). நீங்கள் என்னிடம் கூறாத காரியங்கள். ஆகையால் நீங்கள் பாருங்கள், அது... "நான் கண்ட சொப்பனம் என்னவென்று உங்களால் அறிவிக்க முடியாமற்போனால், அதன் அர்த்தம் உங்களுக்குத் தெரியும் என்று என்னால் எப்படி நம்பமுடியும்?" என்று நேபுகாத்நேச்சார் கேட்டான்.

77. நமது சிந்தனையில் எழும் கருத்துக்கள் அனைத்தையும், '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று நாம் சொல்லிவிடக்கூடாது. நாம் அவ்விதம் செய்யக்கூடாது. நாம் நேரடியாக தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவரிடமிருந்து விடைபெற்ற பின்னே, அது தேவனால் அளிக் கப்பட்டது என்று கூறவேண்டும். ஒரு கருத்தையோ அல்லது ஒரு உணர்ச்சியையோ நாம் எடுத்துக் கொண்டு, அது எவ்வளவு உணர்ச்சி கரமாக இருந்தாலும், அது தேவனால் உண்டானது என்று நாம் கூறி விட முடியாது.

"ஒருக்கால் அது அவ்விதம் இருக்கலாம்" என்று வேண்டுமானால் கூறலாம்.

78. ஆனால் '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று நீங்கள் கூறுவீர் களானால், அது நீங்களல்ல, மேடையின் மீது கவனியுங்கள். அது எப்பொழுதாவது தவறினதை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? **கர்த்தர் உரைக்கிறதாவது**, அது பரிபூரணமானது, அது தவறினதேயில்லை. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகவே இருக்கும் வரையில், அது ஒருக்காலும் தவறாது.

79. நான் தவறுதலாக எதையும் கூறாதபடி அவர் இதுகாறும் என்னைக் காப்பாற்றி வந்துள்ளார். நான் அவருக்காகக் காத்திருந்ததே அதற்குக் காரணம். நான் செல்வாக்கையோ, மனிதரின் வீண்புகழ்ச்சி யையோ தேடவில்லை. என்னால் இயன்றவரை, நான் தாழ்மையுள்ளவ னாய் வாழ்ந்து ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ் விதம் வாழ்ந்து வருகின்றேன். அது எனது சுயமுயற்சியினால் இயலாத ஒரு காரியம். அவரே இதுவரை அதை வாய்க்கப் பண்ணினார். நான் ஏற்கனவே உங்களிடம் கூறியுள்ளது போன்று, அவரே என்னை வழி நடத்தி வருகின்றார்.

ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?, டிசம்பர் 30, 1962

# உங்கள் பெயர் உங்கள் வாழ்க்கையின் குணத்தைக் காட்டுகிறது

## "YOUR NAME CHARACTERIZES YOUR LIFE"

**50.** அவர்கள் அதை தொடங்கி விடுகிறார்கள் என்று நாம் காண்கிறோம். நமது இளைஞர்கள் 'ரிக்கி', 'எல்விஸ்' என்னும் பெயர்கள் கொண்டுள்ளதை நீங்கள் கவனித்ததுண்டா? உங்கள் பிள்ளைக்கு அவ்வாறு பெயரிட்டிருந்தால், அதை உடனே மாற்றுங்கள். வேண்டுமானால் அவனை 'ஒன்று', 'இரண்டு' என்று அழையுங்கள். அந்த பெயர் வேண்டாம், அது மிகவும் கொடுமையானது... நீங்கள், "பெயரினால் என்ன வரப்போகிறது" எனவாம். ஆனால் பெயர் முக்கியம் வாய்ந்தது. உங்கள் பெயர் உங்கள் வாழ்க்கையின் குணத்தைக் காட்டுகிறது. "சகோ. பிரன்ஹாமே, நீங்கள் எண் ஜோதிடம் பற்றிக் கூறுகிறீர்கள்." இல்லை, நான் அதைப் பற்றிக் கூறவில்லை. நான் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதையே எடுத்துக் கூறுகிறேன். யாக்கோபு தன் பெயருக்கேற்ப எத்தன், ஏமாற்றுக்காரனாக வாழ்ந்தான். தேவன் அவனை மாற்றினபோது, அவனுடைய பெயரையும் மாற்றினார். தேவன் சவுலை பவுலாக, சீமோனை பேதுருவாக மாற்றினார். பெயருக்கும் இயல்புக்கும் நிச்சயமாக தொடர்பு உண்டு. ரிக்கி, எல்விஸ் என்பவை நவீன அமெரிக்க பெயர்கள். அவைஒரு பிள்ளையை தானாகவே அதில் ஆழ்த்தி விடுகின்றது. நான் சொல்லுவதின் அர்த்தம் புரிகிறதா?

இந்த கடைசி நாட்களில் தேவனுடைய சத்தம், ஜனவரி 20, 1963

# அவனைத் தாக்காமலிருக்க நீங்கள் போதிய அறிவு படைத்திருக்க வேண்டும்

## "BETTER SENSE THAN TRY TO ATTACK IT"

**41.** ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, கர்த்தருடைய வார்த்தையையும், **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதையும் கொண்டிருப்பானானால், அவனைத் தாக்காமலிருக்க நீங்கள் போதிய அறிவு படைத்திருக்க வேண்டும். எனெனில் ஜீவனுள்ள தேவனுடைய கரம் அங்குள்ளதென்றும், அது பலமுள்ளதென்றும் நீங்கள் அறிவீர்கள்.

இன்னும் ஒருவிசைகர்த்தாவே, ஜனவரி 20, 1963 மாலை

# இந்தக் கடைசி நாட்களில் மன்னிக்கப்படுவதில்லை

## "WOULDN'T BE FORGIVEN IN THESE LAST DAYS"

**203.** கவனியுங்கள் எலியாவின் நாட்களில், தேவன் ஒரு சாதாரண மனிதனுக்குள் மறைந்துகொள்ளச் சித்தம் கொண்டார். இப்பொழுது நீங்கள் அதைக் குறித்து சற்று சிந்தியுங்கள். அதுதான் தேவனின் தெரிந்து கொள்ளுதல். அந்த காலத்தில் ரபீகளும், ஆசாரியர்களும், மற்றும் அநேக மகத்தான மனிதர் இருந்தனர். ஆகாப் அரசனும் கூட ஒரு யூதன்தான். அவனிடம் பெரியவர்கள் அநேகர் இருந்தனர். ஆனால் தேவன் – ஒரு கல்விமானுக்குள் அல்ல – ஒரு சாதாரண மனிதனுக்குள் மறைந்திருந்தார். உலகில் பிரக்கியாதி பெற்றவனல்ல. அவன் ராணுவத்தில் ஒரு பெரியவனும் அல்ல. அவனுடைய தாயும் தந்தையும் யாரென்று கூட நமக்குத் தெரியாது. அவனுடைய வம்ச வரலாறும் நமக்குத் தெரியாது. அவனைத் தீர்க்கதரிசியாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவன் தேவனால் எங்கேயோ வளர்க்கப்பட்ட ஒரு சாதாரண குடியானவன் ஆவான். அவன் வனாந்தரத்தில் தேவனுக்கென்று சஞ்சரித்தான். ஒரு நாள் எங்கிருந்தோ அவன் தோன்றி, அக்காலத்திலுள்ள கூழிபாடு முறைமையை எதிர்த்தான் என்பதை மாத்திரமே நாம் அறிவோம். என்னே!

**204.** அவனைக் குறித்து ஜனங்கள் என்ன நினைத்தார்கள் தெரியுமா? “அவன் எந்த வேத பள்ளியிலிருந்து வந்தான்? அவன் பரிசேயரிடமிருந்தானா அல்லது சதுசேயரிடமிருந்தானா? அல்லது எந்த ஸ்தாபனத்தை சேர்ந்தவன்?” என்றெல்லாம் அவர்கள் கேட்டிருக்கக் கூடும். பாருங்கள்? அவன் இவர்கள் யாரையும் சார்ந்தவனல்ல. ஆனால் அவன் தவறான எல்லாவற்றையும் கடிந்து கொண்டான். பாருங்கள்? அவன் அங்ஙனம் கடிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் சித்தம் கொண்டார்.

**205.** ஆனால், கல்வியறிவு இல்லாத ஒரு எளிய மனிதன். அவன் ஒரு தடவையாவது பள்ளிக் கூடத்திற்கு சென்றானா என்பதைக் குறித்த குறிப்பு இல்லவேயில்லை என்பதை நாம் பார்க்கலாம். அவனைக் குறித்த எந்த ஒரு காரியமும் நம்மிடம் கிடையாது. ஒரு சாதாரண எளிய மனிதன். அந்த எளிய மனிதனுக்குள் மறைந்திருக்க

தேவன் விருப்பம் கொண்டார். தேவன் அக்காலத்தில் இந்த எளிய மனிதனுக்குள், ஒரு மனித சரீரத்திற்குள் மறைந்து கொண்டிருந்தார். மறைந்திருக்க விருப்பம் கொண்டார். இதை உங்களால் கிரகித்துக் கொள்ள முடிகிறதா? (சபையோர், 'ஆமென்' என்கின்றனர் – ஆசிரியர்).

**206.** தேவன் "படிப்பறியாத ஒரு பைத்தியக்காரனுக்குள்" மறைந் திருக்கிறார். (உலகத்தின் கண்களுக்கு அவன் பைத்தியக்காரனாகத் தோன்றுகிறான். எலியா ஒரு மந்திரவாதி என்று அவன் பேரில் குற்றஞ் சாட்டினார்கள். எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் இவ்வித குற்றச்சாட்டு கிடைக்கும். பாருங்கள்?

**207.** ஆகவே, நீங்கள் பாருங்கள், இயேசுவும் அவர்களைப் போன்ற ஒருவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார், "பெயல்செபூல்; பைத்தியக்காரன்" என்றனர். "ஏன்? நீ பைத்தியம் பிடித்தவன். நீ பிசாசு பிடித்தவன் என்று நாங்கள் அறிவோம். நீர் மதிமயங்கியிருக்கிறீர்" என்றனர். பாருங்கள்?

**208.** அவர்களை இயேசு மன்னித்தார். ஆனால் இந்த கடைசி காலத்தில் அவ்விதம் கூறுவது தேவ தூஷணமாகக் கருதப்படும் என்பதாய் இயேசு கூறினார். அது இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் மன்னிக்கப்படுவதில்லை. அது நித்திய பிரிவினைக்கு ஒருவனை ஆளாக்கும். "இம்மையிலும், மறுமையிலும் ஒருபோதும் அது மன்னிக் கப்படுவதில்லை."

**209.** எலியா ஒரு பைத்தியக்காரனாக எண்ணப்பட்டான். இந்த நவநாகரீக நாட்களைப் போல் அக்காலத்தில் ஸதிரீகள் தங்கள் மயிரைக் கத்தரித்துக் கொண்டிருந்தனர். நாட்டின் முதல் பெண்மணி யான யேசபேலைப் போன்று வர்ணம் தீட்டிக் கொண்டிருந்தனர். எல்லாப் பிரசங்கிகளும் உலகப்பற்றுள்ளவர்களாகி விட்டிருந்தனர். அப்பொழுது என்ன நேர்ந்தது? அப்பொழுது எலியா அங்கு தோன்றி யேசபேல் முதல் எல்லாரையும் கடிந்துகொள்ள ஆரம்பித்தான்.

**210.** 'நீ சொல்வதை நாங்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு போதகன்மார் உண்டு' என்று ஜனங்கள் கூறியிருக்கலாம்.

**211.** அது உண்மைதான். அவர்கள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் என்னவாயிருந்தாலும் சரி அவன் அவர்களுடைய போதகனாயிருந்தான். அவன் யேசபேலுக்கும் போதகன். அது அவ

ளுக்கு விருப்பமில்லை. யேசபேலுக்கு வேறுவிதமான போதகர் இருந் திருக்கக்கூடும். ஆனால் அவன் தேவனால் அனுப்பப்பட்டவன். பாருங் கள்? அவன், அவளுக்கென்று அனுப்பப்பட்ட தேவனுடைய போதகனா யிருந்தான். அவள் அவனை வெறுத்தாலும், அவன் அவள் போதகன் தான். கவனியுங்கள்.

**212.** ஆகவே எலியா தன்னைத் தாழ்த்தி தேவன் கூறினவற்றில் நிலைநின்ற காரணத்தால் தேவன் அவன்மேல் பிரியம் கொண்டு எலியாவுக்குள்ளிருந்த அந்த ஆவியை மூன்று முறை திரும்பவும் அளப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். பாருங்கள்? ஆமென்! அவர் அதை நிறைவேற்றினார். ஆமென். நிச்சயமாகவே, அவர் செய்தார். நிச்சயமாக. அது வருமென்று அவர் வாக்குத்தத்தம் செய்தார். அது அவனுக்குப் பின்வந்த எலிசாவின் மேலும், அதன்பின்பு யோவான் ஸ்நானன் மேலும் வந்தது. மலிகியா 4–ம் அதிகாரத்தின்படி, இந்த கடைசி நாட்களில் எலியாவின் ஆவி மறுபடியும் காணப்படும். பாருங்கள்?

**213.** காட்டில் வசித்த அந்த எளிய, படிப்பறியாத மனிதனின் மேலுள்ள அந்த ஆவியில் தேவன் பிரியம் கொண்டார், அது அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தது. 'எலியாவே. இதைச் செய்' என்று அவர் கூறினால், எலியா உடனே செய்வான். ஆகவே தேவனே அவனுக்குள் எளிமையில் மறைந்திருந்தார்.

**214.** ஆனால் ஜனங்கள், 'அவன் பைத்தியக்கார கிழவன். அவ னிடம் தொடர்பு எதுவும் வைத்துக் கொள்ள வேண்டாம்' என்றார்கள்.

**215.** ஆனால், ஒரு நாள், அவன் வயது சென்றவனாகி, வழுக்கை விழுந்து, மீசை தொங்கி, நரைத்து, தலையிலுள்ள சிறிது மயிரும் தோள்வரை தொங்கி, கைகள் மெலிந்து, தசைகள் தளர்ந்து, கண்கள் ஆகாயத்தை நோக்கினவாறு, கையில் ஒரு கோணலான கம்பையும் பிடித்து, சமாரியாவுக்குச் செல்லும் ரஸ்தாவில் அவன் நடந்து வரும் போது அவனது தோற்றம் வசீகரமாயிருந்திருக்காது. ஆனால் அவன் **'கர்த்தர் உரைக்கிறதாவது'** என்று கூறத்தக்க அந்த நாளுக்குரிய தேவனுடைய வார்த்தையைக் கொண்டிருந்தான். அவன் சொல்ல வேண்டியதை திக்கி திக்கிச் சொல்லவில்லை, அவன் ஆகாபை

நோக்கி, "இப்பொழுது, மகத்தான ஆகாபே," என்று அவன் கூற வில்லை. அவன் ஆகாபின் முன் நடந்து சென்று, "நான் கட்டளை யிட்டாலன்றி, வானத்திலிருந்து பனியும்கூட விழாது" என்று தைரிய மாகச் சொன்னான். அல்லேலூயா, பாருங்கள்? தேவன் அவனுடைய எளிமையைக் கௌரவித்து நறைவேற்றினார்.

**216.** இப்பொழுது, நீங்கள் பாருங்கள். அது எளிமையான வழியில் இருந்தபோது, மற்றவர் அனைவரும் அவனுக்கு விரோதமாக எழும்பி னர். அவனை ஒழிக்க எண்ணினர். எல்லா ஊழியர் சங்கங்களும் (ministerial associations) அவனை அழித்து ஒழித்துவிட அவனுக்கு விரோதமாக எழும்பினது உண்மையாகும். அவன் எளிமையில் இருந்தபோதிலும், அவர்கள் அவனுடைய கூட்டங்களுக்கும், அவனு டைய மற்ற யாவற்றிற்கும் ஒத்துழைக்கவில்லை; தேவன் அவனுக்குள் மறைந்திருந்தாலும், அவனைப் பைத்தியக்காரனென்று அவர்கள் எண்ணினர்.

**217.** ஆனால் அவனுக்குள் விதைக்கப்பட்ட வித்து முதிர்வு பெற சமயமானபோது, கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி தம்மை வெளிப்படுத்தி அந்தப் பலியை அங்கீகரித்தார். தேவன் எளிமை யில் மறைந்து அதன்பின் தம்மை மறுபடியும் வெளிப்படுத்தினார். பாருங் கள்? நிச்சயமாக. ஆம் அப்படி செய்வது தேவனுக்குப் பிரியமா யிருந்தது. எபபொழுதும் அதே விதத்தில் அவர் கிரியை செய்கிறார். ஆம், ஐயா, இப்பொழுது இவைகளை அவர் வாக்குத்தத்தம் செய்திருக் கிறார் என்று நாம் காண்கிறோம்.

தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை
வெளிப்படுத்துதல், மார்ச் 17, 1963 காலை

# தேவனுடைய முழு வெளிப்பாட்டையும் வெளிப்படுத்துதல்

## "REVEALS THE ENTIRE REVELATION OF GOD"

**37.** இப்பொழுது பாருங்கள்**?** ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகத்தில் அடங்கியுள்ள இரகசியம் ஏழாம் சபையின் தூத னின் செய்தி முழங்கும் போது வெளிப்படும். பாருங்கள்**?** "ஏழாம் தூதன் எக்காளம் உதத் தொடங்குகிறான்." அங்கு எழுதப்பட்டுள்ள அந்த செய்திகள் தான் இப்பொழுது ஒலி நாடாக்களிலும் புஸ்தக வடிவிலும் உள்ளன. இப்பொழுது அந்த செய்தி முழங்கும் தொடக் கத்தில், தேவ ரகசியம் நிறைவேற வேண்டும். பாருங்கள், அந்த நேரத்தில் ஏழாம் தூதனின் செய்தி முழங்குவதற்கு முன்பு, புஸ்தகத்தில் அடங்கியுள்ள தேவரகசியம் வெளிப்படுவதில்லை என்பதைக் கவனி யுங்கள்.

**38.** இப்பொழுது, இந்த குறிப்புகள் யாவும் நாம் முத்திரைகளைப் பற்றி தியானிக்கும் போது முக்கியமானதாய் இருக்கும் என்று நான் நிச்சயமாயிருக்கிறேன். ஏனெனில், இவையெல்லாம் ஒன்றோடொன்று பிணைந்தாக வேண்டும்.

**39.** இப்பொழுது எழுதப்பட்ட அந்த இரகசியத்தை எந்த மனிதனும் எங்கேயும் அறியமாட்டான். தேவன் மாத்திரமே, இயேசு கிறிஸ்துவே அதை அறிவார். பாருங்கள்**?** அது இரகசியமடங்கிய ஒரு புஸ்தகம். அது மீட்பின் புஸ்தகம். அதைப் பற்றி இன்னும் சற்று நேரத்தில் சிந்திப்போம். இதுவரை அந்த மீட்பின் பஸ்தகத்தை யாரும் முற்றிலுமாக புரிந்து கொள்ள இயலவில்லை. முதல் ஆறு சபையின் காலங்களில் அது ஆராயப்பட்டது. ஆனால், கடைசியில் ஏழாம் தூதன் அவன் இரகசியத்தை முழங்கும்போது, இதுவரை அக்காலத்தவர் ஆராய்ந் திருந்து விடுபட்டிருந்த தளர்ந்த முனைகள் யாவற்றையும் அவன் முடிவுறச் செய்வான். அந்த இரகசியங்களின் அர்த்தம் நேரடியாக தேவ னிடத்திலிருந்து அவருடைய வார்த்தையாக புறப்பட்டு வந்து, தேவ னுடைய முழு வெளிப்பாட்டையும் வெளிப்படுத்தும். அப்பொழுது தேவத் துவம், மற்றவை யாவும் தெளிவாக்கப்படும். சர்ப்பத்தின் வித்து, இன்னுமுள்ள மற்ற இரகசியங்கள் யாவும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

**40.** இப்பொழுது நீங்கள் கவனியுங்கள். நான் கதை கட்டிக் கூறுவதாக எண்ண வேண்டாம். அவையெல்லாம் "**கர்த்தர் உரைக்கிறதாவது.**" நான் அதை உங்களுக்கு வேதத்திலிருந்து படித்துக் காட்டு கின்றேன். "ஏழாம் தூதனின் செய்தி முழங்கும்போது,

தேவன் தம்மு டைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் மூலமாய் உரைத்த தேவ ரகசியம் நிறைவேறும்.” இந்த தீர்க்கதரிசிகள் தாம் தேவனுடைய வார்த்தையை எழுதினர். ஏழாம் சபையின் காலமாகிய கடைசி சபையின் காலத்தில், அதற்கு முன்பிருந்த சபையின் காலங்களில் ஆராயப்பட்டு, விவரிக்கப் படாமல் விடப்பட்ட தளர்ந்த முனைகள் அனைத்தும் வெளிப்படுத் தப்படும்.

**41.** ஆகவே அந்த முத்திரைகள் உடைக்கப்பட்டு, தேவன ரகசியம் வெளிப்படுகையில், அந்த தூதன், அந்த செய்தியாளன், கிறிஸ்து கீழே இறங்கி வந்து தம்முடைய பாதத்தை பூமியின் மேலும் சமுத் திரத்தின் மேலும் வைக்கின்றார். அவருடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகையின் நேரத்தில் இந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறான் என்பது நினைவிருக்கட்டும்.

**42.** யோவான் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, அதே சமயத்தில் மேசியா வந்ததற்கு இது ஒத்திருக்கிறது. இயேசுவை அறிமுகப்படுத்துவதற்காக தான் குறிக்கப்பட்டவன் என்பதை யோவான் அறிந்திருந்தபடியால், தான் அவரைக் காண்பான் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

**43.** மலகியா 4–ம் அதிகாரத்தில் எழுதப்பட்ட வாக்கியங்களின் மூலம் யோவானைப் போன்ற ஒரு எலியா கடைசிக் காலத்தில் இருக்க வேண்டுமென்றும், தேவனுடைய வார்த்தை அவனிடத்தில் வருமென் றும், அவன் பரிசுத்த ஆவியின் மூலம் தேவரகசியம் அனைத்தையும் வெளிப்படுத்தி, பிள்ளைகளின் விசுவாசத்தை அப்போஸ்தல பிதாக் களின் விசுவாசத்திற்கு கொண்டு வருவான் என்றும் நாமறிவாம். ஸ்தாபனங்களின் காலத்தில் ஆராயப்பட்ட தேவ ரகசியம் யாவையும் அவன் வெளிப்படுத்துவான். இப்பொழுது அங்ஙனம் தான் வேதம் கூறுகிறது. வேதம் என்ன கூறுகிறதோ அதற்கு மாத்திரமே நான் பொறுப்பு. பாருங்கள்? எழுதப்பட்டுள்ள இது சரியானதாகும். அது அதுவேதான்.

**44.** இப்பொழுது ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகம், இப்பொழுது, அந்த மீட்பின் இரகசியமாயுள்ளது என்று நாம் காண்கிறோம். அது தேவனிடத்திலிருந்து வந்த மீட்பின் புஸ்தகம்.

**45.** இப்பொழுது, இந்த செய்தியாளன் செய்தியை முழங்கும் சமயம், தேவ ரகசியம் யாவும் இந்நேரத்தில் நிறைவேறும். இப்பொழுது ஏழாம் சபையின் தூதன் இங்கே பூமியில் இருக்கிறான். "வேறொரு" தூதன், பலமுள்ள செய்தியாளன் – வானத்திலிருந்து இறங்கி வருகிறான். பாருங்கள்? இந்த தூதன் பூமிக்குரிய தூதன், செய்தியாளன் ஆவான். ஆனால் இங்கே ஒருவன் வானத்திலிருந்து வருகிறான், பாருங்கள், அவன் சிரசின் மேல் வானவில் இருந்தது – உடன் படிக்கைக்கு அடையாளம். பாருங்கள், அது கிறிஸ்துவாகத்தான் இருக்க முடியும்.

**46.** வெளிப்படுத்தின விசேஷம் முதலாம் அதிகாரத்தில் அவர் "ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியில் உலாவி, சுற்றிலும் வானவில் அமைந்திருந்து, பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும் பதும ராகத்துக்கும் அவர் ஒப்பாயிருந்த" காட்சியைப் போன்றே இந்தக் காட்சியிலும் அவர் சிரசின் மேல் வானவில்லைக் கொண்டவராய் வருகிறார்.

**47.** தேவன ரகசியம் யாவும் நிறைவேறி, முத்திரைகள் உடைக்கப்பட்டு, 'இனி காலம் செல்லாது' என்று சொல்லப்பட வேண்டிய சமயத்தில் அவர் 10–ம் அதிகாரத்தில் கூறப்பட்ட வண்ணம் மறுபடியும் இறங்கி வருகிறார். அவர் இறங்கி வந்து, "ஏழாம் தூதன் எக்காளம் ஊதப் போகிற போது 'தேவரகசியம் நிறைவேறும்' என்கிறார். ஆகையால் அந்த தூதன் பிரத்தியட்சமாவதற்கு சமயம் வந்துவிட்டது." நாம் மிக அருகாமையில் இருக்கிறோம். நான் கூறுவது சரி. இப்பொழுது கவனியுங்கள்.

ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள
பிளவு, மார்ச் 17, 1963 மாலை

# அதே வார்த்தையே மீண்டும் வல்லமையுடன் எழும்பும்

## "THAT SAME WORD WILL RISE IN POWER"

**327.** தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இருக்கும் போலியாட்கள், அவர்கள் உடன்படமாட்டார்கள், ஆகவே இந்தக் காரியமானது... சாத்தான் தன் ஆதிக்கத்தின் கீழிருந்த அரசாங்க அதிகாரத்தையும் ஆவிக்குரிய அதிகாரத்தையும் ஒன்றாக இணைத்து உலகெங்கும் பரவியுள்ள ஒரு சபையை உண்டாக்கி, வெள்ளைக் குதிரையிலிருந்து இறங்கி சிவப்பு நிறமுள்ள குதிரையின் மேலேறிப் புறப்பட்டுச் சென்று, கோடிக்கணக்கானவர்களை பட்டயத்தால் கொன்று போட்டான்.

**328.** "ஆனால் தேவன் அவன் எந்த வார்த்தைக்கு விரோதமாக போதித்தானோ, அதே வார்த்தை இயேசு கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து வல்லமை பொருந்தியதாய் புறப்பட்டு, அவனையும் அவனைச் சார்ந்தவர் அனைவரையும் கொன்று போடும்" என்று கூறினார். ஆமென்!

**329.** அதுதான் இரண்டாம் முத்திரையின் இரகசியம். நீங்கள் அவரில் அன்பு கூருகிறீர்களா? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசி) ஓ, என்னே! இது **கர்த்தர் உரைக்கிறதாவது** (சபையார் மிகவும் களிகூர்ந்து மகிழ்கின்றனர்) தேவனுக்கு ஸ்தோத்திரம். அநேக தரிசனங் களைக் கண்டு, வெளிப்பாடுகளைப் பெற்று, அவ்விதம் சம்பவிக்கும் என்று நான் கூறின ஒவ்வொன்றும் அதே போன்று நிகழ்ந்தது. இதையறிந்தவர் எத்தனை பேர்? உங்கள் கைகளை உயர்த்துங்கள். நூற்றுக்கணக்கானவர் கைகளை உயர்த்தியுள்ளனர். இங்குள்ள அனைவருமே கைகளை உயர்த்தியிருக்கின்றனர். அது உண்மை. இது அப்படியே இருக்கும். அது அப்படியே என்று ஞாபகம் கொள்ளுங்கள். ஓ! நண்பர்களே!

இரண்டாம் முத்திரை, மார்ச் 19, 1963 மாலை

# இது இயேசு கிறிஸ்துவினுடைய வெளிப்பாடு

## "THIS IS THE REVELATION OF JESUS CHRIST"

**42.** அவ்வாறே சபையின் காலங்களைக் குறித்த வெளிப்பாடும், முத்திரையின் இரகசியங்களின் வெளிப்பாடும், மற்ற யாவும் வேதத்து டன் பொருந்த வேண்டும். ஏழு இடி முழக்கங்களின் இரகசியங்களை வைத்திருப்பதாக ஒருவன் கூறி, அவன் கூறுபவை தேவனுடைய வார்த் தையுடன் இணங்காமற் போனால், எங்கோ தவறுள்ளது. பாருங்கள்? '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று அது வரவேண்டும். இது இயேசு கிறிஸ்துவினுடையவெளிப்பாட்டை பூரணமாகக் கொண்ட புஸ்தகமாகும். ஏனெனில் இதுதான் அந்த புஸ்தகம்.

நான்காம் முத்திரை, மார்ச் 21, 1963 மாலை

## கத்தோலிக்கர்களும் பிராடெஸ்டண்டுகளும் ஒன்று சேர்ந்துவிட்டனர்

## "CATHOLIC AND PROTESTANTS ARE JOINED"

**352.** யேசபேல் தற்காலத்து நவீன சபைக்கு முன்னடையாளமா யிருக்கிறாள். இப்பொழுது கத்தோலிக்கர்களும், பிராடெஸ்டெண்டு களும் ஒன்று சேர்ந்துவிட்டனர். அதை யாரும் தடுக்க முடியாது. இரண்டும் ஸ்தாபனங்கள். ஒன்று தாய், மற்றொன்று குமாரத்தி, அவ்வளவுதான். அவைகள் ஒருவரோடொருவர் சந்தடி செய்து தர்க்கம் பண்ணினாலும் அவர்களிருவரும் வேசிகளே. இப்பொழுதும் நானாக அதைக் கூறவில்லை. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று வேதத்திலுள்ளதைத் தான் நான் உங்களுக்கு எடுத்துரைக்கிறேன்.

நான்காம் முத்திரை, மார்ச் 21, 1963 மாலை

## சத்தியமும் தவறும் ஒன்றோடொன்று கலவாது

## "TRUTH AND ERROR CANNOT MIX"

**328.** சத்தியமும் தவறும்! ஓ, என்னே! அது எவ்வளவு நல்லதாகத் தோன்றிடினும்... சத்தியமும் தவறும் ஒன்றோடொன்று கலவாது. அது '**கர்த்தர் இவ்விதமாய் உரைக்கிறார்**' என்று சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையாயிருக்க வேண்டும். இல்லையேல் அது தவறான ஒன்றாக இருக்க வேண்டும். அது 'பரிசுத்த பிதா' கூறினாலும் அல்லது பரி. பேர்னபீஸ் அல்லது கான்டர் பரியின் பிரதம அத்தியட்சகர் கூறினாலும் எனக்குக் கவலையில்லை. தேவனுடைய வார்த்தைக்கு மாறாக அது அமைந்திருந்தால் அது வார்த்தையைத் தாறுமாறாக்கும். அது ஒருபோதும் கலவாது. "இவர் இத்தனை மகத்துவமான செயல் களைப் புரிந்துள்ளாரே!" என்று நீங்கள் கூறலாம், அவர் எதைச் செய்தாலும் எனக்குக் கவலையில்லை. அவர் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும் அக்கரையில்லை. நம்மிடமிருப்பது நாம் தேவனிடமிருந்து நேரடியாகப் பெற்றுள்ள இந்த சத்தியமாகும். இந்த சத்தியத்திற்கு புறம்பேயிருந்தால், எந்த சபை, ஸ்தாபனத்திடமும் சத்தியம் என்பதை இல்லை என்று அர்த்தமாம்.

**329.** சத்தியத்தைக் கடைபிடிக்கும் ஏதாவது ஒரு சபையை எனக்குக் காண்பியுங்கள். வேதாகமத்தில் ஒரு பாகத்தைத் திருப்பி, ஒன்றைக் கூற விரும்புகிறேன். பாருங்கள்? ஏதாவது ஒரு சபையைக் கூறுங்கள். நீங்கள், "பெந்தெகொஸ்தேயினரைக் குறித்து என்ன?" என்று நினைக்கிறீர்கள். ஓ, என்னே! உங்கள் நினைவுகளை இப்பொழுது நான் பகுத்தறிந்தேன். அந்தக் காரணத்தினால் தான் நான் அதை உங்களிடம் கூறினேன். அது உங்கள் மனதைப் புண்படுத்தியுள்ளது. அப்படியானால் நான் கூற வந்ததைச் சொல்லாமல் விட்டு விடுகிறேன். ஏனெனில் உங்களைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. நீங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறீர்கள் என்பதை நானறிவேன் என்று காண்பிக்கவே இதைக் கூறினேன். பாருகள்?

**330.** கலப்படமானது மரணத்திற்கு திருப்பப்படுகிறது. மூலக்காரியத்துடன் எதைக் கூட்டினாலும் அது மரண நிறம் கொள்கிறது.

**331.** கிறிஸ்து கடுகு விதையைக் குறித்து சொன்னது நினைவிருக்கட்டும். அது எல்லா விதைகளைப் பார்க்கிலும் சிறியதாயிருந்தாலும் அது வேறொன்றுடன் கலவாது. அது அப்பட்டமான ஒன்று. உங்க

ளுக்குக் கடுகு விதையளவு விசுவாசம் இருந்தால், அதில் நிலை கொள்ளுங்கள்.

நான்காம் முத்திரை, மார்ச் 21, 1963 மாலை

# நீங்கள் அதைப் புரிந்து கொள்வீர்கள்

## "YOU WILL UNDERSTAND IT"

**137.** ஏதேன் தோட்டம் காலம் முதற்கொண்டு அவர் தமது திட்டங்களை ஒரு போதும் மாற்றி அமைத்தது கிடையாது. மீட்புக்கென்று அவர் ஒரு திட்டத்தை வகுத்தார். அதுதான் இரத்தம் சிந்துதலாகும். நாம் ஒருங்கே சேர்ந்து ஒருவரில் ஒருவர் அன்பு கூருவதற்கென கல்வியறிவைப் பயன்படுத்தினோம்; அடக்கு முறையைக் கையாண்டோம்; மனோதத்துவ முறைகளை உபயோகித்துப் பார்த்தோம். ஸ்தாபன முறைகளையும் கூட நாம் பிரயோகித்தோம். ஆனால் இயேசுவின் இரத்தத்தின் கீழன்றி வேறு எவ்விடத்திலும் நாம் ஐக்கியங்கொள்ளுதல் இயலாது. தேவன் மனிதனைச் சந்திக்கும் ஒரே ஸ்தலம் அதுவாகும்.

**138.** தேவன் எப்பொழுதுமே தனிப்பட்ட நபருடன் ஈடுபடுகிறார். இருவர் இருந்தால் அவர்களுக்கு இருவித எண்ணங்கள் உண்டாயிருக்கும். ஒரே சமயத்தில் இரண்டு பெரிய தீர்க்கதரிசிகள் ஒரே காரியத்தில் தீர்க்கதரிசனத்தை உரைத்துக் கொண்டு உலகில் இருந்ததேயில்லை என்பதை வேதத்தை ஆராய்ந்து கண்டுகொள்ளுங்கள். இல்லை. ஐயா. அவர் எப்பொழுதும் தனனை முற்றிலும் ஒப்புவித்த ஓரவனை மாத்திரமே காலங்கள் தோறும் உாயோகித்துக் கொண்டு வந்திருக்கிறார். அவருடைய வார்த்தைக்கு முற்றிலுமாக செவிகொடுக்கும் ஒருவனை அவர் தேடிக் கண்டு பிடிக்கிறார்.

**139.** ஆனால், அவருடைய வார்த்தைக்கு வார்த்தை செவி கொடுக்கும் யாரோ ஒருவன் இருப்பான். மற்றவர்கள் என்ன சொன்னாலும் எனக்குக் கவலையில்லை. அவர்கள் ஒருபோதும் அதனின்று அசைய மாட்டார்கள். அது உண்மை. **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதற்காக அவர்கள் காத்திருப்பார்கள். அதுவரையிலும் அவர்கள்

அசைவதில்லை. அவனுடைய ஊழியம் அற்புத அடையாளங்களினாலும் நிரூபிக்கப்படும்.

**140.** இப்பொழுது, உலகத்தார் அவனை வெறுப்பார்கள். ஆனால் தெரிந்துகொள்ளப்பட்ட வித்து. முன்குறிக்கப்பட்ட வித்து, இயேசுவின் காலத்தில் அவரை அறிந்து கொண்டது போன்று, அவனை அறிந்து கொள்ளும். வெளிச்சம் அதன் மேல் பட்டவுடன் அதைப்போன்று உயிர்பெறும். (சகோதரன் பிரன்ஹாம் தன் விரல்களை ஒருமுறை சொடுக்குகிறார் – ஆசி) அவர்கள் அவனை எளிதில் அறிந்துகொள் வார்கள், புரிந்து கொள்வார்கள். நீங்கள் அதைக் குறித்து ஒரு வார்த்தையும் மறுத்துப் பேச அவசியமிருக்காது.

நான்காம் முத்திரை, மார்ச் 21, 1963 மாலை

# உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

## "REMEMBER IT ALL THE DAYS OF YOUR LIFE"

**177.** இப்பொழுது, இதை நீங்கள் மறந்து போக வேண்டாம். இதை மறந்து போக வேண்டாம் (சகோதரன் பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை நான்கு முறைகள் தட்டுகிறார் – ஆசி) பாருங்கள், உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாருங்கள்? இந்த நான்கு ஜீவன்களைக் குறித்த வெளிப்பாடு உண்மையே. இது **கர்த்தர் உரைக்கிறதாவது**.

ஐந்தாம் முத்திரை, மார்ச் 22, 1963

# நம்மில் எவரும் கொண்டிருந்த கருத்துக்கு முரண்பாடானது

## CONTRARY TO WHAT ANY OF US THOUGHT

**403.** நான் கூறுபவை '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று அமைந்திருக்க வேண்டும். நான் அதினின்று அறிந்துள்ளபடி, அது அவ்விதம் கூறுவது மட்டுமல்ல, அந்த வார்த்தை '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்பதாக உள்ளது. எனவே வார்த்தையாகிய தேவன் எனக்களிக்கும் வெளிப்பாட்டை வேத வாக்கியங்களுடன் இணைத்துக் காண்பிப்பதன் மூலம், இவை '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள்.

**404.** இவ்விதமாக வார்த்தை இங்கே கூறுகின்றது. தேவன் இப்பொழுது எனக்களித்த வெளிப்பாடு நாம் முன்பு கொண்டிருந்த கருத்துக்கு முரண்பாடாக, ஏன், நான் முன்பு கொண்டிருந்த குருத் துக்கு முற்றிலும் வேறுபட்டதாயுள்ளது. அதன் உண்மையான அர்த்தம் இதுவே என்று நான் சற்றேனும் நினைக்கவேயில்லை, ஆனால் அது வேதவாக்கியங்களுடன் சரிவர பொருந்துகிறது என்று நாம் காண்கி றோம். அது என்ன? அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாய் உள்ளது. பாருங்கள்? அது சரியாய் அவ்விதமாய் உள்ளது. இதுவரை வெளிப்படாமல் இந்த மணி நேரத்திற்கென்று வைக்கப்பட்டிருந்த இரக சியத்தை கர்த்தரே – தேவனே நம் சிந்தனைகளில் நுழையச் செய்கி றார். ஆகவே, இது இங்கே இருப்பதை நீங்கள் காணலாம். ஆம், அது – அது கர்த்தர் தாம் அதைச் செய்தார். ஓ! என் முழு இருதயத் தோடும் அவரை நான் நேசிக்கிறேன்.

ஆறாம் முத்திரை, மார்ச் 23, 1963 மாலை

## எதையும் வியாக்கியானிக்க முயற்சிக்க வேண்டாம்

## "DON'T TRY TO INTERPRET ANYTHING"

**9.** அப்பொழுது கூட உங்கள் மத்தியிலேயே நடந்துக் கொண்டிருக் கும் காரியங்களை உங்களால் காணமுடிவதில்லை என்பதை நான் அறிவேன். நீங்கள் அதை அறிந்துக் கொள்ளவில்லை என்பதை நான் நிச்சயம் அறிவேன். பாருங்கள்? "சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் அவ்விதம் கூறுவது ஒரு கடினமான காரியம்" என்று நீங்கள் கூறலாம். அது அவ்விதம் தான் என்பதை நான் அறிவேன்.

**10.** ஆனால் பாருங்கள். இப்பொழுது நான் இதை மாத்திரம் உங்களுக்குக் கூறட்டும். இந்த ஒலி நாடாக்கள் நமக்கு மாத்திரம் என்று நினைக்கிறேன். ஆனால் நான் அதைக் கூறட்டும். பாருங்கள் நீங்கள் அதை... நீங்கள் இதை புரிந்து கொள்ள முடியாது என்று நான் கூறுகிறேன். ஆகவே எதற்கும் உங்கள் சொந்த வியாக்கியானத்தைக் கொடுக்க வேண்டாம். பாருங்கள்? அவ்விதமாகச் செய்யும்போது நீங்கள் சத்தியத்தை விட்டு தூரமாகப் போய் விடுவீர்கள். உங்கள் கண்களில் தேவன் எனக்கு தயவு கிடைக்கும்படி செய்திருந்தால், இப்பொழுது நீங்கள் என்னை விசுவாசிப்பீர்களென்றால் என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**11.** நீங்கள் அந்த வெளிப்படுத்தல்களையும், மற்ற காரியங்களையும் நான் நீண்ட காலமாக இங்கே உங்களோடு இருந்து வருகிறேன். இந்த வெளிப்படுத்தல்கள் எப்பொழுதுமே உண்மையானவைகளாக இருந் திருக்கிறது என்பதை அறிவீர்கள். இப்பொழுது இந்த வெளிப்படுத்தல் கள் வார்த்தையோடு பொருந்துவதால் இரட்டிப்பாக நிரூபிக்கப்படுகிறது. பாருங்கள்? ஆகவே இது '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்பதாக அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது சரி. பாருங்கள்? அது உங்களுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

**12.** இப்பொழுது என்னை உங்கள் சகோதரனாக பாவித்து என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுங்கள். எதற்கும் உங்கள் சொந்த வியாக்கியானத்தைக் கூற வேண்டாம். ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்ய முயலுங்கள். ஏனென்றால் நீங்கள் அப்படி வியாக்கி யானம் செய்யும் போது உண்மையான காரியத்தை விட்டு விலகிப்போய் விடுவீர்கள். பாருங்கள்? நீங்கள் அப்படிச் செய்யும்போது உண்மையான காரியத்தைவிட்டு மறுபடியும் விலகிப் போய் விடுவீர்கள்.

**13.** ஆகவே, நீங்கள் எல்லோரும் சுயஉணர்வு உள்ளவர்களாக இருந்து, ஏதோ ஒரு இரகசியமான காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருக்கிறீர்கள். அது நடந்து கொண்டிருக்கிறது, அது என்ன என்பதை நான் அறிந்திருக்கிறேன். இப்பொழுது, நான் அதை கூறப்போவதில்லை. அது என்ன என்பதை நான் அறிந்துக்காள்ளச் செய்ததே தேவனுடைய கிருபையாகும். அது ஏதோவொரு மிகப்பெரிய தாக இருக்கிறது. அது இப்பொழுதே நடந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் அதைக் கண்டு கொள்வதற்கு உலகத்திலே ஒரு வழியும் இல்லை. அது... நான்... அது என்வென்பதை நான் அறிவேன் என்று வேதத்தை என் கையில் பிடித்தவனாகக் கூறுகிறேன். இது முன்னமே உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்த வியாக்கியான மும் கொடுக்காமல் என்னை உங்கள் சகோதரனாக விசுவாசியுங்கள். பாருங்கள்? நாம் ஒரு மகத்தான நேரத்தில் ஜீவித்துக் கொண்டிருக் கிறோம். நாம் வசிக்கும் இக்காலத்தில்... நல்லது, நாம்...

**14.** இப்பொழுது, நீங்கள் உண்மையாக தாழ்மையுள்ளவராகவும், ஒரு கிறிஸ்தவனாகவும், தேவனுக்காக ஜீவிக்கவும், உங்களுடைய உடன் வாழும் மக்களுடன் உண்மையுள்ளவராகவும், உங்களை நேசிக் காதவர்களை, நீங்கள் நேசிக்கிறவர்களாகவும் வாழ முயற்சிக்கவும்; நீங்கள் அதைச் செய்ய... நீங்கள் பாருங்கள், நீங்கள் ஏதாவது ஒன்றைச் செய்ய முற்பட்டால், நீங்கள் மர்மமான ஒன்றைச் செய்ய முற்படுகி றீர்கள். அதனால் தேவனுடைய உண்மையான திட்த்தைக் குழப்பி விடுகிறீர்கள். பாருங்கள்?

**13.** நேற்று பிற்பகல் என்னுடைய அறையில் ஏதோ ஒன்று சம்பவித்தது. என்னால் – என்னால் அதிலிருந்து விலகவே முடிய வில்லை. நீங்கள் பாருங்கள் இரண்டு வாரத்திற்கு முன் ஏதோ ஒன்று நடந்தது. நான் இந்த உலகத்தில் ஜீவிக்கும் வரைக்கும் நான் – என்னால் அந்த அனுபவத்திலிருந்து விலகவே முடியாது.

**16.** இங்கிருக்கும் சபையானது இவைகளை அறிந்து கொள்ள வேண்டியதில்லை... ஆகவே எதைக் குறித்தும் வியாக்கியானம் கூற வேண்டாம். பாருங்கள்? உங்களுக்கு என்ன அறிவிக்கப்பட்டதோ அதை நினைத்துக் கொண்டு ஒரு கிறிஸ்தவ ஜீவியம் செய்து முன்னேறுங்கள். உங்கள் சபைக்குச் செல்லுங்கள். நீங்கள் எங்கிருக் கிறீர்களோ அங்கே ஒரு உண்மையான ஒளியாக இருங்கள். கிறிஸ்து வுக்காக வாஞ்சையுள்ளவர்களாய் இருந்து, நீங்கள் எவ்வளவாய் அவரை நேசிக்கிறீர்கள் என்பதை மக்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். பாருங்கள்? மாற்றிக் கூறுவீர்ளானால், நீங்கள் பாதையை விட்டு விலகினவர்களாய் இருப்பீர்கள். பாருங்கள்? ஒவ்வொரு முறையும் நீங்கள் அதைச் செய்ய முயற்சித்த போது வழிவிலகினீர்கள். பாருங் கள்? ஆகவே, வியாக்கியானம் செய்ய முயலவேண்டாம்.

**17.** முக்கியமாக இன்றிரவு, அந்த முத்திரை உங்கள் முன்பாக திறக்கப்படும் போது, பாருங்கள், அதை வியாக்கியானிக்க முயற்சி செய்ய வேண்டாம். பாருங்கள்? தாழ்மையாக இருந்து எளிமையான செய்தியுடன் முன்னேறுங்கள்.

**18.** "சகோதரன் பிரன்ஹாமே, நாங்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையை அவ்விதம் செய்யக்கூடாதா?" என்று நீங்கள் கூறலாம்.. இல்லை. இப்பொழுது, வேண்டாம்.

**19.** நான் உங்கள் நன்மைக்காகவே இதைக் கூறுகிறேன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். பாருங்கள்? நீங்கள் புரிந்துகொள் வேண்டும் என்று நான் கூறுகிறேன். இப்பொழுது நீங்கள் என்னை விசுவாசிப்பீர்களானால், நான் சொல்வதற்குச் செவிசாயுங்கள். பாருங்கள்? பாருங்கள்?

முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும், மார்ச் 24, 1963 காலை

# அவர் தெரிவிக்கப்படும் ஒரே வழி என் மூலமாகும்

## "THE ONLY WAY HE'S EXPRESSED IS THROUGH ME"

**379.** பரிசுத்த ஆவியானவர் எனனிலும் இருக்கும் விதமாகவே இயேசுவும் பிதாவானவரும் ஒரே ஆளாயிருந்தார். – நான் பிரசங்கிப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அது நானல்ல,

ஒரு வார்த்தையைப் பேசி... உங்களுக்குத் தெரியும். ஒரு மிருகத்தை வரவழைக்கக்கூடியது நானல்ல; அங்கே உட்கார்ந்து கொண்டு அதைப் பார்த்து அம்மிருகத்தைக் கொன்று அதைப் புசிப்பது; அது சிருஷ்டிக்கும் வல்லமை; அது மனிதர்களிலே கிடையாது.

**380.** மருத்துவர்களால் தன் முதுகின் மீது கிடத்தப்பட்டு இன்றிரவு இருதயக் கோளாறுடன் இருக்கும் ஒரு சிறு பையனை எடுத்துக் கொண்டு, 'வில்லியம் பிரன்ஹாம் உரைப்பதாவது' என்று என்னால் கூற இயலாது... இல்லை! '**கர்த்தர் உரைக்கிறதாவது**', அது முடிந்து விட்டது. அவனை மறுநாளில் மருத்துவர்களிடம் அழைத்துக்கொண்டு செல்லும் போது வியாதி முற்றிலுமாய்ப் போய்விட்டிருக்கிறது.

**381.** இரத்தத்தில் புற்றுநோயுடன் ஒரு சிறு பிள்ளை, கண்களெல்லாம் வீங்கிப் பெருத்துவிட்டிருந்தது. உடலெங்கும் மஞ்சளாகி விட்டிருந்தது. வயிறும் கூட... அந்தப் பிள்ளையை இங்கு கொண்டு வருவதற்கு கூட அதை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று இரத்தம் கொடுப்பது முதலிய காரியங்களைச் செய்ய வேண்டியிருந்தது! ஐந்து நிமிடம் கழித்து, சாப்பிடத் தனக்கு ஒரு ஹாம்பார் (ஒருவகைத் தின்பண்டம் – தமிழாக்கியோன்) வேண்டுமென அது அழுதது. அடுத்த நாள் அப்பிள்ளையை மருத்துவரிடம் கொண்டு சென்ற போது அதன் அடையாளம் கூட காணப்படவில்லை. அது வில்லியம் பிரன்ஹாம் உரைப்பதாவது' என்பதா? அது '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்பதாகும்! ஆனாலும் அவர் என்னிடத்திலும் வித்தியாசப்பட்ட ஒரு தனி நபராயிருக்கிறார். ஆயினும் அவர் தெரிவிக்கப்படும் ஒரே வழி என் மூலமாகும் ஓ. பாருங்கள்?

**382.** அவ்வண்ணமாகவே இயேசுவும் பிதாவும்; "கிரியைகளை நடப்பிக்கிறது நானல்ல, என்னில் வாசம் பண்ணும் பிதாவே இவைகளைச் செய்கிறார்" என்று இயேசு கூறினார்.

இப்போது, "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை." பாருங்கள்? அது என்ன? அவர் சர்வவியாபியாயிருந்தார். ஏனென்றால் அவர் தேவனாயிருந்தார்.

முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும், மார்ச் 24, 1963 காலை

## அது பரிசுத்த ஆவிக்குக் கீழ்படிதல்

## "IT'S OBEDIENCE TO THE HOLY SPIRIT"

**86.** அவன் என்ன செய்ய வேண்டுமென்று பரிசுத்த ஆவி கூறும் வரைக்கும் பவுல் காத்திருந்தான். பரிசுத்த ஆவிக்காக காத்திருப்பது மிகவும் நல்லது.

**87.** ஒரு இரவு அவன் பிரசங்கித்துக் கொண்டிருந்தான். அவன் அ;கு நடந்து சென்ற போது கால்கள் வழங்காத ஒரு மனிதனைக் கண்டான். திடீரென்று ஆவியானவர் அவனிடம் பேசினார். அவன்,

“நான் காண்கிறேன்” (Perceive) என்றான். எப்படி? ஒரு தீவில் அவர் களுக்கு கப்பல் சேதம் ஏற்படும் என்று அவன் கண்ட அதே விதமாக. “நீ சுகம் பெற உனக்கு விசுவாசம் உண்டென்று காண்கிறேன். எழுந்து காலூன்றி நில். இயேசு கிறிஸ்து உன்னை குணமாக்கினார்.”

**88.** பார்த்தீர்களா – அவன் பிணைக்கப்பட்டிருந்தான். அவன ஒரு வாரம் எழுப்புதல் கூட்டம் நடத்தியும் ஒன்றும் நடக்கவில்லை. பரிசுத்த ஆவி உரைக்கும் வரைக்கும் அவன் காத்திருந்தான். பாருங்கள், அவன் அதனுடன் பிணைக்கப்பட்டிருந்தான்.

**89.** நீங்கள், “சகோ.பிரன்ஹாமே, நீங்கள் ஞாயிற்றுக் கிழமை கூறினதற்கு இப்பொழுது முரணாகக் கூறுகிறீர்களே” (இவ்வளவு காலமாக காத்திருந்ததைக் குறித்து) எனலாம்.

**90.** ஆனால் பரிசுத்த ஆவியானவர் தாமே என்னிடம் வழியில் பேசி, “உன்னை வியாதியஸ்தர்களிடத்திற்கும் ஊனமுற்றவர்களிடத் திற்கும் அனுப்புகிறேன்” என்றார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படிதல். நிச்சயமாக. அவர் நான் போகக் கட்டளையிடும் வரைக்கும் நான் போகவில்லை. நான் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதற்காக காத்திருந்தேன். **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பது எனக்குக் கிடைக்கும் வரைக்கும் நான் செல்ல வில்லை. பாருங்கள், அதுதான் வித்தியாசத்தை உண்டாக்குகிறது.

**91.** ஆம். அவன் கர்த்தருடைய வார்த்தைக்காகக் காத்திருந்தான். தேவனுடைய கட்டளையைச் செய்யவே ஆவியானவர் அவனை வற்புறுத்தினார். அவன் அப்பொழுது இயேசு கிறிஸ்துவின் சிறைக் கைதியானான். நண்பர்களே, நாம் மட்டும் சிறைக் கைதியாகி விட்டால்...

கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல், ஜூலை 17, 1963

## தீர்க்கதரிசி ஒரு விசேஷித்த மனிதன்

## "THE PROPHET IS A SPECIAL MAN"

**108.** தீர்க்கதரிசி ஒரு விசேஷித்த மனிதன். தீர்க்கதரிசிக்கு தேவ னுடைய வார்த்தை உண்டாகிறது. தீர்க்கதரிசியின் வாழ்க்கை எவ்வாறு உருவமைக்கப்பட்டிருக்கிறதென்றால், அவனுடைய உள்ளுணர்வும் (sub conscious) முதலுணர்வும் (first conscious) ஒன்றுக்கொன்று மிக அருகாமையில் இருப்பதால், அவன் சொப்பனம் காண உறங்கச் செல்வதில்லை. அவன் விழித்திருக்கும் போதே அதை காண்கிறான். பாருங்கள்? அது தேவன் தான் செய்ய வேண்டிய காரியமாகும். பாருங்கள், என்ன நடக்கிறதென்று தீர்க்கதரிசி காண்கிறான்.

**109.** ஒரு தீர்க்கதரிசி, இனிமேல் நிகழப்போகிறவைகளை முன்கூட்டியே காண்கிறான். அவன் தேவனுடைய கோபகலசத்தை, அது நிறைவேறுவதற்கு முன்பே காண்கிறான். பாருங்கள்? அவன் "**கர்த்தர் உரைக்கிறதாவது**! நீங்கள் மனந்திரும்பாவிட்டால், தேவன் இந்த நகரத்தை அழித்துப் போடுவார்" என்று கூற முடியும். ஏன்? அவன் ஒரு கழுகு. அவன் வெகு தூரம் உயர பறக்கிறான். பாருங்கள்? அந்த உயரத்திலிருந்து அவன் பார்க்கும் போது, தேவனுடைய கோபகலசம் ஊற்றப்படுவதை காண்கிறான். அதைத்தான் தீர்க்கதரிசி நோக்கு கிறான். அவன் இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் காண்பதில்லை, அவன் தூரத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கி றான். அதைப் பார்த்து விட்டு அவன், "அது வருகிறது" என்கிறான். அவன மிக உயரச் சென்று, அங்கிருந்து அவனால் அந்த நிழலைக் காண முடிகிறது. அவன், "இருள் பூமியை மூடும்" என்கிறான். அவன் போதிய அளவு உயரத்தில் இருப்பதனால், இப்பொழுது சூரியன் பிரகாசித்த போதிலும், வரப்போகும் அந்த இருளை அவனால் காண முடிகிறது. அவன் காண்கிறதை அவன் உரைக்கிறான். அது இப்பொ ழுது இங்கில்லை, ஆனால் அது நிச்சயம் இங்கிருக்கும்! அது உண்மை. அது இங்கிருக்கும் – காரிருள் ஜனங்களை மூடுதல். அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அது வரப்போகிறது என்பதை அவன் அறிகிறான். ஆயினும் அவன் அதை இப்பொழுதே காண்கிறான்.

எச்சரிக்கை அதன் பிறகு நியாயத்தீர்ப்பு, ஜூலை 24, 1963

# அது வரைக்கும், அதைக்குறித்து மறந்து விடுங்கள்

## "UNTIL THAT, JUST FORGET ABOUT IT"

**45.** சற்றுமுன்பு நான் கூறினது போல, நீங்கள் விளையாடு வதற்காக தேவன் உங்களுக்கு தரிசனங்களை அளிப்பதில்லை. அது விளையாடுவதற்கான ஒன்றல்ல. அது புனிதமானது. அதை நீங்கள்... தேவன் உங்களை அனுமதிக்கும் விதத்தில் உபயோகிக்க வேண்டும். அவருக்கு நீங்கள் கட்டப்பட்டவர்களாயிருக்கிறீர்கள். அந்த ஆள் தவறு செய்கிறார், இதை, அதை, மற்றதை செய்கிறார் என்று நீங்கள் எவ்வளவாக அவரிடம் கூற விரும்பினாலும், தேவன் உங்களிடம் கூறச் சொல்லும் வரைக்கும் நீங்கள் பேசாமலிருங்கள். தேவன் கூறும் போது, நீங்கள் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதுடன் வரலாம். அதுவரைக் கும், அதைக் குறித்து மறந்து விடுங்கள்.

எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு, ஜூலை24, 1963

# அதை அவிசுவாசித்தால் நீங்கள் நியாயந்தீர்க்கப்படுவீர்கள்

## "YOU'LL BE JUDGED BY DISBELIEVING IT"

**112.** தீர்க்கதரிசி தன் தரிசனத்தைக் குறித்து பேசுகையில் அது கோபமோ அல்லது சுகம் பெறுதலோ என்னவாயினும், அது நிறைவேறத் தாமதிக்கக் கூடும். ஆனால் அவன் கர்த்தருடைய நாமத்தினால் அதை உரைத்தால், அது நிறைவேறியே ஆகவேண்டும். பாருங்கள்? ஒருக்கால் அவன் உங்களுக்கு வரப்போகும் ஆசீர்வாதத்தை உரைக்கலாம், உங்க ளால் அதைக் காணமுடியாது. நீங்கள், "அது எப்படி முடியும்? ஏன், அது ஒரு நான் – நான் – நான்... அவர் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" இது நடக்கப்போகிறது, அது நடக்கப்போகிறது" என்றார். இது நடக்கவேயில்லை. அந்த மனிதன் தவறாகக் கூறிவிட்டார்" எனலாம். நீங்கள் அதை அவிசுவாசித்தால்,

நியாயந்தீர்க்கப்படுவீர்கள். அது எப்படியும் நடக்கும். பாருங்கள்? அது நடந்தேயாக வேண்டும்.

**113.** "அது தாமதித்தாலும், அதன் காலத்திலே அது விளங்கும், அது நிச்சயமாக வரும்" என்று வேதம் உரைக்கிறது (ஆபகூக் 2:3).

**114.** தீர்க்கதரிசி நோக்கிப் பார்த்து ஏதோ ஒன்றைக் காண்கிறான். அவன் எதை நோக்குகிறானோ அதைக் குறித்து பேசுகிறான். அவன் இங்குள்ளதைப் பற்றியோ அல்லது நீங்கள் இப்பொழுது எப்படி காணப் படுகிறீர்கள் என்பதைப் பற்றியோ சிந்திப்பதில்லை. என்ன நடக்கப் போகிறது என்பதை அவன் காண்கிறான். அவன் அதை பேசுகையில், அது கர்த்தருடைய வார்த்தையில் இருக்குமானால், அது ஏற்கனவே உரைக்கப்பட்டு விட்டது, உலகத்திலுள்ள எதுவுமே அதை தடுத்து நிறுத்த முடியாது (பாருங்கள், அது உண்மை), தேவன் மாத்திரமே அதை நிறுத்த முடியும்.

எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு, ஜூலை24, 1963

## அவள் ஜீவிப்பாள்

## "SHE SHALL LIVE"

**12.** இந்த மனிதன் கென்டக்கி பட்டணத்திலே, ஒரு வயோதிப ஸ்திரீயின் வீட்டுப் பக்கத்திலே வசிக்கிறான். நாம் அக்டன் கூடார ஸ்தலத்திலே இருந்தபொழுது அந்த ஸ்திரீ புற்று நோயினால் மரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய சகோதரி அந்தக் கூட்டங்களுக்கு அந்த இரவில் ஒரு கைக்குட்டையை தன்னுடைய பணப்பையிலிருந்து () வைத்தவளாக இருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் அந்த ஸ்தரீயை அழைத்து (நான் அந்தப் பட்டணத்துக்கு இதற்குமுன் சென்றதே கிடையாது) "அவள் வீட்டிலிருக்கும் சகோதரி வயிற்றிலே புற்று நோயி னால் பாதிக்கப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் வைத்தியர்ளால் கைவிடப்பட்டவளாய் இருக்கிறாள்" என்று கூறினார். நான் அவளை நோக்கி, **கர்த்தர் உரைக்கிறதாவது** "நீ வீட்டுக்குப் போய் அந்தக் கைக்குட்டையை அந்த ஸ்திரீயின் மீது வை. ஏனென்றால் அவள் ஜீவிப்பாள் என்று சொன்னேன். அந்த இரவில் தான் அருகாமை

யிலிருந்தவர்கள் சகோதரன் பென் அங்கு எழுந்து நின்ற போது அங்கே இரட்சணிய சேனைக்காரர்கள் வந்து அதைச் செய்ததாக... அந்த ஸ்திரீ பரிபூரணமாக சுகமாக்கப்பட்டவளாய் தன்னுடைய வேலை யையும் அயல் வீட்டாரின் வேலையையும் செய்கிறவளானாள்.

பரிபூரண விசுவாசம், ஆகஸ்டு 25, 1963

## அது எப்படியும் சம்பவிக்கப் போகிறது

## "IT'S GOING TO HAPPEN ANYHOW"

**128.** ஏன்? அவர் கட்டளையிட்டார். அவர் ஏசாயாவிடம், "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று அவனிடம் போய்ச் சொல்லும்படி கட்டளை யிட்டார். அதில் ஏதாகிலும் மாறுதல் அல்லது தாமதம் இருக்குமானால்... அது எப்படியும் நடந்தே தீரும். அவன் எப்படியும் மரித்து போனான். ஆனால்... அதில் ஏதாகிலும் மாறுதல் இருக்குமானால், **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதுடன் தீர்க்கதரிசியை அனுப்பின அந்த மனிதனிடம் அவர் திரும்பி வருவதற்கு கடமைப்பட்டிருக்கிறார். அவர், "நீ மறுபடியும் போய் அவனிடம் சொல்" என்றார்.

எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு, ஜூலை 24, 1963

## உங்களால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டால், இந்த ஒலிநாடாவை மறுபடியும் கேளுங்கள்

## "IF YOU FAIL, COME BACK TO THIS TAPE"

**210.** இதை நீங்கள் புரிந்து கொள்ளுகிறீர்களா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் – ஆசி) உங்களால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டால், இந்த ஒலிநாடாவை மறுபடியும் கேளுங்கள். இன்னும்

எவ்வளவு காலம் நான் உங்களுடனே இருப்பேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இது, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று சத்தியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதுதான் சத்தியம். இது வேத வசனம்.

**211.** ஏழு கடைசி முத்திரைகளின் ஏழு இரகசியங்களைப் போல, அவைகளைக் குறித்த இரகசியங்கள். முத்திரைகள் உடைக்கப்பட்டு விட்டன. ஒவ்வொரு சபையின் காலத்திலும் அவர்கள் சிதறப்பண்ணினர். அது சிதறக்கூடாது என்னும் சித்தம் கொண்டவராய் தேவன் மறுபடியும் வந்து, அவர்கள் தொடங்கின போதனைகளையெல்லாம் கையிலெடுத்து, முழுவதையுமே தெளிவாக வெளிப்படுத்தினார். கிறிஸ்துவின் இரகசியத்தை குறித்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில் எப்படி அவர் சபைக்கு தேவனுடைய மூவகை நோக்கமாக அமைந்திருந்தார் என்பதைக் குறித்து அதே காரியத்தைத் தான் அவர் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார். ஓ, என்னே! தம்மை வெளியாக்குகின்றார்; வெளிப்படுத்தல்.

கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்,
ஜூலை 28, 1963

# அது மனித எண்ணத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது

## "IT'S BEYOND THE HUMAN THINKING"

**40.** மேலும் அதனால்தான் நான் அந்தத் தரிசனங்களை நம்புகிறேன். அவை உண்மையானதாகவே இருக்கின்றன. ஏனென்றால் அவை தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகின்றன. அவர் அதைக் கூறினால் அது முடிந்து போன ஒரு காரியம். அது அந்தவிதமாகக் கூறப்பட்டால், அங்கே கறபனைக்குரிய காரியம் ஒன்றுமில்லை. அது நடக்கவே போகிறது. அப்பொழுது நீ "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதைக் கேட்கும்பொழுது, பாருங்கள் அது மனித சிந்தைக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. அது தேவனுடைய சிந்தைக்கு பரிமாணத்திற்குள்ளாக இருக்கின்றது. ஆனால் நீ இங்கே நின்று

கொண்டு திராட்சை செடியைப் போல, திராட்சை செடியிலுள்ள ஒரு கிளை பழங்களைக் கொடுப்பது போன்று. பாருங்கள்? தேவன் மனிதனை, மனிதனை மாததிரமே உபயோகிக்கிறார். தேவன் இயந்திரங் களை உபயோகிப்பதில்லை. தேவன் மனித குழுக்களை உபயோகிப்ப தில்லை. ஸ்தாபனங்களை தேவன் உபயோகிப்பதில்லை. தேவன் எப்பொழுதுமே தனிப்பட்டவர்களையே உபயோகிக்கிறார்.

பரிபூரண விசுவாசம், ஆகஸ்டு 25, 1963

## ஏதோவொன்று வந்து கொண்டிருக்கிறது

## "THERE'S COMING FORTH SOMETHING"

**100.** கர்த்தர் உங்களுடன் பேசும் வரைக்கும் நீங்கள் பதறல் கொள்ள முடியாது. ஓ, சபையே, எழும்பி உன்னை அசைத்துக் கொள்! உன் மனசாட்சி உன்னை குத்தட்டும். இந்த மணி நேரத்தில் உறக்கத்தின்று எழு! நாம் பதறல் கொள்ள வேண்டும். இல்லையேல் அழிந்து போக வேண்டும்! ஏதோவொன்று தேவனிடத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது. அது "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றறிவேன். ஏதோ வந்து கொண்டிருக்கிறது. நாம் பதறல் கொள்வது நல்லது. அது மரணத்திற்கும் ஜீவனுக்குமிடையே உள்ள ஒன்று. அது நம் மத்தியில் கடந்து செல்லும், நாம் அதை காணமாட்டோம்.

பதறல், செப்டம்பர் 1, 1963

## யாரோ ஒருவர் எழும்ப வேண்டும்

## "THERE MUST BE SOMEONE RISE UP"

கவனியுங்கள், பரிசுத்த ஆவியானவர் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளார். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்துடன் அது பொருந்துகிறது. யாரோ ஒருவர் எழும்ப வேண்டும். அவர் வந்தே ஆகவேண்டும். ஏனெனில் இது **கர்த்தர் உரைக்கிறதாவது** – மல்கியா 4ம் அதிகாரம்.

கர்த்தருடைய பெரிதும், பயங்கரமான நாள் வருகிறதற்கு முன்னே அதுவே அடையாளமாயிருக்கும் என்று அவர் சொன்னார். அதாவது, "நான் எலியா தீர்க்கதிரியை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." அவன் என்ன செய்வான்? பிள்ளைகளுடைய இருதயங்களை பிதாக்களுடைய உபதேசத்திற்கு திரும்புவான் – மீண்டும் வேதாகமத்துக்கு. இந்த எல்லாவிதமான ஸ்தாபன பேதங்களையும் விட்டு, மீண்டும் வேதாகமத் திற்கு – மீண்டும் தேவனிடத்திற்கு – திரும்புவான். அதைத்தான் அவன் செய்வான்.

இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள், நவம்பர் 10, 1963

# உலக சபைகளின் ஆலோசனை சங்கம், மிருகத்தின் முத்திரை

## ECUMENICAL COUNCIL, THE MARK OF THE BEAST

ஏன் பெந்தெகொஸ்தே உலகத்தைச் சார்ந்த ஒரு மனிதன் – நமது விலையேறப்பெற்ற சகோதரன், சகோ. டியூப்ளஸிஸ் அனுப்பின பொதுவான கடிதம்... உங்களில் சிலர் அதை பெற்றிருப்பீர்கள் – உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தில் போப்பின் அருகில் அமர்ந்து, அது மிகவும் ஆவிக்குரியது என்று சொல்ல வேண்டும்? அதுவா ஆவியைப் பகுத்தறிதல்? "ஓ, கர்த்தரின் ஆவி அங்கு இருந்தது – மிகவும் ஆவிக்குரியதாயிருந்தது" என்று ஏன் சொல்ல வேண்டும்?

பார்த்தீர்களா? ஏன்? ஏனெனில் பிராடெஸ்டெண்டுகளையும் அதை யும் இணைக்க அது ஒரு தருணம். அதை நாம் அநேக ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி வருகிறோம். வேதம் அதை எடுத்துக்கூறி, அது நிறைவேறும் என்று நமக்குக் கூறியுள்ளது. நமது மகத்தான தலை வர்களில் ஒருவர் அங்கு வந்து, "நாம் செய்வது சரியே" என்கிறார்.

உடனே பிராடெஸ்டென்டு சபைகள் அனைத்துமே அதனுடன் இணைந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் திட்டவட்டமாக, அந்த **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைக் கவனிப்பீர்களானால்... முதலில் வார்த்தை அதை உரைத்தது, பின்பு 1933ம் ஆண்டில் கர்த்தருடைய ஆவியானவர் அதை உரைத்து, தேசங்கள் சண்டையிட்டுக்கொள்ளும் என்றும், இயந்திரங்கள் எப்படியிருக்கும் போன்றவைகளை முன்னுரைத்தது. முதலில் இவை யாவும் சம்பவிக்கும் என்றார். அது இப்பொழுது சம்பவித்து வருகிறது. அது ஒருபோதும் தவறவேயில்லை. அது உருவாகிக் கொண்டிருப்பதை இங்கு காண்கிறோம்.

அண்மையில் நான் பிரசங்கித்த “யேசபேல மார்க்கம்” என்னும் செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அன்று காலை எலிசா அவர்களிடம் கூறுவதற்காக சாலையின் வழியாக நடந்து வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும்... அதைக்குறித்து நான் பிரசங்கித்தேன். அப்பொழுது நான், இந்த உலக சபைகள் ஆலோசனை சங்கம் முடிவில் மிருகத்தின் முத்திரையாக ஆகி விடும், ஏனெனில் அது மிருகத்துடன் இணைந்துவிடும் என்று முன்னறிவித்தேன். அது இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. என் காலத்தில் அதைக் காண நான் உயிர் வாழ்ந்து விட்டேன். இலட்சக்கணக்கான பிராடெஸ்டென்டுகள் அதனால் கவர்ச்சிக்கப்படுவதை நீங்கள் கேள்விப்படுகின்றீர்கள். ஏன்? அதைத்தான் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் குருடாயிருக்கின்றனர்.

இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள், நவம்பர் 10, 1963, பக்கம் 72, 73, 74

# தேவன் அதைப் பேசினால், அது நிகழத்தான் வேண்டும்

## "GOD SPEAKS IT, IT HAS TO BE"

**173.** அங்குதான் நமது சகோதரரில் சிலர் உணர்ச்சிவசப்படுகின்றனர். கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னதாக அவர்கள்

ஊகித்து, “கர்த்தர் உரைக்கிறதாவது” என்று இல்லாத போதே, அது “கர்த்தர் உரைக்கிறதாவது” என்று அவர்கள் கூறுகின்றனர். அதனால் தான் அது நிறைவேறுகிறதில்லை. ஒரு காரியத்தை உண்மையில் ஆண்டவர் உங்களிடம் கூறுவாரானால், அது நிகழ்தே தீர வேண்டும். பாருங்கள்? அது அப்படித்தான் இருக்க வேண்டும். கர்த்தர் பேசினால் அது நிகழத்தான் வேண்டும்.

உங்களிலிருக்கிறவர், நவம்பர் 10, 1963

## கல் தானாகவே வெளிவந்து விடும்

## "THE STONE WILL PASS BY ITSELF"

**75.** சாம் கான்னலி டூசானில் வசிக்கிறார். அவர் அநேக ஆண்டுகளுக்கு முன்பு திரு. கிட் என்பவருடன் இங்கு வந்து, பல ஆண்டுகளாக அவருக்கிருந்த குடற்புண் நீங்கி குணமடைந்திருக்கி றார். கடந்த இலையுதிர் காலத்தில் நான் சென்றிருந்த போது, சாமின் குடலில் ஒரு கல் உண்டாயிருந்தது. டூசானிலுள்ள மருத்துவ நிபுணர் பரிசோதித்து பார்த்த போது, அது கோலி அளவு பெரிதாயிருந்தது. சகோ. சாம் கான்னலி... இங்குள்ள உங்கள் அநேகருக்கு அவரைத் தெரியும்; அவர் ஒஹையோவைச் சேர்ந்தவர். அவர் மருத்துவரிடம் சென்ற போது, மருத்துவர் அவரிடம், “சாம், அடுத்த வாரம் ஆயத்த மாயிருங்கள். அறுவை சிகிச்சை செய்து அந்த கல்லை வெளியே எடுத்து விடுகிறேன்” என்றார் (இன்னும் சில நாட்களில்).

அவர், “டாக்டர், அது மலத்தில் வந்து விடாதா?” என்று கேட்டார்.

மருத்துவர், “அது முடியாது. கல் மிகவும் பெரியது” என்றார்.

**76.** மருத்துவர் அவரைக் காரில் கொண்டு போய் வீட்டில் சேர்த்தார். சாம் என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, “நீங்கள் வந்து எனக்காக ஜெபிக்க வேண்டும், சகோ. பிரன்ஹாமே” என்றார். இதற்காக அவர் ஏன் என்னை தொலைபேசியில் கூப்பிட வேண்டும்?

**77.** நான் அவருக்காக ஜெபிக்கத் தொடங்கினேன். நான், “சாம், **கர்த்தர் உரைக்கிறதாவது.** கல் தானாசவே வெளி வந்து விடும்” என்றேன்.

**78.** அடுத்த நாள் அவர் கல்லை மருத்துவரிடம் கொண்டு சென்றார். மருத்துவர், "திரு. கான்னலி, இது எப்படி நடந்ததென்று எனக்குப் புரியவேயில்லை" என்றார்.

**79.** அவர், "நான் தேவனை விசுவாசிக்கிறவன், அந்த கல் என்னிலிருந்து வெளியே வரும்படி தேவன் செய்தார்" என்றார், அந்த மருத்துவரால் நம்பவே முடியவில்லை – என் மனைவியின் இடுப்பி லிருந்து அந்த பெரிய கட்டி மறைந்த போது மருத்துவரால் எப்படி நம்ப முடியவில்லையோ, அதே விதமாக, அதைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பாருங்கள்? எனவே அவர் சொன்னார்.

**80.** ஏறக்குறைய ஆறு மாதங்கள் கழித்து – அதாவது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு, சாம் கான்னலி இருதயக் கோளாறின் காரணமாக அதிக நோய்வாய்ப்பட்டார் (அதன் பெயர் எனக்குத் தெரியவில்லை 'கரானரி' அல்லது ஏதோ ஒரு விதமான இருதய அடைப்பு, அப்படி ஏதோ ஒன்று, அது மிகவும் ஆபத்தானது.. அது... அதிலிருந்து மீள முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர்). அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவருடைய இருதயத்தில் இரத்த ஓட்டம் அடைபட்டது' அவருடைய கால்கள் வீங்கிப் போய், அவருடைய கணுக்கால்கள் அவருடைய தொடையைக் காட்டிலும் பெரிதாகி விட்டன. அவரை மருத்துவரிடம் கொண்டு சென்றனர். மருத்துவர், "அவரை சமாதானத்துடன் வீட்டுக்கு கொண்டு செல்லுங்கள், அல்லது மருத்துவமனையில் சேர்த்து விடுங்கள்" என்றார்.

சாம், "எனக்கு மருத்துவமனைக்குப் போக பிரியமில்லை" என்றார்.

மருத்துவர், "அவரை வீட்டுக்குக் கொண்டு சென்று படுக்க வையுங்கள். ஆறுமாத காலம் அவர் தலை, கால், கை எதையும் அசைக்கக் கூடாது. அவர் எந்த நேரத்திலும் மரிக்கக்கூடும்" என்றார்.

**81.** சகோ. நார்மன் என்னைத் தொலைபேசியல் கூப்பிட்டார். அன்றிரவு நாங்கள் சகோ. சாமைக் காணச் சென்றோம். அவருக்காக நாங்கள் ஜெபித்த போது கர்த்தர் பேசினார்... அடுத்த நாள் காலையில் சாம் மருத்துவரின் அலுவலகத்துக்குச் சென்று" அவருடைய முன்னி லையில் நின்று, கட்டுப் போட்டிருந்த அவருடைய கால்களை அவிழ்த்து, "டாக்டர், என்னைப் பாருங்கள்" என்றார்.

மருத்துவர் அவருடைய இருதயத் துடிப்பை இயந்திரத்தில் பதிவு செய்து பார்த்து விட்டு (electro cardiogram), “எனக்குப் புரியவே யில்லை. நீங்கள் மறுபடியும் வேலைக்குச் செல்லலாம்” என்று கூறி விட்டு, “நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்?” என்று கேட்டார்.

அவர், “எந்த சபையும் இல்லை” என்று விடையளித்தார்.

**82.** மருத்துவர், “எந்த ஒரு ஸ்தாபனத்தையும் சேராமல் நீங்கள் கிறிஸ்தவராக இருக்க முடியாதே. நீங்கள் ஏதாவதொரு ஸ்தாபனத்தை சேர்ந்திருக்க வேண்டுமே” என்றார். பாருங்கள், மருத்துவருக்கு அவ்வ ளவு தான் தெரியும். சாம் அவருக்கு ‘நட்’டாக காணப்பட்டார். அவ்வாறே மருத்துவரும் அப்படிப் பட்ட கேள்வி கேட்டதனால் சாமுக்கு ‘நட்’டாக காணப்பட்டார்.

பிறகு என்ன நேர்ந்தது? சாம் என்னிடம் வந்து, “சகோ. பிரன்ஹாமே, அப்படிப்பட்ட கேள்வி கேட்கும் ஒருவருக்கு நான் என்ன பதில் கூற வேண்டும்?” என்று கேட்டார்.

**83.** நான், “அவர்களிடம் நீங்கள் ‘ஒரே ஒரு சபை’யை சேர்ந் திருப்பதாக கூறி விடுங்கள். நீங்கள் அதில் சேர்வதில்லை. அது ஒரு ஸ்தாபனமல்ல. அதில் நீங்கள் பிறக்கின்றீர்கள்” என்றேன்.

வினோதமானவன், ஜூன் 14, 1964

## நீ மரிக்கப் போவதில்லை

## "YOU'RE NOT GOING TO DIE"

**84.** ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு ஸ்திரீ சகோதரி நார்மனின் மேல் சாய்ந்து கொண்டு (அவளுடைய பெயர் எனக்கு மறந்து விட்டது); அவள் மிகவும் அழகுள்ளவள், ஏறக்குறைய முப்பது வயதிருக்கும். அவளும் கணவனும் பிரிந்திருந்தனர். அவளுக்கு இரத்தப் புற்றுநோய் கண்டு மிகவும் மோசமான நிலையில் நடக்கவும் வட முடியாதிருந்தாள். ஆத மிகவும் மோசமடைந்து, மருத்துவர்கள் அவளைப் படுக்கையில் போட்டனர். மருத்துவர்கள் அவளுக்கு சிகிச்சையளித்து வந்து முடிவில்... அவள் அடுத்த புதன் கிழமை வரைக்கும் மாத்திரமே

உயிரோடிருப்பாள் என்று அறிவித்தனர். திருமதி நார்மன் எப்படியோ அவளைப் படுக்கையிலிருந்து தூக்கி கொண்டு வந்து நாற்காலியில் உட்கார வைத்தார்கள். அந்த சிறுவன் இங்கும் அங்கும் ஓடிக் கொண் டிருந்தான். அவள் சாம்பல் நிறமுள்ளவளாகக் காணப்பட்டாள். இரத்தப் புற்று நோய் காரணமாக அவளுடைய தோல் மஞ்சள் நிறமாயிருந்தது. நான், "சகோதரியே, உனக்காக நான் ஜெபிக்கப் போகிறேன்" என்றேன்.

அவள் பேச முயன்றபோது, கண்ணீர் கண்களிலிருந்து பெரு கினது. அவள், "நான்..." என்றாள்.

நான், "நீ கிறிஸ்தவளா?" என்று கேட்டேன்.

அவள், "நான் மெதோடிஸ்டு" என்றாள்.

நான், "நீ கிறிஸ்தவளா என்று தான் நான் கேட்டேன்" என்றேன்.

அவள், "நான் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவளா என்றா கேட்கி றீர்கள்?" என்றாள்.

**85.** நான், "இல்லை, அம்மணி, நீ தேவனுடைய ஆவியினால் பிறந்து, கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிறாயா என்று தான் கேட்கி றேன்" என்றேன்.

அவள், "நான் எப்பொழுதுமே ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்தவள்" என்றாள்.

**86.** நான், "தேவன் உன்னை உயிரோடு வைத்தால், நீ என்னிடம் மறுபடியும் வந்து கர்த்தருடைய வழியை இன்னும் தெளிவாக உனக்குக் காண்பிக்க எனக்குத் தருணம் அளிப்பாயென்று வாக்கு கொடுப் பாயா?" என்றேன்.

அவள், "நான் தேவனுக்கு எதையும் வாக்கு கொடுக்க ஆயத்த மாயிருக்கிறேன். அவர் என் உயிரைக் காப்பாற்றினால், அவரை நான் சேவிப்பேன்" என்றாள்.

**87.** அப்பொழுது எனக்கு ஒரு தரிசனம் உண்டானது. நான் "**கர்த்தர் உரைக்கிறதாவது.** மரணத்துக்காக ஆயத்தப்படாதே. நீ நாளை கழித்து மரிப்பதற்காக ஆயத்தம் பண்ணியுள்ளவை அனைத்

தையும் கிழித்தெறிந்து விடு (அது திங்கட்கிழமை, அவள் புதன்கிழமை மரிக்க வேண்டியவள்). நீ மரிக்கப் போவதில்லை" என்றேன். போன ஞாயிறன்று – இந்த ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு – நான் அவளுடன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவளுடைய எடையில் முப்பது சொச்சம் பவுண்டு கூடினது. அவள் உடலில் இரத்தப் புற்று நோய் சிறிதளவும் கூட காணப்படவில்லை என்று மருத்துவர் கூறினார். அவள் கர்த்தருடைய வழியை அறிய விரும்பினாள் (ஒரு நீர்ப்பாசன குளத்தில் அவள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்படியாக அவளை அனுப்பினேன்). அவள் ஒருக்கால் 'நட்'டாக இருக்கலாம், ஆனால், நான் "உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரை யும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்".

விநோதமானவன், ஜூன் 14, 1964

# அவள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வாஞ்சிக்கிறாள்

## "SHE'S DESIRING TO RECEIVE THE BAPTISM"

**122.** இங்கு ஒரு ஸ்திரீ எனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் அழுது கொண்டிருக்கிறாள். பிள்ளைக்கு ஏதோ கோளாறு... எனக்குத் தெரியவில்லை... இல்லை, அது தவறு. அவளுக்கு ஒரு வாஞ்சையுண்டு. அவள் பரிசுத்த ஆவியின் அபிஷே கத்தைப் பெற வாஞ்சிக்கிறாள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது**! பிள்ளையே. விசுவாசி, நீ அதை பெற்றுக் கொள்வாய்.

விநோதமானவன், ஜூன் 14, 1964

# இது ஒரு ஜோடிப்பு அல்ல

## "THIS IS NOT JUST MAKE-UP"

அதற்கிடையில் – பெந்தெகொஸ்தேயினரின் தவறுகளைச் சுட்டிக் காட்டும் ஏழாம் தூதனின் செய்தி ஒன்றிருக்க வேண்டும். இயேசு

வெளியில் தள்ளபபட்டிருப்பார். யாருடைய ஒத்துழைப்பும் அவருக்கிருக் காது. அவர் வெளியில் தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்படுவார் (வேதம் அவ்வாறு கூறுகின்றது); கிறிஸ்து நமது மத்தியில் வெளிப்பட்டு, இயேசுநமது அனைவரின் மத்தியிலும் வார்த்தையின் தூய்மையில் வெளிப்பட்டு, அதை அறியும்படி செய்தல்... இது ஒரு ஜோடிப்பு அல்ல, நண்டர்களே. இது கர்த்தர் உரைக்கிறதாவது, வேதவாக்கியம்.

எக்காளப் பண்டிகை, ஜூலை 19, 1964, பக்கம் 60

## நமது மத்தியில் மாம்சமாகியுள்ளது

## "MADE FLESH AMONG US"

அதே எக்காளத்தின் கீழ் ஏழாம் தூதனின் செய்தி – எல்லாமே அதே காரியம், அதே முத்திரை – அது என்ன செய்ய வேண்டும்? மணவாட்டியை பெந்தெகொஸ்தே பாரம்பரியங்களிலிருந்தும் உலக பாரம்பரியங்களிலிருந்தும் உண்மையான பாவ நிவாரணமாகிய வார்த் தையாகிய கிறிஸ்துவுக் – நமது மத்தியில் மாமிசமாகியுள்ள வார்த் தைக்கு அழைக்க வேண்டும்.

விஞ்ஞானம் அதை புகைப்படங்களின் மூலம் நிரூபித்து விட்டது. உலகம் முழுவதுமுள்ள சபை அதை அறிந்துள்ளது. நாமும் அதை உறுதியாய் அறிந்துள்ளோம், ஏனெனில் அவர் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று நம்மிடம் கூறினவைகளில் ஒன்றாகிலும் தவறவில்லை. அவர் அந்த நதிக்கரையில், "யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, இதுவும்...?" என்று கூறவில்லையா?

இப்பொழுது கடிகாரத்தை பார்க்கும் போது, பன்னிரண்டு மணி ஆகிறது என்பதை காண்கிறேன். நண்பர்களே, நள்ளிரவு இப்பொழுது நம்மிடையே உள்ளது. வேதவாக்கியங்கள் எவ்வளவு பிழையற்றதாக உள்ளன என்பதைப் பார்த்தீர்களா? அது எவ்வளவு பிழையற்றதாக...

எக்காளப் பண்டிகை, ஜூலை 19, 1964

# இது ஏதோ மனிதனின் மூடத்தனமான காரியம் அல்ல

## "NOT JUST SOME SILLY THING OF A MAN"

நாம் இங்கு அடைந்து விட்டோம்! நாம் முடிவில் இருக்கிறோம்! இது ஏதோ மனிதனின் மூடத்தனமான காரியம் அல்ல, இது **கர்த்தர் உரைக்கிறதாவது**!

எக்காளப் பண்டிகை, ஜூலை 19, 1964

# நீங்கள் என்னுடைய உத்தரவாதிகள்

## "YOU ARE MY RESPONSIBILITY"

**11.** எனவே, நீங்கள் என்னுடைய உத்தரவாதிகள் என்றும், சுவிசேஷத்தின் மூலமாய் என கைகளில் நீங்கள் அருளப்பட்டிருக் கிறீர்கள் என்றும் அறிந்தவனாய், வேதவாக்கியங்களுடன் சரியாய் உங்களை ஒன்றுபடுத்த விரும்புகிறேன்... அநேக முறை மக்கள் என்னிடம் வந்து, "சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் அங்கு வந்து, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று வியாதியாயிருக்கும் என் குழந்தைக்குக் கூறுவீர்களானால், அது சுகம் பெறும். அதை மாத்திரம் நீங்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்கின்றனர்.

**12.** அது மிகவும் விசுவாசமுள்ளதாயும் அருமையாகவும் தென்படு கின்றது அதை நான் பாராட்டுகிறேன் ஆனால் முதலாவதாக, அவ் விதம் செய்ய அவர் என்னிடம் கூறினாலன்றி, என்னால் செய்ய முடியாது. பாருங்கள்? வேண்டுமானால் அந்த குழந்தைக்கு நான் ஜெபம் செய்யலாம். என்னால் இயன்றதைச் செய்யலாம். ஆனால்... நான் ஆர்வம் கொண்டு அவ்விதம் கூறினால் என்னவாகும்? நான் ஆர்வம் கொண்டு "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறினால், உண்மையாக, "என் ஆர்வம் உரைக்கிறதாவது" என்பதாகவே அது அமைந்திருக்கும். பாருங்கள். பாருங்கள்? அது நிறைவேறலாம். அல்லது நிறைவேறாமல் போகலாம். அந்த நபர் என் ஆர்வத்தில் நம்பிக்கை கொண்டிருந்து, அது நிறைவேறாமல் போனால் அவருக்கு

எப்படியிருக்கும்? ஒருக்கால் அவர் மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கலாம். அப்படியானால் அவருடைய நம்பிக்கை என்னவாகும்? நான் உண்மையாகவே **"கர்த்தர் உரைக்கிறதாவது"** என்று கூறும்போது நான் ஆர்வத்தினால் கூறுகிறேன் என்று அவர்கள் நினைக்க வழியுண்டு அல்லவா? எனவே நான் அவ்விதம் கூறும்போது, எனக்குத் தெரிந்தமட்டில் அது சரியென்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது தேவன் என்னுடன் பேசி எனக்குக் காண்பித்தவைகளை, நான் அவிவிதமே எடுத்துக் கூற முடியும். அது நல்லதாயிருந்தாலும், தீமையாயிருந்தாலும் நான் அதைக் கூறியே ஆக வேண்டும். சல சமயங்களில் தீமைகளை மக்களுக்குக் கூறுவது இனிமையாயிராது. ஆயினும் நல்ல காரியங்களை மக்களுக்குக் கூறு வதில் நான் எவ்வளவு கடமைப்பட்டுள்ளேனோ, அவ்வளவாக மனித ருக்கு நேரிடவிருக்கும் தீமையான காரியங்களை எடுத்துரைப்பதிலும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

**13.** என்னவாயினும், நமக்கு கர்த்தருடைய சித்தமே அவசியமா யுள்ளது. சில நேரங்களில் தேவனுடைய சித்தம் நம் விருப்பங்களுக்கு மாறாக அமைந்துள்ளது. ஆயினும், நமக்கு தேவனுடைய சித்தம் மாத்திரமே அவசியமாயிருக்குமானால், நமக்கு தீமை நேரிடுவது தேவ னுடைய சித்தமாயுள்ளது என்பதை அறிந்து கொள்வதும் நலமாயிருக் கும். அது நன்மையானாலும் தீமையானாலும், தேவனுடைய சித்தம் நிறைவேறுவதையே நாம் விரும்புகிறோம். அவ்விதமாகவே நாம் அதை ஏற்றுக் கொள்கிறாம்.

பாளயத்துக்குப் புறம்பே செல்லுதல், ஜூலை 19, 1964

# தேவனுடைய சத்தத்துக்குச் செவிகொடுங்கள்

## "HEAR THE VOICE OF GOD"

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி; ஆனால் அதே தேவன். மனுஷகுமாரன், தேவ குமாரன், தாவீதின் குமாரன்; ஒரே தேவன் மூன்று வெவ்வேறு அலுவல்களைக் கொண்டவராயிருக்கிறார். எனவே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்று தெய்வங்களைக் குறிப்பிடுவன

அல்ல. ஒரே தேவன் மூன்று யுகங்களில், வெவ்வேறாக தம்மை வெளிப்படுத்துபவராக இருக்கிறார்.

இன்றைய சபைகள் பாரம்பரியத்தினால் குருடாக்கப்பட்டுள்ளன. அவர்களால் காண முடியவில்லை. ஏன் அவர்களால் காண முடிய வில்லை என்று வியப்புறுகிறீர்களா? அவர்ளால் ஒருபோதும் காண முடியாது. இது '**கர்த்தர் உரைக்கிறதாவது**'. 'பின்னை ஏன் நீங்கள் பிரசங்கம் செய்கின்றீர்?' என்று நீங்கள் ஒருக்கால் கேட்கலாம். யோவானும் மற்றோரும் எக்காரணம் கொண்டு பிரசங்கித்தனரோ, அதே காரணத்தினால்தான் நானும் பிரசங்கிக்கிறேன். ஓ தேவனுடைய ஆடுகளே, தேவனுடைய சத்தத்துக்குச் செவி கொடுங்கள். "என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும்" என்று இயேசு கூறி யுள்ளார்.

காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்,
ஜூலை 26, 1964 காலை

# சகோதரன் பிரன்ஹாம் கூறுவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

## "REMEMBER WHAT BROTHER BRANHAM'S SAYING"

**218.** சரி. தொழிற்சங்கத்தைக் குறித்து: உங்கள் வேலையைக் குறித்து எனக்குத் தெரியும்... உங்களுக்கு தொழிற்சங்கங்களும் மற்றவைகளும் உள்ளன... நீங்கள் வேலையில் நலைத்திருக்க வேண்டு மானால், அதில் சேர்ந்திருக்க வேண்டும். அது முற்றிலும் உண்மை. அதை நீங்கள் செய்ய வேண்டும். ஆனால் கவனமாயிருங்கள் (பாருங்கள்?), ஏனெனில் இந்நாட்ளில் ஒன்றில் அது தொழிலிலிருந்து மதத்துக்கு வந்துவிடும். பாருங்கள்? எல்லாமே "யூனியன்" ஆவதற்கு அது ஒரு முன்னோடி என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். உங்களால் வேலை செய்ய முடியாது; நீங்கள் வேலையில் நிலைத்திருக்க அவர்கள் விடமாட்டார்கள். நீங்கள் இந்த யூனியனில் சேர்ந்திருந்தாலொழிய. நீங்கள் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது மட்டும் வேலை செய்பவராக (scab) ஆகி விடுவீர்கள்.

**219.** இப்பொழுது, இளைஞர்களே, சகோ. பிரன்ஹாம் கூறுவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என் சொற்கள் இரும்பு பேனாவில் இரும்பு மலையின் மேல் பொறிக்கப்படட்டும். **கர்த்தர் உரைக்கிறதாவது**, அதே காரியம் மத விஷயத்திலும் நிகழும். நீங்கள் ஏதோ ஒரு விதமான ஸ்தாபனத்தைச் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் உங்களால் கொள்ளவோ விற்கவோ முடியாது. எனவே மிகவும் ஜாக்கிர தையாயிருங்கள், சகோதரனே, அது தொழிலோடு மட்டும் இருக்கட்டும். அதை கவனித்து வாருங்கள். இது ஒரு எச்சரிக்கை!

கேள்விகளும் பதில்களும் (COD 2:19), ஆகஸ்டு 23, 1964 காலை

## நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒன்றே ஒன்று

## "ONLY THING YOU CAN PUT YOUR TRUST IN"

**8.** இயேசு அதை தான் கூறினாரல்லவா? “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே, நாங்கள்... செய்யவில்லையா? என்பார் கள்.” பாருங்கள்? நீங்கள் சுகமளிக்கும் கூட்டங்களில் உங்கள் நம்பிக் கையை வைக்க முடியாது என்பதை உங்களால் காண முடியவில் லையா? அப்படிப்பட்ட அந்த அடையாளத்திலும் உங்கள் நம்பிக்கையை நீங்கள் வைக்க முடியாது. நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒன்றே ஒன்று வேதத்திலுள்ள**கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதன் பேரில் மட்டுமே. இப்பொழுது சபையே, உங்களை அங்கு தான் வைக்க நான் முயன்று வந்திருக்கிறேன். என் பிள்ளைகளே, எனக்கு ஏதாகிலும் நிகழ்ந்து தேவன் என்னை இந்த உலகத்திலிருந்து எடுத்துக் கொள் வாரானால், நீங்கள் ஒருபோதும் தவற வேண்டாம்; அதாவது, அதற்கு முரணான எதையும், அது எதுவானாலும் அதை தனியே விட்டு விடுங்கள். அப்பொழுது அது சரியென்று நீங்கள் அறிந்து கொள் வீர்கள். பாருங்கள்?

கேள்விகளும் பதில்களும் (COD 2:20), ஆகஸ்டு 23, 1964 மாலை

# பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதன் அத்தாட்சி

## "THE EVIDENCE OF THE HOLY GHOST"

**50.** அதே காரியம் மறுபடியும் சம்பவிக்கிறது! தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தி, **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை நீங்கள் கண்டுணர்ந்து, அதை ஏற்றுக்கொள்வீர்களானால், அதுவே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதன் அத்தாட்சி. நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்றோ, நீங்கள் என்னவாயிருந்தீர்கள் என்றோ, அதைப் பற்றி ஒன்றுமில்லை. தேவன் இப்பொழுது உங்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்பதே முக்கியம். அதுதான் அத்தாட்சி.

**51.** இயேசு உரைத்தார்... பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதன் அத்தாட்சியை அவர் யோவான் 14ம் அதிகாரத்தில் உரைத்திருக்கிறார். அவர், "இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அதற்கு எனக்கு இப்பொழுது நேரமில்லை. பரிசுத்த ஆவியாகிய அவர் வரும் போது, அவர் உங்களுக்குப் போதித்து, நான் உங்களிடம் கூறினதை உங்களுக்கு நினைப்பூட்டி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்றார் (யோவான் 16:12–13). உங்களால் காண முடியவில்லையா? அதுதான் அத்தாட்சி. வரப்போகிற காரியங்களை முன்கூட்டி அறிவித்து, எழுதப்பட்ட வார்த்தைக்கு தெயிவீக வியாக்கியானத்தை உரைப்பது. அது தீர்க்கதரிசியின் அடையாளம் அல்லவா?

**52.** வேதத்தில் காணப்படும் ஞானதிருஷ்டிக்காரன் முன்னறிவித்தது பிழையின்றி அப்படியே நடந்தது, யாரோ ஒருவர் அவன் மேல் கைகளை வைக்கவில்லை. அது வரம். தீர்க்கதரி என்பவன் முன்குறிக்கப்பட்டு தீர்க்கதரிசியாயிருக்கப் பிறந்தவன். பாருங்கள்? அவனுடைய வாழ்நாள் முழுவதுமே அவன் தீர்க்கதரிசியாயிருக்கிறான். அது ஒரு உத்தியோகம். அங்கு தான் ஜனங்கள்...

கேள்விகளும் பதில்களும் (COD 2:20), ஆகஸ்டு 23, 1964 மாலை

# மனதில் எந்தவித சந்தேகமுமில்லை

## "NOT A DOUBT IN YOUR MIND"

**166.** நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நான் என் மகனுடன் உண்மையுள்ளவனாயிராமல் போனால், உங்களுடன் உண்மை யுள்ளவனாயிருக்க முடியாது. நான் உங்களிடம் கூறுவது என் உண்மை யுள்ள கருத்து என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதிலிருந்து எதையும் உண்டாக்கி விடாதீர்கள், நான் சொன்னவிதமாகவே அதை சொல்லுங்கள் (பாருங்கள்?), ஏனெனில் நான் உங்களுக்கு உண்மையையே உரைக்கிறேன்.

**167.** இப்பொழுது, நான் உங்களிடம் இவ்விதமாக அடிக்கடி பேசுவ தில்லை. ஏனெனில் நீங்கள் என் பிள்ளைகள், அவ்விதமே உங்களை நான் அழைக்கிறேன். நான் சுவிசேஷத்தின் மூலம் உங்களை கிறிஸ்து வுக்கு பெற்றெடுத்தேன். நாம் இங்கு ஒன்றாய் இருக்கும் போது, நம்முடைய சொந்த குழு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, உங்களை சிறிது கடிந்து கொள்கிறேன். ஆனால் இதை உங்களிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் என்னிடம் வந்து ஏதாவதொன்றை கேட்பீர்களானால், எனக்குத் தெரிந்ததை உங்களுக்குச் சிறந்த முறையில் எடுத்துரைக்கப் போகிறேன். அது வார்த்தையில் இருக்கு மானால், அது என்னைக் குற்றப்படுத்தினாலும் எனக்குக் கவலை யில்லை. என்னிடமிருந்து அநேக காரியங்கள் அகற்றப்பட வேண்டியதா யுள்ளது. நிச்சயமாக!

**168.** நீங்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டால், நான் உங்களுக்கு பதில் கூறுவேன். உங்களுக்கு நான் ஏதாவதொன்றைக் கூறினால், உங்களுக்கு நான் சத்தியத்தையே கூறுவேன். அவ்வித மாகவே வாழ நான் எப்பொழுதும் முயன்று வந்திருக்கிறேன். அவ்வித மாகவே நான் வாழ்ந்து அவ்விதமாகவே நான் மரிக்க விரும்புகிறேன் – எவரிடத்திலும் உண்மையுள்ளவனாயிருக்க.

**169.** அண்மையில் ஒரு இளம் பெண் என்னிடம் வந்தாள்; அந்த ஸ்திரீ இப்பொழுது இங்கில்லை. டாம் சிம்ப்ஸன், உங்களில் பலருக்கு அவரைத் தெரியும். டாம் நல்லவர்; அவருடைய குடும்பத்தினர் இங்கில்லை (அவர்கள் எல்லோரும் திரும்பிப் போய் விட்டனர் என்று

நினைக்கிறேன், ஃபிரட் இன்னும் இங்கு இருந்தாலொழிய. நான்... பிரட் சாத்மன். அவர் இங்கிருக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரிய வில்லை. அவர் இங்கிருக்கிறார் என்று தான் நினைக்கிறேன்) டாம் சிம்ப்ஸன், அவர் ஃபிரட்டுடன் கூட கனடாவிலிருந்து வந்தவர். அவர் கள்... (உங்களுக்கு நமது தர்மகர்த்தா ஃபிரட்டைத் தெரியும்).

**170.** உங்களில் பலருக்கு சகோ. டாம்மைத் தெரியும். டாம் அருமையான ஒரு மனிதன்; அவர் சிறந்த உடை உடுப்பவர்; திருமதி சிம்ப்ஸனும் கூட. அவள் மட்டும் நான் சொல்வதற்கு செவிகொடுத் தால், அவள் மீண்டும் நடப்பாள். அவள் ஊனமுற்றவளாய் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டதை அவள் மட்டும் செய்வாளானால், அவள் நடப்பாள். அது உண்மையா என்பதை கவனித்து அறிந்து கொள்ளுங்கள். பாருங்கள்? இப்பொழுது அவள் அதை எதரிபார்த்தால், அவள் என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டதோ, அவள் அதைச் செய்ய வேண்டும்.

**171.** அவளுடைய பெண்களில் ஒருத்தி, அழகான சிறு பெண்கள்... நான்... அவர்கள் சிறுமிகளாக இருந்த போது, அவர்கள் என் தொடையின் மேல் வைத்து அவர்களுடன் விளையாடுவது வழக்கம். இப்பொழுது அவர்கள் பெரியவர்களாகி விட்டனர்; அவர்கள் ஏறக் குறைய ஸ்திரீகள், பத்து பன்னிரண்டு வயதுடையவர்கள். எனவே அவர்களில் ஒருத்தி என்னிடம் வந்து, "சகோ. பிரன்ஹாமே, நான் ஒரு சொப்பனம் கண்டேன்" என்றாள். அவள் என்னிடம் அந்த சொப்ப னத்தை உரைத்தாள். "அதன் அர்த்தம் என்ன?" என்று அவள் கேட்டாள்.

நான், "தேனே, எனக்குத் தெரியாது. நான் ஜெபிக்கிறேன். கர்த்தர் எனக்கு அதை அருளுவாரானால், நான் உன்னிடம் கூறுகிறேன்" என்றேன்.

**172.** அவள், "சரி" என்றாள். சில நாட்களுக்குப் பிறகு அவள் என்னிடம் வந்து, "அந்த சொப்பனம் கிடைத்து விட்டதா?" என்று கேட்டாள்.

நான், “இல்லை, தேனே, எனக்குக் கிடைக்கவில்லை; அவர் எனக்கு வெளிப்படுத்தி தரவில்லை” என்றேன்.

**173.** ஓரிரண்டு வாரம் கழித்து அவள் திரும்பவும் வந்து, “சகோ. பிரான்ஹாமே, அந்த சொப்பனத்தைக் குறித்தென்ன?” என்று வினவி னாள்.

நான், “எனக்குத் தெரியாது” என்று சொன்னேன். அவள் ஏமாற்ற மடைந்தது போல் காணப்பட்டாள்.

**174.** இதை ஞாபகம் கொள்ளுங்கள். நீங்கள் என்னிடம் ஏதாவ தொன்றைக் கேட்டு, அதை நான் தேவனிடத்திலிருந்து பெறவில்லை என்றால், எனக்கும் கூட ஏமாற்றம் உண்டாகிறது. ஆனால் நான் மாய்மாலக்காரனாக அல்லது பொய்யனாக இருக்க மாட்டேன். உங்க ளிடம் நான் உண்மையையே எடுத்துரைப்பேன். அவர் என்னிடம் கூறு வாரானால், அதை நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்; அவர் கூறா மல் போனால், நானும் கூறமாட்டேன். அவ்வளவுதான் என்னால் செய்ய முடியும். அவ்விதமாக நீங்கள் என்னை நம்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**175.** அந்த சொப்பனத்தின் அர்த்தம் என்னவென்று என் மனதில் அறிந்திருந்தேன். ஆனால் அது சரியென்று எனக்கு எப்படித் தெரியும்? அதை நான் மறுபடியும் காண வேண்டும். கர்த்தருடைய நாமத்தில் நான் சொப்பனத்துக்கு அர்த்தம் உரைத்து, அது அவ்விதமாக இருக்கவில்லை என்று எப்பொழுதாவது எந்த ஒரு இடத்திலுள்ள யாருமே தன் விரலைச் சுட்டிக் காட்டி என்னை குற்றப்படுத்த முடியாது. ஆம், ஐயா! நான் கர்த்தருடைய நாமத்தில் உரைத்த ஏதொன்றும் அதேவிதமாக நிறைவேறாமல் போனதில்லை. ஏனெனில் நான் – அது அவர். அப்பொழுது அது என் பொறுப்பலலர, அது அவருடைய பொறுப்பாகி விடுகிறது.

**176.** நான், “பார் ட்ரூடி, நாம் அரிசோனாவுக்குப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். நீ அங்கு அடைந்த பிறகு நான் உன்னிடம் வந்து, “**கர்த்தர் உரைக்கிறதாவது**; உன் தம்பி (சிறு ஜானி, அவனுடைய வயிறு எப்பொழுதும் திறந்திருக்கிறது என்று நான் கேலி செய்வது வழக்கம்)... நான் அவளிடம், “அவன் தெருவில்

வாகனம் ஏறி மரித்துப் போனான் என்று வைத்துக் கொள்வோம். நான் உன்னிடம் 'என்ன நடக்கப் போகிறதென்று உனக்குத் தெரியும், அவன் தெருவில் வாகனம் ஏறி மரித்துப் போவான்' என்கிறேன். நீ என்னிடம் வந்து, "சகோ. பிரன்ஹாமே..." என்பாய். அல்லது அவனை சகோ. பிரான் ஹாமிடம் கொண்டு செல்லுங்கள்" என்பாய். அதன்பிறகு நீ என்னைத் தேடிக் கொண்டு வந்து, அப்பொழுது நான் வெள்ளை சூட் அணிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனுடன் படிக்ககட்டில் நின்று பேசிக் கொண்டிருப்பேன். நான் ஜானியின் மேல் கை வைப்பேன். அவன் உயிர்பெற்று ஓடிப்போவான்" என்று சொன்னேன். நான் அவளிடம், "அதே விதமாக நீ மேற்கு பிரதேசத்துக்கு செல்கிறாய், முதலாவதாக என்ன தெரியுமா, ஒரு நாள் உன் தாயார் கதறுவதையும், உன் தந்தை கதறுவதையும் நீ கேட்ககிறாய். நீ பார்த்த போது, ஜானி வாகனம் ஏறி மரித்துப் போயிருப்பதைக் காண்கிறாய். நீ என்ன செய்வாய்?" என்று கேட்டேன். பாருங்கள்? நீங்கள் என்னை நம்புகிறீர்கள். பாருங்கள்? உங்களுக்கு என்மேல் நம்பிக்கை இருக்க வேண்டுமென்று விரும்பு கிறேன். நான் எதையும் ஊகித்து உங்களிடம் கூறப் போவதில்லை. உங்களிடம் நான் உண்மையைக் கூறுவேன். இல்லையென்றால் ஒன்றை யும் கூற மாட்டேன். நான் அவளிடம், "அதன் பிறகு நீ என்னிடம் வந்து, 'ஓ, சிறு ஜானி' – அல்லது நீ உன் தாயிடம் வந்து, 'ஓ, சிறு ஜானி வண்டி ஏறி கொல்லப்பட்டான். அவன் மரித்துப் போனான். அவன் மரித்துப் போனான். அவன் மரித்துப் போனான்' என்று கூறுகிறாய் என்று வைத்துக் கொள்வோம்.

177. டாக்டர் வருகிறார். அவனுடைய கண்களை திறந்து பார்க்கி றார். அவனுடைய இருதயத்தை. அவனுடைய மூச்சை பரிசோதிக்கிறார். அவர், "அவன் இறந்து விட்டான். அவனை சவக்கிடங்குக்கு கொண்டு செல்லுங்கள்" என்கிறார்.

அப்பொழுது நீ, "ஒரு நிமிடம் பொறுங்கள்! ஒரு நிமிடம் பொறுங் கள்! அவனை என் கரங்களில் ஏந்திக் கொள்கிறேன்; நாம் நடக்கத் தொடங்குவோம்" என்கிறாய். ஆமென்.

"ப்ரூடி, நீ எங்கே இருக்கிறாய்?"

"எனக்குத் தெரியாது"

"உன் கரங்களில் என்ன?" இறந்து போன உன் தம்பியை நீ கரங்களில் ஏந்திக் கொண்டேயிருக்கிறாய். நீ அப்படியே தொடர்ந்து தெருவில் நடந்து சென்று கொண்டேயிருக்கிறாய். ஜனங்கள் "அந்தப் பெண்ணுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்கின்றனர். இல்லை, ஐயா! அவள் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைக் கொண் டிருக்கிறாள். என்ன நடக்கப் போகிறது?

**178.** முதலாவது என்ன தெரியுமா? நீ உன் தகப்பனிடமும் தாயிடமும், "பொறுங்கள், நாம் சகோ. பிரன்ஹாமைக் கண்டு பிடிப் போம். அவர் வெள்ளை சூட் அணிந்துள்ள ஒரு மனிதனுடன் படிக்கட்டுகளில் நின்று பேசிக் கொண்டிருப்பார். அதோ அவர் அ;கு நின்று கொண்டிருக்கிறார். என்ன நடக்கிறதென்று பாருங்கள்" என்பாய். உன் மனதில் எவ்வித சந்தேகமுமில்லை. நீ என்னிடம் நடந்து வந்து, "சகோ. பிரன்ஹாமே, நீங்கள் என்னிடம் என்ன கூறினீர்கள் என்று ஞாபகம் உள்ளதா?" என்பாய்.

"ஆம், ட்ரூடி, ஜானி எழுந்திரு" அவன் குதித்தெழுந்து தெருவில் ஓடிப்போவான்.

**179.** நான் என் மனதில் சரியென்று படும் சில காரியங்களை ஊகித்து உங்களிடம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று சொல்லி விட்டு அது தவறாயிருந்து, அது நடக்காமல் போனானல், அது நிறைவேறாமல் போனால், அந்தப் பையனின் மரணத்தைக் குறித்து நீ பயம் கொண்டிருப்பாய். அவனைக் கொண்டு வர வேண்டுமா வேண்டாமா என்று உனக்குத் தெரியாது.

**180.** உங்களுக்கு உதவி செய்ய தேவன் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அது உங்களை வெட்டினாலும், நோகப்பண்ணினா லும் என்ன செய்தாலும், அதை நான் கூறியே ஆக வேண்டும்.

கேள்விகளும் பதில்களும் (COD 2:21), ஆகஸ்டு 30, 1964 காலை

# நீங்கள் தொங்கிக் கொண்டு நரகத்தைக் கடக்கிறீர்கள்

## "YOU'RE PASSING OVER HELL"

**178.** பாவம், தேவனுடைய பிரணமாத்தை மீறினதன் காரணமாக, ஒரு வார்த்தையை முறித்ததன் காரணமாக, ஒரு நொடியில் தோன்றி னது. இன்றிரவு, என் சகோதரரே, உங்கள் ஆத்துமா சங்கிலியால் நரகத்தின் மேல் தொங்கவிப்பட்டிருக்கிறது. அந்த சங்கிலி வேதசாஸ் திர பள்ளியின் போதகமல்ல, அந்த சங்கிலி நீங்கள் வாழ்ந்து கொண் டிருக்கும் ஏதோ ஒரு ஸ்தாபனமோ அல்லது அதன் கோட்பாடோ அல்ல. அந்த சங்கிலி தேவனுடைய வார்த்தை! மனிதகுலம் வாழ்வதற் கென்று தேவன் தமது வார்த்தையை அதற்கு கொடுத்தார். ஏவாள் அதன் ஒரு சிறு இணைப்பை மாத்திரமே முறித்து போட்டாள்... எந்த ஒரு சங்கிலியும் அதன் மிகவும் பலவீனமான இணைப்பைக் காட்டிலும் பலமுள்ளதல்ல. நீங்கள் அதிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துப் போடும்போது... அது வேதாகமத்தின் முதல் புத்தகம்.

இயேசு வேதாமத்தின் நடுவில் வந்து, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த் தையினாலும் பிழைப்பான்" என்றார். அது வேதாகமத்தின் நடுபாகம்.

வேதாகமத்தின் கடைசி புத்தகம், "ஒருவன் இதிலிருந்து ஒரு வார்த்தை எடுத்துப் போட்டால் (ஒரு வார்த்தைக்கு தவறான அர்த்தம் உரைத்தால்), அவன் பங்கை ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப் போடு வேன்" என்கிறது. நீங்கள் தேவனுடைய வார்த்தையில் தொங்கிக் கொண்டு நரகத்தைக் கடக்கிறீர்கள். **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைத் தவிர வேறுயாரும் வேறொன்றையும் உங்களுக்குள் திணிக்க வேண்டாம்.

அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

# தேவனுடைய வார்த்தையை நீங்கள் சந்தேகிக்கவோ அல்லது தவறான இடத்தில் பொருத்தவோ கூடாது

## "CAN'T DOUBT OR MISPLACE ONE WORD OF GOD"

தேவனுடைய வாக்குத்தத்தத்தை சிறிது சந்தேகித்ததன் விளைவாக தேவனுடைய திட்டம் தடைபடுவதை நாம் காண்கிறோம். அவ்வாறே பாவமும் ஏதேன் தோட்டத்தில் தொடங்கினது. பாவத்தினால் மரணம் அங்கு பிரவேசித்தது – தேவனுடைய ஒரே ஒரு வார்த்தை தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதனாலும், சந்தேகிக்கப்படுவதனாலும் இது நிகழ் கிறது. தேவனுடைய வார்த்தையை நீங்கள் சந்தேகிக்கவோ அல்லது தவறான இடத்தில் பொருத்தவோ கூடாது. ஏனெனில் அது "**கர்த்தர் உரைக்கிறதாவது.**"

சபைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் சாராள் என்பவள் தேவ னுடைய வாக்குத்தத்தத்தை அடிப்படையாய் கொண்டுள்ள அவருடைய மூலதிட்டத்தை சந்தேகிக்கிறாள். அவள், "என் கணவனான ஆபிர காமே, இந்த அழகான அடிமைப் பெண்ணை ஏற்றுக்கொண்டு அவளுக்கு கணவனாயிரும். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குமாரனை தேவன் அவள் மூலம் தருவார். அந்த குழந்தையை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறியிருப்பாள். பாருங்கள், ஒரு சிறு பாகத்தை அசட்டை செய்தல் தேவனுடைய முழு திட்டத்தையே மாற்றி விட்டது. தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றையும், "**கர்த்தர் உரைக்கிற தாவது**" என்னும் விதத்தில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவ னுடைய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமாயிருக்கிறது.

வித்து பதருடன் சுதந்தரவாளியாயிருப்பதில்லை, பெப்ருவரி 18, 1965, பக்கம் 13

# ஆகாரம் என்றால் என்னவென்பதை அறிந்து கொள்ள

## "TO KNOW WHAT THE FOOD IS"

எங்கள் பரம பிதாவே, நீர் சபைக்கு அளித்த உமது கடைசி கட்டளை: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதாம். அது ஒரு கட்டளை, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" (மாற்கு 16:15–18). ஓ, யேகோவா கழுகே, இன்றிரவு உமது குஞ்சுகளுக்கு உமது வார்த்தையாகிய ஆகாரத்தை ஊட்டுவீராக. அவர்களுக்கு அந்த ஆகாரம் அவசியமாயுள்ளது. ஆகாரம் என்றால் என்வென்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றால் என்னவென்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒருவர் மேல் ஒருவர் அவர்கள் கரங்களை வைத்தால் அவர்கள் சொஸ்தமாவார்கள் என்று நீர் வாக்களித்திருக்கிறீர்.

வித்து பதருடன் சுதந்தரவாளியாயிருப்பதில்லை, பெப்ருவரி 18, 1965, பக்கம் 45

# இது என் செய்தியைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாத்திரமே

## "TO THEM THAT FOLLOWS THIS MESSAGE ONLY"

**299.** இது என் சபைக்கு மாத்திரமே – என் சபை மாத்திரம் அல்ல..., என்னை விசுவாசித்து என்னைப் பின்பற்றும் சிறு மந்தை உள்ளதே; இது அவர்களுக்கு மாத்திரமே.

**300.** அன்றொரு நாள், நான் எதை உங்களிடம் கூறினாலும் அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக அவரிடத்திலிருந்து வர வேண் டும் என்று அறிந்தவனாய், அவர் அதை எனக்கு வெளிப்படுத்தித் தந்த போது, அதற்கு ஆதாரமான வேதவசனங்களும் எனக்குக் கிடைக்கப் பெற்றன. நான், "கர்த்தராகிய தேவனே, இதை எப்படி என் சபைக்கு எடுத்துக் கூறுவேன்? இதன் விளைவாக அநேக பிரிவினைகள் ஏற்பட வழியுண்டே. ஆண்கள் முற்றத்திலும் மற்றவிடங்களிலும் உட்கார்ந்து கொண்டு, "அவளை விட்டு விடலாமா?" என்றும், ஸ்திரீகள் "என் கணவரை விட்டுவிடலாமா?" என்றும் சிந்திக்கத் தொடங்கி விடுவார் களே, கர்த்தாவே நான் என்ன செய்வேன்?" என்று முறையிட்டேன்.

**301.** ஏதோ ஒன்று என்னிடம், "மலைக்குப் போ, நான் உன்னிடம் பேசுவேன்" என்றது.

**302.** நான் மலையின் மேலிருந்த போது... டூசானில் அவர்கள் அதை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று நான் அறியவில்லை. ஆசிரி யைகள் தங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளை என் சிறு பெண் பிள்ளை யையும் மற்றவர்களையும் அறையிலிருந்து வெளியே அழைத்து, "மலை யின் மேல் பாருங்கள். நெருப்பு உமிழ்கிறது போல் காணப்படுகின்ற சொகுசாவின் நிறம் கொண்ட **மேகம்** மேலே சென்றும் கிழே வருவதும், மேலே சென்றும் கீழே வருவதுமாயுள்ளது" என்றனர்.

**303.** திருமதி ஈவான்ஸ், இங்கிருக்கிறீர்களா? ரொனி இங்கிருக் கிறாயா? நான் மலையிலிருந்து கீழே இறங்கி வந்து பெட்ரோல் நிறைக்கும் இடத்தை அடைந்த போது (அங்குள்ள ஈவான்ஸின் பெட்ரோல் நிறைக்கும் இடம்), இந்த வாலிப பையன் என்ன கூறப் போகிறான் என்று அறிவதற்கு முன்பே – அவன் கூறினது என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவன் "சகோ. பிரன்ஹாமே, நீங்கள் மலையின் மேல் இருந்தீர்கள் அல்லவா?" என்றான்.

**304.** நான், "ரொனி, நீ என்ன கூறுகிறாய்? இல்லை" என்றேன் பாருங்கள்? அவன் என்ன செய்கிறான் என்று பார்ப்பதற்காக. அநேக

முறை காரியங்கள் நிகழ்கின்றன. அவைகளை நான் ஜனங்களிடம் கூறுவது கிடையாது. அது... என்னவென்றால், அவை நிகழ்வதை அதிகமாக நீங்கள் காணும் தோறும், அது வழக்கமான ஒன்றாகி விடுகிறது. பாருங்கள்? நான் ஜனங்களிடம் கூறுவது கிடையாது. நான், “ரொனி, நீ என்ன...” என்றேன்.

**305.** அவன், “நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்பதை நான் உங்களுக்கு காண்பிக்க முடியும். நான் அம்மாவை அழைத்தேன். நாங்கள் இருவரும் நின்று கொண்டு, வானத்தில் தொங்கிக் கொண் டிருந்த அந்த **மேகம்** மேலும் கீழும் செல்வதை கவனித்தோம். 'சகோ. பிரன்ஹாம் அங்கு மேலே எங்கோ ஓரிடத்தில் உட்கார்ந்து கொண் டிருக்க வேண்டும்' அது தேவன் அவருடன் பேசிக் கொண்டிருப்ப தாகும் என்று நான் சொன்னேன்” என்றான்.

**306.** நகரத்திலுள்ள ஜனங்கள் எல்லோருமே **அதை** கண்டனர், மேகங்கள் இல்லாத பிரகாசமான ஒரு பகல் வேளையில், இந்த பெரிய சொகுசாவின் நிறமுள்ள **மேகம்** புனலை (funnel) போன்று கீழே இறங்கி வந்து மறுபடியும் மேலே சென்று விரிவடைந்தது.

**307.** நண்பர்களே (நான் முடிக்கப்போகிறேன். இதன்பிறகு நீங்கள் வீடுகளுக்குச் செல்லலாம்). நான் இப்பொழுது கூறப்போவது, அந்த நேரத்தில் எனக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். எனவே அதை கேட்கத் தவறாதீர்கள்.

**308.** எங்களைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாத்திரமே – என்னையும் இந்த செய்தியையும் பின்பற்றுகிறவர்களுக்கு மாத்திரமே – இதைக் கூறுகிறேன், வெளியிலுள்ளவர்களுக்கு அல்ல, இது தேவனுக்கு முன்பாக என்னைக் குறித்து சாட்சி கொடுக்கும். இது இந்த குழு விற்கு மாத்திரமே.

**309.** வேசாஸ்திரம் தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டதன் விளைவாக நாம் இந்த குழப்பத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டோம். அது சரியா? அதன் விளைவாகத்தான் பெண்களாகிய நீங்கள் இரண்டாம் முறை விவாகம் செய்து கொண்டீர்கள். ஆண்களாகிய நீங்கள் – தவறாக வியாக்கியானம் செய்யப்பட்ட வேத சாஸ்திரத்தின்

விளைவாக. *அவர்* என்னிடம் கூறின ஒன்றை இப்பொழுது உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

**310.** நமது சிருஷ்டி கர்த்தராகிய தேவன் இவ்வுலகில் இருந்தபோது (இயேசு கிறிஸ்துவாக), இந்த கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களைக் கொண்டு செல்வதற்காக அனுப்பப்பட்ட அவருடைய விடுவிக்கும் தீர்க்கதரிசி (மோசே) ஜனங்கள் அந்நிலையில் தள்ளுதற் சீட்டை எழுதிக் கொடுக்க அனுமதித்தான் என்று இயேசு கூறினார். மோசே, "அவன் அப்படி செய்வானாக" என்றான். தள்ளுதற்சீட்டை எழுதிக் கொடுக்கக்கூற ஜனங்களிடம் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாக மோசேயை தேவன் அனுமதித்தார்.

**311.** 1 கொரிந்தியர் 7ம் அதிகாரம் 12ம், 15ம் வசனங்களில் புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசியாகிய பவுல் இதே விதமான சூழ்நிலை தன் சபையில் இருக்கக் கண்டு. "கர்த்தர் அல்ல. நானே சொல்லுகிறதாவது" என்றான். அது சரியா? விவாகரத்து சூழ்நிலை காரணத்தால்.

**312.** "ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை." ஆனால் மோசே அவ்வாறு கூற அனுமதிக்கப்பட்டான், அது நியாயமானது என்று தேவன் அங்கீகரித்தார். பவுலுக்கும் கூட, அவன் தன் சபையை அந்நிலையில் கண்டபோது, உரிமையளிக்கப்பட்டது.

**313.** இதை நீங்கள் உண்மையென்று நம்பி, இது தேவனிடத்திலிருந்து வந்ததென்று விசுவாசியுங்கள், அவருடைய மேகமும், என்னை இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ள அவருடைய செய்தியும் காண்பிக்கும் உறுதிப்படுதலை ஆதாரமாகக் கொண்டு, மலையின் மேல் தேவன், என்னை அதே காரியத்தை செய்யவும், நீங்கள் இப்பொழுது இருக்கிறவிதமாகவே இருந்து, இனிமேல் அப்படி செய்யாதிருக்கும்படி உங்களுக்கு உத்தரவு கொடுக்க அனுமதிக்க மாட்டாரா என்ன! ***உங்கள் மனைவிகளுடன் சென்று சமாதானமாயிருங்கள். ஏனெனில் காலதாமதமாகிவிட்டது. கர்த்தருடைய வருகை சமீபமாயுள்ளது! உறவுகளை முறித்து போடுவதற்கு நமக்கு நேரமில்லை. அதை மறுபடியும் செய்ய துணிச்சல் கொள்ளாமலிருங்கள்! நான் என் சபைக்கு மாத்திரமே இதை கூறுகிறேன்.*** நீங்கள் விவாகம் செய்து கொண்டிருந்தால் – ஒரு தெய்வீக வெளிப்பாடாகிய இதை நான் கூறத்தக்கதாக, அந்த மலை

யின் மீது, தேவன் எனக்கு அதை சாட்சியாக கொடுத்தார், ஏனென் றால் ஏழு முத்திரைகளின் திறக்கப்படுதலால்தான், மேலும் இது தேவனுடைய வார்த்தையில் இருக்கின்ற ஒரு கேள்வியாகும். **அவர்கள் இப்பொழுதுள்ள விதமாகவே வாழ்ந்து இனி பாவஞ்செய்யாதிருப்பார்களாக.**

**314.** ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. அது உண்மை. அப்படி யிருக்கவில்லை, முடிவிலும் அப்படியிருக்காது! ஆனால் நவீன சூழ் நிலையில், தேவனுடைய ஊழியக்காரன் என்னும் முறையில் – என்னை அவருடைய தீர்க்கதரிசியென்று அழைத்துக்கொள்ள மாட்டேன். அதற் கென்று நான் அனுப்பப்படாவிட்டால், தீர்க்கதரிசி வரும்போது, அவருக் கென்று ஒரு அஸ்திபாரம் இருக்கத்தக்கதாக அதை போட்டுக் கொண் டிருக்கிறேன். எனவே நவீன சூழ்நிலையில். **உங்கள் மனைவிகளுடன் இப்பொழுது வீடு சென்று வாழ்க்கை நடத்தும்படி உங்களுக்கு கட்டளை யிடுகிறேன். அவளுடன் நீங்கள் மகிழ்ச்சியாயிருந்தால், அவளுடன் வாழ்ந்து குழந்தைகளை தேவபக்தியில் வளர்ப்பீர்களாக! ஆனால் நீங்கள் மறுபடியும் அதை செய்வீர்களானால், தேவன் உங்கள் மேல் இரக்கமா யிருப்பாராக! அப்படிப்பட்ட ஒன்றை செய்யாதிருக்கும்படி உங்கள் பிள்ளை களுக்கு போதியுங்கள். அவர்களை தேவபக்தியில் வளர்ப்பீர்களாக!** நீங்கள் அந்த விதமாக இப்பொழுது இருப்பதால், நாம் வாழ்ந்து கொண் டிருக்கும் இந்த கடைசி சாயங்கால நேரம் வரைக்கும் அப்படியே இருந்து, கிறிஸ்துவின் தேவன் நமக்கு வைத்திருக்கும் பரம அழைப் பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருவோம். அங்கு எல்லாமே கைகூடும்.

**315.** உங்களை இன்றிரவு காணும் வரைக்கும் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் ஜெபம் செய்வோம்.

**316.** கர்த்தராகிய தேவனே, உமக்கு நன்றி சொல்லுகிறோம். உமக்கு ஸ்தோத்திரத்தையும் ஏறெடுக்கிறோம். மோசேயை அனுமதித்த மகத்தான யேகோவா இன்றும் மாறாதவராயிருக்கிறீர். உம்முடைய ஊழியக்காரனாகிய மோசே ஜனங்களிடம் என்ன கூறினான்? தேவனே? அவர்கள் தள்ளுதற்சீட்டை எழுதிக் கொடுக்கக் கூறும்படி அவனை அனுமதித்தர். மோசே பழைய ஏற்பாட்டை எழுதினது போல், அந்த மகத்தான அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டை எழுதி னான். மோசே நியாயப்பிரமாணத்தையும் நியாயப்பிரமாணத்தின் யுகத்

தையும் எழுதி வைத்தான். அநேக தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் அதில இடம் பெற்றன. ஆனால் மோசேயோ நியாயப்பிரமணாத்தை எழுதினான். அவர்களுடைய இருதயக்கடினத்திமித்தம், அவர்கள் தள்ளுதற்சீட்டை எழுதி தள்ளிவிடலாமென்று கூறும்படி நீர் மோசேயை அனுமதித்தீர்.

**317.** அந்த மகத்தான பரிசுத்தவானும், புதிய ஏற்பாட்டை எழுதின வனுமான பவுல், "இந்த சூழ்நிலையில் நான் சொல்லுகிறதாவது கர்த்தர் அல்ல" என்கின்ற உறுதியான வலியுறுத்தலையும் கூற முடிந்தது.

**318.** கர்த்தராகிய தேவனே, உலகத்தின் முடிவு காலத்தில் இன்றும் அவ்வாறேயுள்ளது. நாங்கள் இங்கு தேவனுடைய இரக்த்தின் கீழ் இருந்து கொண்டு விரைவில் உம்முடைய சமூகத்தில் நாங்கள் பதில் கூற வேண்டுமென்று அறிந்திருக்கிறோம். கர்த்தாவே, நீர் எங்களுக்கு எத்தனையோ நன்மைகளை செய்திருக்கிறீர். இது உம்மிடத்தில் இருந்து வந்ததென்று ஜனங்கள் அதை இறுகப்பற்றிக் கொள்வார்கள் என்று உறுதி கொள்கிறேன். இங்கு உட்கார்ந்திருப்பவரில் அநேகர் சுழல் காற்றில் கர்த்தருடைய ஏழு தூதர்கள் இறங்கி வந்த அடையாளத்தை மலையின் மேல் கண்டு, இன்று அதற்கு சாட்சிகளாயிருக்கின்றனர். அங்கு ஏழு இரகசியங்கள் திறக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டன. அந்த அதே தூதன், அதே திரையில், இது வெளிப்படுத்தப்பட்ட அந்த நாளில், அதே மலையின் மேல்.

**319.** தேவனே, இந்த கிருபையை தேவன் அவர்களுக்கு அளித்து விட்டார் என்று நன்றியுள்ளவர்களாக ஜனங்கள் வீடு செல்லும்படி வேண்டிக் கொள்கிறேன். கர்த்தாவே, உமது அனுமதியைப் பெற்று அதை நான் உரைத்தேன். உமது அனுமதியைப் பெற்றே அதை நான் உரைத்தேன். உமது அனுமதியைப் பெற்றே இதை நான் கூறினேன். ஜனங்கள் நன்றியுள்ளவர்களாயிருந்து, இந்த பாவத்தை மறுபடியும் செய்யாதிருப்பார்களாக. எந்த பாவத்தையும் அவர்கள் செய்யாமல், உம்மை முழு இருதயத்தோடும் நேசிக்க அருள்புரியும். கர்த்தாவே, இந்த குடும்பங்களுக்கு நீர் மகிழ்ச்சியளித்து, அவர்கள் வளரவும், பிள்ளைகளை தேவபக்தியில் வளர்க்கவும் கிருபையருளும்.

**320.** கர்த்தாவே, என் இருதயத்திலிருந்த செய்தி அளிக்கப்பட்டு விட்டது. எனக்கு செய்யத்தெரிந்த எல்லாவற்றையும் நான் செய்து

விட்டேன். அநேக வாரங்களாக, மணிக்கணக்காக சாத்தான் என்னுடன் போராடினான். எனக்கு உறக்கமேயில்லை. கர்த்தாவே, இதை நான் ஜனங்களுக்கு கட்டளையிடுகிறேன். அவர்கள் இதை ஆராய்ந்து பார்த்து, சென்று, உமக்காக வாழ்வார்களாக! கர்த்தாவே இதை அருளும். என் தோளின் மேலிருந்த பாரம் போய் விட்டது. அவர்கள் உம்முடைய கரங்களில் உள்ளனர். அவர்களை ஆசீர்வதிக்கு மாறு வேண்டிக்கொள்கிறேன்.

**321.** கர்த்தாவே, வியாதிப்பட்டவர்களுக்காகவும் அவதியுறுபவர் களுக்காகவும் இங்கே வைக்கப்பட்டுள்ள அந்த கைக்குட்டைகளை ஆசீர்வதிப்பீராக. இந்த இரவு மிகவும் மகத்தான, மிகவும் வல்லமை யுள்ள இரவுகளில் ஒன்றகத் திகழ்ந்து, எல்லோரும் சுகமடைவார்களாக. கர்த்தாவே, அதை அருளும். எங்கள் அனைவரையும். ஒருமித்து ஆசீர் வதியும்.

**322.** சிருஷ்டிப்பின் தேவன் ஆதிமுதற்கொண்டு என்ன நடந்த தென்று காண்பித்து, இக்கடைசி நாட்களில் நாம் அடைந்துள்ள இந்த குழப்பமான சூழ்நிலையில் நமக்கு மறுபடியும் கிருபையை அருளின படியால், நாங்கள் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் வீடு செல்ல அருள்புரியும், ஓ, மகத்தான நித்திய தேவனே! இதற்காக நாங்கள் எவ்வளவாய் உமக்கு நன்றி செலுத்துகிறோம்! எங்கள் இருதயங்கள் சந்தோஷத்தினால் களிகூர்ந்து, உமக்கு விரோதமாக பாவம் செய்வ தற்கு எங்களுக்கு வேறெந்த வாஞ்சையும் எழாமலிருப்பதாக. இயேசு வின் நாமத்தில். ஆமென்.

*நேசிக்கிறேன்* (அவரை நீங்கள் ஏன் நேசிக்கக் கூடாது?)

*நேசிக்கிறேன்.*

*முந்தி அவர் என்னை நேசித்ததால்*

*சம்பாதித்தார் என் இரட்சிப்பை*

*கல்வாரி மரத்தில்*

**323.** போதகர்கள் விளங்கிக் கொள்ளும்படி இதை இப்பொழுது கூறுகிறேன்: இது என் செய்தியைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாத் திரமே.

**324.** ஓ, நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கிறீர்களா? நான் உங்களிடம் உண்மையைக் கூறினேன். அது முழுவதும் **கர்த்தர் உரைக்கிறதாவது.**

**325.** இப்பொழுது நாம் எழுந்து நின்று, நமது கரங்களையுயர்த்தி, "நான் அவரை நேசிக்கிறேன்" என்னும் பாடலை மறுபடியும் பாடுவோம். "அவருடைய கிருபைக்காக அவரை நேசிக்கிறேன்; அவருடைய இரக் கத்துகாக அவரை நேசிக்கிறேன்; அவருடைய வார்த்தைக்காக அவரை நேசிக்கிறேன்." கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசிகளுக்கு வந்தது.

விவாகமும் விவாகரத்தும், பெப்ரவர் 21, 1965

## நான் கடல் கடந்து செல்கிறேன்

## "I'M RETURNING ACROSS THE SEA"

ஒரு சிறு ஆடு எங்கோ உள்ளது. அது மந்தைக்குள் வரும் வரைக்கும் அவர் திருப்தி கொள்ளமாட்டார். தேவனுடைய உதவியி னாலும், தரிசனத்தின் மூலமாகவும், **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதி னாலும், நான் கடல் கடந்து செல்கிறேன். அந்த கடைசி சிறு ஆடு ஒருக்கால் கறுப்பு இனத்தை சேர்ந்திருக்கலாம். எனக்குத் தெரிந்த மட்டில், அது அங்கிருக்க வகையுண்டு. அங்குள்ளவர்கள், அவர் களுக்கு ஆத்துமா உண்டு என்பதைக் கூட அறியாமலிருக்கிறார்கள். ஆனால் தேவனோ வித்தியாசமாய் அறிந்திருக்கிறார். அது எங்கிருப் பினும் என் வாழ்க்கையின் கடைசி நாள் வரைக்கும் அதை தேடிக் கண்டுபிடிப்பேன்.

ஈஸ்டர் முத்திரை, ஏப்ரல் 10, 1965, பக்கம் 64

# நீங்கள் எத்தகைய மனப்பான்மையைக் கொண்டுள்ளீர்கள் என்பதை அது பொறுத்தது

## "IT DEPENDS ON WHAT ATTITUDE YOU TAKE"

அன்று காலை நான் எடுத்துக்கொள்ளப்பட்டதை நினைவு கூருகிறேன். என் மனைவி என்னுடன் கட்டிலில் படுத்திருந்தாள். நான் எழுந்து பார்த்தபோது அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். நான், “நீ ஆண்டவருக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தால், அதை துரிதமாக செய். எனெனில் உனக்கு 50 வயது கடந்துவிட்டது” என்று என் மனதில் எண்ணினேன். பரிசுத்த ஆவியானவர் என்னை எடுத்துச் சென்றார். நான் அங்கு சென்று பார்த்த போது, அந்த பரிசுத்தவான்களைக் கண்டேன். நான் சுவிசேஷத்தின் ஊழியன் என்னும் நிலையில், இந்த புனித புத்தகம் எனக்கு முன்னால் வைக்கப் பட்டு, உங்கள் முன்னிலையில் நான் இப்பொழுது நின்றுகொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக அந்த பரிசுத்தவான்களைக் கண்டேன்.

நான் கர்த்தருடைய நாமத்தில் உரைத்தது ஏதாகிலும் நிறைவேறா மல் இருந்ததுண்டா? எனக்குத் தெரியப்படுத்துங்கள். ஒவ்வொரு முறையும் மேடையின்மேல் அது பிழையின்றி இருந்ததல்லவா? அவர் கூறின விதமாகவே ஒவ்வொரு முறையும் அது நிகழ்ந்ததல்லவா? அது “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்பதாக இருந்து வந்துள்ளது.

நான் அங்கு நின்று கொண்டு, காலத்தை நோக்கிக் கொண்டிருந் தேன். அப்பொழுது ஆயிரக்கணக்கான வாலிபரும் வாலிபப் பெண் களும் ஓடிவந்து, தங்கள் கைகளை என் தோள்மேல் போட்டு ஆரவாரம் செயய்தைக் கண்டேன். நான் கீழே பார்த்தபோது, என் உடல் கட்டிலின் மேல் படுத்திருந்தது. காலம் என்னும் திரைக்கும் பின்னால் நான் காண தேவன் என்னை அனுமதித்தார்.

ஓ, ஆண்டவரே, காலம் என்னும் திரைக்கும் பின்னால் காண அனுமதியளியும்.

அது என்ன? நம்மை எடுத்துக்கொண்டு செல்லவிருக்கும் உயிர்ப் பிக்கும் வல்லமை – அந்த மகத்தான உயிர்ப்பிக்கும் வல்லமை.

இந்த கடைசி நாட்களிலும் உயிர்ப்பிக்கும் வல்லமை வந்துள்ளது. அதற்காகத்தான் நான் இப்பொழுது அரிசோனாவில் இருக்கிறேன். "**கர்த்தர் உரைக்கிறதாவது**", ஏதோ ஒன்று நிகழவிருக்கிறது என்று நான் பீனிக்ஸிலுள்ள இந்த மேடையிலிருந்து கூறினதைக் கேட்ட அநேகர் இப்பொழுது இங்கு அமர்ந்துள்ளனர் (எத்தனை பேருக்கு அது ஞாபகமுள்ளது?)

ஏழு தூதர்கள் இறங்கி வருவதை நான் கண்டேன். 'லைஃப்' பத்திரிகை அதை, 27 மைல் உயரம் 30 மைல் விட்டமுள்ள மிதந்து கொண்டிருக்கும் மேகமாக வெளியிட்டது. ஃபிரட் சாத்மனும், பின்னால் அமர்ந்துள்ள ஜீன் நார்மனும், மலையின் மேல் அந்த ஏழு தூதர்கள் தோன்றினபோது அங்கு இருந்தார்கள் அல்லாவா? அநேக மைல்கள் சுற்றிலும் அது மலையைக் குலுங்கச் செய்தது. அங்கு ஏழு தூதர்கள் (கையில் வெள்ளிப் பட்டயத்துடன்) என்னிடம், "நீ வீடு திரும்பி ஏழு முத்திரைகளைத் திற" என்றனர். அதன்மூலம், 'விவாகமும் விவாகரத்தும்' என்பதைக் குறித்த உண்மையான இரகசியம், 'சர்ப்பத்தின் வித்து', இன்னும் முரணான கருத்துக்களைக் கொண்டிருந்த அநேக காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அது "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதாம்.

அது என்ன? உயிர்ப்பிக்கும் வல்லமை சபைக்கு வந்து, நாம் அணுகிக்கொண்டிருக்கும் அந்த நேரத்திற்காக அவளை ஆயத்தப் படுத்துகின்றது – உயிர்ப்பிக்கும் வல்லமை. ஓ தேவனே, அதைப் பெற்றுக்கொள்ள எங்களுக்குஉதவிபுரியும். அதை விசுவாசிக்க எங்களுக்கு உதவிபுரியும்.

பாருங்கள்? அது உங்களுக்கு நன்மை பயக்குமா இல்லையா என்னும் விஷயத்தில், நீங்கள் எத்தகைய மனப்பான்மை கொண்டுள்ளீர்கள் என்பதை அது பொறுத்தது. நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். நீங்கள் விசுவாசிக்காவிடில், உங்களுக்கு எவ்வித நன்மையும் பயக்காது.

சாமுவேல் ஜனங்களுக்கு முன்பாக நின்றுகொண்டு, "கர்த்தருடைய நாமத்தில் நான் உரைத்த ஏதாகிலும் ஒன்று நிறைவேறாமல் போனதுண்டா? உங்களிடம் நான் எப்பொழுதாவது பணம் கேட்டிருக்கிறேனா?" என்று கேட்டான்.

“இல்லை, ஆயினும் எங்களுக்கு ஒரு இராஜா வேண்டும்.”

சபையும் இன்று அதே நிலையில் உள்ளது. அவர்களுக்கு தங்கள் சொந்த கருத்துக்கள் மாத்திரமே வேண்டும். நீங்கள் கூறுவதில் அவர் கள் சிறிதேனும் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் இவ்விதம் நடந்து கொள்கின்றனர். உயிர்ப்பிக்கும் வல்லமை அங்கில்லை என்பதை அது காண்பிக்கிறது.

“ஆ, நாங்கள் அந்நிய பாஷை பேசுகிறோம். நாங்கள் குதித்து ஆரவாரம் செய்தோம்” என்று நீங்கள் கூறலாம். அதெல்லாம் சரிதான், ஆனால் உயிர்ப்பிக்கும் வலலமை அங்கிருக்குமானால், நீங்கள் அடை யாளம் கண்டு கொள்வீர்கள் – அந்த கழுகுக்குஞ்சு தன் தாயை அடை யாளம் கண்டுகொண்டவிதமாக. அதுவே வார்த்தை. அதுவே “**கர்த்தர் உரைக்கிறதாவது**” அதுதான் முன்னுரைக்கப்பட்டிருந்தது. அது முன்னுரைத்தபடியே நிறைவேறினது.

நாம் மறைவாக உயிர்த்தெழுதலில் இருக்கிறோம் என்பதற்கு சிறிதேனும் சந்தேகமில்லை. பரிசுத்தவான்கள் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஆயத்தப்படுகின்றனர்.

ஈஸ்டர் முத்திரை, ஏப்ரல் 10, 1965, பக்கம் 56–58

## வேகமான செய்தி முழு தேசத்தையும் குலுக்கும்

## "QUICK MESSAGE WILL SHAKE THE WHOLE NATIONS"

இப்பொழுது, என்ன நடக்கிறதென்று கவனியுங்கள். இது கடின மென்று நானறிவேன். இது மருத்துவர் உங்களுக்கு மருந்து கொடுத்து நீங்கள் அதை உட்கொள்ள மறுப்பது போன்றது. நீங்கள் மரிக்க நேரிட்டால், மருத்துவரை குறை கூறாதீர்கள். இது மருந்தைப் போன்றது. நான் பெண்களை வெறுப்பவன் என்று என்னை எப்பொழுதும் குறைகூறிக் கொண்டிருப்பவர்களைக் குறித்தென்ன? பாருங்கள்? இந்த பெண்கள் நடந்து கொள்ளும் விதத்தைக் கவனி யுங்கள், சபை எந்நிலையிலுள்ளது என்பதை நான் உங்களுக்கு காண் பிக்கிறேன். இந்த பெண்களின் நடத்தை இவ்வுலக லவோதிக்கேயாவில்

சரீரபிரகாரமாக – நிர்வாணமாயும், பரிதபிக்கப்படத்தக்கதாயும், குருடாக வும் இருந்து, அவர்கள் அதை அறியாமலிருக்கினறனர்.

ஜனங்கள், இவ்வுலகப் பெண்கள், சபை இவ்வனைத்துமே ஒரே நிலையில் உள்ளன. ஒவ்வொரு முறையும் மாம்சத்துக்குரியது ஆவிக் குரியதற்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளதை கவனியுங்கள்.

என்றாவது ஒரு நாளில் நியாய ஸ்தலத்தில்... நான் கூறுவது பிரபலமாயிராது என்று எனக்குத் தெரியும். அதைக் கூற ஒரு மனிதன் நியமிக்கப்படாவிட்டால், அதை கூறாமலே விட்டு விடுவது நல்லது. ஏனெனில் நீங்கள் ஆள்மாறாட்டம் செய்பவர்களாயிருப்பீர்கள், நீங்கள் நிச்சயம் தொல்லைக்குள்ளாவீர்கள்.

இப்பொழுது, கவனியுங்கள், நான் உண்மையில் ஒரு பெண்ணின் வாயைத் திறந்து அதற்குள் மருந்து ஊற்றி விட்டு, அவள் அதை துப்பிவிடக்கூடாதென்று கருதி, என் கைகளால் அவள் வாயைப் பொத்துகிறேன். ஒரு மருத்துவர் நோயாளிக்கு மருந்தைக் கொடுத்து விட்டு, நோயாளி அதை உட்கொள்ள மறுத்ததன் விளைவாக மரித்துப் போகிறான். நியாய ஸ்லத்தில் தலைமயிர் கத்தரித்தல், குட்டை கால்சட்டை அணிதல் போன்ற குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்படும் போது...

நான் கட்டிடம் கட்ட மாத்திரம் செய்கிறேன். ஏதோ ஒன்று நடப்பதை நீங்கள் காணப்போகும் நேரம் மிக அருகாமையிலுள்ளது. ஏதோ ஒன்று நடக்கப் போகின்றது. இங்குள்ள இந்த பின்புறக்காட்சி அனைத்தும் ஒரு குறுகிய, வேகமான செய்திக்கு அடிக்கல்லை நாட்டு வதாக அமைந்திருக்கும். அந்த செய்தி முழு தேசத்தையுமே குலுக்கும்.

நான் ஏன் பெண்களைத் தெரிந்து கொண்டு பேசுகிறேன். உங்கள் தலையை அடிப்பதற்கு இங்கு ஒன்று கிடக்கிறது. அவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவதற்கும் கூட. என் கையை அவர்கள் வாயின் மேல் இப்படி வைக்கிறேன். இருந்தும், அவர்கள் துப்பிவிடு கிறார்கள். அப்படியிருக்க, யார் மருத்துவரை குறை கூறமுடியும்?

அதற்கு விரோதமாக கூக்குரலிட சத்தங்கள் பதிவு செய்யப்பட்டு நியாயத்தீர்ப்பின் நாளன்று ஜனங்களுக்கு முன்பாக போட்டு

காண்பிக்கப்படும்போது, நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்? அதிலிருந்து நீங்கள் எப்படி தப்பித்துக் கொள்ளப் போகின்றீர்கள்?

உங்கள் விரல்களுக்கு நடுவே அதை உமிழ்ந்து விடுகின்றீர்கள்.

இன்னும் கொஞ்சம் மருந்தை வாய்க்குள் ஊற்றி, தலையை குலுக்கி, நடந்து சென்று, திரும்பவும் வந்து – அதனால் உபயோக மில்லை. இருப்பினும், திரும்பி வந்து மறுபடியும் ஊற்றுகிறேன். அப்படி யானால் யாரைக் குறைகூறுவது? மருத்துவரையல்ல, மருந்தையல்ல, நபரின் மனப்பான்மையை. அது முற்றிலும் உண்மை.

இந்நாட்களில் ஒன்றில், இந்த பாவமுள்ள விபச்சார சந்ததி சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அது பயங்கர மான நாளாயிருக்கும்.

எனக்கு வயதாகிக் கொண்டே சென்று, என் தோள்கள் தொங்கு கின்றன. எனக்குத் தெரியும்... இந்த மேடையின் மேல் 30 ஆண்டுகள், சுவிசேஷ ஊழியத்தில் 33 ஆண்டுகள், அது நீண்ட ஆயுசு. 33 ஆண்டுகள் ஊழியம். எனக்கு ஒரே ஒரு வருத்தம் மாத்திரமேயுண்டு. அதாவது என்னால் 133 ஆண்டுகள் ஊழியம் செய்ய முடியவில்லையே என்று. இந்த மானிட சரீரத்தில் இங்குள்ள போது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க எனக்கு கிடைக்கப் பெறும் கடைசி தருணம் இதுவே. இந்த வார்த்தைக்கு கூடுமான வரையில் உண்மையாக நிற்க – அவர் கூறினவாறே கூற – தேவன் எனக்குதவி செய்வாராக.

அந்த மெதோடிஸ்டு பெண்ணிடம் நீங்கள் எப்படி இதைக் கூற முடியும்? அவள் லவோதிக்கேயா சபையின் காலத்தில் இருக்கிறாள்.

இப்பொழுது நாம் பெந்தெகோஸ்தே பெண்ணை எடுத்துக் கொள் வோம். அவள் குட்டை கால்சட்டை அணியமாட்டாள், அழகுபடுத்தும் பொருள்களை உபயோகிக்க மாட்டாள். அவள் மெதோடிஸ்டு பெண் ணைப் பார்த்து, “பாருங்கள், அவள் இன்னின்னதை செய்கிறாள்” என்கிறாள். அவள் குட்டை கால்சட்டை அணிவதில்லை என்பது உண்மையே. ஆனால் அவள்... அவளே குட்டை தலைமயிருடன் காணப்படுகிறாள். நீங்கள் தேவனில் உயர எழும்பும்போது, எல்லாமே அதிக பாவமுள்ளதாகத் தோன்றுகிறது.

சில சமயங்களில் நான் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் உயர வேறொரு பிரதேசத்துக்குள் என்னை கொண்டு சென்று விடுகிறார். அப்பொழுது எல்லாமே தாறுமாறாகக் காணப் படுகிறது. நான் மறுபடியும் கீழே வரும்போது, ஜனங்களின் பார்வையில் நான் அயோக்கியனாக காணப்படுகிறேன். நான் கடிந்து கொள்ளும் ஒரு... நான் மூடனாக கருதப்படுகிறேன். ஏனெனில் நான் ஒரு பைத்தியக்கார வயோதிபனாக அங்கு நின்று கொண்டு, ஜனங்களை எப்பொழுதும் கடிந்து கொள்பவனாக இருக்கிறேன். ஆனால் நீங்கள் ஒரு முறையாவது அந்த பிரதேசத்துக்கு ஏறி, தேவனுடைய சமுகத்தில் செல்வீர்களானால் – உணர்ச்சிவசப்படுவதனால் அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவர் உங்களை உண்மையாக உயரக் கொண்டு செல்லும்போது, எல்லாமே "இக்கபோத்" என்று எழுதப்பட்டுள்ளது (1 சாமுவேல் 4:21). கர்த்தருடைய மகிமை அனைத்து ஸ்தாபனங்களையும் விட்டுப் போய் விட்டது. அது உண்மை. அவர்கள் யாருமே சரியல்ல.

இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்டு 15, 1965, பக்கம் 26–28

ஒரு நாள் அப்பாலுள்ள நியாயஸ்தலத்தில்... நான் மருந்தை வாயில் ஊற்றி அதை துப்பிவிடாமலிருக்க உங்கள் வாயை என் கைகளால் பொத்திக் கொண்டிருக்கிறேன். நீங்களோ உங்கள் விரல்களின் வழியாக அதை வெளியே துப்பிவிடுகிறீர்கள். அப்படிப்பட்டவர்களை தேவன் ஒரு நாள் நியாயந்தீர்ப்பார். அது "**கர்த்தர் உரைக்கிறதாவது**". அது மூடத்தனமோ அல்லது பைத்தியக்காரக் கிழவன் உணர்ச்சிவசப் பட்டு கூறும் ஒன்றோ அல்ல. அது அப்படியொன்றும் அல்ல, அது கர்த்தருடைய வார்த்தை.

இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்டு 15, 1965, பக்கம் 46

# தேவன் என்ன கூறினார் என்பது நமக்குத் தெரியும்

## "WE KNOW WHAT GOD SAID"

**137.** பலர் இதைச் செய்ய எவ்வளவு ஆசைப்படுகிறார்கள்! "உன்னை உலகம் முழுமைக்கும் நாங்கள் அனுப்புகிறோம்; உனக்கு ஒரு விசேஷ ஆகாய விமானத்தை கொடுக்கிறோம், நீ எங்கு சென்றாலும் உன்னு

டைய கூட்ட ஒழுங்குகளை நாங்கள் பொறுப்பேற்கிறோம், ஆனால் நீ மட்டும் சற்று இணங்கினால்...” என்று கூறுவார்கள். ஓ... இல்லை! தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்று எங்களுக்குத் தெரியும். எப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டாலும், எவ்வளவு ஊதியம் கொடுக்க ஆயத்தமானாலும் சரி, எங்களுக்கு **கர்த்தர் சொல்லுகிறதாவது** மட்டும் வேண்டும். பாருங்கள்? தேவ ஒத்தாசை கொண்டு அதில் மட்டும் நிலைத்து இருக்கப்போகிறோம். பாருங்கள்? வார்த்தை என்ன கூறுகின்றது என்பதை நாம் அறிவோம். தேவன் என்ன கூறினார் என்பது நமக்குத் தெரியும். அது எப்படிப்பட்ட வாக்காய் இருந்தாலும் சரி, எவ்வளவு ஊதியம் அளித்தாலும் சரி, அல்லது இது, அது, என்று நீ எதை உற்பவித்தாலும், எங்களுக்கோ **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதே தேவை. அவர் கூறினதே எங்கள் முதலிடம்.

“நல்லது... அது இரண்டாவது தான்,” என்று சபை சொல்கின்றது. ஆனால் ஆதியிலே தேவன் எதைக் கூறினாரோ அதுதான் நாங்கள் விரும்புவது, அதிலிருந்து ஒன்றை எடுக்கவோ, அல்லது ஒன்றை கூட்டவோ கூடாது. ஏனென்றால் அப்படிச் செய்பவர்களின் பெயர்களை ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுத்துப் போடுவதாக வேதம் கூறுகிறது. சபை என்ன சொல்லுகிறதென்றோ, அல்லது டாக்டர். ஜோன்ஸ் என்ன கூறுகிறார் என்றோ எங்களுக்குக் கவலையில்லை, எங்களுக்கு வேண்டுவதெல்லாம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்ன என்பதே; வார்த்தை என்ன சொல்கிறது என்பதே.

தேவன் தமது வார்த்தையைப் பற்றின சிந்தையை எப்பொழுதாவது மாற்றுவாரா?, ஏப்ரல் 18, 1965

## *சபையின் மாதிரி காட்சி*

## "THE PREVIEW OF THE CHURCH"

சில வாரங்களுக்கு முன்பு ஒரு தரிசனம் கண்டேன். நான் உயர்ந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது சபையின் மாதிரிக்காட்சியைக் (Preview) காண்பதற்காக அழைக்கப்பட்டேன்.

அப்பொழுது நான் கவனித்தேன். என்னுடைய... நான் இந்த பக்கம், மேற்கை நோக்கினவாறு நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது இந்த பக்கத்தில், அழகான ஒரு பெண் கூட்டம் – நன்றாக உடுத்தி, நீண்ட தலை மயிரை பின்பக்கம் கொண்டையிட்டு கொண்டு நீண்ட கை ஆடையணிந்து, பாவாடை முழங்கால் வரைக்கும் தொங்கிக் கொண்டு "யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்து வீரரே, இயேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே" என்னும் பாடலைப் போன்ற ஒரு பாடலின் இசைக்கு ஏற்றாற்போல் காலடிவைத்து, அணிவகுத்து சென்று கொண் டிருந்தனர். நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அவர்கள் கடந்து சென்றனர். அதில் ஏதோ ஒன்றிருந்தது, ஏதோ ஒரு ஆவி தேவன். அவர் என்னிடம், "அது தான் மணவாட்டி" என்றார். நான் அவர்களைப் பார்த்தேன். என் இருதயம் மகிழ்ந்தது. அவள் இந்த பக்கம் வந்து, என் பின்னால் கடந்து சென்றாள்.

அவள் அந்த பக்கம் சென்று சற்று நேரம் கழிந்தவுடன் அந்த சத்தம், "இப்பொழுது நவீன சபை காட்சிக்கு வரப்போகின்றது" என்றது. அங்கு ஆசிய சபை வந்தது. அப்படிப்பட்ட மோசமான கூட்டத்தை நான் கண்டதில்லை. பல்வேறு நாடுகளின் சபைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. அவர்களைக் காண்பதற்கு பயங்கரமாக இருந்தது.

இதை நான் ஏன் கூறுகிறேன் என்றால் தேவனுக்கு முன்பாக சத்தியத்தை உரைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர், "இப்பொ ழுது அமெரிக்க சபை காட்சிக்கு வரப்போகிறது" என்று சொன்னார். நான் அப்பொழுதாகிலும் பிசாசின் கூட்டத்தைக் கண்டிருந்தால், அது அதுதான். அந்த பெண்கள் நிர்வாணமாய், யானை தோல் நிறம் போன்ற சாம்பல் நிறம் கொண்ட ஒன்றை அவர்களுக்கு முன்பாக பிடித்திருந்தனர். மேல் பாகத்தில் ஒன்றுமேயில்லை. அவர்கள் இந்த வாலிபப் பிள்ளைகள் ஆடும் டுவிஸ்ட் (Twist) நடனம் ஆடிக்கொண்டு வந்தனர். அந்த நடனத்திற்கு ஏற்றாற்போல் அந்த விதமான இசை. நான் குமாரி அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் கண்டுவிட்ட உடனே (Miss U.S.A) ஏறக்குறைய மயக்கமடைந்து விட்டேன்.

இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாயுள்ளது. நான் அவருடைய ஊழியக்காரன் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், இப்பொழுது என்னை நம்புங்கள். உலகிலுள்ள எதற்காகவும் நான்

பொய் சொல்ல மாட்டேன். அது உண்மையாயிராவிடில், அதை என்னை கூற வைப்பதற்கு உலகில் போதிய பணம் கிடையாது. அவள் வந்த போது, என் வாழ்க்கையில் நான் கண்டிராத மிகவும் கேவலமான காரியமாக இது இருந்தது. நான் "தேவனே, போதகர்களும், சகோ தரர்களாகிய நாங்களும் உமக்கு ஒரு மணவாட்டியைக் கொள்ள மிகவும் கடினமாக உழைத்த போதிலும், இதை தான் எங்களால் செய்ய முடிந்தது" என்று நினைத்துக் கொண்டேன். அவள் உடலை நெறித்து, ஹுலா பாவாடை போன்ற ஒன்றை தனக்கு முன்னாலுள்ள பாகத்துக்கு நேராக பிடித்துக் கொண்டு, இந்த வாலிபப் பிள்ளைகள் ஆபாசமான நடனக் காட்சிகளில் உடலை நெளித்து ஆடுவது போல் அவளுடைய கீழ் பாகத்தை அவள் நெளித்து நடனமாடிச் சென்றாள். அதுதான் அமெரிக்காவின் குமாரி கிறிஸ்தவ மார்க்கம்.

எனவே, தேவன் உதவி செய்வாராக. அவருடைய பார்வைக்கு அது அப்படித்தான் காணப்படுகிறது. நான்... நான் மயங்கி விழுந் திருப்பேன். இதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள், செய்யப்பட்ட பிரசங் கங்கள், இணங்க வைக்க எடுத்துக் கொண்ட பிரயாசங்கள் அனைத் தையும் நான் எண்ணிப் பார்த்தேன். அவர்கள் ஒவ்வொருவரும் தலை மயிரை கத்தரித்துக் கொண்டு, முன்னால் இதை பிடித்துக் கொண் டிருந்தனர். இயற்கைக்கு மேம்பட்டவருடன் நான் நின்று கொண்டிருந்த இடத்தை அவர்கள் அடைந்தனர். அவரை என்னால் காணமுடிய வில்லை, அவர் பேசுவதை என்னால் கேட்க முடிந்தது. அவர் என்னுடன் இருந்தார். அவர்கள் இந்த பக்கம் திரும்பினபோது, அவர்கள்... உடலை நெளித்தும், சிரித்துக் கொண்டும், அதை முன் னால் பிடித்துக்கொண்டு சென்றனர். அங்கு அவருடைய பிரசன்னத் தில் நின்று கொண்டு சென்றனர். அங்கு அவருடைய பிரசன்னத்தில் நின்று கொண்டிருந்த அவருடைய ஊழியக்காரனாகிய நான் எவ்வளவு முயன்றும் கூட அவ்வளவுதான் என்னால் சாதிக்க முடிந்தது. நான் "தேவனே, இதனால் எனக்கு என்ன நன்மை? இது என்ன நன்மை செய்தது? எல்லா அழுகையும், கெஞ்சலும், இணங்க வைக்க எடுத்துக் கொண்ட முயற்சியும், நீர் காண்பித்த மகத்தான அடையாளங்களும். நான் அங்கு நின்று பிரசங்கம் செய்த பிறகு, வீட்டுக்குச் சென்று அழுது முறையிடுவேன். இதனால் என்ன பயன்? இவையெல்லாவற்றிற்

கும் பிறகு, இப்படிப்பட்ட ஒரு மணவாட்டியை உமக்கு நான் சமர்ப் பிக்கிறேனே” என்று நினைத்தேன்.

நான் அங்கு நின்று பார்த்துக்கொண்டிருந்த போது, அவள் கடந்து சென்றாள். அது எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அவளுடைய பின்பாகத்தில் ஒன்றுமேயில்லை. அதை அவள் முன்னால் மாத்திரம் பிடித்துக்கொண்டு, இந்த டுவிஸ்ட் இசைக்கு உடலை நெளித்து, கையை மேலே இப்படி உயர்த்தி, நடந்து சென் றாள்... ஓ, அது ஆபாசமான ஒரு காட்சி அவள் உடலை இப்படி அசைத்துக் கொண்டு சென்றது.

நீங்கள், “சகோ. பிரன்ஹாமே, அதன் அர்த்தம் என்ன?” என்று கேட்கலாம். எனக்குத் தெரியாது. நான் கண்டதை உங்களுக்கு அறிவிக்கிறேன். அவள் கடந்து சென்றபோது, அவளை நான் பார்த் தேன். ஓ, நான் மயங்கி விட்டேன். நான், “தேவனே, நான் குற்றவாளி. நான் முயன்று பயனில்லை... நான் விலகி விடுகிறேன்” என்று மனதில் எண்ணினேன்.

திருமதி கார்ல் வில்லியம்ஸ், நீங்கள் இங்கு இருப்பீர்களானால், சில நாட்களுக்கு முன்பு நீங்கள் என்னிடம் கூறின அந்த சொப்பனம். அன்றொரு இரவு நீங்கள் அதை கண்டு, அது உங்களைத் தொல்லைப் படுத்தினதே! அதுதான். வாகனத்தை திருப்பும் சக்கரம் (Steering Wheel) என் கையிலிருந்து எடுக்கப்பட்டு விட்டது.

அதை மறந்து விடலாமென்று முடிவு செய்தேன், அப்பொழுது திடீரென்று அவர்கள் மறுபடியும் வரும் சத்தத்தைக் கேட்டேன். இந்த வழியாக சென்ற அதே மணவாட்டி திரும்பவும் இந்த பக்கம் வந்தாள். அந்த சிறு கனம் பொருந்திய ஸ்திரீகள் மறுபடியும் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உடையை உடுத்தியிருந்தனர். சுவிட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள். அவர்கள் தங்கள் தேசத்தின் ஆடையை அணிந்தவர்களாய், நீண்ட கூந்தலைக் கொண்டவர்களாய். முதலில் வந்த கூட்டத்தினரைப் போலவே இருந்தனர். அவர்கள் “யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்து வீரரே” என்னும் பாடலுக்கு காலடி எடுத்து வைத்து நடந்து வந்தனர். நாங்கள் நின்று கொண்டிருந்த மேடையை அவர்கள் கடந்து சென்றவுடனே, எல்லோருடைய கண்களும் அவர்களையே நோக்கிக் கொண்டிருந்தன. அவர்கள் திரும்பி,

அணிவகுத்து சென்றனர், இவர்கள் வானத்திற்கு ஏறிச் செல்லத் தொடங்கினபோது மற்ற கூட்டத்தார், ஒரு செங்குத்தான மலையின் ஓரத்தை அடைந்து, கீழே சென்றனர். அவர்கள் வானம் வரைக்கும் அணிவகுத்து சென்றனர். அவள் இவ்வாறு அணிவகுத்து சென்று கொண்டிருந்தபோது, பின்னாலிருந்த சில சிறு பெண்கள் (அவர்கள் வெளிநாட்டு பெண்களைப் போல காணப்பட்டனர் – ஸ்வீடன் அல்லது சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் போன்று. அல்லது வேறெங் கோ) சுற்றும் முற்றும் பார்த்து அணியை விட்டு வெளியே வந்தனர். நான் "அப்படி செய்யாதீர்கள்!! அணியை விட்டு வெளியே வராதீர்கள்" என்று கூச்சலிட்டேன். அப்படி கூச்சலிட்ட போது, என் தரிசனம் கலைந்து, என் கையை இப்படி உயர்த்தினவாறு நின்று கொண்டிருந் தேன். நான், "நல்லது..." என்று நினைத்தேன்.

மணவாட்டியைத் தெரிந்து கொள்ளுதல், ஏப்ரல் 29, 1965, பத்தி எண் 58–62

## தீர்க்கதரிசி தேவனுடைய பாகத்தை ஏற்று நடித்தல்

## THE PROPHET ACTED AS GOD

127. அந்த தீர்க்கதரிசிகள்! சபையானது எல்லாமே சத்தியத்தை திரித்து... அந்த தீர்க்கதரிசிகள் தீரமுள்ள தேவனுடைய செய்தியாளர் களாக, சபை சார்பு, ஸ்தாபனம் போன்றவை எதுவுமின்றி அங்கு தோன்றி, ராஜாக்களையும், ராஜ்யங்களையும், சபைகளையும் எதிர்த் தனர். அவர்கள் ஆசாரியர்களின் முன்னிலையில் கொண்டு வரப்பட்ட போது, வெட்கப்படவேயில்லை. ஏனெனில் "**கர்த்தர் உரைக்கிற தாவது**" என்பதை அவர்கள் நேரடியாகப் பெற்றிருந்தனர்.

128. நீங்கள் கவனிப்பீர்களானால், தீர்க்கதரிசி ஒரு விதத்தில் – பழைய ஏற்பாட்டில் அவன் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறும்போது அவனைக் கவனியுங்கள். அப்பொழுது அவன் தேவனு டைய ஸ்தானத்தையே வகிக்கும் கட்டத்துக்குள் நுழைந்து விடுகிறான். நீங்கள் கவனிப்பீர்களானால், அவனுக்கு முன்பாக "**கர்த்தர் உரைக் கிறதாவது**" என்பதை அவன் வைத்தபோது, அவன் தேவனுக்குள் சென்று, தேவனுடைய பாகத்தை ஏற்று நடித்தான், பிறகு அவன்

தன்னுடைய செய்தியைக் கொடுத்தான். அது தேவன் அவன் மூலம் பேசுவதாகும். "**கர்த்தர் உரைக்கிறதாவது**"

வெட்கப்படுதல், ஜூலை 11, 1965

# நான் கூறுவதை சத்தியம் என்று ஏற்றுக் கொள்ளுதல்

## "HOLDS ON TO WHAT I SAY TO BE THE TRUTH"

**176.** நீங்கள் தேவனுடன் பேசியிருந்தால் அப்படித்தான் உறுதி யுடையவர்களாய் இருப்பீர்கள். மற்றவர் வேறு எதையாகிலும் கூறினால் அதை நீங்கள் மூடத்தனம் என்று கருதுவீர்கள்... நான் கூறுவதை சத்தியம் என்று ஏற்றுக்கொள்ளும் ஒரு சிலர் இவ்வுலகில் உள்ளனர். நான், "**கர்த்தர் உரைக்கிறதாவது**" நான் அரிசோனாவுக்குச் செல் வேன். அங்கு கூட்டமாகக் கூடியிருக்கின்ற (Cluster) ஏழு தூதர்களை சந்திப்பேன் என்று கூறினபோது, அது நிறைவேறுவதைக் காண ஒரு கூட்டம் மனிதர் இருந்தனர்.

வெட்கப்படுதல், ஜூலை 11, 1965

# தீர்க்கதரிசியைக் கலந்தாலோசிப்போமாக

## "LET'S CONSULT THE PROPHET"

**147.** கவனி, பிறகென்ன? என்ன செய்யப்படக்கூடும்? என்ன செய்ய வேண்டும்? தீர்க்கதரிசியாகிய வேதாகமத்தைக் கலந்தாலோசிப் போமாக. அதில் ஒன்றும் கூட்டவும் கூடாது, அதிலிருந்து ஒன்றும் எடுக்கவும் கூடாது. செய்வோமானால் ஜீவ புஸ்தகத்திலிருந்து தேவன் நம்மை எடுத்துப்போடுவார். வேதாகமத்தில், மல்கியா 4ம் அதிகாரத்தில் இன்று என்ன நடக்குமென்றும், வெளிப்படுத்தின விசேஷம் 10ம்

அதிகாரத்தில் எப்படி இந்த ஏழு முத்திரைகளும் உடைக்கப்பட்டு, சீர்திருத்தக்காரர்களின் காலங்களிலெல்லாம் மறைக்கப்பட்டிருந்த எல்லா இரகசியங்களும் எப்படி வெளிப்படுத்தப்படும் என்னும் கூறப்பட்டிருக் கிறது. அது எவ்விதம் நடக்கும் என்று அவர் கூறினார். **கர்த்தர் உரைக்கிறதாவது** அது பரிசுத்த வேதாகமத்திலுள்ளது.. தேவன் அதை முழுமையாக பரிபூரணமாக அடையாளம் காட்டி அதுவே சத்தியம் என்று கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளாக உயர வானத்திலும் மற்றெல்லாவற்றிலும் அடையாளங்களினாலும், அற்புத்களி னாலும் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார். அதற்கு அவர்கள் செவி சாய்ப்பார்களென்று நினைக்கிறீர்களா? இல்லை. அவர்கள் மரித்துப் போனார்கள். அவர்கள் ஏதோ ஒன்றிடம் தங்கள் கையை நீட்ட அது அவர்களை முற்றிலும் கொன்றுவிட்டது. இல்லை, இனி பிரயோஜன மில்லை, இனி பிரயோஜனமில்லை – ஒருபோதுமில்லை.

தேவசித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், ஜூலை 18, 1965

## மறுபடியும் இந்த கடைசி நாட்களில் சம்பவிக்கும்

## "IT'LL REPEAT AGAIN IN THE LAST DAYS"

**136.** யந்நேயும் யம்பிரேயும், மேசேயின் முன்னிலையிலும் ஜனங் களின் முன்னிலையிலும், மோசே செய்யக்கூடிய அதே அற்புதத்தை நிகழ்த்திக் காண்பித்தனர். கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களையும் அவர்கள் வஞ்சிப்பார்கள் என்பது நினைவிருக்கட்டும். மோசே செய்த அற்புதத்தை அவர்களும் செய்தனர். நான் கூறுவது உங்க ளுக்கு புரிகின்றது என்று நம்புகிறேன். ***அது மறுபடியும் இந்தக் கடைசி நாட்களில் சம்பவிக்கும் என்று வேத வசனங்கள் கூறுகின்றன.***

மோசேக்கும் யந்நேயுக்குமிடையே இருந்த வேறுபாடு என்ன? "தண்ணீர் இரத்தமாக மாறக்கடவது" என்று மோசே கட்டளையிட்டான். இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகள், "நாங்களும் அவ்வாறே செய்ய முடியும்" என்று கூறி அதை நிகழ்த்திக் காண்பித்தனர்.

**137.** "வண்டுகள் உண்டாகட்டும்" என்று மோசே கட்டளையிட் டான். அவன் கர்த்தரிடம் உத்தரவு பெற்று அதைச் செய்தான். அவர் களோ, "நாங்களும் வண்டுகள் வரவழைக்க முடியும்" என்று கூறி அதைச் செய்து காண்பித்தனர். மோசே நிகழ்த்தின எந்த ஒரு அற்புதத் தையும் அவர்களாலும் செய்ய முடிந்தது. ஆனால் ***அவர்கள் வார்த்தை யில் நிலைகொண்டிருக்க முடியவில்லை.***

**138.** கர்த்தரால் நியமிக்கப்பட்டு, அவரால் அனுப்பப்பட்ட உண்மை யான தீர்க்கதரிசியாகிய மோசே, ஸ்தாபனங்களைச் சார்ந்திருந்த தீர்க்க தரிசிகளுடன் சச்சரவு செய்யவில்லை. அவர்களை அவன் தனியே விட்டு விட்டு, கர்த்தருக்கு மாத்திரம் செவி கொடுத்தான். 'இதை செய்' என்று கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்ட ஒவ்வொரு முறையும், மோசே கீழ்ப்படிந்து அதை நிறைவேற்றினான். அவன் புதிதாக ஒரு செயலைப் புரிந்தபோது, அவர்களும் ஏதோ ஓர் உணர்ச்சியைப் பெற்று, மோசே செய்ததைதே யஅவர்களும் செய்து காண்பித்தனர்.

**139.** இப்பொழுது நான் கூறப்போவதை மனதில் பதித்துக் கொள்ளவும்; அதை மறந்து விட வேண்டாம். உண்மையான தீர்க்கதரிசி முதலில் ஒரு அற்புதத்தை நிகழ்த்திய பின்னே, மற்றவர்கள் அதைப் பாவனை செய்தனர். அவர்கள் அவ்வாறே செய்ய முடியும். ஏனெனில் பிசாசுக்கு சிருஷ்டிக்கும் தன்மை இல்லை. அவன் மூல வார்த்தையை மாற்றி அமைப்பவன் (Pervert).

பாவம் என்பது என்ன? நீதி மாற்றி அமைக்கப்படுவதே பாவமாகும். விபச்சாரம் என்பது என்ன? அங்கீகாரம் பெற்ற சரியான ஒரு செயல் மாற்றி அமைக்கப்படுதல் விபச்சாரமாகும். அவ்வாறே உண்மையைப் புரட்டினால் அது பொய்யாக மாறுகின்றது. அனனியாவைப் பாருங்கள். அவன் தேவனுடைய மூல வார்த்தையை மாற்றி அமைத்தவன். பிலேயா மும் சிதேக்கியாவும் அதே போன்னவர்கள்.

மூல வார்த்தை தோன்றி, அது உண்மையென்று நிரூபிக்கப்பட்ட பின்னரே, பாவனைகள் உண்டாகுமென்று வேதத்தின் சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.

**140.** இந்தக் கூடாரத்தின் மூலைக் கல்லைத் தோண்டியெடுத்து, முப்பத்து மூன்று ஆண்டுகட்கு முன்னர் ஒரு காகிதத்தில் எழுதி அங்கு போடப்பட்டுள்ளதை எடுத்து வாசித்துப் பாருங்கள்.

**“நீயோ சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு...”** அவர்கள் தங்கள் விருப்பப்படி யாவையும் செய்து “அது பரவாயில்லை, நாங்களும் அதே அற்புதங்களையும் அடையாளங்களை யும் தானே செய்கின்றோம்” என்கின்றனர். **“சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக் கதைகளுக்கு** (மனிதருடைய நியமங்களுக்கு) **சாய்ந்து போகும் காலம் வரும்.”**

**141.** ஓ, பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனின் ஆத்துமாவை உணர்த்தும்போது, இவை யாவும் நமக்கு முன்பாக எவ்வளவு தெளி வாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

கூடராத்தின் மூலைக்கல் நாட்டப்பட்டபோது, அன்று காலை அவர் ஜெபர்ஸன்வில் ஏழாம் வீதியில் என்று கூறினார் என்பது நினைவிருக் கட்டும். ஓஹையோ நதியின் கரையில் நூற்றுக் கணக்கானவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கென நின்று கொண்டிருந்த போது, கர்த்த ருடைய தூதனானவர் அக்கினி ஸ்தம்ப ரூபத்தில் தோன்றி நூற்றுக் கணக்கான சபைகளும் ஜனங்களும் அந்த ஆற்றங்கரையினில் சுற்றி லும் கூடி நின்றிருந்தபோது அவர் என்ன கூறினார் என்பது நினை விருக்கட்டும். அது அவ்விதமே நிகழ்ந்தது, ஆனால் நடந்தது என்ன என்று கவனியுங்கள்.

சகோதரரே, நான் கூறுவது கடினமாகத் தென்படும். ஆனால், கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவார்கள் என்று இயேசு கூறியுள்ளார். அது வேறுவிதமாக இருக்க முடியாது. அவர்களோ அதைப் புரிந்து கொள்ள இயலவில்லை.

**142.** கர்த்தர் அபிஷேகம் செய்த உண்மையான தீர்க்கதரிசியாக மோசே தோன்றின பின்னரே, போலியாட்கள் (Impersonators) தோன்றி, மோசே செய்த யாவையும் செய்து காண்பித்தனர்.

**143.** சகோதரனே, சகோதரியே, என்னுடைய சபையில் இதைப் பேசுகின்றேன். தேவனுடைய வார்த்தைய இங்கு பிரசங்கிக்க எனக்கு உரிமையுண்டு. நான் உங்களைக் குற்றப்படுத்துவதற்காகஎண்ண வேண்டாம். நாம் வாழும் காலத்தையும் நேரத்தையும் சற்று ஆராய்ந்து பார்ப்போம். சகோதரன் ரட்டல் சகோ. ஜூனியர் இவர்களுக்கு வாழ்த்துதல் கூறுகின்றேன். அவர்கள் பெயர்களை முன்பு கூற மறந்து விட்டேன். ஒரு நிமிடம் நான் கூறுவதை யோசனை செய்து பாருங்கள்.

**144.** மோசே செய்த அற்புதங்களை இவர்களும் செய்தனர். மோசே வண்டுகளைக் கொண்டு வந்தபோது, அவர்களும் வண்டுகளைக் கொண்டு வந்தனர்.

கர்த்தர் ஆதாமிடம், "நீ அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று கூறியிருந்தார்.

**145.** சாத்தான் அவர்களை அணுகி, "நீங்கள் சாகவே சாவ தில்லை. நீங்கள் ஞானமுள்ளவர்களாக மாறுவீர்கள்" என்றான். "... உங்களுக்கு உயர்ந்த ஸ்தாபனங்கள் இருக்கும். எல்லாம் உயர்ந்ததாக இருக்கும்" என்றான். **கர்த்தர் உரைக்கிறதாவது**: 2 தீமோத்தேயு **3:8**ன்படி கடைசி நாட்களில் யந்நேயும் யம்பிரேயும் இவ்வுலகில் தோன் றுவார்கள். போலியாட்கள் இருவர் என்பதைக் கவனியுங்கள்.

**146.** சோதோமில் இருந்த பாவத்தைக் கண்டு, எது சரி எது தவறு என்று அறிந்து கொள்ள மூன்று தூதர்கள் இறங்கி வந்தனர் என்று காண்கின்றனர். அவர்களும் அதே அற்புதத்தைச் செய்தனர்.

**147.** ஆனால் தேவனால் அனுப்பப்பட்ட உண்மை அபிஷேகம் பெற்ற நபர் தோன்றிய பின்னரே, அவர்கள் அவர் செய்தது போன்ற அற்புதங்களைச் செய்தனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர், ஒருவர் கையை நான் பிடித்த மாத்திரத்தில் "ஒரு அடையாளம்" தோன்றும் என்பது நினைவிருக்கின் றதா? வெகு விரைவில், அநேகர் இவ்வரத்தைப் பெற்றுள்ளதாகக் கூறிக் கொண்டனர். ஒருவருக்கு அவ்வடையாளம் வலது கையிலும், வேறொருவருக்கு இடது கையிலும் தோன்றுவதாகக் கூறப்பட்டது. மற்றும் ஒருவர் முகர்ந்து கூறினாராம். இவ்விதம் அநேக அடையாளங் கள் தோன்றின. இது எனக்கு வியப்பாயிருந்தது. அதன் உண்மை

என்னவென்பதை உங்களிடம் எடுத்தக் கூற தேவன் இப்பொழுது அனுமதிக்க மாட்டார். ஆனால் ஒரு நாளில் நீங்களே அதைக் கண்டு கொள்வீர்கள். அவர்களுடைய மதிகேடு வெளிப்படவே இவை காணப் பட்டன. ஆரம்பத்திலிருந்தே அவை சரியல்ல. தேவன் அனுமதி கொடுத்தால், ஒரு நாளில் நீங்களே அதைக் கண்டு கொள்வீர்கள். அவர்களுடைய மதிகேடு வெளிப்படவே இவை காணப்பட்டன. ஆரம்பத்திலிருந்தே அதைக் குறித்து உங்களிடம் கூறுவேன்.

**148.** கவனியுங்கள். அவர்கள் அதே அற்புதங்களே செய்தனர். மூல வார்த்தை முதலாவதாக கடந்து போகும் வரை அவர்கள் அதை செய்யவில்லை. ஏதேன் தோட்டத்தில் சாத்தான் அந்த வழியாகத்தான் அதைச் செய்தான். எல்லா நேர்களிலும் அவன் அவ்விதம்தான் செய் தான். யார் முதலாவதாக தீர்க்கதரிசனம் உரைத்தது. மோசேயா அல்லது பிலேயாமா? மோசேதான் முதலில் காட்சியில் வந்தான். யார் காட்சியில் முதலில் வந்தது? எரேமியாவா? அல்லது அனனியாவா? நான் எதை குறிப்பிடுகிறேன் என்று உங்களால் காண முடிகின்றனா? (சபையார் “ஆமென்” என்று கூறுகின்றார்கள்).

**149.** கவனியுங்கள். மாமிச பிரகாரமான பாவைனைக்காரர்கள் அதை போன்றே செய்தனர். “தேவனுக்கு ஓர் சேவை செய்கின்றோம்” என்று உண்மையாக எண்ணினர். தாவீதும் அவ்விதமாக செய்தான். இந்த இரண்டிற்கும் இடையில் நீங்கள் சற்று யோசனை செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் அதை கூறாவிடில் நிச்சய மாக தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் அதை வெளிப்படுத்துவார்.

**150.** “மோசே செய்வதையே எங்கள் மனிதரும் செய்ய முடியும்” என்று பார்வோனின் ஸ்தாபனம் கூறினது. அவர்களும் அதை செய்து காண்பித்தனர். இதை கர்த்தர் ஏன் அனுமதித்தார்? பார்வோனின் முன்னிலையில் ஒரு அடையாளத்தைக் காண்பிக்க அபிஷேகம் பெற்ற ஒருவரை தேவன் அனுப்பின பின்பு, ஜனங்களுக்கு முன்பாக ஸதாப னங்கள் அதைப் பாவனை செய்ய அவர் ஏன் அனுமதிக்க வேண்டும்? தேவனுடைய உண்மையான ஆவியானவர் செய்த அதே கிரியைகளை மற்றவர்கள் பாவனை செய்ய அவர் அனுமதித்ததன் காரணம் என்ன? ஏனெனில் வேத வாக்கியங்கள் நிறைவேற வேண்டியதாயிருக்கின்றன.

**151.** கவனியுங்கள், பார்வோனின் இருதயமும், எகிப்தியரின் இருதயங்களும் கடினப்பட வேண்டுமெனக் கருதி கர்த்தர் இவ்விதம் செய்தார். அப்படிச் செய்தால்தான், மோசே ஒருவனிடம் மாத்திரமே தேவனுடைய வார்த்தையில்லை, அவர்களும் மோசே செய்வதை செய்து காண்பிக்க முடியும் என்று நிரூபிக்க முற்படுவார்கள்.

இந்தக் கடைசி நாட்களிலும் இதே போன்று சம்பவிக்கக் கர்த்தர் ஏன் அனுமதிக்க வேண்டும்? அவருடைய சித்தம் நிறைவேறுவதற் கெனவே அவர் இதை அனுமதித்துள்ளார். சிதேக்கியாவின் மீது பொய் யின் ஆவி இறங்க அவர் அனுமதித்தது போன்றே இப்பொழுதும் நடைபெறுகின்றது. ஆகாபை யுத்த களத்தில் அனுப்பி, அவனைக் குறித்து உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேண்டுமென்றே தேவன் இம்முறையை கையாண்டார்.

அவ்வாறே, லவோதிக்கேயா சபையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது நிறைவேற வேண்டுமென்பதற்காகவே, ஜனங்கள் அவரவர் ஸ்தாபனங்களின் கொள்கைகளை நம்பும்படி அவர் செய் கின்றார்.

> ***“நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திர னும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்று, சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரிய வானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள் வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக் கொள்ள வும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்”***

வெளி. 3:17–18

**152.** இந்தக் காலத்தில் அத்தகையோர் எழும்பி தேவனுடைய உண்மையான வார்த்தைய மறுதலிக்க அவர் ஏன் அனுமதித்தார்?

பார்வோன் மோசேக்கு விரோதமாக எழும்பினான். யந்நேயும் யம்பி ரேயும் கூட அவனுக்கு விரோதமாக எழும்பினார்கள். இது மீண்டும் கடைசி நாளில் சம்பவிக்கும் என்று வேதம் கூறுகின்றது. இப்பொழுது

சம்பவித்துக் கொண்டிருப்பது வேதவாக்கியங்களின் நிறைவேறுதல் அன்றி வேறென்ன?

**153.** மோசே அவர்களிடம், "நீங்கள் இதைச் செய்யக் கூடாது. உடனடியாக நிறுத்துங்கள். நான் ஒருவன் மாத்திரம் இதை செய்ய அபிஷேகம் பெற்றவன்" என்று சச்சரவு செய்தானா? இல்லை, அவர்கள் செய்யட்டும் என்று விட்டுவிட்டான். "இவர்களுடைய மதிகேடு வெளிப் படும்" என்று 2 தீமோ. 3:8ல் கூறப்பட்டுள்ளது என்பதை நினைவு கூரவும்.

அவ்விதமே இக்கடைசி நாட்களிலும், மணவாட்டி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இவர்கள் யாரென்று வெளிப்படையாய் அறியப்படும்.

**154.** தேவனுடைய உண்மையான வார்த்தையின் வெளிப்படுதலான மோசே அவர்களைத் தடுத்து நிறுத்த ஒன்றையும் கூறவில்லை. கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி அவனை வஞ்சிப்பதற் காகவே, அவர்கள் கிரியை செய்யட்டும் என்று விட்டு விட்டார்.

ஆகாபை வஞ்சிக்கவும் கர்த்தர் அதே முறையைக் கையாண்டார். மிகாயா தன்னந்தனியாக 'கர்த்தர் உரைக்கிறதாவது' என்பதுடன் அங்கு நின்று கொண்டிருந்தபோது வேறொருவனும் 'கர்த்தர் உரைக்கிற தாவது' என்பதை அவன் பெற்றிருந்ததாகக் கூறிக்கொண்டு, மிகாயா வின் முன் நின்றான். ஆனால் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டிருந்தனர்.

**155.** *'கர்த்தர் உரைக்கிறதாவது' : இக்கடைசி நாட்களில் தண்ணீர் ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்பட வேண்டும்* என்பதுடன் நாம் இன்று நிலைகொண்டிருக்கின்றோம். ஆனால் அற்புதங்களைச் செய்யும் வேறொருவரும் நம்மிடையே இருக்கின்றார். அவர் திரித்துவ போதகத்தைக் கைகொள்பவர். 'திரித்துவம்' என்னும் சொல்லை வேதத்தில் எங்காவது காண்பியுங்கள். மூன்று தெய்வங்கள் உண்டு என்று வேதத்தில் கூறப்பட்டிருந்தால், அதை எனக்குக் காண்பியுங்கள். அது தேவனுடைய வார்த்தையில் காணப்படவில்லை. பட்டப்பெயர்களை உபயோகித்து, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்

நாமத்தில் ஒருவன் ஞானஸ்நானம் பெற்றான் என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை.

தேவனுடைய பிள்ளைகளை ஆதி விசுவாசத்திற்குத் திருப்ப எலியாவின் ஆவியை இக்கடைசி நாட்களில் அனுப்புவதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். மனுஷகுமாரன் இக்கடைசி நாட்களில் வெளிப்பட்டதன் மூலம் – சோதோமில் இருந்த அவரே – அந்த மனுஷகுமாரன் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறி விட்டது – “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்”. இது கர்த்தர் சொல்லுகிறதாவது என்றுள்ளது.

**156.** கவனியுங்கள். தேவனுக்கு போதுமென்ற நிலையுண்டாகும் வரை அவர்கள் மோசே செய்த அதே கிரியைகளைச் செய்தனர், இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள். இது கர்த்தர் சொல்லுகிறதாது என்ற விதமாக இந்த நாட்களிலும் அது நடைபெறும். எல்லா சபை களையும், மதங்களையும் ஏன் முழு உலகத்தையும் ஆராய்ந்து பார்க்கும் படியும், எல்லா போதகர்களையும், செய்தித்தாள்களையும் அத்தகைய காரியங்கள் இன்று உலகத்தில் நடைபெறுகிறதா இல்லையா என்று பார்க்க இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகின்றேன்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். “அநேகர்” (பன்மை), “தீர்க்கதரிசிகள்” (பன்மை), “கள்ளக்கிறிஸ்துக்கள்” (அபிஷே கம் பெற்றவர்) (பன்மை) – அநேகர். அதாவது மெதோடிஸ்டுகள் – அபிஷேகம் பெற்றவர்; பாப்டிஸ்டுகள் – அபிஷேகம் பெற்றவர்; பெந்தெ கொஸ்தே ஸ்தாபனத்தார் – அபிஷேகம் பெற்றவர். ஆனால் ஒரே ஒரு உண்மையான கிறிஸ்துவின் ஆவி இருக்கும். அதுதான் அவர் வாக்குத்தத்தம் செய்தது போன்று ‘வார்த்தை மாமிசமானவர்’

**157.** தேவனுக்கு போதுமென்று நிலைவரும்வரை அது காணப்பட்டு பின்பு முடிந்துவிடும். அவர்களுடைய மதிகேடு வெளிப்படும்.

கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள், ஜூலை 25, 1965

# இந்நாட்களொன்றில் அறிந்து கொள்வீர்கள்

## "YOU'LL FIND OUT ONE OF THESE DAYS"

**93.** அந்தப் பேராயர் மிகாயாவிடம், "இனிமேல் எங்களுடன் நீ ஐக்கியங்கொள்ளக்கூடாது. தேவனுடைய பிள்ளைகள் அளித்த வாக்குகளின் (Votes) மூலம் நான் இந்த ஸ்தானத்தை வகிக்கிறேன். என் சபை என்னைத் தலைவனாக்கியுள்ளது. கர்த்தர் இந்த தேசத்தை எங்களுக்கு மாத்திரம் அளித்தார், எனவே நாங்கள் மீண்டும் அதைப் பெறறவேண்டுமென்று அவர் விரும்புகின்றார். கர்த்தரின் வார்த்தையை நான் பெற்றிருக்கிறேன். கர்த்தரின் வார்த்தையை நான் பெற்றிருக்கிறேன்" என்றான். பின்பு அந்தப் பேராயர் மிகாயாவைக் கன்னத்தில் அறைந்து, "கர்த்தரின் ஆவி என்னை விட்டு எந்த வழியாய் சென்றது?" என்று கேட்டான்.

**94.** அதற்கு மிகாயா, "கலிபோரினியா தண்ணீருக்குள் மூழ்கும் அந்நாளிலே, மற்ற காரியங்களும் நடைபெறும் நாளிலே அதை அறிந்து கொள்வாய்" என்றான். "நீ ஒளிந்துக் கொள்ளும் உள்ளறையிலே பதுங்கும் அந்நாளியே அதைக் காண்பாய்.

கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள், ஜூலை 25, 1965

# கர்த்தர் உரைக்கிறதாவது என்பதை நான் கூறுகிறேன்

## "I GIVE YOU THUS SAITH THE LORD"

**283.** செய்தியானது என் இருதயத்தில் மேல் உள்ளது? அதை நான் வெளிக்கொண்டு வரத்தான் வேண்டும். மனைவியோ, பிள்ளைகளோ, மேய்ப்பனோ அல்லது யார் என்னக் கூறினாலும் அதை கூறுவதுதான் என் நோக்கமாயுள்ளது. ஏனெனில் அவர் என் கர்த்தராயிருக்கின்றார்.

**284.** அநேக நேரங்களில் நான் ஊழியக்காரரை மறந்து போகிறேன். நமது சகோதரன் நெவில் ஒரு விலையெறப்பெற்ற நபர். அந்த அநேக சகோதரர்களும் நம் மத்தியிலிருப்பதற்காக நான் மகிழ்ச்சியுறுகிறேன்.

**285.** இங்குள்ள அநேகர் திரித்துவ பிரசங்கிகளாக இருக்கக் கூடும். நாங்கள் உங்களோடு ஒவ்வாமல் இருக்க நினைப்பதில்லை. உங்களிடம் கோபமாயும் நாங்கள் இல்லை, மாறாக உங்களை நேசிக்கிறோம். அவ்விதம் நான் இல்லையென்றால் என் முழங்காலை நான் முடக்கி, "தேவனே, என்னை சரி செய்யும்" என்று கதறுவேன். முரட்டுத்தனமாக சுயநல ஆவி என்னுடன் கலந்திருக்க நான் விரும்பவில்லை. மாறாக பரிசுத்த ஆவியுடன் சகோதர பரிசுத்த அன்புடன் என் ஆவி இருக்க விரும்புகிறேன். எனக்கு விரோதமாக யாராகிலும் ஏதேனும் செய்தால் அதைக் குறித்து பரவாயில்லை. நான் அன்பாக இருக்க விரும்புகிறேன். அன்பிலே திருத்தப்பட ஆயத்தமாயுள்ளேன். ஏனெனில் அன்புதான் மறுகரையில் எல்லாவற்றிற்கும் பதிலாயிருக்கப் போகின்றது.

**286.** மெத்தோடிஸ்டு, பாப்டிஸ்ட், கத்தோலிக்கம், பிரஸ்பிடேரியன் யாராயிருந்தாலும் உங்களோடு வித்தியாசமாக நான் இருக்க நோக்கம் கொள்ளவில்லை. உங்களோடு முரட்டுத் தனமாக இருப்பதற்கு நான் இதைக் கூறவில்லை. அவ்விதமாக நான் செய்வேனாகில் நான் ஒரு மாய்மாலக்காரனாயிருந்து பீடத்தண்டை ஜெபத்திற்காக வரவேண்டியவனாயிருப்பேன். நீங்கள் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்என்பதை என்னால் காண முடிகின்றபடியால், அன்பின் காரணமாகவே நான் அதை கூறுகின்றேன். நானாக இதை யூகித்தும் சொல்லுகிறதில்லை. "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதை நான் கூறுகிறேன். அதுதான் உண்மை. அக்காரியங்களுக்காக உங்களை நேசிக்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள், ஜூலை 25, 1965

# ஸ்தாபனங்கள் அந்திக்கிறிஸ்துவின் மார்க்கத்துக்குள் செல்வார்கள்

## "DENOMINATIONS WILL GO INTO THE ANTICHRIST"

**125.** மிகாயா, அவனுடைய காலத்தில் ஜனங்கள் தவறு செய்வதை அவனால் நிறுத்த முடியவில்லை. மோசேயும் அவன் காலத்தில் ஜனங்கள் தவறு செய்வதை அவனால் நிறுத்த முடியவில்லை. லேவிய னான பினேகாஸ் தன் பட்டயத்தை உருவி அநேகரைக் கொன்ற பிறகும், ஜனங்கள் தவறான வழியில் சென்று கொண்டிருந்தனர். அவ்வாறே நடக்கும் என்று வேதம் முன்னறிவித்துள்ளது.

"**கர்த்தர் உரைக்கிறதாவது**: இவர் யாவரும் அவர்கள் சொந்த வழியிலேயே நிலைத்திருப்பார்கள்". ஸ்தாபனங்கள் தங்கள் ஸ்தாபனத் துக்குத் திரும்புவார்கள் என்று நினைக்கிறீர்களா? "அல்லவே அல்ல என்று ***கர்த்தர் உரைக்கின்றார்.*** அவர்கள் அந்திக்கிறிஸ்துவின் மார்க்கத் துக்குள் செல்வார்களா? "ஆம், செல்வார்கள்" என்று ***கர்த்தர் உரைக்கின்றார்.***

"அப்படியிருக்க, அவர்களுடைய செயல்களை நீங்கள் ஏன் குற்றப் படுத்த வேண்டும்?" ஏனெனில் நான் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும். அவ்வாறே நீங்களும் சாட்சியாக இருக்க வேண்டும். எல்லா விசுவாசிகளும் சாட்சிகளே.

**126.** கவனியுங்கள், இக்கடைசி காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் என்ன செய்வார்கள்? பற்பல இச்சைகளால் இழுப்புண்டு பெண் பிள்ளைகளை அவர்கள் வசப்படுத்திக் கொள்வார்கள்.

"எனக்குத் தெரியும், மற்ற பெண்கள் செய்வதைத் தானே நானும் செய்கிறேன்."

"சரி, அப்படியானால் உன் வழியிலேயே நீ நிலைகொண்டிரு."

**127.** ஒவ்வொரு முறையும் நான் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்துக்கு விஜயம் செய்யும்போது, சென்ற முறை கண்டதைக் காட்டிலும் அதிக மான மயிர் கத்தரித்துள்ள பெண்களையும், பெண்களைப் போல்

காணப்படும் ஆண்களையும் காண்கிறேன். அநேக போதகர்கள் ஸ்தாபனங்களைச் சேர்ந்து கொள்கின்றனர். உங்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. உங்களில் செய்யப்பட்ட பலத்த கிரியைகள் சோதோமிலும் கொமாராவிலும் செய்யப்பட்டிருந்தால், அவை அழிந்து போகாமல் இன்றும் நிலைத்திருக்கும்" **கப்பர்நகூமே! தேவ தூதன் (Angel) என்னும் பெயரால் அழைக்கப்படும் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணமே!**

என்ன நேரவிருக்கின்றது என்பதைப் பாருங்கள். லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் மூழ்கிப்போகும். எப்பொழுது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது நிறைவேறுவது உறுதி. வாலிபர்களே, என் காலத்தில் அது நிகழ்வதை நான் காணாவிட்டால், நீங்கள் கவனம் செலுத்திக் கொண்டே வாருங்கள். அது கடலில் மூழ்குவது உறுதி.

கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள், ஜூலை 25, 1965

# ஸ்தாபங்கள் தேவனுடைய வார்த்தையை அவமாக்கி விட்டார்கள்

## "DENOMINATIONS MADE WORD OF NO EFFECT"

**109.** அது பழைய ஏற்பாட்டின் முடிவு. இப்பொழுது சாயங்காலத்தில் வெளிச்சம் உள்ளது. அது என்ன! அது மேல் பாகம், மரத்தின் மேல் பாகம்.

**110.** இன்று காலை நான் கூறினது போன்று, நாம் ஸ்தாபனங்களின் வழியாக வந்தோம், அது வெறும் ஆரஞ்சு மரம் மாத்திரமல்ல, மற்ற எலுமிச்சை வகை பழங்களையும் அதிலிருந்து நாம் பெற்று வந்தோம். அது தொடக்கத்திலிருந்தது போலவே இல்லை. அதன்பிறகு – இதை கவனிக்கத் தவறாதீர்கள்! இதோ! அது வருகின்றது! ஸ்தாபனங்கள் அனைத்தும் தங்கள் பாகத்தை ஏற்று முடித்த பின்பு – அவர்களுக்கு எந்த வெளிச்சமும் தொடக்கத்திலேயே இல்லை – பகல் அல்லது இரவு என்று அழைக்க முடியாத ஒரு நாள் வரும்.

**111.** அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்**?** அவர்கள் ன்ன செய்து கொண்டிருக்கின்றனர்**?** ஆரஞ்சு மரத்திலுள்ள எலுமிச்சம் பழம் என்ன செய்கிறது**?** அது மேலே வரும் ஆரஞ்சிலுள்ள மூல சத்தை உறிஞ்சி, எலுமிச்சம் பழத்தை பாவனையாகத் தருகின்றது, அதைதான் ஸ்தாபனங்கள் தேவனுடைய வார்த்தைக்கு செய்துள்ளன**.** அவர்கள் தங்கள் பாரம்பரியங்களினால் தேவனுடைய வார்த்தையை அவமாக்கி விட்டார்கள்**.** அது **கர்த்தருடைய ஆவியானவர் உரைக் கிறதாவது!** அவர்கள் எலுமிச்சை வகை பழங்களைத் தந்தனரேயன்றி, ஆரஞ்சு பழங்களை அல்ல**.**

**112.** ஆனால் தீர்க்கதரிசி என்ன கூறினான்**?** இன்றிரவு நமது பொருளுக்காக தெரிந்து கொண்ட “எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; சீயோன் குமாரத்தியே, களிகூரு; இதோ உன் ராஜா தாழ்மை யுள்ளவராய் மூதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி உன்னிடத்தில் வருகிறார்” என்னும் வசனத்தைக் கூறின அதே தீர்க்கதரிசி “பழுக்கும் காலம் ஒன்று வரும்” என்று கூறுகிறான்**.** பழங்களை பழுக்க வைக்க சூரிய வெளிச்சம் பூமிக்கு அனுப்பப்பட்டது**.** பின்னை ஏன் அது பழுக்கச் செய்யவில்லை**?** பழுக்க செய்ய பழம் அங்கில்லை**.** ஆனால் ஜீவனோ பிரயாணம் செய்து வருகிறது**.**

மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?, ஜூலை 25, 1965

# ஸ்திரீகளுக்கு நீண்ட தலைமயிர் இருப்பது அவளுக்கு நசரேய பொருத்தனையாகும்

## LONG HAIR TO A WOMAN IS A NAZARITE VOW

**146.** “முடியை வெட்டிக்கொள்ளுவதால் என்ன தவறு இருக்கிறது” என்று அவள் கூறுகிறாள்**.** சகோதரனே, இங்குஒரு நிமிஷம் நிதானிப் போம்**.** இப்பொழுதே நான் பேசிக் கொண்டிருக்கையில் நான் சொன்ன இந்த காரியத்தைப் பற்றி, யாரோ மனதில் இடறுண்டு கோபப்படுவதாக உணருகிறேன்**.** தொலைபேசி வாயிலாக இவ்வாராதனையில் பங்கு கொள்ளும் ஏதாவது ஒரு நபராக அது இருக்கலாம்**.** கவனியுங்கள், ஒரு ஸ்திரீக்கு நீண்ட தலைமுடி இருப்பது, அவளுக்கு நசரேயப்

பொருத்தனையாகும். சிம்சோனுக்கு நீண்ட முடியிருந்தது. அவனுக்கு முடியிருந்தது. அவனுக்கு நசரேயப் பொருத்தனையாயிருந்தது. ஒரு ஸ்திரீ தன் தலைமுடியை வெட்டிக் கொள்வாளானால், அவள் முழுவது மாக தன்னுடைய நசரேயப் பொருத்தனையை மறுதலிக்கிறாள். அவள் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாயிருப்பதைக் காண்பிக்கும் நசரேய விரதத்தை மறுதலிக்கிறாள். ஏனெனில் அந்த ஒரு காரியம் எல்லா வற்றையும் அடியோடு கெடுத்துவிடுகிறது. சரியாக அப்படித்தான். நசரேயன் எனனப்பட்டவன், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்து கொண்டவன் ஆவான். சிம்சோன் ஒரு காலத் திற்காக, ஒரு நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்து கொண் டிருந்தான். எனவேதான் அவன் நீண்ட முடியை உடையவனாய் இருந்தான்.

**147.** தேவனுடைய பிள்ளையாயிருக்கிற ஒரு ஸ்திரீயானவள், தான் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும், பிரதிஷ்டை செய்து கொண்டவள் என்பதைக் காண்பிக்கும்படி, தனது முடியை நீளமாக வளர விடுகிறாள். ஸ்திரீயானவள் தன் தலை முடியை வெட்டிக் கொண்டால், அவள் எவ்வளவு ஆவியில் நடனமாடினாலும், பாமல் குழுவில் இருந்து பாடினாலும், அந்நிய பாஷைகளில் பேசி மேலும் கீழும் குதித்தாலும், எல்லாவிதமான உதவிச் சங்கங்களில் இருந்தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! அவள் மரித்தவள் தான். 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தின்படி, அது '**கர்த்தர் உரைப்பது என்னவென்றால்**' என்னும் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. பார்த்தீர்களா? அவள் தன்னுடைய நசரேய விரதத்தை மறுதலித்து தன்னை இந்த நவீன யுகத்தின் தேவனுக்கு விற்றுப் போட்டு விட்டாள். அவள் அதைச் செய்துவிட்டாள். அப்பொழுது, இக்காரியத்தைச் செய்துள்ள ஸ்திரீயே, பெண்மணியே, நீ வெட்கத்திற்குரியவள்.

இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965

## அது அந்த மனிதன் பேசுவதல்ல

## "IT'S NOT THE MAN TALKING"

**123.** உங்களுக்குத் தெரியுமா? பழைய ஏற்பாட்டில் மாத்திரம் அந்த தீர்க்கதரிசிகள் இரண்டாயிரம் முறை, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறியுள்ளார். ஒரு தீர்க்கதரிசி, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறினால், அது அந்த மனிதன் பேசுவதல்ல. அது மனிதன் பேசுவதாயிருந்தால், அவன் தீர்க்கதரிசியாக இருக்க முடியாது. அவன் ஒரு மாய்மாலக்காரன் (பாருங்கள்?) ஏனெனில் அது நிறைவேறாது. ஒருக்கால் கோடிக்கணக்கான சமயங்களில் ஒரு முறை அவர்கள் சரியாக ஊகிக்கலாம். ஆனால் அது. "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றிருந்தால், அது தேவனாகிய கர்த்தர் உரைத்ததாகும். நான், "ஆர்மன் நெவில் உரைக்கிறதாவது" என்று கூறினால்... அல்லது என் சகோதரன் "சகோதரன் வேயில் உரைக்கிறதாவது" என்றோ, இங்குள்ள சகோதரர் "சகோதரன் வேயில் உரைக்கிறதாவது" என்று கூறினால், நீங்கள் கூறுகிறதை உண்மையாக அப்படியாக எடுத்துரைக்கிறேன் என்று தான் அர்த்தம். எனவே அந்த தீர்க்கதரிசிகள், "இது நான் கூறுவதல்ல, எனக்கு அதனோடு எந்தத் தொடர்பும் இல்லை. இது "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றனர். எனவே வேதாகமம், தீர்க்க தரிசிகளின் மூலமாய் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று சொல்லப் பட்டவைகளைக் கொண்டது.

கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்டு 22, 1965 காலை

# தீர்க்கதரிசி தேவனுடைய சிந்தைக்காக காத்துக் கொண்டிருக்கிறான்

## "PROPHET WAS WAITING FOR GOD'S THOUGHTS"

**112.** அதனால்தான் தீர்க்கதரிசியின் சிந்தை தேவன் கூறுவதி லேயே லயித்திருந்தது – மனிதனுடைய கருத்து என்னவென்பதில் அல்ல; அல்லது காலத்தின் கருத்து, சபையின் கருத்து, இராஜ்யத்தின் கருத்து என்னவென்பதில் அல்ல – தேவனுடைய கருத்து என்ன வென்பதில் மாத்திரமே. தேவனுடைய சிந்தையை அவன் வார்த்தையாக எடுத்துரைத்தான். சிந்தையை வெளிப்படையாகக் கூறும்போது, அது

வார்த்தையாகி விடுகிறது. இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? வார்த்தை என்பது சிந்தை வெளிப்படுதலாகும். தேவன் தமது சிந்தையை அவனுக்கு வெளிப்படுத்தின போது, அவன், "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று வார்த்தையாக அதை எடுத்துரைத்தான். "தீர்க்கதரிசியாகிய நான் உரைக்கிறதாவது" என்றல்ல அது. "**கர்த்தர் உரைக்கிறதாவது**", பாருங்கள்?

**113.** அதனால்தான் தீர்க்கதரிசிகள் ராஜ்யங்களையும், அவர்கள் காலத்திலிருந்த சபைகளையும் எதிர்த்தனர். அவர்களுடைய காலத்தில் அத்தகைய செயல் மரணதண்டனையை விளைவிக்கும். அவர்கள் ராஜாவின் முன்னால் சென்று, "**கர்த்தர் உரைக்கிறதாவது, இன் னின்னது சம்பவிக்கப்போகின்றது**" என்று தைரியமாகக் கூறினர். அப்படி செய்தால் தலை வெட்டப்படும், சபையானது உங்களைக் கொன்றுபோடும். ஆனால் இந்த தீர்க்கதரிசிகள் தைரியசாலிகளா யிருந்தனர். ஏன்? அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டனர். அதனால்தான் அவர்கள் தைரியம் கொண்டனர். அவர்கள் என்றுமே தவறாத தேவனுடைய வார்த்தையை எழுதி வைத்தனர்.

கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்டு 22, 1965 காலை

# மணவாட்டிக்கும் அசைவு உண்டாகிக்கொண்டிருக்கிறது

## "THE MOVE IS ON FOR THE BRIDE"

போய்விட வேண்டாம். இங்கு வந்து சுற்றி நில்லுங்கள் – இது சத்தியமென்றும் நாம் வேறொரு காலத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்றும் விசுவாசிப்பவர்கள். நாம் எடுத்துக்கொள்ளப்படுதலின் காலத் திற்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரியுமா, சபையானது இந்த நிலையில் சென்று கொண்டிருக்க முடியாது, அது மோசமாக வேண்டும். எத்தனை பேருக்கு அது தெரியும்? "ஆமென்" என்று சொல்லுங்கள். அது மோசமாகிக் கொண்டே செல்லும். அது இதே நிலையில் போய்க் கொண்டிருக்க முடியாது. பாருங்கள், நண்பர்

களே, இப்பொழுது அது மோசமான நிலைக்குள் சென்று கொண் டிருக்கிறது. அதே சமயத்தில் மணவாட்டிக்கும் அசைவு உண்டாகிக் கொண்டிருக்கிறது. அது உண்மை. அது **கர்த்தர் உரைக்கிறதாவது.**

கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, நவம்பர் 25, 1965, பக்கம் 115

# லாஸ் ஏஞ்சலிஸ் சமுத்திரத்தின் அடியில் மூழ்கிப்போய் விடும்

## "LOS ANGELES WILL GO BENEATH THE OCEAN"

சபை அங்கத்தினனே, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ள தகுதிகளை உன் சபை பெற்றிராவிடில், அதை விட்டு வெளியே வந்து, கிறிஸ்துவுக்குள் நுழைந்து கொள். இது பயபக்தியான எச்சரிக்கை. இது எந்த நேரம் என்று நமக்குத் தெரியாது. இந்த பட்டினம் எந்த நேரத்தில் சமுத்திரத்தின் அடியில் மூழ்கப்போகிறதென்று உனக்குத் தெரியாது.

**இயேசு, "ஓ, வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலும் கொமோராவிலும் செய்யப்பட்டிருந்த தானால், அவை இந்தநாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" என்றார். (மத் 11:23). சோதோமும் கொமோராவும் உப்புக் கடலின்** (Dead sea) **அடியில் மூழ்கிவிட்டன. கப்பர்நகூமும் கடலின் அடியில் மூழ்கி விட்டது.**

**தேவதூதர்களின்** (Angels) **பட்டினம் என்று உரிமை கொண்டாடும் பட்டினமே (சகோ. பிரான்ஹாம் லாஸ் ஏஞ்சலிஸை குறிப்பிடுகிறார் – தமிழாக்கியோன்), நீ உன்னை வானபரியந்தம் உயர்த்தி ஆபாசமான நாகரீகத்தை உலகிற்கு அனுப்பி, வெளி நாடுகளும் கூட இங்கு வந்து நமது ஆபாசத்தை ஏற்றுக் கொண்டு அதை வெளியில் அனுப்புகின்றன. நீ அழகான ஆலயங்கள், கூர்கோபுரங்கள் போன்றவைகளைக் கொண்டிருக்கிறாய். நீ புரியும் செயல்கள் ஒருநாளில் நீ இந்த கடலின் அடியில் மூழ்கிவிடுவாய்**

**என்பதை ஞாபகம் கொள். அந்த பெரிய தேன்கூடு இப்பொழுதே உன் அடியில் உள்ளது. தேவனுடைய கோபாக்கினை உனக்குக் கீழே கக்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு காலம் தான் அவர் அந்த மணல் தடையை** (sand bar) **பிடித்து வைத்திருப்பார்? ஒரு மைல் ஆழமுள்ள அந்த சமுத்திரம் கடந்து வந்து, சால்டன் கடலில்** (Salton Sea) **தள்ளி விடும். பாம்பே** (Pompeii) **பட்டினத்தின் கடைசி நாட்களைக் காட்டிலும் இது பயங்கரமானதாக இருக்கும். லாஸ் ஆஞ்சலிஸே, மனந்திரும்பு! மற்றவர்களாகிய நீங்களும் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்புங்கள். கோபாக்கினையின் நேரம் பூமியின் மேல் உள்ளது. சமயம் உள்ள போதே தப்பி ஒடி கிறிஸ்துவுக்குள் வாருங்கள்.** நாம் ஜெபம் செய்வோம்.

அன்புள்ள தேவனே, என் ஆவி கலங்கி, என் இருதயம் எச்சரிக் கையின் கண்ணீரை சிந்தும் இந்நேரத்தில், ஓ, தேவனே, நான் கூறின தை மனிதரும் ஸ்திரீகளும் கேலியாக எண்ணாமல், ஸ்தாபன மக்கள் நான் அவர்கள் பேரில் கொண்டுள்ள வெறுப்பினால் இவைகளை அவர்களுக்கு விரோதமாக கூறினேன் என்று எண்ணாமலிருப் பார்களாக. கர்த்தாவே, அது அன்பினால் கூறப்பட்டது என்பதை அவர்கள் காண்பார்களாக. சர்வவல்லமையுள்ள தேவனே, இந்த கரையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் வரைக்கும், ஆண்டிற்குபின் ஆண்டு, உமது வார்த்தைய நான் அறிவித்து வந்தேன் என்பதற்கு நீர் சாட்சியாயிருக்கிறீர், ஓ, தேவனே அது இன்றிரவு நிகழுமானால் நான் சத்தியத்தை உரைத்தேன் என்பதற்கு சாட்சியாயிரும். மணவாட்டியை குறித்த தரிசனம் உண்மையென்று உமக்குத் தெரியும். ஆண்டவரே, உமது நாமத்தை நான் உபயோகித்து, அது **கர்த்தர் உரைக்கிற தாவது** என்று நான் கூறினேன். நான் செய்கிறது என்னவென்பதை அறிந்திருக்கிறேன் என்று உணருகிறேன்.

எனவே ஆண்டவரே, ஜனங்கள் இன்றிரவு அசைத்துக்கொண்டு, வரப்போகும் கோபாக்கினையினின்று தப்பி ஓட வேண்டுமென்று இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஏனெனில் **இக்கபோத்** என்பது வாசல்களிலும் நாடு முழுவதிலும் எழுதப்பட்டுள்ளது. ஒரு கறுப்பு அடையாளம் அதன் மேல் வந்துள்ளது. தேவனுடைய ஆவி துக்க மடைந்து, அதை விட்டு போய்விட்டார். அவர்கள் தராசிலே நிறுத்தப்

பட்டு குறைவுள்ளவர்களாக காணப்பட்டார்கள். நெபுகாத்நேச்சார் ராஜா வின் விருந்து, மது அருந்தும் விருந்துடனும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அரை நிர்வாணமான பெண்களுட னும் மீண்டும் தோன்றியுள்ளது.

ஓ, பரலோகத்தின் தேவனே, பாவம் நிறைந்த உலகத்தின் பேரிலும் பாவமுள்ள ஜனங்களின் பேரிலும் இரக்கமாயிரும் கர்த்தாவே, இன்றிரவு நாங்கள் அந்நிலையில் தான் இருக்கிறோம். நான் திறப்பின் வாசலில் நின்று தெய்வீக இரக்கத்துக்காக கெஞ்சுகிறேன். இன்றிரவு இக்கூடத் திலுள்ளவர்களிடம் நீர் பேசி, உமது மணவாட்டியின் கவனத்திற்கு இவைகளைக் கொண்டு வந்து, அவர்கள் எந்த கோட்பாடுகளின் அடையாளத்தைக் கொண்டும் அணிவகுத்து செல்லாமல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷதொனிக்கு மாத்திரம் அணிவகுத்து செல்ல அருள்புரிவீராக. ஓ, தேவனே இதை அருள்வீராக. நீர் தேவன் என்றும், உமது வார்த்தை சத்தியம் என்றும் இன்றிரவு அறியப்படட்டும் நாங்கள் பயபக்தியுடன் இம்மக்களின் முகங்களை நோக்கி, அவர்க ளுடைய கவனத்தை உடது வார்த்தைக்கு கொண்டு வருகிறோம். கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்களுக்காக ஜெபிக்கிறேன்.

நீர் ஜனங்களின் அசைவாடி, அவர்களுடைய இருதயத்தில் உள்ள வைகளை அவர்களுக்கு எடுத்துரைப்பதை அவர்கள் கண்டுள்ளனர் என்பதில் யாதொரு ஐயமில்லை. ஆண்டவரே, இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீர் அறிவீர். ஓ, தேவனே, அது சத்தியம் உமக்குத் தெரியும். ஆண்டவரே, பரிசுத்த ஆவி தாமே மறுபடியுமாக பரிந்து பேசி, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டுள்ளவர்களாக காணப்படும் இக்கூட்டத்திலுள்ளவர் களை வெளியே இழுக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கி றேன். ஓ, தேவனே, அதை அருள்வாராக. என் முழு இருதயத்தோடும் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன்.

ஆண்டவரே இந்த செய்தியை ஆதரிக்க இந்த ஜனங்கள் தங்கள் கடைசி பைசாவையும் கூட கொடுப்பார்கள். அவர்களால் முடிந்த அனைத்தும் அவர்கள் செய்வார்கள். ஆனால் ஓ, தேவனே, இச்செய்தி யை ஏற்றுக்கொண்டு இதற்குள்ளாக வரும் விஷயத்தில், தேவனே,

இன்றிரவு அவர்களுக்கு பலனளித்து இந்த கன்வென்ஷனில் உமது பரிசுத்த ஆவியை ஊற்ற வேண்டுமாய் ஜெபிக்கிறேன். இங்கு கேளிக்கை அல்லது குதித்தல் இராமல், கதறுதலும் அழுகையும் உண்டாகி, இன்றிரவு எங்களுக்கு அடியில் நியாயத்தீர்ப்பு கொர்ச்சித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்து கொண்டு மனந்திரும்புதல் ஏற்படும்படி செய்யும். தேவனே, இதை அருள்வீராக. எனக்குத் தெரிந்தவரை நான் ஊக்கமாய் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில்.

என் சகோதரனே, சகோதரியே, இதைக்காட்டிலும் அதிகம் என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. தேவனுடைய வல்லமையினால், உங்கள் கண்களில் எனக்குக் கிருபை கிடைத்திருக்குமானால், நான் அவருடைய தீர்க்கதரிசியென்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால்... பகிரங்கமாக இப்படி கூறுவது இதுவே முதல் தடவை. நான் விசித்திரமான ஒருவகை எச்சரிப்பை உணருகிறறேன். இப்படி சாதாரணமாக ஏற்படுவதில்லை. நான் இவ்வாறு நடந்து கொள்வதில்லையென்று உங்களுக்குத் தெரியும். இந்த செய்தியை பிரசங்கித்து இவைகளைக் கூறப் பக்கவாட்டில் ஓடினேன், எல்லாம் செய்தேன், ஆனால் அது கூறப்பட்டாகிவிட்டது. நான் சத்தியத்தை உங்களுக்கு எடுத்துரைத்தேன் என்பதற்கு இது நியாயத்தீர்ப்பின் நாளில் சாட்சியாக நிற்கும் **அது கர்த்தர் உரைக்கிறதாவது. ஓ, பெந்தெகொஸ்தே ஸ்தாபனமே, உன் ஜீவன் தப்ப ஓடிப்போ! தாமதமாகும் முன்பு பலி பீடத்தின் கொம்புகளண்டை ஓடிச் சென்றுகதறி அழு. ஏனெனில் ஒரு நேரம் வரப்போகின்றது. அப்பொழுது நீ அழுது புரண்டாலும் பயன் ஏதுவுமிராது. ஏசா தன் சிரேஷ்ட புத்திர பாகத்தின் ஸ்தானத்தை வகிக்க முயன்றும், அவனால் முடியவில்லை.** ஓ, கலிபோர்னியாவே, உன்னை தேவனிடம் சமர்ப்பிக்கிறேன். ஓ, நான் நேசித்து என் இருதயத்தில் பிணைத்திருக்கும் முழு சுவிசேஷ வர்த்தகர்களின் கன்வென்ஷனே, உங்களை இன்றிரவு இயேசு கிறிஸ்துவினிடம் சமர்ப்பிக்கினே். அவரிடம் ஓடிப்போங்கள். இதைக் குறித்து நீங்கள் தணிந்து போகும்படி செய்ய பிசாசை அனுமதிக்காதீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறையும் வரைக்கும் அதில் நிலைத்திருங்கள். அப்பொழுது அது உங்களை வார்த்தைக்கு கொண்டு வரும், பெண்களாகிய உங்களை அது சீர்படுத்தும், மனிதராகிய உங்களை அது சீர்படுத்தும்.

உங்களுக்கு பரிசுத்த ஆவி உண்டென்று கூறி, நீங்கள் வார்த்தையை பின்பற்றாமல் போனால், உங்களுக்குள் இருப்பது வேறொரு ஆவி. தேவனுடைய ஆவி அவருடைய வார்த்தையின் மேல் தங்கியுள்ளது. மேசியா – அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை மணவாட்டி 'பெண் மேசியா'வாக (Messiah-ette) – அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை யாக – இருக்கிறாள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் எழுந்து நிற்போம். என் சத்தத்தை நீங்கள் மறுபடியும் கேட்காமல் போனால், கர்த்தருக்கு சித்தமானால், இன்னும் சில மணி நேரத்தில் நான் ஆப்பிரிக்காவுக்கு கடல் மார்க்கமாக பிரயாணம் செய்யப் போகிறேன். ஒருக்கால் நான் திரும்பி வராமல் இருக்கலாம் எனக்குத் தெரியாது. என் முழு இருதயத்தோடு இதை உங்களிடம் கூறுகிறேன். நான் உங்களிடம் சத்தியத்தை எடுத்துக் கூறினேன். நான் உங்களிடம் எடுத்துரைக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டதில் நான் ஒன்றையும் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். அதை கர்த்தரின் நாமத்தில் உரைத்தேன்.

இது பயபக்தியான நேரம். அதை எப்படி கூறுவனென்றே தெரியவில்லை. மூன்று நான்கு முறை நான் பிரசங்க பீடத்தை விட்டு இறங்க முயற்சித்தேன். என்னால் முடியவில்லை. இது பயபக்தியான நேரம். அதை மறந்து போக வேண்டாம்! ஒருக்கால் இது தேவன் விடுக்கும் கடைசி அழைப்பாக இருக்கலாம். எனக்குத் தெரியாது... என்றாவது ஒருநாள் அவர் தமது கடைசி அழைப்பை விடுவிக்க வேண்டும். எப்பொழுது? எனக்குத் தெரியாது. ஆனால் உங்களிடம் இதை கூற விரும்புகிறேன். அந்த தரிசனத்தின்படி, மணவாட்டி தெரிந்து கொள்ளப்படுதல் ஏறக்குறைய முடிந்து விட்டது! பெயர் கிறிஸ் தவ சபை உள்ளே வருவதைப் பாருங்கள். உறங்கிக் கொண்டிருந்த கன்னிகைகள் எண்ணெய்க்காக வந்தபோது, அவள் அதைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டாள். மணவாட்டி உள்ளே சென்றாள். எடுத்துக் கொள்ளப்படுதல் மேலே சென்றது. அவர்கள் எண்ணெய் வாங்கச் சென்றபோது, மணவாளன் வந்து விட்டார் நீங்கள் உறங்கிக்கொண் டிருக்கிறீர்களா? உறக்கத்தினின்றுவேகமாக எழுந்து, உங்கள் சுய நினைவுக்கு வந்து, இந்த நிமிடம் நீங்கள் மரித்துக் கொண்டிருந்தால்

எவ்வளவு ஊக்கமாக ஜெபம் செய்வீர்களோ, அவ்வாறே நாம் ஒவ்வொருவரும் கர்த்தரின் நாமத்தில் ஜெபம் செய்வோம். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த வழியில் ஜெபம் செய்வோம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் மேல் இரங்கும் ஆண்டவரே, என் மேல் இரங்கும். எங்கள் எல்லோர் மேலும் இரக்கமாயிரும். நாங்கள் என செய்தபோதிலும், இந்த காரியங்களில் நாங்கள் தவறினால், அதனால் என்ன பயன்? இந்த மகத்தான பட்டினம் கடலுக்குள் மூழ்கி, தேவனுடைய நியாயத்தீர்ப்பு கரையைத் தாக்கும் முன்பே, ஓ, தேவனே, நான் நின்று கொண்டு இரக்கத்திற்காக கெஞ்சுகிறேன். தேவனே, நீர் மணவாட்டியை அழைக்கும்படியாக ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இவர்களை உம்மிடம் சமர்ப்பிக்கிறேன். ஆமென்.

மணாட்டியைத் தெரிந்து கொள்ளுதல், ஏப்ரல் 29, 1965

# நான் சத்தியத்தை உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்

## "I'VE GOT TO TELL YOU THE TRUTH"

**179.** மனைவியைத் தெரிந்து கொள்ளும் விஷயத்திலும் உங்களுக்கு உரிமையுண்டு. நீங்கள் வெளியே சென்று உங்கள் மனைவியைத் தெரிந்து கொள்கிறீர்கள். உங்களுக்கு விருப்பமான ஒருத்தியை, உங்கள் எதிர்கால குடும்பத்தை நன்றாக திட்டமிட்டு யெசல்படக்கூடிய ஒருத்தியை நீங்கள் தெரிந்து கொள்கின்றீர்கள். கிறிஸ்தவ மனிதன் ஒருவன் நவீன ரிக்கெட்டாக்களில் ஒருத்தியை மனைவியாகத் தெரிந்து கொள்வான் என்று நினைக்கிறீர்களா? பாருங்கள்? அப்படி நினைக்க முடிகிறதா? அந்த மனிதனின் எண்ணம் என்ன? அரை நிர்வாணமுள்ள ஒருத்தியை, அல்லது பரிகாசமாக தோற்றமளிக்கும் ஒருத்தியை, தெருவிலுள்ள விலைமாதுவை அவன் மனைவியாகத் தெரிந்து கொண்டால், அவனுக்கு எப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கை இருக்கும்? “ஓ” என்று நீங்கள் கூறலாம். ஒரு நிமிடம் பொறுங்கள். அவள் எப்படி தன்னை உடுத்திக் கொள்கிறாள்? பாருங்கள்? பாருங்கள்? அவள் குட்டை

கால்சட்டை போன்றவைகளை அணிந்து கொள்கிறாள். அவள் தெரு விலுள்ள விலைமாது. "ஓ, சகோதரன் பிரன்ஹாமே" என்று நீங்கள் கூறலாம். அதனுள் வார்ப்பிக்கப்பட்டது போல் இறுக்கமான பாவாடை கள், தெருவிலுள்ள விலைமாது.

**180.** "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" என்று இயேசு கூறினார் (மத். 5:28). அதற்கு அவன் பதில் சொல்லியாக வேண்டும். அவள் என்ன செய்தாள்? அவனுக்கு இச்சை உண்டாக்கும்படி தன்னைக் காண்பித்தாள். யார் குற்றவாளி? யோசித்துப் பாருங்கள்?

**181.** "அவர்கள் வேறு உடைகளை தைப்பதில்லை" என்று நீங்கள் கூறலாம். ஆனால் துணிகளும் தையல் மெஷீன்களும் கடைகளில் வறிகப்படுகின்றன. பாருங்கள், சாக்குப்போக்கு எதுவும் கடையாது. உ, ஊ. அது முற்றிலும் உண்மை.

**182.** உங்களை நான் புண்படுத்த விரும்பவில்லை. இரு பரிகாசம் அல்ல. இது வேதத்திலிருந்து **கர்த்தர் உரைக்கிறதாவது.** நண்பனே, இத முற்றிலும் உண்மை. நான் வயோதிபன், இன்னும் நீண்டகாலம் நான் வாழப்போவதில்லை. நான் சத்தியத்தை உங்களுக்கு சொல்லியாக வேண்டும். இது என் கடைசி செய்தியாயிருக்குமானால், இது சத்தியம். பாருங்கள்? சகோதரியே, சகோதரனே, செய்யாதே.

**183.** தேவனுடைய வார்த்தை உங்கள் முன்னிலையில் உறுதிப் படுத்தப்படுகின்றது என்று அறிந்தும், கோட்பாடுகளில் நிலைத்திருக்கும் மனிதரே, இன்று பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் அற்புதங்களும் நம்மிடையே தத்ரூபமாக உள்ளபோது, உங்கள் கோட்பாடுகளின் நிமித்தம் அவைகளினின்று அகன்று சென்று விடுகிறீர்கள். நீங்கள் தேவனுடைய குமரானாயிருந்தால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கடைசி நாட்களுக்கென முன்னுரைக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையை நீங்கள் எப்படி மறுதலிக்க முடியும்? நீங்கள் எப்படி செய்ய முடியும்?

வழிநடத்தும் தன்மை, டிசம்பர் 7, 1965

**57.** "நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்

குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53). பாருங்கள்? அப்படித்தான் வேதம் சொல்லுகிறது. நீங்கள் இப்படி செய்யாவிட்டால் உங்களுக்குள் ஜீவன் இராது. பார்த்தீர்களா? அப்படியானால், இப்பொழுது நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையின் நிமித்தம், உங்களைக் கிறிஸ்தவன் என்று அடையாளம் காண்பிக்க உங்களுக்கு வெட்கமா யிருக்கிறது என்பதை அது ஏறத்தாழ காண்பிக்கிறது. இதுதான் உண்மையில் ஒரு பலப்பரீட்சை. நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத் தில் பங்குகொள்ளாமல் போனால் உங்களுக்குள் ஜீவனில்லை. அதில் அபாத்திரமாய் நீங்கள் பங்கு கொண்டால், கர்த்தருடைய சரீரத்தைக் குறித்து நீங்கள் குற்றமுள்ளவர்களாயிருப்பீர்கள் (1 கொரி. 11: 27).

**58.** அவ்வாறே தண்ணீர் ஞானஸ்நானத்திலும், "நாங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அவர் எங்களை பாவத்திலிருந்து இரட்சித்தார். நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ் நானம் பெற்றுள்ளோம்" என்று கூறிக்கொண்டு நாம் தவறானவை களைச் செய்தால், நாம் அவருக்கு அவமானத்தைக் கொண்டு வருகிறவர்களாயிருப்போம். அதற்குரிய தண்டனையை நாம் அடைந்தே தீரவேண்டும். வேறொரு காரியம். நாம் இப்படிச் செய்யும்போது, நாம் நம்புவது ஒன்று, செய்வது வேறொன்றாக ஆகிவிடுகிறது.

**59.** இன்று நம்மிடத்தில் காணப்படும் தொல்லை அது தான். நான் என்ன நினைக்கிறேன் என்றால்.. "நாம்" என்று குறிப்பிட விரும்பு கிறேன். அதாவது நானும், இந்த கடைசி மணி வேளையில் தேவனா கிய கர்த்தர் நான் பேச அனுமதித்திருக்கிற இந்த சபையுமாக சேர்ந்து, நாம் இறுதி வேளையில் இருக்கிறோம் என்று விசுவாசிக்கிறோம். தேவன் நமக்கு ஒரு செய்தி தந்திருக்கிறார் என்று நாம் விசுவாசிக் கிறோம். அது தேவனால் நியமிக்கப்பட்டு, அவரால் நிரூபிக்கப்பட்டு, இப்பொழுது வெளிப்படையாய் காண்பிக்கப்பட்டுள்ளது. நாம் இப்பொ ழுது பயபக்தியோடும், அன்போடும், தூய்மையான இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் அவரண்டை வரவேண்டும்.

**60.** உங்களுக்குத் தெரியுமா? அந்த நேரம் விரைவில் வரும். அப்பொழுது அனனியா, சப்பீராய் என்பவர்களிடம் பரிசுத்த ஆவியா னவர் பேசினது போல, நமது மத்தியிலும் பேசுவார். பாருங்கள் அந்த நேரம் வந்து கொண்டிருக்கிறது. நாம்... அதை நினைவில் கொள்

ளுங்கள். பாருங்கள். தேவன் தம்முடைய ஜனங்களின் மத்தியில் அவர் செய்ய விரும்புகிறார்.

**61.** இந்த செய்தி நன்றாயிருக்கிறது என்று சொல்லி.. நான் ஒரு இளைஞனாயிருந்து, எனக்கொரு மனைவியைத் தேடி, அவளைக் கண்டுபிடித்து, "அவள் உத்தமியாக இருக்கிறாள். அவள் கிறிஸ்தவள். அவள் நற்பண்பு கொண்டவள். அவள் இவையனைத்தும் ஒன்றாக பெற்றிருக்கிறாள். அவள் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்று சொல்லுகிறேன். அவள் நல்லவள் என்று நான் எவ்வளவு கருதினாலும், விவாகப் பொருத்தனையின் அடிப்படையில் அவளை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவள் என்னையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**62.** செய்தியின் விஷயத்திலும் அதையே நாம் காண்கிறோம். அது சரியென்று நாம் அறிகிறோம். அது சரியென்று தேவன் உறுதிப்படுத்து வதை நாம் காண்கிறோம். அது முற்றிலும் சரியே. ஆண்டுக்கு ஆண்டு அது தொடர்ந்து சரியாகவே இருந்து வருகிறது. அது கூறும் ஒவ்வொன்றும், அவர் கூறினபடியயே நிறைவேறுகிறது. அது சரியென்று நாம் அறிகிறோம். ஆனால், பாருங்கள் உங்கள் அறிவுத்திறனைக் கொண்டு அப்படி செய்யாதீர்கள். அப்படி செய்தால் நீங்கள் இரண்டாம் கைக்குவந்த மார்க்கத்தைப் (Second hand religion) பெற்றவர்களாகி விடுவீர்கள். நமக்கு இரண்டாம். கைமார்க்கம் வேண்டாம். அதாவது வேறொருவர் பெற்றுள்ள அனுபவத்தின் அடிப்படையில், அவர்களுடைய சாட்சியின் அடிப்படையில் நாம் வாழ்வது.

**63.** இயேசு பிலாத்துவிடம் இவ்வாறு சொன்னாரென்று நினைக்கி றேன். சிறிது நேரத்துக்கு முன்பு அந்த வசனத்தை சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவர் பிலாத்துவிடம், "யார் உம்மிடம் கூறினது? உமக்கு இது வெளிப்பட்டதா? இவைகளை நீர் எவ்வாறு அறிவீர்?" என்று கேட்டார். (யோவான் 18:34). அந்த வசனம் எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. அதைப் படித்து நீண்ட காலமாகிறது. "உமக்கு எப்படி தெரியும்? நீர் எப்படி அதை அறிவீர்?" அவர் தேவனுடைய குமாரனா என்று அவன் கேட்டபோது அவர் "யார் இதை உமக்கு வெளிப்படுத் தினார்கள்? மற்றவர்கள் என்னைக் குறித்து இப்படி உமக்கு சொன்னார் களோ?" என்றார். அதாவது இயேசு அவனிடம், "பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உமக்கு வெளிப்படுத்தினாரா?" என்று மறைமுகமாக

கேட்கிறார். பாருங்கள்? பாருங்கள்? "இதை எப்படி அறிந்து கொண்டீர்? மற்றவர்களிடமிருந்து இரண்டதம் கையாகவா, அல்லது அது தேவனிடத்திலிருந்து பெற்ற பரிபூரண வெளிப்பாடா?"

**64.** இந்த இராப்போஜனத்தை வெறும் நியமமாக அனுசரித்து, "மற்றவர்கள் பங்கு கொள்கிறார்கள், நானும் பங்கு கொள்கிறேன்" என்று நீங்கள் நினைத்து இங்கு வருகிறதாய் அமைந்திருக்கிறதா? அல்லது "நான் அவரில் ஒரு பாகமாக இருக்கிறேன், உங்களில் ஒர பாகமாக இருக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன், அவரை நேசிக்கிறேன்" என்னும் வெளிப்பாடாய் இருக்கிறதா? தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்புக்கும், நாம் ஒருவரோடொருவர் கொண்டுள்ள அன்புக்கும் ஐக்கியத்துக்கும் அடையாளமாக, நாம் ஒருமித்து இராப் போஜனத்தில் பங்குகொள்கிறோம்.

இராப்போஜனம், டிசம்பர் 12, 1965

★★★★★